श्री गुरुभ्यो नमः

स्मृतिमुक्ताफलम्

ஸ்ம்ருதிமுக்தாபலம்

श्रीवैद्यनाथदीक्षितविरचितम्


द्वितीयो भागः

आह्निककाण्डः

पूर्वखण्डः द्रविडानुवादयुतः

இரண்டாம் பாகம் ஆஹ்நிக காண்டம்

பூர்வ பாகம்



ஓ

श्री गुरुभ्यो नमः

स्मृतिमुक्ताफलम्

श्रीवैद्यनाथदीक्षितविरचितम्

द्वितीयो भागः

आह्निककाण्डः

पूर्वखण्डः द्रविडानुवादयुतः

ஸ்ம்ருதிமுக்தாபலம்

ஸ்ரீ வைத்யநாத தீக்ஷிதர் இயற்றியது

இரண்டாம் பாகம்

ஆஹ்நிக காண்டம்

முதல் பகுதி

தமிழ் உரையுடன்

தொகுத்தளிப்பவர்:

வைத்ய S.V. ராதாகிருஷ்ண சாஸ்திரீ

வெளியிடுபவர்:

வேத தர்ம சாஸ்திர பரிபாலன ஸபை

(கும்பகோணம்) சார்பில்

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம், ஸ்ரீமடம் ஸம்ஸ்தானம்

1, சாலைத் தெரு, காஞ்சீபுரம்-631 502

விக்ருதி-2011

SMRUTI MUKTHA PHALAM–2

ANHIKA KANDAM (Ist PART)

with Tamil translation

Edited by :

Vaidya S.V. Radhakrishna Sastri

Srirangam

Published on behalf of

Veda Dharma Sastra Paripalana Sabha

(Regd Office) Kumbakonam

by

Sri Kanchi Kamakoti Peetam
Srimatam Samsthanam
1, Salai Street,
Kanchеepuram-631 502

Lasertypeset & Printed at :
V.K.N. Enterprises
164, R.H. Road, Mylapore, Chennai-4, Cell : 9840217036

Phone : 044-2722115 e:mail:skmkanci@md3.vsnl.net.in
Fax : 044-27224305, 37290060

Sri Chandramouleeswaraya Namaha:
Sri Sankara Bhagavazdpadacharya
Paramaparagatha Moolamnaya Sarvagnapeeta:
His Holiness Sri Kanchi Kamakoti Peetadhipathi

JAGADGURU SRI SANKARACHARYA SWAMIGAL
Srimatam Samasthanam
No.1, Salai Street, KANCHEEPURAM - 631 502.



मङ्क्त्वा सत्स्मृतिसागरे सुगहने लब्ध्वा वरं मौक्तिकं
श्रुत्यम्बागलभूषणं समतनोत् श्रीवैद्यनाथो महान्।
भूयस्तद्रविडानुवादकनकैस्तन्वन् स्रजं सुन्दरीं
राधाकृष्णसुधीस्सदा विजयतां श्रीचन्द्रमौलीक्षणात्॥


अक्षैर्मा दीव्येति आम्नायामृताम्बुधिबिन्दुभिः निखिल-स्मृतिनिचयेन च प्रभुसम्मिततया, इतिहासपुराणबृन्द-माक्षिकधारया सुहृत्सम्मिततया, काव्यरसानुभूतीक्षुसारवर्षैः कान्तासम्मिततया च प्रतिपादितः धर्मकलापः सूक्ष्मगतिको विलसति । धर्म एव विशिनष्टि समाजं समजात् । मनीषिमनोगोचरस्य तस्य धर्मस्यावगतये परमकारुणिका ऋषयः स्मृतिग्रन्थान् विलिख्य महदुपकारमतानिषुः । धर्मकलापापकलनकलापटौ कलौ मानवानां बोधनाय वैद्यनाथदीक्षिताख्यो विद्वद्ग्रेगण्यः स्मृतिसागारं निर्मथ्य पीयूषमाचिन्वन् स्मृतिमुक्ताफलाख्यं ग्रन्थमरीरचत्। सोऽयं ग्रन्थः

वर्णाश्रमधर्मकाण्डः, आह्निककाण्डः, आशौचकाण्डः, श्राद्धकाण्डः, तिथिनिर्णयकाण्डः तथा प्रायश्चित्तकाण्डश्चेति काण्डषट्केन निखिलमपि धर्मं प्रतिपादयति। यं वै रक्षसि धर्मं त्वं धृत्या च नियमेन च। स वै राघवशार्दूल धर्मस्त्वामभि-रक्षत्विति श्रीमद्रामायणवचनेन धर्मो रक्षति रक्षित इति सुष्ठु अवगम्यते। लोकानां धारणाद्धर्म इति सार्थाभिधां बिभ्रतो धर्मस्य सेवनं लोकव्यवस्थायाः स्थिरीकरणमिति न संशीतिः। सोऽपि धर्मः अनेन ग्रन्थरत्नेन सुष्ठ्ववगम्यते। तस्यैतस्य ग्रन्थस्य वर्णाश्रमधर्मकाण्डादिः भागशः **वैद्यश्री शिवे. राधाकृष्णशास्त्रिभिः** द्रविडानुवादेन सह परिष्कृत्य वेदधर्मशास्त्रपरिपालनसभाद्वारा प्रकाश्यते इति ज्ञात्वा भृशं मोदामहे। सोऽयं यत्नः श्रीमहात्रिपुरसुन्दर्यम्बा-समेत श्रीचन्द्रमौलीश्वरकृपया सफलो भवत्विति ग्रन्थ-सम्पादकः एवमेव ग्रन्थरत्नानि प्रकाशयन्नैहिकामुष्मिकश्रेयो-विलासैः समेधतामिति प्रकाशने साहाय्यकर्तारश्च समस्त-मङ्गलानि अवाप्नुयुः पठितारश्च धर्मसेवनेन निखिलश्रेयांस्यधि-गच्छन्त्विति चाशास्महे।

शङ्करसंवत्सरः २५२०

काञ्चीपुरम्

नारायणस्मृतिः।





ஓ

ஸ்ரீ குருப்யோ நமः

நூல் அறிமுகம்

பிரும்ம ஸ்ரீ வைத்யநாத தீக்ஷிதர் என்ற மகான் தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்த கண்டிரமாணிக்கத்தைச் சார்ந்தவர். சுமார் முன்னூறு ஆண்டுகளுக்கு முன் அந்தணர் மரபின் வழிகாட்டியான சாஸ்திரப் பேரறிஞர். அவர் அன்றுவரை கிடைத்த தர்ம சாஸ்திர நூல்களிலிருந்து கடைந்தெடுத்துத் தொகுத்து நூலாகத் தந்துள்ளது ஸ்ம்ருதிமுக்தாபலம். வர்ணாச்ரம தர்மகாண்டம் ஆந்ஹிக காண்டம், ஆசௌச காண்டம், ஸ்ராத்த காண்டம். திதி நிர்ணய காண்டம். பிராயச்சித்த காண்டம் என்ற அதன் ஆறு பகுதிகளில் வர்ணாசிரம தர்ம காண்டம் வேத தர்ம சாஸ்திர பரிபாலன ஸபையினரால் இதற்கு முன் வெளியிடப்பட்டுள்ளது. ஆந்ஹிக காண்டம் இரு பகுதிகளாக வெளிவரவிருக்கிறது. அதன் முதற்பகுதி இது.

நல்லொழுக்கத்தையும் சமுதாய நன்னெறியையும் குறிக்கோளாகக் கொண்டு வாழ்வின் ஒவ்வொரு நொடியிலும் அதனைப் பின் பற்றித் தவறு நேராது பாதுகாப்பதாலேயே மனித சமுதாயம் பெருமை பெறும். தனி ஒவ்வொரு மனிதனின் சீர்கேடும் சமுதாயத்தைப் பாதிக்கும். சமுதாயத்தின் பொதுச் சீர்கேடும் தனி மனிதனின் வாழ்வைப் பாதிக்கும். தூய்மையும் நேர்மையும் சீர்மையும் ஒவ்வொரு கணத்திலும் ஒவ்வொருவராலும் உள்ளும் வெளியும் பாதுகாக்கத் தக்கவை. இம்மூன்றையும் சீர்கெடச்செய்பவை நம்முடன் இணை பிரியாமல் சேர்ந்தே தோன்றியுள்ளன. அவற்றைக் கண்டறிந்து விலக்கி மறுபடியும் தூய்மையைப் பாதுகாப்பதே நம் பணிகளில் பேரிடம் பெறுகிறது.

தூய்மையும் - தூய்மையின்மையும் - (சௌசமும் ஆசௌசமும்) பிறருக்கு ஊறுவிளைவிக்காமல் தன்னளவில் தூய்மையைப் பெறுவது சௌசம். இந்த சௌசமே ஆந்ஹிக காண்டத்தின் உட்பொருள். தூய்மையின்மைக்குக் காரணம் பெரும்பாலும் அழுக்கு என்ற மலம், விழித்தெழுந்த பிறகும் படுக்கையில் நாட்டம். கொட்டாவி, கண்செறுகல், உடல் விரைப்பு - முறிப்பு தொடர, மனம் தெளியாமல் தமோ குணத்தின் ஆட்சி நீங்காமையை உணர்த்துகிறது. இது ஒரு அழுக்கு. விழித்ததும் சுறுசுறுப்பேற்று எழுந்து படுக்கையை அகற்றி காலாற வெளிநடப்பது தூய்மைக்கான முதற்படி. முற்பகலிலும் இரவிலும் நம்முள் தேங்கியுள்ள மல ஜலக்கழிப்பு அடுத்த சௌச முறை. தன்னலமிகுதியால் சுற்றுச் சூழலை இதனால் பாதிக்காதிருப்பதும் பாதிப்பிற்கான மாற்று தேடி சூழலின் தூய்மையைப் பாதிக்காதிருப்பதும் இதனுள் அடங்குகிறது. நாள் முழுதும் தரித்ததால் ஆடையில் சேர்ந்த மாசை நீக்கி, நீர் நிலையின் தூய்மை கெடாது நீராடி வெளி உடலை மாசற்ற தாக்கிக் கொள்வது எனத் தொடங்கிய சௌசம் இரவு படுக்கும்வரை ஒவ்வொரு கணமும் தொடர்கிறது. இது தனி மனித வாழ்க்கையில்.

மனிதன், தனித்து வாழ்வதில்லை. அவனுக்கென குடும்பம், வீடு, அடுத்து வாழ்கிற மக்களின் குடியிருப்பு, ஊர் எனச் சுற்றுச் சூழல் விரிய, ஊரோடு ஒத்து வாழ நேர்வதும் சூழலின் தூய்மையும் தேவை. ஒழுக்கத்தில் கட்டுப்பட்ட தனி மனிதன் அதே கட்டுப்பாடுள்ள குடும்பத்திலும் சூழலிலும் ஊரிலும் நாட்டிலும் அதே தூய்மை பாதுகாக்கப் பெறுவதன் பொறுப்பை ஏற்க வேண்டியிருக்கிறது. எல்லோரும் இவற்றில் ஒரே

கட்டுப்பாட்டு முறையைப் பின்பற்றவேண்டியதும் அவச்யம்.

குறுகிய பாதையில்தூய நிலையில் வருகிற அந்தணரும் அரசரும் எதிர்பட்டால் அரசர் அந்தணருக்கு முதலில் வழிவிட வேண்டும் என்பது ஒரு நியதி. நீராடித் தூய்மையுடன் வருகிற அந்தணர் எதிரே வருகிற வேளாளரிடம் அடுத்த ஊருக்கு எத்தனை தூரம் என விசாரித்தார். வேளாளர் எனக்காஞல் ஒரு காதம், உமக்காஞல் மூன்று காதம் என்ருன். ஏன் இப்படி எனக் கேட்டவருக்கு, நீர் தூய்மையை உற்றுப் பார்த்து ஒதுங்கி ஒதுங்கிச் செல்வீர். நான் ஒதுங்காமல் நேரே செல்வேன் என்ருராம். இது மக்கள் வழக்கில் தேர்ந்த தூய்மையின் மதிப்பு.

ஆஹ்நிக காண்டம் முழுவதும் தூய்மையை விரும்புகிற மூவர்ணத்தினர் தூய்மையைப் பாதுகாக்கிற தூய்மை முறையை விளக்குகிறது. (இன்று அது மற்ற இருவர்ணத்தினரிடம் மறைந்து அந்தணர் மரபினரில் வெகு சிலரின் நடைமுறையில் முற்றிலுமின்றி சிற்சில பகுதிகளில் அனுஷ்டானத்தில் உள்ள தெனலாம்). அது இரு பகுதிகளாக வெளிவருகிறது. அதன் முதற்பகுதி இது. இதில் தூய்மைக்கான முக்கியச் சடங்கான திரிகால ஸந்தியாவந்தனத்தின் முற்பகுதிவரை இடம் பெறுகிறது.

இனி வரவிருக்கும் பிற்பகுதியில் முன்னிரவு வரை தொடர வேண்டிய நன்னடை முறை விளக்கம் பெறவுள்ளது. ஆஹ்நிக காண்டத்துடன் முடிவுறுத சௌசம் மூன்ருவது ஆசௌச காண்டத்தில் தொடர்கிறது.

ஒட்டுதல் உள்ளவரை தான் தூயவஞகஇருப்பது மட்டும் போதாது. உற்ருர் உறவினரின் தூய்மையின்மையும்

இவனைப் பாதிக்கும். தன் மனைவி கருவுற்றுப் பிரசவித்தால் பேறு நிலையில் வயிற்றிலுள்ள சிசுவிற்கு வாழ்வளித்த கருவறை நீரே தூய்மையைக் கெடுக்கிறதென தாயுடன் அது கொண்ட தொடர்பைக் தொப்புள்கொடியை நறுக்கிப் பிரித்து நீராட்டிக் கட்டிலிலிடுகின்றனர். தாயும் இதுவரை வயிற்றிலிருந்த சிசுவிற்கு ஊட்டமளிக்கப் பயன்படுத்திய தன் உடற்பகுதியை நீக்கிப் பெருமூச்சு விடுகிறாள். அசுசிப் பகுதி அகன்ற நிம்மதி. அசுசி முழுவதும் நீங்கித் தூய்மை பெற 30-40 நாட்களாகின்றன. இது காலவரைக்குட்பட்ட ஜனன - ஆசௌசம்.

பெண்ணிற்கென அவள் பருவமடைந்ததும் தொடர்கிற மாதவிடாயாலான தீட்டு, இந்த ப்ரஸவத் தீட்டு என்ற இரண்டும் பெண்ணிற்கு மட்டுமே எனினும் பிரஸவத் தீட்டில் கணவனுக்கும் அவரது உற்றார் உறவினருக்கும் நிலைக்கேற்ப பங்கு உண்டு. தந்தையின் ஆசௌசம் அந்த சிசுவின் பிறப்பில் உண்டான பொறுப்பின் பங்காகும். இது நீராடலால் நீங்குவதல்ல. காலவரையால் நீங்குவது. அதனால் ஆசௌசம் என்ற தனி நிலை.

இதேபோன்று ஒருவர் இறந்ததும் அவரது உடல் அழுகி அசுசிப் படுத்துமுன் எத்தனை அன்புக்குரியதாயினும் வீட்டிலிருந்தும் அகற்றப்பட்டு நெருப்பிலோ பூமியிலோ அடக்கப் பெறுகிறது. அத்துடன் நில்லாமல் அதனைச் சார்ந்தவர்கள் வெவ்வேறு அடிப்படையில் 10 நாட்கள் வரை தீட்டு (ஆசௌசம்) காக்கின்றனர். தெருவினர் கூட உடலடக்கம்வரை சுசியின்மையை உணர்வர். இது மரணா சௌசம். இதுவும் நீராடலாலோ மற்ற முறைகளாலோ நீங்காது. காலவரை தீர்ந்த பிறகே விலகும். இதுவும் ஆஹ்நிக நடைமுறைகளில் தடை விளைவிக்கும். அதனால் ஆஹ்நிக காண்டத்தையொட்டி ஆசௌச காண்டம் இடம்

பெறுகிறது. தூய்மை பற்றிய விளக்கங்களை இவ்விரு காண்டங்களில் கண்டு கொள்ளலாம். ஜனனாசௌசம் குடும்பத்தைப் பேணிக்காக்க மற்றொரு ஜீவன் தோன்றியதை வரவேற்பதாக அமைவதால் உள்ளத்து நிறைவுக்காகிறது. மற்றது இதுவரை குடும்பத்தைப் பேணிக்காத்ததொரு ஜீவனின் மறைவால் துயரம் நிரம்பியது. ஆக அகத் தூய்மையையும் புறத் தூய்மையையும் ஒவ்வொரு கணத்திலும் ஒவ்வொருவரும் எந்நிலையிலும் உறுதியுடன் இடையறுமல் பாதுகாப்பதன் அவசியத்தை வற்புறுத்தி வழி காட்டுவது ஆஹ்நிகமும், ஆசௌசமும்.

ஸ்ரீ வைத்யநாத தீக்ஷிதர் இதற்கு வழிகாட்டிய நூற்றுக் கணக்கான மூல நூல்களை இயற்றிய மகான்களின் உபதேச வாக்யங்களை நம்முன் வைத்து ஆதாரத்துடன் முன்னோரின் ஆசாரத்தைத் தொகுத்துத் தந்துள்ளார். அவரது ஸம்ஸ்க்ருத நூலை நடுக்காவேரி பிரும்மஸ்ரீ ஸ்ரீநிவாஸ சாஸ்திரி அவர்கள் இயற்றிய தமிழுரையுடன் வேத தர்ம சாஸ்திர பரிபாலன ஸபை வெளியிட்டது. அதனையொட்டி தேவ நாகரிலிபியில் மூலமும், தமிழில் உரையும் இப்போது மறுபதிப்பாக தொகுத்து அச்சிட்டு வெளிக் கொண்டுவருகிற வாய்ப்பை பரம பூஜ்யஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ காஞ்சீகாமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கராசார்ய ஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸ்ரீ சரணர்களின் ஆஜ்ஞையையும் அருளாசியையும் முன்னிட்டு வேததர்ம சாஸ்திர பரிபாலன ஸபை அடியேனிடம் தந்துள்ளது. தேவியின் அருளும் ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சரணர்களின் அருளும் துணை நிற்க ஆஹ்நிக காண்டத்தின் முதற்பகுதி நன்மக்களின் முன் வைக்கப்படுகிறது.

ஸ்ரீரங்கம்

விக்ருதி தை வைத்ய **S.V.** ராதாகிருஷ்ண சாஸ்திரீ

ஏ

நூலாசிரியரால் தனக்கு வழிகாட்டியாகக் குறிப்பிடப் பெற்றவர்

அகஸ்த்யர், அங்கிரஸ், அத்ரி, ஆச்வலாயனர், ஆபஸ்தம்பர், ஆக்னிவேச்யாயனி, உசநா, கண்வர், கர்கர், காச்யபர், காத்யாயனர், கார்க்யர், கார்ஷ்ணாஜினி, காலவர், கோபிலர், கௌசிகர், கௌதமர், சங்கர், சாண்டில்யர், சாதாதபர், சாலங்காயனர், சிவர், சௌனகர், ச்லோகாபஸ்தபம்பர், தக்ஷர், தேவலர், நந்திஸர்மரி, நாரதர், நாராயணர், பகவான், பரத்வாஜர், பராசரர், பாரத்வாஜர், பாரஸ்கரர், பிதாமஹர், புலஸ்த்யர், புலஹர், பைடீநஸி, போதாயனர், ப்ருகு, ப்ருஹஸ்பதி, ப்ரசேதஸ், ப்ரஜாபதி, ப்ரம்ஹா, ப்ருஹன்மனு, மரீசி, மனு, மஹாதேவர், மார்க்கண்டேயர், மேதாதிதி, யமன், யாக்ஞவல்க்யர், யோகயாக்ஞவல்க்யர், ருச்யச்ருங்கர், லிகிதர், லோகாக்ஷி, வஸிஷ்டர், விச்வாமித்ரர், விஷ்ணு, விக்ஞானேச்வரர், விவஸ்வான், வையாக்ரபாதர், வ்யாக்ரபாதர், வ்ருத்தபராசரர், வ்ருத்தசங்கர், வ்ருத்தசாதாதபர், வ்ருத்தமனு, வ்ருத்தகார்க்யர், வ்ருத்தயாக்ஞவல்க்யர், வ்ருத்தவஸிஷ்டர், ஜாதூகர்ணி, ஜாதூகர்ண்யர், ஜாபாலி, ஸங்க்ரஹகாரர், ஸத்யவ்ரதர், ஸத்யதபஸ், ஸுமந்து, ஸுதர்சனாசார்யர், ஸ்கந்தர், ஹரதத்தர், ஹரிஃ, ஹாரீதர்.

—★—

ஆதார நூல்கள்

அகண்டாதர்சம், அங்கிரஸ் ஸ்ம்ருதி, அதர்வசிரஸ், அத்ரி ஸ்ம்ருதி, அபரார்க்கம், ஆஸ்வமேதிகம், ஆஸ்வலாயன ஸ்ம்ருதி, ஆதித்யபுராணம், ஆபஸ்தம்ப தர்மம், ஆபஸ்தம்ப ஸ்ம்ருதி, உசநஸ் ஸ்ம்ருதி, கடசாகா, கண்வ ஸ்ம்ருதி, கர்மப்ரதீபம், காத்யாயன ஸ்ம்ருதி, காயத்ரீ ஸாரம், காருடம், காருட புராணம், கால நிர்ணயம், காலாக்னி ருத்ரம், காலாதர்சம், கூர்ம புராணம், கோபில

ஸ்ம்ருதி, கௌசிக ஸ்ம்ருதி, கௌதம ஸ்ம்ருதி, கௌர்மம், க்ரியா ஸாரம், க்ருஹ்ய பரிசிஷ்டம், சக்ரோபநிஷத், சங்கர ஸம்ஹிதா, சங்க ஸ்ம்ருதி, சதுர்விம்சதி மதம், சந்தோக ச்ருதி, சர்யா பாதம், சந்த்ரிகா, சாதாதப ஸ்ம்ருதி, சைவம், சௌனக ஸ்ம்ருதி, ஜாதிநிர்ணயஸங்க்ரஹம், ஜாபாலோபநிஷத், தர்ம ஸார ஸ்ம்தாநிதி, தக்ஷ ஸ்ம்ருதி, தேவல ஸ்ம்ருதி, தேவீ புராணம், தைத்திரீயகம், தைத்திரீயக ஸ்ருதி, நாரதீயம், நிருக்த பாஷ்யம், ந்ருஸிம்ஹ புராணம், பத்ததி, பராசர ஸ்ம்ருதி, பவிஷ்யத் புராணம், பவிஷ்யோத்தரம், பரத்வாஜ ஸ்ம்ருதி, பாகவதம், பாஞ்ச ராத்ரம், பாத்மம், பாரிஜாதம், பாராசரம், பாராசரோப புராணம், பாராசர்யம், புருஷார்த்த ப்ரபோதம், பைடீநஸ ஸ்ம்ருதி, போதாயன ஸ்ம்ருதி, போதாயன தர்மம், ப்ரசேதஸ் ஸ்ம்ருதி, ப்ரதீபிகா, ப்ரபஞ்ச ஸாரம், ப்ரயோக பாரிஜாதம், ப்ரஹ்ம புராணம், ப்ரஹ்மாண்ட புராணம், ப்ரஹ்ம கைவர்த்தம், ப்ரஹ்ம ஸித்தாந்தம், மந்த்ர தீபிகா, மந்த்ர தேவதா ப்ரகாசிகா, மரீசி ஸ்ம்ருதி, மஹாபாரதம், மனு ஸ்ம்ருதி, மஹோபநிஷத், மாத்யந்தின க்ருஹ்யம், மாதவீயம், மானவ புராணம், மானவம், மானவீய ஸம்ஹிதா, மானவோபபுராணம், யம ஸ்ம்ருதி, யாக்ஞவல்க்ய ஸ்ம்ருதி, ரத்ஞவளி, ருக்விதானம், லிகித ஸ்ம்ருதி, லிங்கம், லிங்க புராணம், வரதராஜீயம், வஸிஷ்ட ஸம்ஹிதா, வஸிஷ்ட ஸ்ம்ருதி, வாமன புராணம், வாயு புராணம், வாஸிஷ்டம், வாஸிஷ்ட லிங்கம், வாஸ்தேவோபநிஷத், விக்ஞானேச்வரீயம், விஷ்ணு தர்மோத்தரம், விஷ்ணு புராணம், விஷ்ணு ஸ்ம்ருதி, வைகானஸ ஸூத்ரம், வ்யாஸ ஸ்ம்ருதி, ஷட்த்ரிசன்மதம், ஸங்க்ரஹம், ஸாங்க்யாயன க்ருஹ்யம், ஸார ஸமுச்சயம், ஸார ஸங்க்ரஹம், ஸ்மந்து ஸ்ம்ருதி, ஸௌத ஸம்ஹிதா, ஸௌர ஸம்ஹிதா, ஸ்காந்தம், ஸ்ம்ருதி சந்த்ரிகா, ஸ்ம்ருதி சிந்தாமணி, ஸ்ம்ருதி தீபிகா, ஸ்ம்ருதி பாஸ்கரம், ஸ்ம்ருதி ப்ரதீபிகா, ஸ்ம்ருதி ரத்னம், ஸ்ம்ருதி ரத்ஞவளி, ஸ்ம்ருதி ஸங்க்ரஹம், ஸ்ம்ருதி ஸார ஸமுச்சயம், ஸ்ம்ருதி ஸாரம், ஸ்ம்ருத்யர்த்த ஸாரம், ஹாரீத ஸ்ம்ருதி.

ఒ

आह्निककाण्डपूर्वभागविषयानुक्रमणिका

ஆஹ்நிக காண்ட (முன்பகுதி) பொருளடக்கம்

எண்

ब्राह्मे मुहूर्ते प्रबोधादि - 1
விடியற்காலையில் எழுந்திருப்பது முதலியவை

प्रबोधानन्तरजप्यानि 7
விழித்ததும் ஜபிக்க வேண்டிய மந்த்ரங்கள்

प्रातर्दर्शनीयानि अदर्शनीयानि 9
விழித்ததும் காணத் தக்கவை - தகாதவை

बहिर्विहारः शौचं च - 10
வெளியில் ஸஞ்சாரம் சௌசம்

शौचविधिः - சௌசவிதி 15

गण्डूषविधिः கண்டூஷ (வாய் கொப்புளித்தல் முறை) 47

आचमनविधिः - ஆசமனமுறை 48

आचमनप्रशंसा - ஆசமனத்தின் பெருமை 73

कुशप्रशंसा - குசத்தின் பெருமை 84

दर्भाहरण कालनियमः - தர்ப்பம் கொணர காலநியமம் 100

वर्जनीयदर्भाः - விலக்கத்தக்க தர்ப்பங்கள் 105

दर्भसंख्या - தர்ப்பங்களின் ஸங்க்யை 106

आचमननिमित्तानि - ஆசமந நிமித்தங்கள் 106

द्विराचमननिमित्तानि - இருமுறை ஆசமன நிமித்தங்கள் 113

आचमनापवादः - ஆசமனத்திற்கு விலக்கு 118

दन्तधावनविधिः - பல் துலக்கும்முறை 131

दन्तधावनकाष्ठानि - பல் துலக்கக் குச்சிகள் 134

स्नानविधिः - ஸ்நானவிதி 149

वासः परिधानम् - வஸ்த்ரதாரணம் 174

स्नानभेदाः - ஸ்நான பேதங்கள் 185

माध्याह्निकस्नानम् - மாத்யாந்ஹிக ஸ்நானம் 187

स्नानार्हजलानि - ஸ்நானத்திற்குரிய ஜலங்கள் 189

समुद्र स्नानम् - ஸமுத்ர ஸ்நானம் 199

वर्ज्योदकम् - பரிஹரிக்கத் தக்க ஜலம் 203

मृदाद्याहरणम् - மிருத்திகை முதலியதைச் சேகரித்தல் 208

नैमित्तिकस्नानम् - நைமித்திக ஸ்நானம் 229

ग्रहणस्नानम् - க்ரஹண ஸ்நானம் 259

संक्रान्ति स्नानम् - ஸங்க்ராந்தி ஸ்நானம் 267

रजस्वलास्नानम् - ரஜஸ்வலாஸ்நானம் 283

आतुरस्नानम् - பிணியாளர் ஸ்நானம் 295

काम्यस्नानम् - காம்ய ஸ்நானம் 297

माघस्नानम् - மாக ஸ்நானம் 300

मलापकर्षणस्नानम् - மலாபகர்ஷண ஸ்நானம் 307

नरकचतुर्दशीस्नानम् - நரகசதுர்தசீ ஸ்நானம் 317

क्रियास्नानम् - கிரியாஸ்நானம் 322

नदीरजो दोषनिर्णयः - நதிகளின் ரஜோதோஷ நிர்ணயம் .. 327

गौणस्नानानि - கௌண ஸ்நானங்கள் 335

ऊर्ध्वपुण्ड्रधारणम् - ஊர்த்வபுண்ட்ர தாரணம் 347

त्रिपुण्ड्रधारणम् - த்ரிபுண்ட்ரதாரணம் 386

सन्ध्योपासनम् - ஸந்த்யோபாஸனம் 427

सन्ध्योपासनकालः - ஸந்த்யோபாஸன காலம் 442

प्रातःसन्ध्या - ப்ராதஸ்ஸந்த்யா 450

जपदेशासनादिविधिः - ஜபதேசாஸநாதிவிதி 475

प्राणायामः - ப்ராணாயாமம் 484

गायत्र्यावाहन व्याहृत्यर्थौ .....
காயத்ரீ ஆவாஹனம், வியாஹ்ருதியின் பொருள் 498

गायत्र्यर्थः - காயத்ரியின் பொருள் 502

गायत्रीशिरसोऽर्थः - காயத்ரீ சிரஸின் பொருள் 506

ऋषिच्छन्दो देवताः - ருஷி சந்தஸ் தேவதை 509

गायत्रीन्यासः - காயத்ரீ நியாஸம் 518

मुद्राविधिः - முத்ராவிதி 522

गायत्रीध्यानम् - காயத்ரீ த்யானம் 528

गायत्रीमहिमा - காயத்ரியின் பெருமை 532

ஷ

श्रीगुरुभ्यो नमः

श्रीवैद्यनाथदीक्षितविरचिते

स्मृतिमुक्ताफले

आह्निककाण्डः

(पूर्वभागः)

ஸ்ரீ வைத்யநாத தீக்ஷிதர் இயற்றிய

ஸ்ம்ருதிமுக்தாபலம்

ஆஹ்நிக காண்டம்

(முன் பகுதி)

இனி இப்பொழுது ஆஹ்னிககாண்டம் ஆரம்பிக்கப்பட்டுகிறது. வர்ணச்ரமதர்மகாண்டம் முடிந்த பிறகு. அதே பதம் க்ரந்தாரம்பத்தில் செய்யும் மங்களமுமாகும். அஹஸ் பகலும், ராத்திரியும். அவைகளில் செய்ய வேண்டிய கார்யங்கள் ஆஹ்னிகங்களெனப்படும். ஆஹ்னிகங்களைச் சொல்லும் காண்டம் ஆஹ்னிககாண்டம். காலையில் விழிப்பது முதல் இரவில் படுக்கும் வரையிலுள்ள கார்யங்களை, மன்வாதி தர்மசாஸ்த்ரங்களை அனுஸரித்துச் சொல்லும் க்ரந்தமிது.

ब्राह्म मुहूर्ते प्रबोधादि ॥

तत्र मनुः– 'ब्राह्मे मुहूर्ते बुध्येत धर्मार्थावनुचिन्तयेत्। कायक्लेशांश्च तन्मूलान् वेदतत्वार्थमेव चे'ति ॥ वेदतत्वार्थः - परमात्मा।

விடியற்காலத்தில் எழுந்திருப்பது முதலியவை

அந்த ஆஹ்னிகங்களுள் விடியற்காலத்தில் எழுந்திருப்பதைப்பற்றி மனு - ப்ராம்ஹ முஹூர்த்தத்தில் எழுந்திருக்க வேண்டும். தர்மத்தையும் அர்த்தத்தையும் சிந்திக்க வேண்டும். அவைகளாலுண்டாகும் தேஹச்ரமங்களையும் வேதத்தின் உண்மைப் பொருளான பரமாத்மாவையும் சிந்திக்க வேண்டும். இனி பகலிலும் இரவிலும் இவ்விதம் தர்மத்தைச் செய்ய வேண்டும் என்றும் இவ்விதம் பொருளைத் தேடவேண்டுமென்றும் சிந்திக்க வேண்டும். அவைகளில் தேஹத்திற்கு ச்ரமமதிகமாகி, தர்மார்த்தங்கள் அல்பமாகாமல், அல்பச்ரமத்தால் அதிகதர்மமும் அதிக அர்த்தமும் கிடைக்கும் வழியைச் சிந்திக்க வேண்டும். வேததத்வார்த்தமென்பதற்கு வேதத்தில் விதித்துள்ள கர்மங்களும், ப்ரஹ்மம் என்றும் பொருளுண்டு.

तथा च व्यासः – 'ब्राह्मे मुहूर्त उत्थाय धर्ममर्थञ्च चिन्तयेत्। कायक्लेशं तदुद्भूतं ध्यायीत मनसेश्वर' मिति।।

வ்யாஸர்: - ப்ராம்ஹமுஹூர்த்தத்தில் எழுந்து தர்மம் அர்த்தம் இவைகளையும், அவைகளாலுண்டாகும் தேஹச்ரமத்தையும் சிந்திக்க வேண்டும், ஈச்வரனையும் மனதால் தியானிக்க வேண்டும்.

याज्ञवल्क्यः – 'ब्राह्मे मुहूर्त उत्थाय चिन्तयेदात्मनो हितम्। धर्मार्थिकामान् स्वे काले यथाशक्ति न हापये' दिति।। ब्राह्मे मुहूर्ते = पश्चिमेऽर्धप्रहरे प्रबुद्धः आत्मनो हितं कृतं करिष्यमाणञ्च वेदार्थरूपं चिन्तयेत्। ततो धर्मार्थिकामान् स्वोचिते काले यथा सम्भवं सेवेतेत्यर्थः' इति विज्ञानेश्वरः।।

யாக்ஞவல்க்யர் - ப்ராம்ஹ முஹூர்த்தத்தில் எழுந்து தனக்கு ஹிதமான கார்யத்தைச் சிந்திக்க வேண்டும். தர்மம், அர்த்தம், காமம் இவைகளை அவைகளுக்கு உரித்தான

காலத்தில் தன் சக்திக்குத் தகுந்தவாறு விடாமல் அனுஷ்டிக்க வேண்டும். ப்ராம்ஹமுஹூர்த்ததில் - இராத்திரியின் கடைசி யாமத்தில் பின்பாகத்தில் விழித்தவனாய், தனக்கு ஹிதத்தை (முன் செய்ததையும் இனிச் செய்ய வேண்டியதையும்) வேதார்த்த ரூபமாயுள்ளதைச் சிந்திக்க வேண்டும். பிறகு தர்ம அர்த்த காமங்களை அதற்கு உசிதமான காலத்தில் யதாசக்தி ஸேவிக்க வேண்டும் என்று பொருள் என்கிறார் விக்ஞானேச்வரர்.

माधवीये पराशरोऽपि – 'सूर्योदयात् प्रागर्धप्रहरे द्वौ मुहूर्तौ। तत्राद्यो ब्राह्मः। द्वितीयो रौद्र इति। स्मृत्यर्थसारेऽपि – 'प्रभात उत्थायेष्टं दैवतं मनसा नत्वा तदहः कृत्यं स्मरे' दिति॥ स्मृतिभास्करे – 'रात्रेस्तु पश्चिमे यामे मुहूर्तो ब्राह्म उच्यते' सति॥ शौनकः - 'ब्राह्मे मुहूर्त उत्थाय चिन्तयेदात्मनो हितम्। गुरुं विष्णुं नमस्कृत्य मातापित्रोस्तथैव चेति॥

மாதவீயவ்யாக்யானத்தில் பராசரர் - ஸூர்யோதயத்திற்கு முன் கடைசி யாமத்தின் பாதியில் இரண்டு முஹூர்த்தங்களில் முதலாவது முஹூர்த்தம் ப்ராம்ஹம், இரண்டாவது முஹூர்த்தம் ரௌத்ரம் எனப்படுகிறது. ஸ்ம்ருத்யர்த்தஸாரத்திலும்:- விடியற்காலத்தில் எழுந்து, இஷ்ட தெய்வத்தை மனத்தால் வணங்கி, வரும் பகலில் செய்ய வேண்டிய கார்யத்தைச் சிந்திக்க வேண்டும். ஸ்ம்ருதிபாஸ்கரத்தில்:- இராத்திரியின் கடைசி யாமத்தில் உள்ள ஒரு முஹூர்த்தம் ப்ராம்ஹமென்று சொல்லப்படுகிறது. சௌனகர்:- ப்ராம்ஹ முஹூர்த்தத்தில் எழுந்து குரு, விஷ்ணு, மாதாபிதாக்கள் இவர்களை நமஸ்கரித்துத் தனக்கு ஹிதமான கார்யத்தைப் பற்றிச் சிந்திக்க வேண்டும்.

विष्णुपुराणे – 'ब्राह्मे मुहूर्त उत्थाय मनसा मतिमान् नृप। विबुद्धश्चिन्तयेद्धर्ममर्थांश्चाप्यविरोधिनः॥ अपीडया तयोः काममुभयोः परिचिन्तयेदिति॥ स्मृत्यन्तरे–'षोढा विभज्य रजनीं चरमांशे

प्रबोधितः। पद्म्या सह हरिं ध्यात्वा धर्ममर्थञ्च चिन्तयेदिति स्मृतिरत्नावल्याम्– 'गृहमेधिनि यत् प्रोक्तं स्वर्गभावनमुत्तमम्। ब्राह्मे मुहूर्त उत्थाय सर्वं सम्यग्विचारयेत्॥ ब्राह्मे मुहूर्ते वेदानां पितॄणाञ्च समागमः। जागरस्तत्र कर्तव्यः पितृसंमाननं हि तत्॥ य इच्छेच्छाश्वतीं सिद्धिं यमस्यादर्शनं तथा। सततं तेन कर्तव्यो ब्राह्मे काले प्रजागरः॥ ब्राह्मे मुहूर्ते सेवेतां शयनं यत्र दम्पती। श्मशान तुल्यं तद्वेश्म पितृभिः परिवर्ज्यते॥ प्रत्यूषकाले निद्राञ्च कुरुते सर्वदा तु यः। अशुचि तं विजानीयादनर्हं सर्वकर्मसु॥ ब्राह्मे मुहूर्ते या निद्रा सा पुण्यक्षयकारिणी॥ तां करोति तु यो मोहात् पादकृच्छ्रेण शुध्यतीति॥

விஷ்ணுபுராணத்தில்:- ஓ அரசனே! நல்ல புத்தியுள்ளவன் ப்ராம்ஹ முஹூர்த்தத்தில் எழுந்து விழித்துக் கொண்டு, தர்மத்தையும், அதற்கு விரோதமில்லாத அர்த்தத்தையும் அவ்விரண்டிற்கும் விரோதமில்லாத காமத்தையும் மனதால் சிந்திக்க வேண்டும். **மற்றொரு ஸ்ம்ருதியில்:-** இராத்திரியை ஆறுகப் பிரித்து, கடைசிப் பாகத்தில் விழித்துக் கொண்டு, பத்னியுடன் 'பத்னியாகிய லக்ஷ்மியுடன் கூடிய ஹரியை விஷ்ணுவை த்யானித்து' தர்மம் அர்த்தம் இவைகளையும் சிந்திக்க வேண்டும். **ஸ்ம்ருதிரத்னவளியில்:-** க்ருஹஸ்தன் விஷயத்தில் ஸ்வர்க்க பிராப்திகரமாய்ச் சிறந்த கர்மம் எதுசொல்லப்பட்டுள்ளதோ அதை முழுவதும், ப்ராம்ஹ முஹூர்த்தத்தில் எழுந்து நன்றாய்ச் சிந்திக்க வேண்டும். ப்ராம்ஹ முஹூர்த்தத்தில் தேவர்களும், பித்ருக்களும் சேர்ந்து வருகிறார்கள். ஆகையால் அப்பொழுது விழித்துக் கொள்ள வேண்டும். அது பித்ருக்களையும் தேவர்களையும் மரியாதை செய்வதாகும். எவன் மோக்ஷத்தையும், யமனைப் பாராமலிருப்பதையும் வேண்டுகிறானே, அவன் பிரதினமும் ப்ராம்ஹ முஹூர்த்தத்தில் விழித்திருக்க வேண்டும். எந்த க்ருஹத்தில் தம்பதிகள் ப்ராம்ஹ முஹூர்த்தத்தில் படுக்கையிலிருக்கின்றார்களோ, அந்த

க்ருஹத்தைப் பித்ருக்கள் ச்மசானத்திற்குச் சமமாய்த் தள்ளிவிடுகிறார்கள். எவன் எப்பொழுதும் விடியற்காலத்தில் நித்திரை செய்கிறானே, அவனே அசுத்தனுகவும், ஸகலகர்மங்களிலும் தகுதி யற்றவனுகவும் அறிய வேண்டும். ப்ராம்ஹ முஹூர்த்தத்தில் செய்யப்படும் நித்திரை புண்யத்தை நாசப்படுத்துவதாகும். அறியாமையால் அக்காலத்தில் நித்திரை செய்பவன் பிராஜாபத்யக்ருச்ரத்தின் நாலிலொரு பாகமாகிய பாதக்ருச்ரம் அனுஷ்டித்தால் சுத்தனுகிறான்.

बृहन्मनुः – चत्वारीमानि कर्माणि सन्ध्यायां परिवर्जयेत्। आहारं मैथुनं निद्रां स्वाध्यायञ्च तथैव च ।। आहाराज्जायते व्याधिः गर्भवेधश्च मैथुनात्। निद्रातो जायतेऽलक्ष्मीः स्वाध्यायादायुषः क्षय इति ।। मनुरपि - तञ्चेदभ्युदियात्सूर्यश्शयानं कामकारतः । निम्रोचे द्वाऽभ्यनु-ज्ञानाज्जपन्नुपवसेद्दिनम् ।। सूर्येण ह्यभिनिर्मुक्तः शयानोऽभ्यदितश्च यः । प्रायश्चित्तमकुर्वाणो युक्तः स्यान्महतैनसेति ।। तस्मिन् यस्मिन् कस्मिंश्चिदाश्रमिणि शयाने सति सूर्योऽभिनिम्रोचेत् - अस्तमियात्। अभ्यनुज्ञानात् - ज्ञात्वा उपेक्षणात्। एवं वचना दशक्त्यज्ञानादिषु प्रायश्चित्ताभावः सूचितः, अन्यथा तु प्रायश्चित्ताकरणे महान् प्रत्यवाय इत्यर्थः ।।

ப்ரஹன்மனு - ஆஹாரம், ஸ்த்ரீஸங்கம், தூங்குதல், அத்யயனம் (வேதமோதல்) இந்நான்கு கார்யங்களையும் ஸந்த்யாகாலத்தில் வர்ஜிக்க வேண்டும். அக்காலத்தில் சாப்பிடுவதால் வ்யாதியும், ஸ்த்ரீஸங்கத்தால் கர்ப்ப நாசமும், நித்திரையினால் மூதேவியும், அத்யயனத்தால் ஆயுளின் நாசமும் உண்டாகிறது. **மனுவும்:-** எந்த ஆச்ரமியானாலும் அறிந்தே தூங்கும் பொழுது ஸூர்யன் உதிக்கின்றானே, அல்லது அஸ்தமிக்கின்றானே அவன் பகல் முழுவதும் காயத்ரியை ஜபிப்பவனுய் உபவாஸமிருக்க வேண்டும். ஸூர்யாஸ்தமயகாலத்தில்

தூங்கும் அபிநிம்ருக்தனும், உதயகாலத்தில் தூங்கும் அப்யுதிதன் என்பவனும் முன் சொல்லிய பிராயச்சித்தம் செய்யாவிடில் மஹாபாபமுடையவனுவான். இது எல்லா ஆச்ரமிகளுக்கும் ஸமம். மனுவசனத்தில் 'காமகாரதः' அப்யனுஜ்ஞாநாத்' என்றிருப்பதால் அசக்தி, அறிவின்மை முதலிய காரணங்களாலேற்படும் விஷயத்தில் பிராயச்சித்தமில்லையென்று ஸமிப்பிக்கப்படுகிறது. சக்தியுள்ளவனுக்கும், ஜ்ஞானமுள்ளவனுக்கும் பிராயச்சித்தம் செய்துகொள்ளாவிடில் மஹாதோஷம் என்பது பொருள்.

आपस्तम्बः – 'स्वपन्नभिनिम्रुक्तोऽनाश्वान्वाग्यतो रात्रिमासीत श्वोभूत उदकमुपस्पृश्य वाचं विसृजेत्। स्वपन्नभ्युदितोऽनाश्वान्वाग्यतोऽहस्तिष्ठेत्। आतमितोः प्राणमायच्छेदित्येक इति ।। 'सुप्ते यस्मिन्नस्तमेति सुप्ते यस्मिन्नुदेति च। अंशुमानभिनिम्रुक्ताभ्युदितौ तौ यथाक्रमम्।। स्वपन्नभिनिम्रुक्तः अनाश्वान् - अभुञ्जानः, वाग्यतः तूष्णीं भूतो रात्रिं सर्वामासीत। न शयीत। अथापरेद्युः प्रातः स्नात्वा वाचं विसृजेत्।। अयमस्य निर्वेशः ।। आतमितोः - यावदङ्गानां ग्लानिर्भवति, तावत् प्राणायामं कुर्यादित्येके मन्यन्ते इत्यर्थः ।। शक्त्यपेक्षो विकल्पः ।।

ஆபஸ்தம்பர் - ஸூர்யாஸ்தமயகாலத்தில் நித்திரை செய்பவன் 'அபிநிம்ருக்தன்' எனப்படுவான். அவன் இராத்திரி முழுவதும் உபவாஸத்துடன் மௌனியாய் உட்கார்ந்திருக்க வேண்டும், படுக்கக் கூடாது. மறுநாள் காலையிலும் ஸ்நானம் செய்த பிறகு பேசவேண்டும். இது பிராயச்சித்தம். ஸூர்யோதயகாலத்தில் நித்திரை செய்பவன் 'அப்யுதிதன்' எனப்படுவான். அவன் அன்று பகல் முழுவதும் உபவாஸத்துடன் மௌனியாய் நின்றுகொண்டிருக்க வேண்டும். 'அங்கங்களுக்கெல்லாம் சோர்வு உண்டாகும் வரை பிராணயாமம் செய்ய வேண்டும் எனச் சிலர் சொல்லுகின்றனர். இந்த இரண்டு பிராயச்சித்தங்களுள் ஒன்றை யனுஷ்டிக்கலாம் என்ற

விகல்பம் சக்தியை அனுஸரித்துச் சொல்லப் பட்டிருக்கிறது.

विष्णुः – उत्थायोत्थाय बोद्धव्यं किमद्य सुकृतं कृतम्। दत्तं वा दापितं वाऽपि वाक्सत्या वाऽपि भाषिता ।। उत्थायोत्थाय बोद्धव्यं महद्भयमुपस्थितम्। मरण व्याधिशोकानां किमद्य निपतिष्यतीति ।। व्यासः – 'किन्नु मे स्यादिदं कृत्वा किन्नु मे स्यादकुर्वतः। इति सञ्चिन्त्य कार्याणि धीरः कुर्वीत वा न वेति ।। स्मृतिप्रदीपिकायाम्– 'यस्यां रात्र्यां व्यतीतायां न किंचिच्छुभमाचरेत्। तमेव वन्ध्यां दिवसमिति विद्याद्विचक्षण' इति ।।

விஷ்ணுः- ஒவ்வொரு நாளும் எழுந்தெழுந்து, சென்ற தினத்தில் என்ன நற்கார்யம் செய்தேன்? என்ன தானம் செய்தேன்? கொடுக்கச் செய்தேன்? என்ன் உண்மையான வார்த்தையைப் பேசினேன் என்று சிந்திக்க வேண்டும். எழுந்தெழுந்து மரணம், வியாதி, துக்கம் இவைகளுள் எந்த மஹாபயம் இப்பொழுது ஸமீபித்து வந்துவிடுமோ என்று சிந்திக்க வேண்டும். வ்யாஸர்:- புத்தியுள்ளவன் இக்கார்யத்தைச் செய்தால் என்ன பயனுண்டாகும், இக்கார்யத்தைச் செய்யாவிடில் என்ன கெடுதியுண்டாகு மென்று ஆலோசித்துப் பலனுக்குத் தகுந்த படி கார்யங்களைச் செய்யவேண்டும், செய்யாமலும் இருக்க வேண்டும். ஸ்ம்ருதிப்ரதீபிகையில்:- நற்கார்யமொன்றும் செய்யாமல் எந்தத் தினம் சென்றதோ அந்தத் தினத்தை வீணனதென்று அறியவேண்டும்.

प्रबोधानन्तरजप्यानि ।।

तत्र जप्यान्याह दक्षः – 'ब्रह्मा मुरारिस्त्रिपुरान्तकारिर्भानुश्शशी भूमिसुतो बुधश्च। गुरुश्च शुक्रश्शनिराहुकेतवः कुर्वन्तु सर्वे मम सुप्रभातम्। भृगुर्वसिष्ठः क्रतुरङ्गिराश्च मनुः पुलस्त्यः पुलहश्च गौतमः। रैभ्यो मरीचिश्च्यवनोऽथ दक्षः कुर्वन्तु सर्वे मम सुप्रभातम् ।। सनत्कुमारश्च

सनन्दनश्च सनातनोऽप्यासुरिसिंहलौ च। सप्त स्वराः सप्त रसातलानि कुर्वन्तु सर्वे मम सुप्रभातम्॥ सप्तार्णवाः सप्त कुलाचलाश्च सप्तर्षयो द्वीपवनानि सप्त। भूरादिकूर्मो भुवनानि सप्त कुर्वन्तु सर्वे मम सुप्रभातम्। पृथ्वी सगन्धा सरसास्तथाऽऽपः स्पर्शी च वायुर्ज्वलितश्च तेजः। नभः सशब्दं महता सहैव कुर्वन्तु सर्वे मम सुप्रभातम्॥ इत्थं प्रभाते परमं पवित्रं पठेत् स्मरेद्वा शृणुयाच्च तद्वत्। दुस्स्वप्ननाशस्त्विह सुप्रभातं भवेच्च नित्यं भगवत्प्रसादात्' इति॥

விழித்த பிறகு ஜபிக்கவேண்டிய மந்திரங்கள்

விடியற்காலத்தில் ஜபிக்க வேண்டியவைகளைச் சொல்லுகிறார் தக்ஷர்:- ப்ரம்மா, விஷ்ணு, சிவன், ஸூர்யன், சந்திரன், அங்காரகன், புதன், குரு, சுக்ரன், சனி, ராகு, கேது இவர்கள் எனக்குச் சுபமாக விடியற்காலத்தைச் செய்யவேண்டும். பிருகு, வஸிஷ்டர், கிரது, அங்கிரஸ், மனு, புலஸ்த்யர், புலஹர், கௌதமர், ரைப்யர், மரீசி, ச்யவனர், தக்ஷர் இவர்கள் எனக்குச் சுபமான விடியற்காலத்தை செய்ய வேண்டும். ஸனத்குமாரர், ஸநந்தனர், ஸநாதனர், ஆஸுரி, ஸிம்ஹளர், ஏழு ஸ்வரங்கள் ஏழு கீழுலகங்கள் இவர்களும் எனக்குச் சுபமான விடியற்காலத்தைச் செய்ய வேண்டும். 7-ஸமுத்ரங்கள், 7-குலபர்வதங்கள், 7-ருஷிகள், 7-தீவுகள், 7-வனங்கள், பூலோகம், ஆதிகூர்மம், 7-மேலுலகங்கள், இவைகளும் எனக்குச்சுபமான விடியற்காலத்தைச்செய்ய வேண்டும். கந்தகுணத்துடன் கூடிய பூமியும், ரஸத்துடன் கூடிய ஜலமும், ஸ்பர்சத்துடன் கூடிய வாயுவும். உருவத்துடன் கூடிய தேஜஸ்ஸும், சப்தத்துடன் கூடிய ஆகாசமும், மஹத்தத்வத்துடன் கூடி எனக்குச் சுபமான விடியற்காலத்தைச் செய்யவேண்டும். இவ்விதம் மஹாபரிசுத்தமான இந்த ஸ்தோத்ரத்தைக் காலையில் படித்தாலும், ஸ்மரித்தாலும், கேட்டாலும் துஷ்ட ஸ்வப்னபலன் நசிக்கும். நல்ல விடியற்காலமும், பகவத் ப்ரஸாதத்தால் என்றும் உண்டாகும்.

स्मृतिरत्ने – 'महाभारतमाख्यानं क्षितिं गाञ्च सरस्वतीम्। ब्राह्मणान् केशवञ्चैव प्रातरुत्थाय कीर्तयेत्।। ब्राह्मणं शङ्करं विष्णुं यमं रामं दनुं बलिम्।। सप्तैतान् संस्मरेन्नित्यं महापातकनाशनम्।। पुण्यश्लोको नलो राजा पुण्यश्लोको युधिष्ठिरः।। पुण्यश्लोका च वैदेही पुण्यश्लोको जनार्दनः।। कार्कोटकस्य नागस्य दमयन्त्या नलस्य च। ऋतुपर्णस्य राजर्षेः कीर्तनं कलिनाशनम्' इति।। शाण्डिल्यः – 'उच्चैस्स्वरेण यः प्रातः स्तोतु मिच्छदनन्यधीः। वासुदेवादिदेवानां नामसङ्कीर्तनं चरेदिति।।

ஸ்ம்ருதிரத்னத்தில் - மஹாபாரதத்தையும், பூமியையும், பசுவையும், ஸரஸ்வதியையும், ப்ராம்ஹணர் கூளையும், கேசவனையும் விடியற்காலத்திலெழுந்து உச்சரிக்க வேண்டும். ப்ரம்மா, சங்கரன், விஷ்ணு, யமன், ராமன், தனு, பலி இந்த ஏழு பேர்களையும் ப்ரதிதினமும் ஸ்மரிக்க வேண்டும். மஹாபாதகங்களும் நசிக்கும். நளனெனும் அரசனும், யுதிஷ்டிரனும், ஸீதா தேவியும், ஜனார்த்தனனும் புண்யச்லோகர்களெனப்படுகின்றனர். (இவர்களின் கீர்த்தியைக் கேட்பதும் புண்யப்ரதமென்பதாம்) கார்க்கோடகனெனும் நாகன், தமயந்தீ, நளன், ருதுபர்ணனெனும் ராஜரிஷி இவர்களின் நாமத்தை உச்சரிப்பது கலியைப் போக்குவதாகும், (கலியென்பது பாபத்தையும், சண்டையையும், கலியுகத்தையும், சொல்லும்.) சாண்டில்யர்:- எவன் விடியற்காலத்தில் ஸ்துதி செய்ய விரும்புகின்றானே அவன் உரத்த குரலுடன் வாஸுதேவன் முதலான தேவர்களின் நாமங்களை உச்சரிக்க வேண்டும்.

प्रातर्दर्शनीयान्यदर्शनीयानि च।

अथ दर्शनीयान्यदर्शनीयानि च दर्शयति कात्यायनः - श्रोत्रियं सुभगं गाञ्च ह्यग्निमग्निचितं तथा। प्रातरुत्थाय यः पश्येदापद्भ्यः स प्रमुच्यते।। पापिष्ठं दुर्भगं मर्त्यं नग्नमुत्कृत्तनासिकम्। प्रातरुत्थाय यत्

पश्येत् तत् कलेरुपलक्षणम्' इति ।। नग्नपदं बालव्यतिरिक्तविषयम् ।। अथ वा – छन्दांसि - ग्राः, न विद्यन्ते ग्राः यस्य सः 'नग्न' इत्युच्यते ।।

விடியற்காலத்தில் பார்க்கத்தக்கவையும் பார்க்கத்தக்காதவையும்

பார்க்கக்கூடியவைகளையும், பார்க்கக்கூடாதவைகளையும் தெரிவிக்கின்றார். காத்யாயனர்:- ச்ரோத்ரியன், அழகுடையவன், பசு, அக்நி, சயநம் செய்தவன் இவர்களை விடியற்காலத்தில் எழுந்து பார்ப்பவன் ஆபத்துக்களினின்றும் விடுபடுவான். பாவி, குரூபமுள்ளவன், நக்னன், மூக்கறுப்பட்டவன் இவர்களைக் காலையிலெழுந்தவுடன் பார்ப்பது கலஹத்திற்கு ஸூசகமாகும். நக்னன் என்ற பதம் வஸ்த்ரமில்லாதவனைச் சொல்லுகின்றது. ஆனால் குழந்தைகளைத் தவிர்த்து மற்றவர் விஷயமாய்ச் சொல்லவேண்டும். அல்லது வேதாத்யயனம் செய்யாதவனென்றும் நக்னபதத்திற்குப் பொருளுண்டு.

बहिर्विहारः शौचं च

तत्र व्यासः – 'नक्षत्रज्योतिरारभ्य त्वासूर्योदयदर्शनात्। प्रातः सन्ध्येति तां प्राहुः श्रुतयो मुनिसत्तमाः ।। ततः पूर्वं समुत्थाय प्राचीमेवोपनिष्क्रमेत्। उदीचीं प्रागुदीचीं वा शौचाचारक्षमां दिशम् ।। यत्रोदकं प्रभूतन्तु तद्गत्वा शौचमाचरेत्' इति ।। माधवीये – 'नैर्ऋत्यामिषुविक्षेपमतीत्याभ्यधिकं भुवः। दूरादावसथान्मूत्रं पुरीषञ्च समाचरे' दिति ।। आपस्तम्बः – 'आराच्चावसथान्मूत्रपुरीषे कुर्याद् दक्षिणां दिशं दक्षिणापरां वेति ।। गत्वेति शेषः। आरात् - दूरादित्यर्थः। व्यासः – 'प्रतिश्रयाद्दक्षिणपश्चिमेन क्षिप्रं गत्वा क्षेपमात्रं शरस्य। कुर्यात्पुरीषं स्वशिरोऽवकुण्ठ्य न च स्पृशेज्जातु शिरः करेण' इति ।। प्रतिश्रयः - गृहम् ।। मनुः – 'दूरादावसथान्मूत्रं दूरात् पादावसेचनम्। उच्छिष्टान्नं निषेकञ्च दूरादेव समाचरे' दिति ।। एतद्दिवाविषयम् ।

अस्तमिते च बहिर्ग्रामादारादावसथाद्वा मूत्रपुरीषयोः कर्म वर्जयेत्। 'रात्रौ मूत्रपुरीषे तु गृहाभ्याशे समाचरेत्' इति स्मरणात्।।

வெளியில் ஸஞ்சாரம் -சௌசம்

வ்யாஸர்:- ஓ முனிவர்களே! நக்ஷத்ரங்களின் ஒளி இருக்கும் காலம் முதல் ஸூர்யோதயம் வரையிலுள்ள காலத்தைப் ப்ராத்ஸ்ஸந்த்யா என்று வேதங்கள் சொல்லுகின்றன. அதற்கு முன்பே எழுந்து கிழக்கு, வடக்கு, வடகிழக்கு இவைகளுள் சௌசாசாரத்திற்கு யோக்யமான திசையை நோக்கிக் செல்லவேண்டும். எந்த இடத்தில் ஜலம் அதிகமாயுள்ளதோ அந்த இடம் சென்று சௌசம் செய்து கொள்ளவேண்டும். **மாதவீயத்தில்:-** தென்மேற்குத் திக்கில் அம்புவிழும் தூரம், அல்லது அதிகமான ப்ரதேசத்தைக் கடந்துசென்று வீட்டிற்குத் தூரமான ஸ்தலத்தில் மூத்ரம், மலம் இவைகளை விடவேண்டும். **ஆபஸ்தம்பர்:-** தெற்கு, அல்லது தென்மேற்குத் திக்கில் சென்று, வீட்டிற்கு வெகுதூரத்தில் மல மூத்ர விஸர்ஜனம் செய்ய வேண்டும். **வ்யாஸர்:-** வீட்டிற்குத் தென்மேற்குத் திக்கில் அம்பு விழும் தூரத்தளவு சென்று தலையை வஸ்த்ரத்தால் மறைத்துக் கொண்டு, மலவிஸர்ஜனம் செய்ய வேண்டும். தலையைக் கையினால் தொடக்கூடாது. **மனு:-** மூத்ரம், கால் கழுவிய ஜலம் எச்சிலன்னம், ரேதஸ் இவைகளை வீட்டிற்கு வெளியில் தூரத்தில் பரிஹரிக்க வேண்டும். இது பகல் விஷயம். ஸூர்யாஸ்தமயத்திற்குப் பின் க்ராமத்திற்கோ, வீட்டிற்கோ வெகுதூரத்தில் மலமூத்ர விஸர்ஜனம் செய்ய வேண்டுமென்பதில்லை. ஸமீபத்திலும் செய்யலாம். ''ராத்திரியில் வீட்டிற்கு ஸமீபத்திலும் மலமூத்ர விஸர்ஜனம் செய்யலாம்'' என்று ஸ்ம்ருதியிருப்பதால்.

अङ्गिराः – 'उत्थाय पश्चिमे यामे रात्रेराचम्य चोदकम्। अन्तर्धाय तृणैर्भूमिं शिरः प्रावृत्य वाससा। वाचं नियम्य यत्नेन ष्ठीवनोच्छ्वासवर्जितः। कुर्यान्मूत्रपुरीषे तु शुचौ देशे समाहित इति। अनेन यत्र स्वापादिना

निमित्तेनाचमनं प्राप्तम्, तत्राचम्यैव मूत्रपुरीषे कुर्यादित्युक्तं भवति ।। तृणानि - अयज्ञियानि ।। तथा च कात्यायनः – 'शिरः प्रावृत्य कुर्वीत शकृन्मूत्रविसर्जनम् । अयज्ञियैरनार्द्रैश्च तृणैः सञ्छाद्य मेदिनीमिति ।। तृणग्रहणं काष्ठादेरपि प्रदर्शनार्थम् ।। अत एव मनुः - 'तिरस्कृत्योच्चरेत्काष्ठं लोष्टं वर्णं तृणानि वा । नियम्य प्रयतो वाचं संवीताङ्गोऽवकुण्ठित' इति । तिरस्करणम् - अन्तर्धानम् । उच्चारः - पुरीषोत्सर्गः । मूत्रस्याप्युपलक्षणमेतत्, 'अयज्ञियैरनार्द्रैश्च तृणैः सञ्छाद्य मेदिनीम् । घ्राणास्ये वाससाऽऽवेष्ट्य मलमूत्रं त्यजेद्बुध इति स्मरणात् ।। संवीताङ्गः - आच्छादितदेहः । अवकुण्ठितः - प्रावृतशिराः ।।

அங்கிரஸ்:- ராத்திரியின் கடைசி யாமத்தில் எழுந்து கவனமுடையவனுய் ஆசமனம் செய்து, புற்களால் பூமியை மறைத்து, வஸ்த்ரத்தால் தலையை மறைத்து, மௌனத்துடன், துப்புதல், பெருமூச்சுவிடுதல் இவைகளில்லாமல் சுத்தமான இடத்தில் மலமூத்ர விஸர்ஜனம் செய்ய வேண்டும். இங்கு ஆசமனம் செய்து என்றிருப்பதால் நித்திரையைப்போல் வேறு ஆசமன நிமித்தம் நேர்ந்தால் ஆசமனம் செய்த பிறகே மலமூத்ர விஸர்ஜனம் செய்ய வேண்டு மென்று சொல்லியதா யாகிறது. பூமியை மறைக்கும் புற்கள் யாகத்திற்கு அர்ஹமில்லாதவைகளாயிருக்க வேண்டும். அவ்விதமே விதிக்கின்றார் காத்யாயனர்:- தலையை மறைத்துக் கொண்டு, யாகத்திற்கு யோக்யமல்லாததும், உலர்ந்ததுமான த்ருணங்களால் பூமியை மறைத்து, மலமூத்ர விஸர்ஜனம் செய்ய வேண்டும். இங்கு திருணம் (புல்) என்னும் பதம் கட்டை முதலியவையும் காட்டுவதற்காகும். ஆகையாலேதான், மனு:- சுத்தனையும், மௌனியாயும், அங்கங்களையும் தலையையும் வஸ்த்ரத்தால் மறைத்துக் கொண்டு, கட்டை, மண் கட்டி, இலை, புல் இவைகளிலொன்றில் பூமியை மறைத்து மலவிஸர்ஜனம் செய்யவேண்டும். இங்குள்ள 'உச்சரேத்' என்ற பதம் மூத்ர

விஸர்ஜனத்தையும் சொல்லும், 'யக்ஞார்ஹமல்லாததும், உலர்ந்ததுமான புல்களால் பூமியை மறைத்து, மூக்கையும் வாயையும் வஸ்த்ரத்தால் மறைத்து, மலமூத்ரங்களை விடவேண்டும்' என்ற ஸ்ம்ருதியிருப்பதால்.

अत्र विष्णुः – 'अनार्द्रेण स्ववाससा वेष्टयित्वा मूर्धानं ग्रीवायामवसज्योच्चरेदिति ।। हारीतः – 'अप्रावृतशिरा यस्तु विण्मूत्रं सृजति द्विजः । तच्छिरश्शतधा भूया दिति देवाश्शपन्ति तमिति ।। बोधायनः – 'शुष्कं तृणमयाज्ञिकं काष्ठं लोष्टं वा तिरस्कृत्याहोरात्र-योरुदङ्मुखः प्रावृत्य शिर उच्चरेन्मेहेद्वेति ।।

இங்கு விஷ்ணுः- ஈரமில்லாத தன் வஸ்த்ரத்தினால் தலையை மறைத்துக் கொண்டு உபவீதத்தைக் கழுத்தில் சேர்த்து மலமூத்ர விஸர்ஜனம் செய்யவேண்டும். ஹாரீதர்:- ப்ராம்ஹணன் தலையை வஸ்த்ரத்தால் மறைத்துக் கொள்ளாமல் மலமூத்ர விஸர்ஜனம் செய்தால் அவன் தலை பல துண்டுகளாய்ப் போகவேண்டுமென்று தேவர்கள் அவனைச் சபிக்கின்றனர். போதாயனர்:- யாகார்ஹமல்லாத உலர்ந்த புல், கட்டை, மண்கட்டி இவைகளிலொன்றினால் பூமியை மறைத்து, தலையை மூடிக்கொண்டு பகலில் வடக்குமுகமாகவும், இரவில் தெற்கு முகமாகவும் மலமூத்ர விஸர்ஜனம் செய்யவேண்டும்.

मनुः – 'मूत्रोच्चारसमुत्सर्गं दिवा कुर्यादुदङ्मुखः । दक्षिणाभिमुखो रात्रौ सन्ध्ययोश्च यथा दिवा ।। छायायामन्धकारे वा रात्रावहनि वा द्विजः । यथासुखमुखः कुर्यात् प्राणबाधाभयेषु चेति ।। 'छायायां मूत्रपुरीषयोः कर्म वर्जयेदिति स्मरणात्, अत्र छायाशब्देन अवर्जनीयो मेघपर्वतादिना महता व्यवधानेन सूर्यस्य तिरोभावो विवक्षितः । अन्धकारशब्देन रात्रौ ज्योतिषाम् ।। यत्तु देवलेनोक्तम् – 'सदैवोदङ्मुखः प्रातस्सायाह्ने दक्षिणामुखः । विण्मूत्राणाचरेन्नित्यं सन्ध्यासु परिवर्जयेदिति, तत् निरुद्धेतरविषयं, 'नोपरुद्धः क्रियाः कुर्या' दिति स्मरणात् ।।

மனு:- பகலில் வடக்குமுகமாகவும், ராத்திரியில் தெற்கு முகமாகவும், இரண்டு ஸந்த்யாகாலங்களிலும் பகலில் போலவும் மலமூத்ர விஸர்ஜனம் செய்யவேண்டும். நிழல், இருட்டு இவைகளிலும் ப்ராணபயம் வரக்கூடிய இடங்களிலும், பகல் ராத்திரியென்ற நியமமில்லாமல் இஷ்டப்படி இருந்து செய்யலாம். திக்குநியமமில்லை. 'நிழலில் மலமூத்ர விஸர்ஜனம் செய்யக்கூடா'தென்று ஸ்ம்ருதியிருப்பதால் இங்கு நிழல் என்ற பதத்தால், நம்மால் பரிஹரிக்க முடியாததாய் மேகம் பர்வதம் முதலியவைகளால் ஏற்படும் ஸூர்யனின் மறைவு சொல்லப்படுகிறது. அந்தகாரம் என்பதால் ராத்திரியில் நக்ஷத்ரங்களின் மறைவும் சொல்லப்படுகிறது. ''எப்பொழுதுமே காலையில் வடக்கு முகமாகவும் மாலையில் தெற்கு முகமாகவும் மலமூத்ர விஸர்ஜனம் செய்யவேண்டும். ஸந்த்யா காலங்களில் மலமூத்ர விஸர்ஜனம் செய்யக்கூடாது'' என்று தேவலர் சொல்லியிருக்கிறாரெனில், அது அடக்கப்பட்ட மலமூத்ரங்களைத் தவிர்த்தவைகளின் விஷயம். 'மலமூத்ரங்களை அடக்கிக்கொண்டு, க்ரியைகளைச் செய்யக் கூடாது' என்று ஸ்ம்ருதி இருப்பதால். ஆகையால் முனிவசன விரோதமில்லை.

स्मृतिसारे – 'आगम्य राक्षसीमाशां निवीती वाग्यतो दिवा। विण्मूत्रोत्सर्जनं कुर्यात् धृतशिश्न उदङ्मुखः ॥ सन्ध्ययोश्च तथा रात्रौ दक्षिणाभिमुखो द्विज' इति ॥ यत्तु – 'प्रत्युङ्मुखस्तु पूर्वाह्णेऽपराह्णे प्राङ्मुखस्तथा । उदङ्मुखस्तु मध्याह्ने निशायां दक्षिणामुख' इति यमवचनम्, तत् सूर्याभिमुख्यनिषेधपरमिति माधवीये ॥ याज्ञवल्क्यः – 'दिवा सन्ध्यासु कर्णस्थब्रह्मसूत्र उदङ्मुखः । कुर्यान्मूत्रपुरीषे तु रात्रौ चेद्दक्षिणामुख' इति ॥

ஸ்ம்ருதிஸாரத்தில்:- நிருருதி திக்கிற்கென்று நிவீதியாயும், மௌனியாயும், சிச்னத்தைப் பிடித்தக்

கொண்டு பகலில் வடக்கு முகமாகவும், ஸந்த்யா காலத்திலும் ராத்திரியிலும் தெற்கு முகமாகவும் மலமூத்ர விஸர்ஜனம் செய்யவேண்டும். முற்பகலில் மேற்கு முகமாயும், பிற்பகலில் கிழக்கு முகமாயும், நடுப்பகலில் வடக்கு முகமாயும், இரவில் கிழக்கு முகமாயும் மலமூத்ர விஸர்ஜனம் செய்யவேண்டுமென்ற யமவசனம், ஸூர்யாபிமுகமாயிருந்து செய்வதை நிஷேதிப்பதில் தாத்பர்யமுள்ளது என்று மாதவீயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. **யாக்ஞவல்க்யர்:-** பகலிலும், ஸந்த்யா காலங்களிலும், காதில் பூணூலைத் தரித்து வடக்குமுகமாயும், ராத்திரியில் தெற்குமுகமாயும் மலமூத்ர விஸர்ஜனம் செய்யவேண்டும்.

आपस्तम्बः – प्राङ्मुखोऽन्नानि भुञ्जीत उच्चरेद्दक्षिणामुखः । उदङ्मुखो मूत्रं कुर्यात् प्रत्यक्पादावनेजनमिति ॥ अत्र विकल्पो वेदितव्यः। अङ्गिराः – 'कृत्वा यज्ञोपवीतं तु पृष्ठतः कण्ठलम्बितम् । विण्मूत्रं तु प्रकुर्वीत यद्वा कर्णे समाहित इति ॥ आपस्तम्बोऽपि – 'नोर्ध्वं नाधो न तिर्यक्च किञ्चिद्वीक्षेत बुद्धिमान् । नभोभूम्यन्तरं पश्येत् कृत्वा मूर्ध्युपवीतकमिति ॥ स्मृत्यन्तरेऽपि – 'सूत्रं तु दक्षिणे कर्णे कृत्वा विण्मूत्रमुत्सृजेदिति ॥

ஆபஸ்தம்பர்:- கிழக்குமுகமாய்ப் போஜனம் செய்யவேண்டும். தெற்கு முகமாய் மலவிஸர்ஜனம் செய்யவேண்டும். வடக்குமுகமாய் மூத்ரவிஸர்ஜனம் செய்யவேண்டும். மேற்கு முகமாய்க் காலலம்பவேண்டும். இதில் விகல்பமுண்டு என்று அறியவேண்டும். **அங்கிரஸ்:-** பூணூலை நிவீதமாய்க் கழுத்திலிருந்து முதுகில் தொங்கும்படி செய்து, அல்லது காதில் தரித்து, மலமூத்ர விஸர்ஜனம் செய்யவேண்டும். **ஆபஸ்தம்பரும்:-** புத்தியுள்ளவன் மேலேயும், கீழேயும், குறுக்கிலும் ஒன்றையும் பார்க்கக்கூடாது. ஆகாசம், பூமி இவைகளின் நடுவையே பார்க்கவேண்டும். பூணூலைத் தலையில்

தரிக்கவேண்டும். வேறுருஸ்ம்ருதியில்:- உபவீதத்தை வலதுகாதில் தரித்துக் கொண்டு மலமூத்ர விஸர்ஜனம் செய்யவேண்டும்.

अङ्गिराः – 'यज्ञोपवीतं कर्णे च दक्षिणे तु निधाय च । कुर्यान्मूत्रपरीषे तु शुचौ देशे समाहितः' इति ।। दक्षिणकर्णनिधान मेकवस्त्रविषयम् ।। यदाह सुमन्तुः – 'यद्येकवस्त्रस्स्याद्विप्रः कर्णे कृत्वोपवीतकम्। मूत्रोत्सर्गं गृही कुर्यादिति साङ्ख्यायनोऽब्रवीदिति ।। साङ्ख्यायनगृह्येऽपि – 'यद्येकवस्त्रो यज्ञोपवीतं कर्णे कृत्वा मूत्रपुरीषोत्सर्गं कुर्यादिति ।। स्मृतिसारे – 'कृत्वाऽवकुण्ठनं चात्र उत्तरीयेण वाससा। पवित्रं दक्षिणे कर्णे कृत्वा विण्मूत्रमुत्सृजे' दिति ।। पवित्रं - यज्ञोपवीतम्।।

அங்கிரஸ்:- கவனமுள்ளவனுய், உபவீதத்தை வலது காதில் வைத்துக்கொண்டு, சுத்தமான இடத்தில் மலமூத்ர விஸர்ஜனம் செய்யவேண்டும். வலது காதில் வைத்துக்கொள்ள வேண்டுமென்பது ஒரே வஸ்த்ரம் தரித்திருப்பவனைப் பற்றியதாம். ஏனெனில், **ஸுமந்து** - 'க்ருஹஸ்தனுன ப்ராம்ஹணன் ஒரே வஸ்த்ரமுடையவனுயிருந்தால் உபவீதத்தை காதில் வைத்துக்கொண்டு மூத்ர விஸர்ஜனம் செய்யவேண்டுமென்று ஸாங்க்யாயனர் சொன்னுர்' என்று சொல்வதால். **ஸாங்க்யாயன க்ருஹ்யத்திலும்**:- ஒரே வஸ்த்ரத்துடனிருப்பானுகில் யக்ஞோபவீதத்தை காதில் வைத்துக் கொண்டு மலமூத்ரவிஸர்ஜனம் செய்யவேண்டும். **ஸ்ம்ருதி ஸாரத்தில்**:- உத்தரீய வஸ்த்ரத்தால் போற்றிக் கொண்டு, பவித்ரத்தை வலது காதில் வைத்துக்கொண்டு, மலமூத்ரவிஸர்ஜனம் செய்யவேண்டும். இங்கு பவித்ரம் பூணூல்.

तथा च भरद्वाजः – 'चण्डालैरन्त्यजैरुक्तौ मलमूत्रविमोचने। दक्षिणश्रवणे विप्रो ब्रह्मसूत्रं विनिक्षिपेदति ।। मूत्रपुरीषाधिकारे शङ्खः – 'नानुदको नामृत्तिको नापरिवेष्टितशिरा' इति ।। स्मृतिदीपिकायाम्–

'उद्धृतोदकमादाय मृत्तिकां चैव वाग्यतः । उदङ्मुखो दिवा कुर्याद्रात्रौ चेद्दक्षिणामुखः ।। त्यागान्मूत्रपुरीषस्य पूर्वं गृह्णीत मृत्तिकाम्। पश्चाद्गृह्णाति यो विप्रः सचेलो जलमाविशेदिति ।। पैठीनसिः – 'अनुदकमूत्र-पुरीषकरणे सचेलस्नानमिति ।। स एव – 'उद्धृत्यैव जलं पूर्वं कुर्यान्मूत्रपुरीषके।। गृहीतोदकपात्रश्चेत्कुर्यान्मूत्रपुरीषके। तत्तोयं मूत्रतुल्यं स्यात् पीत्वा चान्द्रायणञ्चरेत्।। करस्थोदकपात्रश्चेत् कुर्यान्मूत्र पुरीषके । तज्जलं मूत्रसदृशं सुरापानेन तत्सममिति।।

அப்படியே பரத்வாஜர்:- சண்டாளருடனும், அந்த்யஜருடனும் பேசும்பொழுதும், மலமூத்ர விஸர்ஜன காலத்திலும் ப்ராம்ஹணன் பூணூலை வலது காதில் வைத்துக்கொள்ளவேண்டும். **மலமூத்ரத்யாக ப்ரகரணத்தில் சங்கர்:-** சௌசத்திற்குரிய ஜலம், மண் இவைகளை எடுத்து வைத்துக் கொள்ளாமலும் தலையில் வஸ்த்ரத்தைச் சுற்றிக் கொள்ளாமலும் மலமூத்ரங்களை விடக்கூடாது. **ஸ்ம்ருதிதீபிகையில்:-** ஜலத்தையும், ம்ருத்திகையையும் எடுத்துக் வைத்துவிட்டு, மௌனியாய், பகலில் வடக்குமுகமாகவம், இரவில் தெற்குமுகமாகவம் மலமூத்ர விஸர்கம் செய்யவேண்டும். ப்ராம்ஹணன் மலமூத்ர விஸர்கத்திற்கு முந்தியே மண்ணை எடுத்து வைக்க வேண்டும். பிந்தி எடுத்தால் ஸசேல ஸ்நானம் செய்ய வேண்டும். சுட்டிய வஸ்த்ரத்துடனே ஸ்நானம் செய்வது ஸசேலஸ்நானம். **பைடீநஸி:-** ஜலத்தை எடுத்துக் கொள்ளாமல் மலமூத்ர விஸர்ஜனம் செய்தால் ஸசேலஸ்நானம் செய்யவேண்டும். **பைடீநஸியே:-** ஜலத்தை முந்தி எடுத்துக் கொண்ட பிறகே மூத்ர புரீஷவிஸர்கம் செய்யவேண்டும். ஜலபாத்ரத்தைத் தொட்டுக் கொண்டு விஸர்ஜனம் செய்தாலும் அந்த ஜலம் மூத்ரஸமமாகும். அதைக் குடிப்பது ஸுராபானஸம மாகும்.

भरद्वाजः – 'मलमूत्रं त्यजेद्यस्तु विस्मृत्यैवोपवीतधृत्। तत्सूत्रं तु परित्यज्य दध्यादन्यत्पुनर्नवमिति।। अङ्गिराः – 'कृत्वा मूत्रं पुरीषं वा यदा नैवोदकं भवेत्। स्नात्वा लब्धोदकः पश्चात् सचेलं तु विशुध्यति। स्नानं कृत्वाऽऽर्द्रवासास्तु विण्मूत्रे कुरुते यदि। प्राणायामत्रयं कृत्वा पुनस्स्नानेन शुध्यति।। तैलाभ्यङ्गे तथा वान्ते क्षुरकर्मणि मैथुने। अनाचम्योच्चरन् विप्रस्त्रिरात्रमशुचिर्भवेदिति।।

பரத்வாஜர்:- *மறதியால் பூணூலை நிவீதம் செய்து கொள்ளாமல் உபவீதியாகவே மலமூத்ரத்யாகம் செய்தவன் அந்தப் பூணூலைப் விட்டுவிட்டுப் புதிதான பூணூலைத் தரித்துக் கொள்ள வேண்டும்.* **அங்கிரஸ்:-** *முதலில் ஜலமே கிடைக்காவிடில், மலமூத்ர விஸர்கம் செய்த பிறகு, ஜலம் கிடைத்தவிடத்தில் சௌசாதிகளைச் செய்துகொண்டு, ஸசேலஸ்நானம் செய்தால் சுத்தனாகிறான். ஸ்நானம் செய்த பிறகு ஈரவஸ்த்ரத்துடனேயே மலமூத்ர விஸர்கம் செய்தால், மூன்று ப்ராணாயாமங்கள் செய்து, மறுபடி ஸ்நானம் செய்தால் சுத்தனாகிறான். எண்ணெய் தேய்த்துக் கொள்ளல், வாந்தி, க்ஷௌரம், ஸ்த்ரீஸங்கம் இவைகளில் அததற்குரிய சுத்தியைச் செய்து ஆசமனம் செய்யாமல் மூத்ரபுரீஷ விஸர்கம் செய்பவன் மூன்று நாள் அசுத்தனாகிறான்.*

आपस्तम्बः - 'शिरः परिवेष्टनं प्रथमं निवीतं द्वितीयं दिशावलोकनं तृतीयमन्तर्द्धानं चतुर्थं मौनं पञ्चमं पुरीषं षष्ठं मृत्तिकाग्रहणं सप्तममुदकमष्टममिति। पुरीषकरणानन्तरं मृत्तिकोदकग्रहण मनुद्धृतविषयम् – 'सजलं भाजनं स्थाप्य मृत्तिकां च परीक्षिताम्। कुर्यान्मूत्रं पुरीषं च नान्यथा शुद्धिमाप्नुयादिति व्यासस्मरणात्।। मनुः – न मूत्रं पथि कुर्वीत न भस्मनि न गोव्रजे। वाय्वग्निं विप्रमादित्यं अपः पश्यंस्तथैव गाम्। न कदाचन कुर्वीत विण्मूत्रस्य विसर्जनम्। न फालकृष्टे न जले न चित्यां न च पर्वते।। न जीर्णदेवायतने न वल्मीके कदाचन। न

ससत्वेषु गर्तेषु न गच्छन्नापि च स्थितः । न नदीतीरमासाद्य न च पर्वतमस्तके।। प्रत्यग्निं प्रतिसूर्यं च प्रतिसोमोदकद्विजान्। प्रति गां प्रतिवातं च प्रज्ञा नश्यति मेहतः इति ।।

ஆபஸ்தம்பர்:- தலையை வஸ்த்ரத்தால் சுற்றுவது முதலாவது, பூணூலை நிவீதம் செய்து கொள்வது இரண்டாவது, நான்கு திக்குகளையும் பார்ப்பது மூன்றுவது, புல் முதலியவற்றால் பூமியை மறைத்தல் நான்காவது, மௌனம் ஐந்தாவது, விஸர்ஜனம் ஆறுவது, மண்ணை எடுப்பது ஏழாவது, ஜலத்தை எடுப்பது எட்டாவது. இந்த வசனத்தில் மல விஸர்ஜனத்திற்குப் பிறகு மண் ஜலமிவைகளை க்ரஹிப்பதைச் சொல்லியிருப்பது பூமியிலேயே இருக்கும் ஜலத்தில் செய்யப்படும் சௌசத்தின் விஷயமாகும். ஏனெனில் ''ஜலத்துடனுள்ள பாத்ரத்தையும், சோதிக்கப்பட்ட மண்ணையும் வைத்துவிட்டு மலமூத்ர விஸர்கம் செய்யவேண்டும். வேறுவிதமானால் சுத்தனாவதில்லை'' என்று வ்யாஸர் சொல்லியிருப்பதால். **மனு:-** வழியிலும், சாம்பலிலும், பசுக்கொட்டிலிலும், வாயு, அக்னி, ப்ராம்ஹணன், ஸூர்யன், ஜலம், பசு இவர்களைப் பார்த்துக் கொண்டும், கலப்பையால் உழுத பூமியிலும், ஜலத்திலும் ஆஹிதாக்னிகளின் செங்கற்களால் மந்த்ரத்துடன் கட்டப்படும் மேடையிலும் மலையிலும், ஜீர்ணமான தேவாலயத்திலும், புற்றிலும், ப்ராணிகள் வஸிக்கும் வீடுகளிலும், நடந்து கொண்டும் நின்று கொண்டும், நதியின் கரையிலும், மலையின் உச்சியிலும், மலமூத்ரவிஸர்ஜனம் செய்யக்கூடாது. அக்னி, ஸூர்யன், சந்த்ரன், ஜலம், ப்ராம்ஹணன், பசு, காற்று இவர்களுக்கு எதிராயிருந்து கொண்டு மலமூத்ர விஸர்ஜனம் செய்பவனுக்கு புத்தி குறைந்துவிடும்.

यमः – 'प्रत्यादित्यं न मेहेत न पश्येदात्मनश्शकृत्। दृष्ट्वा सूर्यं निरीक्षेत गामग्निं ब्राह्मणं तथेति।। विष्णुः – 'न प्रत्यनिलानलेन्दूर्कस्त्रीगुरु

ब्राह्मणानिति ।। बोधायनः – 'फालकृष्टे जले चित्यां वल्मीके गिरिमस्तके । देवालये नदीतीरे दर्भपृष्ठे तु शाद्वले । छायायां वृक्षमूले वा विण्मूत्रे न त्यजेद्बुधः । नान्यचित्तश्चिरं तिष्ठेन्न स्पृशेत् पाणिना शिरः ।। न ब्रूयान्न दिशः पश्येद्विण्मूत्रोत्सर्जने बुध इति ।।

யமன்:- ஸூர்யனுக்கு எதிராய் மலமூத்ர விஸர்ஜனம் செய்யக்கூடாது. தன்னுடைய மலத்தைப் பார்க்கக்கூடாது. பார்த்தால் ஸூர்யனைப் பார்க்க வேண்டும். அல்லது பசு, அக்னி, ப்ராம்ஹணன் இவர்களையாவது பார்க்க வேண்டும். **விஷ்ணு:**- காற்று, அக்னி, சந்த்ரன், ஸூர்யன், ஸ்த்ரீ, குரு, ப்ராம்ஹணன், இவர்களுக்கு எதிராயிருந்து கொண்டு மலமூத்ர விஸர்கம் செய்யக்கூடாது. **போதாயனர்:**- கலப்பையாலுழுத ஸ்தலத்திலும், ஜலத்திலும், வேள்வி மேடையிலும், புற்றிலும் மலையினுச்சியிலும், தேவாலயத்திலும், நதியின் கரையிலும், தர்ப்பத்தின் மேலும், புல்லுள்ள தரையிலும், நிழலிலும், மரத்தினடியிலும் மலமூத்ர விஸர்ஜனம் கூடாது. மலமூத்ரவிஸர்ஜன காலத்தில் வேறு விஷயத்தில் கவனமாய் வெகுகாலமிருக்கக்கூடாது. கையால் தலையைத் தொடக்கூடாது பேசக்கூடாது. திக்குகளைப் பார்க்கக்கூடாது.

पारिजाते – 'अग्नौ च तिष्ठन्वै रथ्यातीर्थे श्मशानके। अङ्गारे गोमये नद्यां यज्ञभूमिषु सर्वदा ।। बिले जले चितायां च वल्मीके गिरिमस्तके। देवालये नदीतीरे दर्भपुष्पकुशस्थले ।। सेव्यच्छायासु वृक्षेषु मार्गगोष्ठाम्बुभस्मसु । स्थानेष्वेतेषु वै कुर्यान्न तु मूत्रादि किञ्चन ।। तिष्ठेन्नातिचिरं तत्र नैव किञ्चिदुदीरयेत् इति ।। यमः – 'तुषाङ्गारक-पालानि देवतायतनानि च । राजमार्गश्मशानानि क्षेत्राणि च खलानि च ।। उपरुद्धो न सेवेत छायादृश्यं चतुष्पथम् । उदकं चोदपानं च पन्थानं च विवर्जयेत् ।। वृक्षमूलानि सर्वाणि चैत्यश्वभ्रबिलानि चेति ।। हारीतः

– 'चत्वरोपद्वारयोर्न मूत्रपुरीषे कुर्यान्न गोमये न गोष्ठे न तीर्थे न यज्ञभूमौ न यज्ञियानां वृक्षाणामधस्तादिति ।। उपद्वारं - द्वारसमीपम् ।।

பாரிஜாதத்தில்:- அக்னியிலும், நடந்துகொண்டும், நின்று கொண்டும், வீதியிலும், நதியின் துறையிலும், ச்மசானத்திலும், தணலிலும், சாணத்திலும், நதியிலும் யாக பூமியிலும், வஹ்னியிலும், ஜலத்திலும் மயான மேடையிலும், புற்றிலும், மலையினுச்சியிலும், தேவாலயத்திலும், நதிக்கரையிலும், தர்ப்பம், புஷ்பம் குசம் இவைகளுண்டாகுமிடங்களிலும், இளைப்பாறக்கூடிய நிழல்களிலும், மரங்களிலும், வழியிலும், பசுக்கொட்டிலிலும், ஜலத்திலும், சாம்பலிலும் மூத்ரம் முதலிய அசுத்தமொன்றையும் விடக்கூடாது. அங்கு வெகுநேரம் இருக்கக்கூடாது. ஒன்றும் பேசக்கூடாது. யமன்:- உமி, கரி, ஓடு, கோவில் ராஜமார்க்கம், மயானம், வயல், கள், நிழல், நாற்சந்தி, ஜலம் ஜலாதாரம், வழி, வ்ருக்ஷத்தினடி, தேவாலயம், பள்ளம், வஹ்னி இவைகளில் விஸர்ஜனம் செய்யக் கூடாது. ஹாரீதர்:- வாசல், வாசற்படியின் ஸமீபம், சாணம், மாட்டுக்கொட்டில், துறை, யாகபூமி, யாகார்ஹமான விருக்ஷங்களினடி இவைகளிலும் விஸர்ஜனம் கூடாது.

विष्णुरपि – 'नाप्रच्छादितायां भूमौ नोषरे न शाद्वले नोद्यानोदकसमीपयोर्नाकाश' इति ।। व्यासः – 'पुरीषं यदि वा मूत्रं ये न कुर्वन्ति मानवाः । राजमार्गे सभामध्ये धान्यमध्ये च ते शुभाः । वाय्वग्न्यर्काम्बुगोविप्रान् पश्यन्नोच्चारमुत्सृजेत् । नाश्ममूल-फलाङ्गारैरुन्मृज्यान्नाथ बर्हिषे' ति ।। स्मृतिरत्ने – 'न सोपानत्पादुको वा छत्री वा नान्तरिक्षके । तथैवाभिमुखः स्त्रीणां गुरुब्राह्मण-योर्गवामिति ।।

விஷ்ணு:- மறைக்காத பூமியிலும், களர் பூமியிலும், புல் தரையிலும், பூந்தோட்டத்திலும், ஜல ஸமீபத்திலும்,

ஆகாசத்திலும் விஸர்ஜனம் செய்யக்கூடாது. வ்யாஸர்:- ராஜமார்க்கத்திலும், ஸபையின் நடுவிலும், தான்யங்களின் நடுவிலும் விஸர்ஜனம் செய்யாதவர்கள் நல்லவராவர். காற்று, அக்னி, ஸூர்யன், ஜலம், பசு, ப்ராம்ஹணன் இவர்களைப் பார்த்துக் கொண்டு விஸர்ஜனம் செய்யக்கூடாது. கல், கிழங்கு, கரி, தர்ப்பம் இவைகளால் மலத்தைத் துடைக்கக்கூடாது. ஸ்ம்ருதிரத்னத்தில்:- செருப்பு, பாதுகை தரித்தவனையும், குடை பிடித்தவனையும், ஆகாயத்திலும். ஸ்த்ரீகள், குரு, ப்ராம்ஹணன், பசு இவர்களுக்கு எதிராயும் விஸர்ஜனம் செய்யக்கூடாது.

याज्ञवल्क्यः – 'न तु मेहेन्नदीच्छायावर्त्मगोष्ठाम्बुभस्मसु। न प्रत्यग्न्यर्कगोसोम सन्ध्याम्बुस्त्रीद्विजन्मनः ।। नेक्षेतार्कं न नग्नां स्त्रीं न च संसृष्ट मैथुनाम्। न च मूत्रं पुरीषं वा नाशुची राहु तारका इति ।। उदयास्तमये आदित्यं नेक्षेत, न हि सर्वदा। यथोक्तं मनुना – 'नेक्षेतोद्यन्तमादित्यं नास्तं यन्तं कदाचन। नोपसृष्टं न वारिस्थं न मध्यं नभसो गतमिति ।। उपभोगादन्यत्र न नग्नां, 'न नग्नां स्त्रियमीक्षेतान्यत्र मैथुना' दित्याश्वलायनस्मरणात्।। मूत्रपुरीषे च न पश्येत्। तथा अशुचिः राहुतारकाश्च न पश्येदित्यर्थः।

யாக்ஞவல்க்யர்:- நதி, நிழல், வழி, கொட்டில் ஜலம், சாம்பல் இவைகளிலும், அக்னி, ஸூர்யன், பசு, சந்த்ரன், ஸந்த்யை, ஜலம், ஸ்த்ரீ, ப்ராம்ஹணன் இவர்களுக்கு கெதிரிலும் விஸர்ஜனம் செய்யக்கூடாது. ஸூர்யனைப் பார்க்கக்கூடாது. வஸ்த்ரமில்லாத ஸ்த்ரீயையும், ஸங்கமம் செய்து கொண்டிருக்கும் ஸ்த்ரீயையும், மூத்ரம், மலம் இவைகளையும், அசுத்தனுய் ராகுவையும், நக்ஷத்ரங்களையும் பார்க்கக்கூடாது. உதயத்திலும் அஸ்தமயத்திலும், ஸூர்யனைப் பார்க்கக் கூடாது. எப்பொழுதும் பார்க்கக்கூடா தென்பதில்லை. ஏனெனில், மனு:- உதயத்திலும், அஸ்மதயத்திலும், க்ரஹணகாலத்திலும், ஜலத்திலும், ஆகாசத்தின் நடுவிலும்

ஸூர்யனைப் பார்க்கக் கூடாது. நக்னஸ்த்ரீயைப் பார்க்கலாகாதென்பது போககாலம் தவிர மற்றகாலத்தில். 'மைதுனகாலமின்றி மற்றகாலத்தில் நக்னஸ்த்ரீயைப் பார்க்கக்கூடாதென்று ஆச்வலாயனர் கூறியிருக்கிறார். மூத்ரம், மலம் இவைகளையும் பார்க்கக்கூடாது. அசுத்தஜலத்தையும், நக்ஷத்ரங்களையும் பார்க்கக்கூடாது என்று பொருள்.

आपस्तम्बः – 'शिरस्तु प्रावृत्य मूत्रपुरीषे कुर्याद्भूम्यां किञ्चिदन्तर्द्धाय छायायां मूत्रपुरीषयोः कर्म वर्जयेत्। स्वान्तु च्छायामवमेहेत्। न सोपानन्मूत्रपुरीषे कुर्यात् कृष्टे पथ्यप्सु च। तथा ष्ठीवनमैथुनयोः कर्माप्सु वर्जयेत्। अग्निमादित्यमपो ब्राह्मणं गा देवताश्चाभिमुखो मूत्रपुरीषयोः कर्म वर्जये'दिति ।। छायायां उपजीव्यच्छायायाम्। न चोपजीव्यच्छायास्विति स्मरणात्।। ष्ठीवनं - श्लेष्मनिरसनम्।।

ஆபஸ்தம்பர்:- தலையை வஸ்த்ரத்தால் மறைத்து, பூமியை புல் முதலியதால் மறைத்து, மலமூத்ர விஸர்ஜனம் செய்ய வேண்டும். நிழலில் விஸர்ஜனம் செய்யக்கூடாது. தன்னுடைய நிழலில் செய்யலாம். பாதரக்ஷை தரித்து செய்யக்கூடாது. உழுத நிலத்திலும், வழியிலும், ஜலத்திலும், கூடாது. காரித்துப்புதல் மைதுனம் இவைகளை ஜலத்தில் செய்யக்கூடாது. அக்னி ஸூரியன், ஜலம், ப்ராம்ஹணன், பசு, தேவதைகள் இவர்களுக்குஎதிராக மூத்ரமலங்களை விடக்கூடாது. நிழல் பிறருக்கு உபகாரமான நிழல். அவ்விதம் ஸ்ம்ருதி சொல்லுவதால்.

स्मृत्यर्थसारे – 'मूत्रपुरीषं समुत्सृजन् अयज्ञियकाष्ठतृणपर्णादिकं गृहीत्वा शिरः प्रावृत्य निवीतं कण्ठलम्बितं कृत्वा एकवस्त्रश्चेत् दक्षिणे कर्णे निधाय, भुवं काष्ठाद्यन्तर्हितां कुर्यान्मौनं घ्राणास्यपिधानं कृत्वा दिवा सन्ध्ययोरुदङ्मुखो रात्रौ दक्षिणामुखो मूत्रपुरीषे कुर्यात्। फालकृष्टे जले

चित्यां वल्मीके गिरिमस्तके । देवालये नदीतीरे दर्भपुष्पेषु शाद्वले ।। सेव्यच्छायासु वृक्षेषु मार्गे गोष्ठांबुभस्मसु । अग्नौ च गच्छंस्तिष्ठंश्च विष्ठां मूत्रञ्च नोत्सृजेत् ।। रथ्याचत्वरतीर्थेषु श्मशाने गोमये जले । न सस्यमध्ये मेहेत जनसंसदि वर्त्मनि ।। अङ्गारोद्यानसप्राणियज्ञभूमिषु नोत्सृजेत् । मारुताग्न्यर्क गो सोम सन्ध्यांबु स्त्रीद्वि जन्मनः । पश्यन्नभि मिमुखश्चैव विष्ठां मूत्रं च नोत्सृजेत् । सर्वे निषेधा नैव स्युः प्राणबाधाभयेषु तु ।। काष्ठादिना त्वपानस्थममेध्यं निमृजीत च । कन्दमूलफलाङ्गारैः नामेध्यं निमृजीत च ।। अन्यासक्तमना नैव तिष्ठेदतिचिरं बुध इति ।।

ஸ்மிருத்யர்த்த ஸாரத்தில்:- மலமூத்ரவிஸர்ஜனம் செய்ய விரும்பியவன் யக்ஞோபவீதமல்லாத கட்டை, புல், இலை இவைகளிலொன்றை வைத்து, தலையை வஸ்த்ரத்தால் மறைத்து, பூணூலை நிவீதமாய் கழுத்தில் தொங்கவிட்டு, ஒரு வஸ்த்ரத்துடனிருந்தால் பூணூலை வலது காதில் வைத்துக் கொண்டு, பூமியை கட்டை முதலியதால் மறைத்து மௌனமாய், மூக்கையும், வாயையும் வஸ்த்ரத்தால் மறைத்து, பகலிலும் ஸந்த்யைகளிலும் வடக்கு முகமாகவும், இரவில் தெற்கு முகமாகவும் மலமூத்ர விஸர்ஜனம் செய்யவேண்டும். உழுத பூமி, ஜலம் வேள்விமேடை, புற்று, மலையினுச்சி, தேவாலயம், நதிக்கரை, தர்ப்பம், புஷ்பம், புல்லுள்ள தரை, உபகாரகமான நிழல், மரம், வழி, கொட்டில், ஜலம், சாம்பல், அக்னி இவைகளிலும், நடந்து கொண்டும், நின்று கொண்டும் மலமூத்ர விஸர்ஜனம் செய்யக்கூடாது. ராஜவீதி, நாற்சந்தி, இறங்கும் துரை, மயானம், சாணம், ஜலம், பயிர்களின் நடுவு, ஜனக்கூட்டம், வழி, கரி, தோட்டம், ப்ராணிகளுள்ள இடம், யாகபூமி, இவைகளிலும், வாயு, அக்னி, ஸூர்யன், பசு, சந்த்ரன், ஸந்த்யை, ஜலம், ஸ்த்ரீ, ப்ராம்ஹணன் இவர்களைப் பார்த்தும் எதிராகவும், மலமூத்ர விஸர்ஜனம் செய்யக்கூடாது. ப்ராணபாதையுள்ள காலத்திலும்,

பயமுள்ள இடத்திலும் எல்லா நிஷேதங்களும் ப்ரவர்த்திப்பதில்லை. கட்டை முதலியதால் குத்தத்திலுள்ள மலத்தைத் துடைக்க வேண்டும். கிழங்கு, வேர், பழம், கரி இவைகளால் துடைக்கக் கூடாது. வேறிடத்தில் மனதுடன் வெகுகாலம் இருக்கக்கூடாது.

पुराणे – 'देवालये तु परितः शतदण्डाद्बहिर्मुने। विण्मूत्रकरणं कुर्यात् क्रोशाद्बहिरथापि वे' ति।। भारद्वाजः – 'अथापकृष्य विण्मूत्रं लोष्टकाष्ठतृणादिना। उदस्तवासा उत्तिष्ठेत् दृढं विधृतमेहन इति।। मेहनं - लिङ्गम्।। हारीतः – 'लोष्टेन परिमृज्जीत शुष्ककाष्ठेन वा गुदमिति।। व्यासः – 'मार्जनं वामहस्तेन वीरणाद्यैरयज्ञियैः। कुर्यान्मूत्रपुरीषाणामेवमायुर्न हीयत इति।।

இதனுல் பதிதன் முதலியவரை ஸ்பர்சித்தவன் முதல் மூன்றுமவனுக்கும் ஸசேலஸ்நானம் உண்டு, என்று சொல்லியதாய் ஆகிறது. **மற்றொரு ஸ்ம்ருதியிலும்:-** *சவம், சண்டாளன், பதிதன், ஸூதிகா, ரஜஸ்வலை இவர்களைத் தொட்டவனையும், அவனைத் தொட்டவனையும் தொடுதல். இதில் ஸசேல ஸ்நானம்.*

சந்த்ரிகையில்:- *சண்டாளன், ஸூதிகை, ரஜஸ்வலை, பதிதன், சவம் இவர்களின் ஸ்பர்சத்திலேயே 'தத்ஸ்ப்ருஷ்டி ந்யாயம்' சொல்லப்படுகிறது. 'ஏவ' என்பது, சவப்புகை முதலியதை ஸ்பர்சித்த இடத்தில் தத்ஸ்ப்ருஷ்டி ந்யாயம் இல்லை என்பதற்காம். அவ்விதமே,* **சந்த்ரிகையிலேயே:-** *சவப்புகையை ஸ்பர்சித்தவனையும், வாந்தி செய்தவனையும், விரேசனம் செய்தவனையும், க்ஷௌரம் செய்து கொண்டவனையும், ஸ்த்ரீஸங்கம் செய்தவனையும் தொட்டால் ஸ்நானம் வேண்டியதில்லை.* **ஸம்வர்த்தர்:-** *''அவர்களைத் தொட்டவனை எவன் தொடுவானோ அவனுக்கு ஸ்நானம் விதிக்கப்படுகிறது. அதற்கு மேலுள்ளவனுக்கு ஆசமனமும், த்ரவ்யங்களுக்கு ப்ரோக்ஷணமும் சொல்லப்பட்டுள்ளது''* *என்று சொல்லியதும்.* **வ்யாஸர்:-** *''ஜனனசௌசம் உள்ளவன், மரணசௌசம் உள்ளவன். ஸூதிகை, ரஜஸ்வலை*

இவர்களைத் தொட்டால் ஸ்நானம் செய்ய வேண்டும். தொட்டவனைத் தொட்டாலும் ஸ்நானம் செய்ய வேண்டும். அவனைத் தொட்டால் அறிந்தவன் ஆசமனம் செய்ய வேண்டும்'' என்று அவ்விதமே சொல்லப்பட்டுள்ளது.

तथा च चन्द्रिकामाधवीययोः – अबुद्धिपूर्वसंस्पर्शे द्वयोः स्नानं विधीयते। त्रयाणां बुद्धिपूर्वे तु तत्स्पृष्टिन्याय कल्पना इति ।। चतुर्थस्य त्वाचमनमेव, 'उपस्पृशेच्चतुर्थस्तु तदूर्ध्वं प्रोक्षणं मतम्' इति मरीचिस्मरणात् ।। यत्तु कूर्मपुराणे – चण्डालसूतिकाशावैस्संस्पृष्टं संस्पृशेद्यदि । प्रमादात्तत आचम्य जपं कुर्यात् समाहितः ।। तत्स्पृष्टिस्पृष्टिनं स्पृष्ट्वा बुद्धिपूर्वं द्विजोत्तमः । आचमेत्तु विशुध्यर्थं प्राह देवः पितामहः इति तदुर्बलद्वितीयादिविषयम् ।। अन्यथा गौतमादिवचनविरोधात्।।

சந்த்ரிகா, மாதவீயங்களில்:- நினைவில்லாமல் செய்த ஸ்பர்சத்தில் இருவருக்கு ஸ்நானம் விதிக்கப்படுகின்றது. புத்தி பூர்வமாய்ச் செய்த ஸ்பர்சத்திலானால் மூன்று பேருக்கும் ஸ்நானம். இங்கு 'தத்ஸ்ப்ருஷ்டி ந்யாயம்' ஏற்படுகிறது. நான்காமவனுக்கு ஆசமனம் மட்டில். 'நான்காமவன் ஆசமனம் செய்ய வேண்டும். அதற்கு மேல் ப்ரோக்ஷணம் விதிக்கப்பட்டுள்ளது' என்று **மரீசி ஸ்ம்ருதியால்.** **கூர்மபுராணத்தில்:-** 'சண்டாளன், ஸூதிகை, சாவா சௌசி இவர்களால் தொடப்பட்டவனைக் கவனமில்லாமல் தொட்டால், பிறகு ஆசமனம் செய்து, கவனமுடையவனாய் ஜபிக்க வேண்டும். சண்டாளாதிகளைத் தொட்டவனை ஸ்பர்சித்தவனை புத்தி பூர்வமாய்த் தொட்டால் சுத்திக்காக ஆசமனம் செய்ய வேண்டும் என்று ப்ரம்ஹதேவர் சொன்னார்'' என்றுள்ள வசனம் துர்ப்பலனான இரண்டாமவன் முதலியவரைப் பற்றியது. இவ்விதம் இல்லையெனில் கௌதமர் முதலியவரின் வசனத்திற்கு விரோதம் வரும்.

यत्तु याज्ञवल्क्येनोक्तम्—उदक्याशुचिभिः स्नायात् संस्पृष्टस्तैरुपस्पृशेत्। अब्लिङ्गानि जपेच्चैव गायत्रीं मनसा सकृत् इति यदपि देवलेनोक्तम्– संस्पृश्याशुचिसंस्पृष्टं द्वितीयं वाऽपि मानवः। हस्तौ पादौ च तोये न प्रक्षाल्याचम्य शुध्यति इति । यदपि वृद्धशातातपेनोक्तम्– 'अशुचिं यः स्पृशेदन्यं एक एव स दुष्यति। तत्स्पृष्टोऽन्योन दुष्येत सर्वद्रव्येष्वयं विधिः इति, एतत् सर्वं दण्डादिस्पर्शविषयमिति माधवीये। चण्डालादिव्यतिरिक्ताशुचिस्पर्श विषयमित्यन्ये । तदेवं चण्डालादिस्पर्शे तृतीयस्याचमनपरं वचनमकामविषयम्। स्नानपरं वचनं सकामविषयम्। द्वितीयस्या-चमनवचनं दण्डादिस्पर्शविषयम्। चण्डालादिव्यतिरिक्तशवधूमाद्य शुचिस्पर्शे अशुचिस्पृश एव स्नानम् । द्वितीयस्य त्वाचमनमेवेति व्यवस्था॥

யாக்ஞவல்க்யர்:- ''ரஜஸ்வலையாலும், சவம், சண்டாளன், பதிதன், ஸூதிகை முதலியவர், சாவாசௌசிகள் இவர்களாலும் தொடப்பட்டவன் ஸ்நானம் செய்ய வேண்டும். ரஜஸ்வலை முதலியவர்களால் தொடப்பட்டவர்களால் ஸ்பர்சிக்கப்பட்டவன் ஆசமனம் செய்ய வேண்டும், 'ஆபோஹிஷ்ட' முதலிய மூன்று மந்த்ரங்களை ஜபிக்க வேண்டும். காயத்ரியையும் மனதால் ஒருமுறை ஜபிக்க வேண்டும்'' என்று சொல்லியதும். தேவலர்:- ''அசுத்தர்களால் ஸ்பர்சிக்கப்பட்டவனையும், அவனால் ஸ்பர்சிக்கப்பட்டனையும், மனிதன் தொட்டால், கைகளையும், கால்களையும் ஜலத்தால் அலம்பி, ஆசமனம் செய்தால் சுத்தனாகிறான்'' என்று சொல்லியதும், வ்ருத்த சாதாதபர்:- ''அசுத்தனாகிய மற்றவனை எவன் ஸ்பர்சிப்பானோ அவனொருவனே அசுத்தனாவான். அவனால் தொடப்பட்ட மற்றவன் அசுத்தனாவதில்லை. எல்லா த்ரவ்யங்களிலும் இதே விதியாம்'' என்று சொல்லியதும், ஆகிய இவையெலாம், கழி முதலியதால்

செய்த ஸ்பர்ச விஷயம் என்று மாதவீயத்தில் உள்ளது. சண்டாளன் முதலியவரைத் தவிர்த்த மற்ற அசுத்தரின் ஸ்பர்ச விஷயம் என்று சிலர். இவ்விதமிருப்பதால், சண்டாளாதிகளின் ஸ்பர்சத்தில் மூன்றமவனுக்கு ஆசமனத்தை விதிக்கும் வசனம் அகாம விஷயம். ஸ்நானத்தை விதிக்கும் வசனம் ஸகாம விஷயம். இரண்டாமவனுக்கு ஆசமனத்தை விதிக்கும் வசனம் கழி முதலியதால் ஏற்பட்ட ஸ்பர்ச விஷயம். சண்டாளன் முதலியவரைத் தவிர்த்த சவதூரமம் முதலிய அசுத்த ஸ்பர்சத்தில் அசுத்த ஸ்பர்சிக்கு மட்டில் ஸ்நானம். இரண்டாமவனுக்கு ஆசமனம் மட்டில் என்பது வ்யவஸ்தை.

अत्र पराशरः – दुःस्वप्नं यदि पश्येत्तु वान्ते च क्षुरकर्मणि। मैथुने प्रेतधूमे च स्नानमेव विधीयते इति ।। मैथुने स्नानमृतुकालविषयम् ।। तदाह शातातपः – ऋतौ तु गर्भशङ्कित्वात् स्नानं मैथुनिनः स्मृतम्। अनृतौ तु यदा गच्छेच्छौचं मूत्रपुरीषवत् इति ।। अनृतावपि क्वचित् स्नानं स्मर्यते – अष्टम्यां च चतुर्दश्यां दिवा पर्वणि मैथुनम्। कृत्वा सचेलं स्नात्वा तु वारुणीभिश्च मार्जयेत् इति ।।

இங்கு, பராசரர்:- துः ஸ்வப்னம் கண்டாலும், வாந்தி செய்தாலும், க்ஷௌரத்திலும், மைதுனத்திலும், சவதூரம ஸ்பர்சத்திலும், ஸ்நானமே விதிக்கப்படுகிறது. இங்கு மைதுனத்தில் ஸ்நானமென்றது ருதுகால விஷயம். அதைச் சொல்லுகிறார் சாதாதபர்:- ருதுகாலத்தில் மைதுனம் செய்தவனுக்கு, கர்ப்பம் உண்டாகும் என்ற சங்கை இருப்பதால் ஸ்நானம் விதிக்கப்பட்டுள்ளது. ருதுகாலமற்ற காலத்திலாஞல் மலமூத்ர விஸர்ஜனத்திற் போல் சௌசம் மட்டும். ருதுகாலம் இல்லாவிடில் சில காலத்தில் ஸ்நானம் சொல்லப்படுகிறது:- அஷ்டமீ, சதுர்தசீ, பகல், பர்வம், இக்காலங்களில் மைதுனம் செய்தால், ஸசேல ஸ்நானம் செய்து வருணதேவதாகமான ருக்குகளால் மார்ஜனமும் செய்ய வேண்டும்.

कात्यायनः – चण्डालसूतिकोदक्यापतिता शौचकृच्छ्वान्। स्पृष्ट्वा स्नात्वा शुचिः प्रेतमनुगम्यानलं स्पृशेत् । इत्येतत्प्रमादसं स्पर्शविषयम्। पतितं सूतिकामन्त्यं शवं स्पृष्ट्वा च कामतः । स्नात्वा सचेलं स्पृष्ट्वाऽग्निं घृतं प्राश्य विशुध्यति ।। शवस्पृशं दिवाकीर्त्यं चितिधूमं रजस्वलाम्। स्पृष्ट्वा प्रमादतो विप्रः स्नानं कृत्वा विशुध्यति इति स्मरणात् ।। पराशरोऽपि – चैत्यवृक्षश्चितेर्धूमः चण्डालः सोमविक्रयी। एतांस्तु ब्राह्मणः स्पृष्ट्वा सवासा जलमाविशेत् इति ।। चितेर्योग्यं श्मशानं चैत्यम्। तत्र समारोपितो वृक्षश्चैत्यवृक्षः ।।

காத்யாயனர்:- சண்டாளன், ஸூதிகை, ரஜஸ்வலை, பதிதன், ஆசௌசி, சவம் இவர்களைத் தொட்டால், ஸ்நானம் செய்து சுத்தனாகிறான். சவானுகமனம் செய்தால், ஸ்நானம் செய்து அக்னியையும் ஸ்பர்சிக்க வேண்டும். இந்த வசனம் கவனமில்லாமல் செய்த ஸ்பர்ச விஷயம். 'பதிதன், ஸூதிகை, சண்டாளன், சவம் இவர்களை ஞானத்துடன் தொட்டால், ஸசேல ஸ்நானம் செய்து, அக்னியைத் தொட்டு, நெய்யைப் பருகினால் சுத்தனாகிறான்; சவத்தைத் தொட்டவன், சண்டாளன், சவதூமம், ரஜஸ்வலை, இவர்களை ப்ராம்ஹணன் அறியாமல் தொட்டால், ஸ்நானம் செய்தால் சுத்தனாகிறான்' என்று ஸ்ம்ருதி இருப்பதால். பராசரரும்:- சைத்யவ்ருக்ஷம், சவதூமம், சண்டாளன், ஸோமவிக்ரயீ இவர்களை ப்ராம்ஹணன் தொட்டால் ஸசேல ஸ்நானம் செய்ய வேண்டும். சைத்ய வ்ருக்ஷம் = சிதசானத்தில் வளர்க்கப்பட்டுள்ள வ்ருக்ஷம்.

संवर्तोऽपि – चण्डालं पतितं स्पृष्ट्वा शवमन्त्यजमेव च। उदक्यं सूतिकां नारीं सवासाः स्नानमाचरेत् इति ।। आपस्तम्बः – चण्डालोपस्पर्शने सम्भाषायां दर्शने च दोषस्तत्र प्रायश्चित्त मवगाहनमपामुपस्पर्शने सम्भाषायां ब्राह्मणसंभाषा दर्शने ज्योतिषां दर्शनम् इति।। उपस्पर्शने सत्यपामवगाहनं प्रायश्चित्तमित्यर्थः ।।

ஸம்வர்த்தரும்:- சண்டாளன், பதிதன், சவம், அந்த்யஜன், ரஜஸ்வலை, ஸூதிகை இவர்களைத் தொட்டால் ஸசேல ஸ்நானம் செய்ய வேண்டும். ஆபஸ்தம்பர்:- சண்டாளனைத் தொட்டாலும், அவனுடன் பேசினாலும், அவனைப் பார்த்தாலும் தோஷமுண்டு. அவைகளுள், தொடுவதில் ஸ்நானம் ப்ராயச் சித்தம். பேசுவதில் ப்ராம்ஹணனுடன் பேசுவது ப்ராயச் சித்தம். பார்ப்பதில் ஸூர்யன் முதலிய ஜ்யோதிஸ்ஸுகளைப் பார்ப்பது ப்ராயச் சித்தம். வ்யாஸர்:- சண்டாளன், பதிதன் இவர்களைப் பார்த்தால் மனிதன் ஸூர்யனைப் பார்க்க வேண்டும். ஸ்நானம் செய்தவுடன் இவ்விருவரையும் பார்த்தால் மறுபடி ஸ்நானம் செய்வதால் சுத்தனாகிறான்.

चण्डालादीनां व्यवधाने देशपरिमाणमाह पराशरः – युगं युगद्वयं चैव त्रियुगं च चतुर्युगम्। चण्डालसूतिकोदक्यापतितानामधः क्रमात्॥ ततः सन्निधिमात्रेण सचेलस्नानमाचरेत् ॥ स्नात्वाऽवलोकयेत् सूर्यमज्ञानात् स्पृशते यदि इति। अधः क्रमात् - विपरीतक्रमात् ॥ युगपरिमाणं लोकव्यवहारादवगन्तव्यमिति माधवीये। नवपदं रथयुग मष्टपदमनोयुगमिति लौकिकाः प्रतियन्ति॥ उक्तव्यवधानात् सन्निहिते सचेल स्नानम्, अज्ञानात् गात्रस्पर्शे सूर्यावलोकन मधिकमित्यर्थः ॥ बुद्धिपूर्वाङ्गस्पर्शे तु सचेल स्नानमग्निस्पर्शनं घृतप्राशनं च पूर्वोक्तं द्रष्टव्यम्॥ अङ्गस्पर्शे मज्जनसङ्कचाऽपि स्मर्यते – वृषलं चान्त्यजातिं च चण्डालं पतितं तथा। आर्तवाभिप्लुतां नारीं स्पृष्ट्वा स्नानं समाचरेत्॥ एकं च दशकं चैव द्वात्रिंशत् त्रिंशकं तथा। द्वात्रिंशच्च क्रमेणैव मज्जनं विधीयते इति॥

சண்டாளன் முதலியவர்களை விலக்குவதற்கு தேசத்தின் அளவைச் சொல்லுகிறார் பராசரர்:- சண்டாளன், ஸூதிகை, ரஜஸ்வலை, பதிதன் இவர்கள் விஷயத்தில் முறையே, நான்கு, யுகம், மூன்று யுகம், இரண்டு யுகம், ஒரு யுகம் என்ற அளவுள்ள ப்ரதேசம்

விலகுவதற்கு அளவானதாம். அந்த அளவுக்குள் ஸமீபத்தில் சென்றுல் ஸசேல ஸ்நானம் செய்ய வேண்டும். அறியாமையால் தொட்டுவிட்டால், ஸ்நானம் செய்து ஸூர்யனையும் பார்க்க வேண்டும். இங்கு 'யுகம்' என்றதின் அளவு லோகவ்யவஹாரத்தால் அறியப்பட வேண்டும் என்று மாதவீயத்தில் உள்ளது. யுகமென்பதற்கு நுகத்தடி என்று பொருள். தேரின் நுகத்தடி ஒன்பது அடியுள்ளது, வண்டியின் நுகத்தடி எட்டு அடியுள்ளது என்கின்றனர் லௌகிகர்கள். சொல்லிய அளவுக்கு ஸமீபத்திற் சென்றுல் ஸசேல ஸ்நானம். அறியாமல் சரீரத்தைத் தொட்டால் ஸூர்யதர்சனமும் அதிகம் என்பது பொருள். புத்தி பூர்வமாய் அங்க ஸ்பர்சம் செய்தால், ஸசேல ஸ்நானம், அக்னி ஸ்பர்சம், ஆஜ்யப்ராசனம் என்று முன் சொல்லியதை அறிந்து கொள்ளவும்.

ஸசேல ஸ்நானத்தில் முழுக்கின் கணக்கும் சொல்லப்படுகிறது- ''சூத்ரன், அந்த்யஜன், சண்டாளன், பதிதன், ரஜஸ்வலை இவர்களை ஸ்பர்சித்தால், முறையே, ஒன்று, பத்து, இருபத்திரண்டு, முப்பது, முப்பத்திரண்டு என்ற கணக்குடன் முழுக்கைச் செய்ய வேண்டும்'' என்று.

स्मृत्यन्तरे – चण्डालस्य चतुष्षष्टिपदं श्रेण्याः शतद्वयम् । द्वात्रिंशदथ वा तस्य मनः शुद्धिदमाचरेत् ॥ अविज्ञाते रजःस्रावे मलवद्वस्त्रया गृहे । स्पृष्टं यद्वस्तु तद्दुष्टं न दुष्टं सन्निकर्षतः इति ॥ अस्पृश्यस्पर्शने चैव त्रयोदश निमज्ज्य च । आचम्य प्रयतः पश्चात् स्नानं विधिवदाचरेत् इति भरद्वाजवचनमङ्गस्पर्शाभावविषयम् । चण्डालादिव्यतिरिक्तास्पृश्यस्पर्शविषयं च ॥ व्यासः – सूतिकापतितोदक्याः चण्डालश्च चतुर्थकः । यथाक्रमं परिहरे देकद्वित्रि चतुर्युगम् इति ॥ अत्र व्यासपराशरवचनयोर्विरोधे विकल्पो द्रष्टव्यः । यत्तु – चण्डालं पतितं चैव दूरतः परिवर्जयेत् । गोवालव्यजनादर्वाक् सवासा जलमाविशेत् इति वैयाघ्रपादवचनम्, तत्सङ्कटादिविषयम् ॥

மற்றொரு ஸ்ம்ருதியில்:- சண்டாளனுக்கு அறுபத்து நான்கு அடியும், ச்ரேணிக்கு இருநூறு அடியும் விலகவேண்டும். அல்லது அவனுக்கு முப்பத்திரண்டு அடியாவது மனச்சுத்திக்குத் தகுந்தபடி விலகவேண்டும். ரஜோநிர்கமம் தெரியாமல் ஸ்த்ரீ வீட்டில் தொட்ட வஸ்து எதுவோ அது மட்டில் தோஷமுள்ளதாகும். அவளுடைய ஸாமீப்யத்தால் மற்ற வஸ்துக்கள் துஷ்டமாவதில்லை. ''தொடக்கூடாதவர்களைத் தொட்டால் பதிமூன்று தடவை முழுகி, ஆசமனம் செய்து, சுத்தனாய், பிறகு விதிப்படி ஸ்நானம் செய்ய வேண்டும்'' என்றுள்ள பரத்வாஜ வசனம், அங்கஸ்பர்சம் இல்லாத விஷயத்தைப் பற்றியதும், சண்டாளன் முதலியவரைத் தவிர்த்த அஸ்ப்ருச்யர்களின் ஸ்பர்சவிஷயமுமாம்.

வ்யாஸர்:- ஸூதிகை, பதிதன், ரஜஸ்வலை, சண்டாளன் இவர்களுக்கு, முறையே, ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, நுகத்தடி தூரம் விலகவேண்டும். இங்கு வ்யாஸ வசனத்திற்கும், பராசர வசனத்திற்கும் விரோதத்தில் விகல்பம் அறியத்தக்கது. ''சண்டாளன், பதிதன் இவர்களை தூரத்தில் பரிஹரிக்க வேண்டும். கோவாலவ்யஜனத்திற்கு (பசுவின் வால்வீச்சிற்கு) ஸமீபத்தில் நெருங்கினால் ஸசேல ஸ்நானம் செய்ய வேண்டும்'' என்றுள்ள வையாக்ர பாதவசனம் எதுவோ அது ஸங்கடமான ஸ்தலம் முதலியதின் விஷயமாம்.

यदाह संवर्तः – सङ्कटे विषमे चैव दुर्गे चैव विशेषतः । हट्टपत्तनमार्गे च यथासम्भवमिष्यते ॥ तृणकाष्ठादिघातेन कुड्येनान्तरिते तथा । गोवालव्य(वी) जने वाऽपि स्नानं तत्र न विद्यते इति ॥ प्रचेताः – वस्त्रान्तरितसंस्पर्शः साक्षात् स्पर्शो विधीयते । साक्षात् स्पर्शे तु यत्प्रोक्तं तद्वस्त्रान्तरितेऽपि च इति ॥ अङ्गिराः – यस्तु छायां श्वपाकस्य ब्राह्मणो ह्यधिरोहति । तत्र स्नानं प्रकुर्वीत घृतं प्राश्य विशुध्यति ॥ चण्डालपतितच्छायां स्पृष्ट्वा स्नानं समाचरेत् इति ॥

ஸம்வர்த்தர்:- நெருக்கமான இடத்திலும், மேடுபள்ளமுள்ள இடத்திலும், அதிகமாய்ச் செல்லமுடியாத இடத்திலும், ஹட்டம் (கடைத்தெரு), பட்டணம் இவைகளின் மார்க்கத்திலும் கூடியவரையில் ஒதுங்க வேண்டும். புற்களாலாவது, கட்டை முதலியவைகளாலாவது, சுவரிஞலாவது மறைவுள்ள இடத்தில், கோவால வீஜனத்திற்கு உட்பட்டிருந்தாலும் ஸ்நானம் வேண்டுவதில்லை. (ஒரு பசு நின்று வாலை வீசிஞல், அந்த அளவுள்ள தூரம் கோவாலவீஜனம் எனப்படும்.) **ப்ரசேதஸ்:-** வஸ்த்ரத்தால் மறைத்துத் தொடுவதும், நேராகத் தொடுவதாகவே கருதப்படுகிறது. நேராகத் தொடுவதில் எந்தவிதி சொல்லப்பட்டுள்ளதோ, அதுவே வஸ்த்ரத்தால் மறைத்துத் தொடுவதிலும் சொல்லப்பட்டுள்ளது. **அங்கிரஸ்:-** எந்த ப்ராம்ஹணன் ச்வபாகனின் (நாய் மாம்ஸத்தைப் புஜிப்பவனின்) நிழலை மிதித்தாஞை அவன் ஸ்நானம் செய்து, நெய்யைப் புஜித்தால் சுத்தஞவான். சண்டாளன், பதிதன் இவரின் நிழலைத் தொட்டால் ஸ்நானம் செய்ய வேண்டும்.

स्मृतिरत्ने—छायामन्त्यश्वपाकादेः स्पृष्ट्वा स्नानं समाचरेत्। चत्वारिंशत् पदादूर्ध्वं छायादोषो न विद्यते इति ।। आपस्तम्बः – एकशाखां समारूढश्चण्डालादिर्यदा भवेत्। ब्राह्मणस्तत्र निवसन् स्नानेन शुचितामियात् इति ।। शाखाग्रहणमेवंजातीयद्रव्योपलक्षणार्थम्। अत एव चन्द्रिकायाम्– तार्णे संस्तर एकस्मिन् अस्पृश्यैः सह तिष्ठति। अस्पृष्टस्तैरदुष्टोऽस्तीत्येवं मूढस्तु मन्यते इति।। तार्णे - तृणनिर्मिते।।

ஸ்ம்ருதிரத்னத்தில்:- அந்த்யஜன், ச்வபாகன் முதலியவரின் நிழலைத் தொட்டால் ஸ்நானம் செய்ய வேண்டும். 40 அடிக்கு மேல் நிழலின் தோஷமில்லை. **ஆபஸ்தம்பர்:-** ஒரு கிளையில் சண்டாளன் முதலியவன் ஏறியிருந்தால், ப்ராம்ஹணனும் அங்கிருந்தால்,

(தூரத்திலிருந்தாலும்) அந்தப்ராம்ஹணன் ஸ்நானத்தால் சுத்தனுவான். கிலு என்றது இம்மாதிரியான த்ரவ்யங்களுச் சொல்வதற்காக. ஆகையால், சந்த்ரிகையில:- புற்களால் செய்யப்பட்ட ஒரே பாய் முதலியதில், தொடக் கூடாதவருடன் சேர்ந்திருந்தால். அவரால் நான் தொடப்படாதலால் தோஷமில்லாதவனுய் இருக்கின்றேன் என்று நினைக்கின்றன் மூடன். (அவ்விதம் நினைப்பது தவறு. அவன் துஷ்டனேயாம்.)

आपस्तम्बस्तु – मूढः स्वस्तरे चासंस्पृशन्नन्यानप्रयतान् प्रयतो मन्येत तथा तृणकाष्ठेषु निखाते इति ॥ अत्र हरदत्तः – पतितचण्डाल-सूतिकोदक्याशवस्पृष्टितत्स्पृष्ट्युपस्पर्शने सचेलोपस्पर्शनाच्छुध्यत् इति गौतमः । तस्मिन्विषये इदमुच्यते । शयनतया आसनतया वा सुष्ठु आस्तीर्णः पलालादिसङ्घातः स्वस्तरः । पूषोदरादिषु दर्शनाद्रूप-सिद्धिः । यत्रातिश्लक्ष्णतया पलालादेर्मूलाग्रविभागो न ज्ञायते, स मूढः । मूढश्चासौ स्वस्तरश्चेति मूढस्वस्तरः । तस्मिन् पतितादिष्व-प्रयतेष्वासीनेषु यदा कश्चित् प्रयत उपविशेत्, न च तान् स्पृशेत्तदा स प्रयतो मन्यते । यथा प्रयत आत्मानं मन्यते प्रयतोऽस्मीति, तथैव मन्येत । नैवंविधविषये तत्स्पृष्टिन्यायः प्रवर्तते । तथा तृणकाष्ठेषु च भूमौ निखातेषु तत्स्पृष्टिन्यायो न भवति इति ॥

ஆபஸ்தம்பர்:- *'மூடஸ்வஸ்தரே + நிகாதேஷு' என்கிறார். இதற்கு ஹரதத்தரின் வ்யாக்யானம் - ''பதிதன், சண்டாளன், ஸூதிகை, ரஜஸ்வலை, சவத்தைத் தொட்டவன், அவனைத் தொட்டவன் என்ற இவர்களுல் ஸ்பர்சித்தால் ஸசேல ஸ்நானத்தால் சுத்தனுவான் என்றார். கௌதமர்- அந்த விஷயத்தில் இது சொல்லப்படுகிறது. படுக்கையாகவோ, ஆஸனமாகவோ நன்றுய் விரிக்கப்பட்ட வைக்கோல் முதலியதின் குவியல் 'ஸ்வஸ்தரம்' எனப்படுகிறது. ரொம்ப ம்ருதுவாய் இருப்பதால் எதில் அடி நுனி என்ற விபாகம்*

தெரியவில்லையோ அது மூடம். அவ்விதமான ஸ்வஸ்த்ரம் மூடஸ்வஸ்தரம் எனப்படுகிறது. அதில் பதிதன் முதலிய அசுத்தர்கள் உட்கார்ந்திருக்கும் பொழுது, சுத்தனான ஒருவன் உட்கார்ந்தால், அவர்களைத் தொடாமலிருந்தால், அப்பொழுது அவன் சுத்தனென்று நினைக்க வேண்டும். சுத்தனாயிருப்பவன் எப்படித் தன்னை சுத்தனாயிருக்கிறேன் என்று நினைக்கின்றானோ அவ்விதமே நினைக்க வேண்டும். இவ்விதமான விஷயத்தில் தத்ஸ்ப்ருஷ்டி நியாயம் ப்ரவர்த்திப்பதில்லை அவ்விதமே, பூமியில் புதைக்கப் பட்டுள்ள புல், கட்டை இவைகளின் விஷயத்திலும் தத்ஸ்ப்ருஷ்டி நியாயம் ப்ரவர்த்திப்பதில்லை'' என்று.

स्नानस्य निमित्तान्तरमुक्तं चतुर्विंशतिमते— बौद्धान् पाशुपतान् जैनान् लोकायतिक कापिलान्। विकर्मस्थान् द्विजान् स्पृष्ट्वा सचेलो जलमाविशेत् ॥ कापालिकांस्तु संस्पृश्य प्राणायामोऽधिको मतः इति ॥ चन्द्रिकायाम् – जैनान् पाशुपतान् स्पृष्ट्वा लोकायतिकनास्तिकान्। विकर्मस्थान् द्विजान् शूद्रान् सवासा जलमाविशेत्॥ अवकीर्णिनमन्त्यं च स्पृष्ट्वा स्नानेन शुध्यति। स्पृष्ट्वा देवलकं चैव सवासा जलमाविशेत् ॥ देवार्चनपरो यस्तु वित्तार्थी वत्सरत्रयम्। स वै देवलको नाम हव्यकव्येषु गर्हितः इति ॥

ஸ்நானத்திற்கு வேறு காரணமும் சொல்லப் பட்டுள்ளது, சதுர்விம்சதிமதத்தில்:- பௌத்தர், பாசுபதர், ஜைனர், லோகாயதிகர், காபிலர், நிஷித்த கர்மங்களைச் செய்யும் ப்ராம்ஹணர்கள் இவர்களைத் தொட்டால் ஸசேல ஸ்நானம் செய்ய வேண்டும். காபாலிகர்களைத் தொட்டால் ப்ராணாயாமமும் செய்ய வேண்டும். சந்த்ரிகையில்:- ஜைனர், பாசுபதர், லோகாயதிகர், நாஸ்திகர், நிஷித்த கர்மங்களைச் செய்யும் ப்ராம்ஹணர், சூத்ரர் இவர்களைத் தொட்டால் ஸசேல ஸ்நானம் செய்ய வேண்டும். அவகீர்ணீ, அந்த்யஜன் இவர்களைத் தொட்டால் ஸ்நானத்தால் சுத்தனாகிறான். தேவலகனைத் தொட்டாலும்

ஸசேல ஸ்நானம் செய்ய வேண்டும். எவன் பணத்தை வேண்டியவனுய், மூன்று வருஷம் தேவபூஜை செய்கின் றனே, அவன் தேவலகன் எனப்படுவான். அவன் ஹவ்யங்களிலும், கவ்யங்களிலும் நிந்திக்கப் பட்டவன்.

यमः—शुना चैव श्वपाकेन मृतनिर्हरणेन वा । स्पृष्टमात्रस्तु कुर्वीत सचेलं स्नावनं द्विजः । दुःस्वप्ने दुर्जनस्पर्शेऽभ्युदिते स्नानमाचरेत् इति । अभ्युदिते - शयानस्यादित्योदये ।। स्मृत्यन्तरे – स्पृष्ट्वा रुद्रस्य निर्माल्यं सवासा आप्लुतः शुचिः इति ।। संवर्तः – श्ववराहखरानुष्ट्रान् वृकगोमायुवानरान् । काककुक्कुटगृध्रांश्च स्पृष्ट्वा स्नानं समाचरेत् इति ।। हारीतः – चाटकं कुक्कुटं काकं श्वसृगालशिवावृकान् । चितिधूमश्म-शानानि विड्वराहखराशुचीन् ।। अवकीर्णिनमन्त्यं च स्पृष्ट्वा स्नानं विधीयते इति ।। पैठीनसिः – काकोलूकस्पर्शने स्नान मनुदकमूत्रपुरीषकरणे सचेलस्नानं महाव्याहृतिर्होमश्च इति ।। अङ्गिराः – कृत्वा मूत्रं पुरीषं वा यदा नैवोदकं भवेत् । स्नात्वा लब्धोदकः पश्चात् सचेलस्तु विशुध्यति ।।

யமன்:- நாய், ச்வபாகன், சவத்தைச் சுமப்பவன் இவர்களால் ஸ்பர்சிக்கப்பட்டால், உடனே ஸசேல ஸ்நானம் செய்ய வேண்டும். துஷ்டஸ்வப்னம் கண்டாலும், துர்ஜனனைத் தொட்டாலும், படுத்திருக்கும் பொழுது ஸூர்யோதயமானுலும், ஸ்நானம் செய்ய வேண்டும். **மற்றொரு ஸ்ம்ருதியில்:-** சிவநிர்மால்யத்தைத் தொட்டால் ஸசேல ஸ்நானத்தால் சுத்தனுவான். **ஸம்வர்த்தர்:-** நாய், பன்றி, கழுதை, ஒட்டகம், செந்நாய், நரி, குரங்கு, காக்கை, கோழி, கழுகு இவைகளைத் தொட்டால் ஸ்நானம் செய்ய வேண்டும். **ஹாரீதர்:-** சாடகம், கோழி, காக்கை, நாய், நரி, பெண் நரி, செந்நாய், சவப்புகை, ச்மசானம், பன்றி, கழுதை, அசுத்தன், அவகீர்ணீ, அந்த்யஜன் இவர்களைத் தொட்டால் ஸ்நானம் செய்ய வேண்டும். **பைடீநஸி:-** காக்கை, கோட்டான்

இவைகளின் ஸ்பர்சத்தில் ஸ்நானம். ஜலமில்லாமல், மூத்ர மல விஸர்ஜனம் செய்தால் ஸசேல ஸ்நானமும், மஹாவ்யாஹ்ருதிகளால் ஹோமமும் விதிக்கப் படுகின்றன. அங்கிரஸ்:- மல மூத்ர விஸர்ஜனம் செய்தவன் ஜலமே கிடைக்காவிடில், பிறகு கிடைத்த பொழுது சௌசத்துடன் ஸசேல ஸ்நானம் செய்தால் சுத்தனாகிறான்.

सङ्गहे—गौल्याश्च स्पर्शमात्रे तु सरटाकृकलासयोः । शुभे वाऽप्यशुभे वाऽपि सचेलस्नानमाचरेत् इति ।। मनुः – नारं स्पृष्ट्वाऽस्थि सस्नेहं स्नात्वा विप्रो विशुध्यति । आचम्यैव तु निः स्नेहं गामालभ्यार्कमीक्ष्य वा इति ।। विष्णुः – भक्ष्यवर्जं पञ्चनखं तदस्थि सस्नेहं च स्पृष्ट्वा स्नायात् इति ।।

ஸங்கிரஹத்தில்:- பல்லி, அரணை, ஓணான் இவைகளின் ஸ்பர்சம் சுபத்திலானாலும், அசுபத்திலானாலும், ஸசேல ஸ்நானம் செய்ய வேண்டும். **மனு:-** ப்ராம்ஹணன், மனிதனின் பசையுள்ள எலும்பைத் தொட்டால் ஸ்நானத்தால் சுத்தனாகிறான். ஈரமில்லாத எலும்பைத் தொட்டால் ஆசமனம் செய்து, பசுவை ஸ்பர்சித்து, அல்லது ஸூர்யனைத் தர்சித்துச் சுத்தனாகிறான். **விஷ்ணு:-** பக்ஷணத்திற்கு அர்ஹமல்லாத பஞ்சநக ப்ராணியை ஸ்பர்சித்தாலும், பஞ்ச நகத்தின் (ஐந்துநகமுள்ள ப்ராணியின்) ஈரமுள்ள எலும்பை ஸ்பர்சித்தாலும் ஸ்நானம் செய்ய வேண்டும்.

श्वस्पर्शे विशेषमाह आपस्तम्बः—शुनोपहतः सचेलोऽवगाहेत प्रक्षाल्य वा तं देश मग्निना संस्पृश्य पुनः प्रक्षाल्य पादौ चाचम्य प्रयतो भवति इति ।। व्यवस्थितविकल्पोऽयम् ।। तथा च मनुः – ऊर्ध्वं नाभेः करौ मुक्त्वा यदङ्गमुपहन्यते । तत्र स्नानविधिः प्रोक्ता ह्यधः प्रक्षालनं स्मृतम् इति ।। विष्णुरपि – नाभेरधः करायं वा शुना यद्युपहन्यते । प्रक्षाल्य तदभिज्वाल्य पुनराचम्य शुध्यति ।। नाभेरूर्ध्वं शुनास्पृष्टो

लिप्तोऽमेध्येन वा पुनः । प्रक्षाल्य मृद्भिरङ्गानि सचेलं स्नानमर्हति ।। शातातपः – रजकश्चर्मकृच्चैव व्याधजालोपजीविनौ । निर्णेजकः सौनिकश्च नटः शैलूषकस्तथा ।। मुखेभगस्तथाश्वा च ग्रामकुक्कुटसूकरौ। एतैर्यदङ्गं स्पृष्टं स्यात् शिरोवर्जं द्विजातिषु । तोयेन क्षालनं कृत्वा आचान्तः प्रयतो मतः इति ।। अत्रापि शुना साहचर्यात् शिरोग्रहणं नाभेरूर्ध्वाङ्गोपलक्षणार्थम् ।।

நாயின் ஸ்பர்சத்தில் விசேஷத்தைச் சொல்லுகிறார். **ஆபஸ்தம்பர்:-** நாயால் தீண்டப்பட்டவன் ஸசேல ஸ்நானம் செய்ய வேண்டும். அல்லது அந்த ப்ரதேசத்தை அலம்பி, அக்னியினால் தொட்டு, மறுபடி அலம்பி, கால்களையும் அலம்பி, ஆசமனம் செய்தால் சுத்தனாகிறான். இது வ்யவஸ்தித விகல்பம். அவ்விதமே, **மனு:-** நாபிக்கு மேல் கைகள் தவிர எந்த அங்கமாவது நாயால் தீண்டப்பட அதில் ஸ்நானம் விதிக்கப்படுகிறது. நாபிக்குக் கீழான அங்கமானால் அலம்புதல் விதிக்கப்பட்டுள்ளது. **விஷ்ணுவும்:-** நாபிக்குக் கீழுள்ள அங்கமாவது, கையாவது கையால் தொடப்பட்டால், அதை அலம்பி, அக்னியால் ஸ்பர்சித்து, இருமுறை ஆசமனம் செய்தால் சுத்தனாகிறான். நாபிக்கு மேல் நாயால் தீண்டப்பட்டால், அல்லது மலத்தால் ஸம்பந்தப்பட்டால், மண்ணால் அங்கங்களை அலம்பி, ஸசேல ஸ்நானம் செய்ய வேண்டும். **சாதாதபர்:-** வண்ணான், சக்கிலி, வேடன், வலையன், நிர்ணேஜகன், மாம்ஸஸவிக்ரயீ, நடன், சைலூஷகன், முகேபகன், நாய், ஊர்க்கோழி, பன்றி இவர்களால், தலையைத் தவிர எந்த அங்கம் தொடப்பட்டதோ அதை ஜலத்தால் அலம்பி ஆசமனம் செய்தால் ப்ராம்ஹணன் சுத்தனாகிறான். இங்கும், நாயுடன் சேர்ந்திருப்பதால், தலையென்றது நாபிக்கு மேற்பட்ட அங்கங்களையும் சொல்வதற்காம்.

जातुकर्णोऽपि—ऊर्ध्वं नाभेः करौ मुक्त्वा यदङ्गं स्पृशते खगः । स्नानं तत्र प्रकुर्वीत शेषं प्रक्षाल्य शुध्यति इति ।। खगः - पक्षी ।। शङ्खः -

रथ्याकर्दमतोयेन क्षीवनाद्येन वा तथा । नाभेरूर्ध्वं नरः स्पृष्टः सद्यः स्नानेन शुध्यति इति ।। व्यासः – भासवानरमार्जारखरोष्ट्राणां शुनां तथा। सूकराणाममेध्यं वै स्पृष्ट्वा स्नायात् सचेलकम् इति ।।

ஜாதுகர்ணரும்:- நாபிக்கு மேல் கைகள் தவிர எந்த அங்கத்தையாவது பக்ஷி ஸ்பர்சித்தால், அப்பொழுது ஸ்நானம் செய்ய வேண்டும். மற்ற அங்கத்தையாலல் அலம்பியதால் சுத்தலாகிறான். சங்கர்:- வீதியிலுள்ள சேற்றுலாவது தண்ணீராலாவது, எச்சில் (கோழை) முதலியதாலாவது நாபிக்கு மேல் மனிதன் தொடப்பட்டால் உடனே ஸ்நானத்தால் சுத்தலாகிறான். வ்யாஸர்:- பருந்து, குரங்கு, பூனை, கழுதை, ஒட்டகை, நாய், பன்றி இவைகளின் மலத்தை ஸ்பர்சித்தால் ஸசேல ஸ்நானம் செய்ய வேண்டும்.

विष्णुः—आजानुभ्यां भवेत् स्नानमानाभ्युपवसेदहः । ऊर्ध्वं नाभेस्त्रिरात्रं स्यादमेध्यस्पर्शने विधिः इति ।। मनुः – पुच्छे बिडालकं स्पृष्ट्वा स्नात्वा विप्रो विशुध्यति । भोजने कर्मकाले च विधिरेष उदाहृतः इति ।। इतराङ्गस्पर्शे त्वाचमनमेव, मार्जारमूषिकस्पर्शे कर्म कुर्वन्नुपस्पृशेत् इति बृहस्पति स्मरणात् ।। अन्यकाले मार्जारस्पर्शेनाशुद्धिः । तथा च मनुः– मार्जारश्चैव दर्वी च मारुतश्च सदा शुचिः इति ।।

விஷ்ணு:- பாதம் முதல் முழங்காலுக்குள் மலத்தால் ஸ்பர்சம் ஏற்பட்டால் ஸ்நானம் செய்ய வேண்டும். அதற்கு மேல் நாபி வரையிலானல் பகல் முழுவதும் உபவாஸமிருக்க வேண்டும். நாபிக்கு மேல் ஸ்பர்சிக்கப்பட்டால் மூன்று நாள் உபவாஸமிருக்க வேண்டும். அமேத்ய ஸ்பர்சத்தில் இவ்விதம் விதியாம். மனு:- ப்ராம்ஹணன் பூனையை வாலில் தொட்டால் ஸ்நானம் செய்தால் சுத்தலாகிறான். போஜன காலத்திலும், கர்மானுஷ்டான காலத்திலும் இந்த விதி சொல்லப்பட்டுள்ளது. மற்ற அங்கங்களின் ஸ்பர்சத்தில்

ஆசமனம் மட்டில். 'கர்மானுஷ்டானம் செய்பவன் பூனை, எலி இவைகளை ஸ்பர்சித்தால் ஆசமனம் செய்ய வேண்டும் என்று ப்ருஹஸ்பதி சொல்லியிருப்பதால். மற்றக் காலத்தில் பூனையைச் தொடுவதால் அசுத்தியில்லை. அவ்விதமே, **மனு**:- பூனையும், பரிமாறுகிற கரண்டியும், காற்றும் எப்பொழுதும் சுத்தமாம்.

पराशरोऽपि – मार्जारमक्षिकाकीटपतङ्गकृमिदर्दुराः। मेध्यामेध्यं स्पृशन्तोऽपि नोच्छिष्टं मनुरब्रवीत्॥ यदा पुनरशुद्ध श्वादीन् स्पृशति, तदा विशेषो देवलेन दर्शितः – श्वपाकं पतितं चान्त्यमुन्मत्तं शवदाहकम्। सूतिकां स्राविकां नारीं रजसा च परिप्लुताम्। श्वकुक्कुटवराहांश्च ग्राम्यान् संस्पृश्य मानवः। सचेलः सशिराः स्नात्वा तदानीमेव शुध्यति॥ स्वयमेवैतानशुद्धस्तु यदि स्पृशेत्। विशुध्यत्युपवासेन तथा कृच्छ्रेण वा पुनः इति। स्राविका - प्रसवस्य कारियित्री॥ एतद्बुद्धिपूर्वस्पर्शविषयम्। तथा च कूर्मपुराणम्– उच्छिष्टोऽद्भिरनाचान्तश्चण्डालादीन् स्पृशेद्द्विजः। प्रमादाद्वै जपेत् स्नात्वा गायत्र्यष्टसहस्रकम्॥ चण्डालपतितादींस्तु कामाद्यः संस्पृशेद्द्विजः। उच्छिष्टस्तत्र कुर्वीत प्राजापत्यं विशुद्धये इति॥

பராசரரும்:- பூனை, ஈ, பூச்சி, விட்டில், புழு, தவளை இவைகள் சுத்த வஸ்துக்களையும் அசுத்த வஸ்துக்களையும் தொடுகின்றனவாயினும், அவைகளின் ஸ்பர்சத்தால் அசுத்தியில்லை என்று மனு சொல்லியுள்ளார். எப்பொழுது தான் அசுத்தனுயிருந்து நாய் முதலியதைத் தொடுகின்றனோ, அப்பொழுது விசேஷம் தேவலரால் காண்பிக்கப்பட்டுள்ளது. ச்வபாகன், பதிதன், அந்த்யஜன், உன்மத்தன், சவத்தைத் தஹிப்பவன், ஸூதிகை, ஸ்ராவிகை, ரஜஸ்வலை, க்ராமத்திலுள்ள, நாய், கோழி, பன்றி இவர்களை மனிதன் ஸ்பர்சித்தால் வஸ்த்ரத்துடன் தலை முழுகினால் அப்பொழுதே சுத்தனுகிறான். அசுத்தர்களான இவர்களை ஸ்வயம் அசுத்தனுயிருப்பவன் ஸ்பர்சித்தால் உபவாஸத்தால், அல்லது க்ருச்ரத்தால், சுத்தனுகிறான். (ஸ்ராவிகை = ப்ரஸவம் செய்விப்பவள்) இது புத்தி

பூர்வமாய் ஸ்பர்சித்த விஷயம். அவ்விதமே, **கூர்மபுராணம்:-** அசுத்தனுயிருக்கும் ப்ராம்ஹணன் ஆசமனம் செய்யாமல் சண்டாளன் முதலியவரைக் கவனிக்காமல் ஸ்பர்சித்தால், ஸ்நானம் செய்து, 1008 - முறை காயத்ரியை ஜபிக்க வேண்டும். எந்த ப்ராம்ஹணன் தான் அசுத்தனுயிருந்து, சண்டாளன், பதிதன் முதலியவரை புத்தி பூர்வமாய் ஸ்பர்சித்தானேனு அவன் சுத்திக்காக ப்ராஜாபத்ய க்ருச்ரத்தை அனுஷ்டிக்க வேண்டும்.

अनेनैवाभिप्रायेण विष्णुरपि – अनुच्छिष्टेन संस्पृष्टे स्नानं येन विधीयते। तेनैवोच्छिष्ट संस्पृष्टः प्राजापत्येन शुध्यति इति। पराशरः – अनुच्छिष्टेन शूद्रेण स्पर्शे स्नानं विधीयते। तेनोच्छिष्टेन संस्पृष्टः प्राजापत्यं समाचरेत्॥ उच्छिष्टोच्छिष्टसंस्पृष्टः शुना शूद्रेण वा द्विजः। उपोष्य रजनीमेकां पञ्चगव्येन शुध्यति इति। अनुच्छिष्टस्य विप्रस्य अनुच्छिष्टशूद्रस्पर्शे स्नानमात्रम्, उच्छिष्ट शूद्रस्पर्शे कृच्छ्रम्। उच्छिष्टस्य द्विजस्यान्येन उच्छिष्टेन द्विजेन शुना वाऽनुच्छिष्ट शूद्रेण वा स्पर्शे एकदिनमुपवासः, पञ्चगव्यप्राशनं चेत्यर्थः॥

இதே அபிப்ராயத்தினுல், **விஷ்ணுவும்:-** உச்சிஷ்டனல்லாத எவனுல் ஸ்பர்சிக்கப்பட்டதில் ஸ்நானம் விதிக்கப்படுகின்றதோ, அவனுல் உச்சிஷ்டனுனவன் ஸ்பர்சிக்கப்பட்டால் ப்ராஜாபத்ய க்ருச்ரத்தால் சுத்தனுகிறன். **பராசரர்:-** உச்சிஷ்டனல்லாத சூத்ரனுல் ஸ்பர்சமானுல் ஸ்நானம் விதிக்கப்படுகின்றது. உச்சிஷ்டனுன சூத்ரனுல் ஸ்பர்சமானுல் ப்ராஜாபத்ய க்ருச்ரத்தை அனுஷ்டிக்க வேண்டும். உச்சிஷ்டனல்லாத ப்ராம்ஹணனுக்கு, உச்சிஷ்டனல்லாத சூத்ரனின் ஸ்பர்சத்தில் ஸ்நானம் மட்டில். உச்சிஷ்டனுன சூத்ரனுல் ஸ்பர்சத்தில் க்ருச்ரம். உச்சிஷ்டனுன ப்ராம்ஹணனுக்கு, உச்சிஷ்டனுன ப்ராம்ஹணனுல், அல்லது நாயினுல், அல்லது உச்சிஷ்டனல்லாத சூத்ரனுல் ஸ்பர்சத்தில் ஒருநாள் உபவாஸமும், பஞ்சகவ்ய ப்ராசனமும் என்பது பொருள்.

स्मृत्यन्तरे – चण्डालं पतितं श्वानमुदक्यां सूतिकां तथा। दृष्ट्वा भुक्त्यन्तरे स्नात्वा मानस्तोकेत्यृचं जपेत् ।। उच्छिष्टवदनो विप्रः शूद्रादीन्नावलोकयेत्। अवलोकयेत् प्रमादाच्चेत् सह तैर्भुक्तवान् भवेत् इति ।। भरद्वाजः – शावे शवगृहं गत्वा श्मशाने वाऽन्तरेऽपि वा। आतुरव्यञ्जनं कृत्वा दूरस्थोऽप्यशुचिर्भवेत् इति ।। आतुरव्यञ्जनम् - मृतविषयविलापादि ।। पराशरः – अस्थिसञ्चयनादूर्ध्वं रुदित्वा स्नानमाचरेत्। अन्तर्दशाहे विप्रस्य ह्यूर्ध्वमाचमनं भवेत्।। शिशो रभ्युक्षणं प्रोक्तं बालस्याचमनं स्मृतम्। रजस्वला(भि)दिसंस्पर्शे स्नानमेव कुमारके। शिशुरादन्तजननादाचलद्बालकः स्मृतः। कुमारः स तु विज्ञेयो बुधैरामौञ्जिबन्धनात् इति।।

மற்றொரு ஸ்ம்ருதியில்:- சண்டாளன், பதிதன், நாய், ரஜஸ்வலை, ஸூதிகை இவர்களைப் போஜன மத்யத்தில் பார்த்தால், ஸ்நானம் செய்து, 'மானஸ்தோகே' என்ற ருக்கை ஜபிக்க வேண்டும். உச்சிஷ்டமான வாயையுடைய ப்ராம்ஹணன் சூத்ரன் முதலியவரைப் பார்க்கக் கூடாது. கவனமில்லாமல் பார்த்தால் அவருடன் புஜித்தவனாய் ஆவான். பரத்வாஜர்:- சாவத்தில் சவக்ருஹம் சென்றாலும், ச்மசானத்திலோ நடுவிலோ ஆதுரவ்யஞ்ஜனம் செய்தாலும், தூரத்தில் இருப்பவனாலும் அசுத்தனாவான். (ஆதுரவ்யஞ்ஜனம் = இறந்தவனைக் குறித்து அழுவது முதலியது) பராசரர்:- அஸ்தி ஸஞ்சயனத்திற்குப் பிறகு பத்துநாட்களுள் அழுதால் ஸ்நானம் செய்ய வேண்டும். அதற்குப் பிறகு ப்ராம்ஹணனுக்கு ஆசமனம் விதிக்கப்பட்டுள்ளது. சிசுவுக்கு ப்ரோக்ஷணம் சொல்லப்பட்டுள்ளது. பாலனுக்கு ஆசமனம் சொல்லப்பட்டுள்ளது. ரஜஸ்வலாதி ஸ்பர்சத்தில் குமாரனுக்கு ஸ்நானமே விதிக்கப்பட்டுள்ளது. பற்கள் முளைக்கும் வரை சிசுவாம். சௌசம் வரையில் பாலன் எனப்படுகிறான். உபநயனம் வரையில் குமாரன் என்று வித்வான்கள் சொல்லுகின்றனர்.

निमित्तान्तरमाह स एव – तस्मिन्नाचमनं कुर्याद्यत्र भाण्डेऽथ भुक्तवान्। यद्युत्तिष्ठत्यनाचान्तः भुक्तवानासनात्ततः। स्नानं सद्यैः प्रकुर्वीत सोऽन्यथाऽप्रयतो भवेत् इति॥ स एव – वृकश्वानसृगालाद्यैः दष्टो यस्तु द्विजोत्तमः। स्नात्वा जपेत् स गायत्रीं पवित्रां वेदमातरम्॥ गवां शृङ्गोदकस्नानं महानद्योस्तु सङ्गमे। समुद्रदर्शनाद्वाऽपि शुनादष्टः शुचिर्भवेत्। वेदविद्याव्रतस्नातः शुना दष्टो द्विजो यदि। स हिरण्योदके स्नात्वा घृतं प्राश्य विशुध्यति॥

வேறு நிமித்தமும் சொல்லுகிறார். பராசரரே:- எந்தப் பாத்ரத்தில் புஜித்தானோ அதிலேயே ஆசமனம் செய்ய வேண்டும். ஆசமனம் செய்யாமல் அந்த ஆஸனத்திலிருந்து எழுந்தால் உடனே ஸ்நானம் செய்ய வேண்டும். இல்லாவிடில் அவன் அசுத்தனாவான். பராசரரே:- செந்நாய், நாய், நரி முதலிவைகளால் கடிக்கப்பட்ட ப்ராம்ஹணன் ஸ்நானம் செய்து சுத்தமாகியதும், வேதமாதாவாகியதுமான காயத்ரியை ஜபிக்க வேண்டும். பசுவின் கொம்பிலுள்ள ஜலத்தால் ஸ்நானம், மஹாநதிகளின் ஸங்கமத்தில் ஸ்நானம், ஸமுத்ர தர்சனம் இவைகளில் ஒன்றினால் நாயால் கடிக்கப்பட்டவன் சுத்தனாவான். வேதாத்யயனம் செய்து வித்யாவ்ரத ஸ்நாதனான ப்ராம்ஹணன் நாயால் கடிக்கப்பட்டால் ஸ்வர்ணத்துடன் கூடிய ஜலத்தில் ஸ்நானம் செய்து, நெய்யை ப்ராசனம் செய்தால் சுத்தனாகிறான்.

सव्रतस्तु शुना दष्टो यस्त्रिरात्रमुपावसेत्। घृतं कुशोदकं पीत्वा व्रतशेषं समापयेत्॥ अव्रतः सव्रतो वाऽपि शुना दष्टो भवेद्द्विजः। प्रणिपाताद्भवेत् पूतो विप्रैश्चक्षुर्निरीक्षितः॥ शुनाऽऽघ्रातावलीढस्य नखैर्विलिखितस्य च। अद्भिः प्रक्षालनं प्रोक्तमग्निना चोप(चूल)धूपनम्॥ शुना तु ब्राह्मणी दष्टा जम्बुकेन वृकेण वा। उदितं ग्रहनक्षत्रं दृष्ट्वा सद्यः शुचिर्भवेत्॥ कृष्णपक्षे यदा सोमो न दृश्येत कदाचन। यां दिशं व्रजते सोमस्तां दिशं

चावलोकयेत् ।। असद्ब्राह्मणके ग्रामे शुना दष्टो द्विजोत्तमः। वृषं प्रदक्षिणीकृत्य सद्यः स्नात्वा विशुध्यति इति ।। वृकः - आरण्यकश्वा। आदिशब्देन वराहादयो गृह्यन्ते। तैर्दष्टः स्नात्वा गायत्र्यष्टशतं जपेत्। एतच्चासमर्थविषयम्।

வ்ரதானுஷ்டானத்தில் இருக்கும் ப்ராம்ஹணன் நாயால் கடிக்கப்பட்டால் மூன்று நாள் உபவாஸமிருக்க வேண்டும். நெய், குசோதகம் இவைகளை ப்ராசனம் செய்து. வ்ரதத்தின் சேஷத்தை முடிக்க வேண்டியது. வ்ரத மனுஷ்டிப்பவன் ஆனாலும், அனுஷ்டிக்காதவன் ஆனாலும், நாயினால் கடிக்கப்பட்ட ப்ராம்ஹணன், ப்ராம்ஹணர்களை நமஸ்கரித்து, அவர்களின் கண்களால் பார்க்கப்பட்டால் சுத்தனாகிறான். நாயால் முகரப்பட்டதும், நாக்கினால் நக்கப்பட்டதும், நகங்களால் கீறப்பட்டதுமான அங்கத்திற்கு ஜலத்தால் அலம்புதலும், அக்னியா ஸ்பர்சமும் சொல்லப்பட்டுள்ளது. நாய் அல்லது நரி, அல்லது செந்நாய் இவைகளால் கடிக்கப்பட்ட ப்ராம்ஹண ஸ்த்ரீ, உதயமான க்ரஹம், நக்ஷத்ரம் இவைகளைப் பார்க்கல் அப்பொழுதே சுத்தையாகிறாள். க்ருஷ்ண பக்ஷத்தில் எப்பொழுதாவது சந்த்ரன் காணப்படாவிடில், எந்தத் திக்கில் சந்த்ரன் செல்கிறானோ அந்தத் திக்கைப் பார்க்க வேண்டும். ப்ராம்ஹணர் இல்லாத க்ராமத்தில், நாயால் கடிக்கப்பட்ட ப்ராம்ஹணன், உடனே ஸ்நானம் செய்து வ்ருஷபத்தை ப்ரதக்ஷிணம் செய்தால் சுத்தனாகிறான். இங்கு ஆதிசப்தத்தால் பன்றி முதலியவை சொல்லப்படுகின்றன. அவைகளால் கடிக்கப்பட்டவன், ஸ்நானம் செய்து 108 - முறை காயத்ரியை ஜபிக்க வேண்டும். இது அசக்தவிஷயம்.

समर्थस्तु गोशृङ्गोदकस्नानादिकमाचरेत्। तत्र शृङ्गोदकस्नानं नाम शृङ्गपूरितेनोदकेन गायत्र्या शतवारमभिमन्त्रितेन सेचनम्। शृङ्गोदकस्नान सङ्गमस्नान समुद्रदर्शनानामधम मध्यमोत्तमभेदेन वा दंशतारतम्येन वा

व्यवस्था । सव्रताव्रतावुभावपि विप्रान् प्रणिपत्य तैर्निरीक्षितौ यथोक्तप्रायश्चित्ताचरणेन पूतौ भवतः । यस्मिन् ग्रामे ब्राह्मणा न सन्ति, तत्र ब्राह्मणप्रणिपातनिरीक्षणयोः स्थाने वृषभप्रदक्षिणस्नाने द्रष्टव्ये । यस्तु शुना न दष्टः, किन्तु नासिकयाऽऽघ्रातः, जिह्वयाऽवलीढः, नखैर्वा विलिखितः, एते त्रयोऽपि तं प्रदेशं प्रक्षाल्य वह्निना सन्ताप्य शुद्धाः स्युरिति माधवीये व्याख्यातम् ।।

சக்தனுகில் கோச்ருங்கோதக ஸ்நானம் முதலியதைச் செய்ய வேண்டும். அதில் கோச்ருங்கோதக ஸ்நானம் என்பது, (இறந்த) பசுவின் கொம்பில் ஜலத்தை நிரப்பி, காயத்ரியால் நூறுமுறை அபிமந்த்ரித்து அதனுல் ஸ்நானம் செய்வதாம். ச்ருங்கோதக ஸ்நானம், ஸங்கம ஸ்நானம், ஸமுத்ரதர்சனம் இவைகளுக்கு உத்தம மத்யம அதம தாரதம் யத்தாலாவது, கடியின் தாரதம்யத்தாலாவது வ்யவஸ்தையை அறியவும். வ்ரதமுடையவன் வ்ரதமில்லாதவன் இருவரும், ப்ராம்ஹணர்களை நமஸ்கரித்து அவர்களால் பார்க்கப்பட்டால் யதாவிதி ப்ராயச் சித்தத்தால் சுத்தராகின்றனர். எந்த க்ராமத்தில் ப்ராம்ஹணர் இல்லையோ அங்கு, ப்ராம்ஹண நமஸ்கார தர்சனங்களின் ஸ்தானத்தில், வ்ருஷப ப்ரதக்ஷிணமும் ஸ்நானமும் என்றறியவும். எவன் நாயால் கடிக்கப்படாமல், மூக்கினுல் முகர்க்கப்பட்டானை அவனும், எவன் நாக்கினுல் நக்கப்பட்டானை அவனும், எவன் நகங்களால் கீறப்பட்டானை அவனும், இம்மூவரும், அந்த இடத்தை அலம்பி, அக்னியால் சுடச் செய்தால் சுத்தராகின்றனர், என்று மாதவீயத்தல் வ்யாக்யானம் செய்யப்பட்டுள்ளது.

शातातपोऽपि –गवां शृङ्गोदकस्नानान्महानद्युपसङ्गमात् । समुद्रदर्शनाद्वाऽपि शुना दष्टः शुचिर्भवेत् ।। अव्रतः सव्रतो वाऽथ शुना दष्टस्तु यो द्विजः । हिरण्योदकमित्रं तु घृतं प्राश्य विशुध्यति इति ।। वसिष्ठः – ब्राह्मणस्तु शुना दष्टः नदीं गत्वा समुद्रगाम् । प्राणायामशतं कृत्वा घृतं

प्राश्य विशुध्यति इति ।। अङ्गिराः – ब्रह्मचारी शुना दष्टः त्रिरात्रेणैव शुध्यति। गृहस्थस्तु द्विरात्रेण एकाहेनाग्निहोत्रवान्। नाभेरूर्ध्वं तु दष्टस्य तदेव द्विगुणं भवेत्। तदेव त्रिगुणं वक्त्रे मूर्ध्नि चेत् स्याच्चतुर्गुणम्।। अत्र विच्छूद्रयोनिस्तु स्नानेनैव शुचिर्भवेत्। द्विगुणं तु वनस्थस्य तथा प्रव्रजितस्य च।। ब्राह्मणी तु शुनादष्टा सोमे दृष्टिं निपातयेत्। यदा न दृश्यते सोमः प्रायश्चित्तं तदा कथम्।। यां दिशं तु गतस्सोमः तां दिशं ह्यवलोकयेत्। सोममार्गेण सा पूता पञ्चगव्येन शुध्यति इति।।

சாதாதபரும்:- கோச்ருங்கோதக ஸ்நானத்தாலும், மஹாநதீ ஸங்கம ஸ்நானத்தாலும், ஸமுத்ர தர்சனத்தாலும், நாயால் கடிக்கப்பட்டவன் சுத்தனுவான். வ்ரத மனுஷ்டிப்பவனுயினும், அனுஷ்டிக்காதவனுயினும், நாயால் கடிக்கப்பட்ட ப்ராம்ஹணன், ஸ்வர்ணத்துடனும், ஜலத்துடனும் கூடிய நெய்யைப் பருகினுல் சுத்தனுகிறான். **வஸிஷ்டர்:-** நாயால் கடிக்கப்பட்ட ப்ராம்ஹணன், ஸமுத்ரம் நோக்கிப் பெருகுகிற நதியை அடைந்து ஸ்நானம் செய்து, 100 முறை ப்ராணுயாமம் செய்து, நெய்யைப் பருகினுல் சுத்தனுகிறான். **அங்கிரஸ்:-** ப்ரம்ஹசாரீ, நாயால் கடிக்கப்பட்டால் மூன்று நாட்களுக்குப் பிறகு சுத்தனுகிறான். க்ருஹஸ்தனுகில் இரண்டு நாட்களால் சுத்தனுகிறான். அக்னிஹோத்ரியானுல் ஒரு நாளால் சுத்தனுகிறான். நாபிக்குமேல் கடிக்கப்பட்டால், அதுவே இரு மடங்காகும். முகத்தில் கடிக்கப்பட்டால் அதுவே மூன்று மடங்காகும். தலையில் கடிக்கப்பட்டால் அதுவே நான்கு மடங்காகும். க்ஷத்ரியன், வைச்யன், சூத்ரன் இவர்கள் நாயால் கடிக்கப்பட்டால் ஸ்நானத்தாலேயே சுத்தராகின்றனர். வானப்ரஸ்தனுக்கு இரண்டு மடங்கு, ஸன்யாஸிக்குமப் படியே. நாயால் கடிக்கப்பட்டால், ப்ராம்ஹண ஸ்த்ரீ சந்த்ரனிடத்தில் கண்ணைச் செலுத்த வேண்டும். சந்த்ரன் காணப்படாமல் இருக்கும் போது ப்ராயச் சித்தம் எப்படி? எனில், சந்த்ரன் எந்தத் திக்கில்

சென்றிருக்கின்றஜே அந்தத் திக்கைப் பார்க்க வேண்டும். அதனல் அவள் சுத்தையாகி, பஞ்சகவ்யத்தால் சுத்தையாகிறுள்.

अरुणोदयात् पूर्वभावि स्नानं निषेधति पराशरः – भास्करस्य करैः पूतं दिवा स्नानं प्रशस्यते। अप्रशस्तं निशि स्नानं राहोरन्यत्र दर्शनात्। स्नानं दानं जपो होमः कर्तव्यो राहुदर्शने। अन्यदा त्वशुची रात्रि स्तस्मात्तां परिवर्जयेत् इति॥

அருணோதயத்திற்கு முன் ஸ்நானத்தை நிஷேதிக்கின்றார். பராசரர்:- ஸூர்ய கிரணங்களால் சுத்தமாவதால் பகலில் ஸ்நானம் புகழப்படுகிறது. ராத்ரியில் ஸ்நானம் ப்ரசஸ்தமல்ல. ராஹு தர்சனம் (க்ரஹணம்) தவிர்த்து. ராஹு தர்சனத்தில், ராத்ரியானலும் ஸ்நானம், தானம், ஜபம், ஹோமம் இவைகளைச் செய்ய வேண்டும். மற்றக் காலத்தில் ராத்ரி அசுத்தம். ஆகையால் அதை (ஸ்நானதிகளில்) வர்ஜிக்க வேண்டும்.

मनुः – न स्नानमाचरेद्भुक्त्वा नातुरो न महानिशि। न वासोभिः सहाजस्रं नाविज्ञाते जलाशये इति॥ न स्नानमाचरेद्भुक्त्वेति दृष्टार्थस्य स्नानस्य निषेधः। नातुर इत्यदृष्टार्थस्य च। न वासोभिरिति, 'सवासा जलमाविशे' दिति उक्तविषये, प्रातर्मध्यन्दिनयोश्च सोत्तरीयस्नानम्, अन्यत्र यादृच्छिकादौ अन्तर्वाससैव सह स्नानमित्यर्थः॥ पराशरः – महानिशा तु विज्ञेया मध्यस्थप्रहरद्वयम्। प्रदोषपश्चिमौ यामौ दिनवत्स्नानमाचरेत् इति॥ एतच्च आपद्विषयम्। अन्यथा भास्करस्य करैरित्यनेन विरुध्यते॥

மனு:- போஜனம் செய்த பிறகும், வ்யாதியுள்ளவனுயும், மஹாராத்ரியிலும், எப்பொழுதும் வஸ்த்ரங்களுடனும், அறியப்படாத ஜலாசயத்திலும் ஸ்நானம் செய்யக் கூடாது. இங்கு, போஜனம் செய்த பிறகு கூடாதென்றது த்ருஷ்டார்த்தமான ஸ்நானத்தை

நிஷேதித்தது. வ்யாதிஸ்தஞ்ய் இருப்பவன் கூடாதென்று, அத்ருஷ்டார்த்தத்தையும் நிஷேதிப்பதாம். வஸ்த்ரங்களுடன் கூடாதென்று, 'வஸ்த்ரத்துடன் ஸ்நானம் செய்ய வேண்டும்' என்று சொல்லிய விஷயத்திலும், காலியிலும், மத்யாஹ்னத்திலும் செய்யும் ஸ்நானத்திலும் உத்தரீயத்துடன் ஸ்நானம். மற்ற யாத்ருச்சிகம் முதலியதில் இடுப்பு வஸ்த்ரத்துடன் மட்டுமே ஸ்நானம் என்பதற்காம். பராசரர்:- 'ராத்ரியின் நடுவிலுள்ள இரண்டு யாமம் மஹாநிசை எனப்படும். பிரதோஷ காலத்திலும் கடைசி யாமத்திலும் பகலில் போல் ஸ்நானம் செய்யலாம்' என்றார். இது ஆபத் விஷயம். இவ்விதம் இல்லையென்றால் 'பாஸ்கரஸ்ய கரைः பூதம்' என்பதுடன் விரோதிக்கும்.

षट्त्रिंशन्मते – अपेयं हि सदा तोयं रात्रौ मध्यमयामयोः । स्नानं तत्र न कुर्वीत तथैवाचमनक्रियाम्। मूत्रोच्चारे महारात्रौ कुर्यान्नाचमनं तु यः । प्रायश्चित्तीयते विप्रः प्राजापत्यार्धमर्हति इति ।। वृद्धमनुः – आराध्यं देवमाराध्य बन्धूनप्यनुसृत्य च । भुक्त्वा व्याधौ च न स्नायात् तैलेनापि निशास्वपि इति ।। मेधातिथिरपि – न स्नायादुत्सवेऽतीते मङ्गल्यं विनिवर्त्य च । अनुव्रज्य सुहृद्बन्धूनर्चयित्वेष्ट देवताः । न स्नानमाचरेद्भुक्त्वा नातुरो न महानिशि इति ।। कालादर्शेऽपि – अनुव्रज्येष्ट बन्धूंश्च व्याधौ भुक्तवन्तरं निशि । इष्टं देवं समभ्यर्च्य विधाय च महोत्सवम्। विना निमित्तं न स्नायात् निमित्तेऽपि (रुगा) च नातुरः इति ।।

ஷட்த்ரிம்சன்மதத்தில்:- ராத்ரியின், நடுவான இரண்டு யாமங்களில், ஜலம் பருகத்தக்காதது. அப்பொழுது ஸ்நானம் செய்யக் கூடாது. ஆசமனமும் செய்யக் கூடாது. மூத்ர விஸர்ஜனம் மலவிஸர்ஜனம் செய்தால், மஹாராத்ரியில் எவன் ஆசமனம் செய்யவில்லையோ, அந்த ப்ராம்ஹணன் ப்ராயச் சித்தார்ஹனாகிறான். வ்ருத்தமனு:- பூஜிக்கத் தகுந்த தேவதையைப் பூஜித்த பிறகும்,

பந்துக்களைப் பின் சென்று அனுப்பிய பிறகும், புஜித்த பிறகும், வ்யாதியிலும், தைலத்துடனும் கூட ஸ்நானம் செய்யக் கூடாது. ராத்திரியிலும் ஸ்நானம் கூடாது. **மேதாதிதியும்** :- உத்ஸவம் முடிந்த பிறகும், மங்கள கார்யத்தை முடித்த பிறகும், மித்ரர், பந்துக்கள் இவர்களைப் பின் சென்று அனுப்பிய பிறகும், இஷ்ட தேவதைகளைப் பூஜித்த பிறகும், போஜனம் செய்த பிறகும், வ்யாதியுள்ள காலத்திலும், மஹாராத்ரியிலும் ஸ்நானம் செய்யக் கூடாது. **காலாதர்சத்திலும்**:- இஷ்டரையும், பந்துக்களையும் பின் சென்று அனுப்பிய பிறகும், வ்யாதியிலும், புஜித்த பிறகும், ராத்ரியிலும், இஷ்டதேவதையைப் பூஜித்த பிறகும், மஹோத்ஸவத்தை முடித்த பிறகும், கார்ணம் இல்லாமலும் ஸ்நானம் செய்யக் கூடாது. காரணம் இருந்தாலும் வ்யாதியுள்ளவன் ஸ்நானம் செய்யக் கூடாது.

काम्यनैमित्तिकेतु स्नाने महानिश्यप्यनिषिद्धे। तथा च स्मृत्यर्थसारे – न महानिशि नित्यार्थं काम्यं नैमित्तिकं भवेत्। स्नायात्तु पूर्वमस्नातो निश्युष्णेन जलेन च॥ अस्पृश्यस्पर्शने स्नानं निश्युष्णेन जलेन च। नद्यां नास्तमिते स्नायात् विशेषान्मध्ययामयोः ॥ अग्निं प्रज्वाल्य वा स्नायाद्वाप्यादिषु महाजले। ब्राह्मणाग्निगवामग्रे स्नानं विज्ञाप्य बुद्धिमान्। निशिस्नानं च दानं च कुर्यादग्निं समिध्य हि इति॥

காம்யஸ்நானமும், நைமித்திக ஸ்நானமும், மஹாராத்ரியிலும் நிஷேதிக்கப் படவில்லை. அவ்விதமே, **ஸ்ம்ருத்யர்த்தஸாரத்தில்**:- நித்யஸ்நானத்தை மஹாநிசியில் செய்யக் கூடாது. காம்யஸ்நானமும், நைமித்திக ஸ்நானமும் செய்யப்படலாம். முன் ஸ்நானம் செய்யாதவன், நிசியில் உஷ்ணோதகத்தால் ஸ்நானம் செய்யலாம். அஸ்ப்ருச்யரை ஸ்பர்சித்தால் நிசியில் உஷ்ணோதகத்தால் ஸ்நானம் செய்யலாம். அஸ்தமயத்திற்குப் பிறகு நதியில் ஸ்நானம் செய்யக் கூடாது. ராத்ரியின் நடுயாமங்களில் ஸ்நானம் கூடவே கூடாது. வாபீ முதலிய பெரிய ஜலாசயத்தில் அக்னியை

ஜ்வலிக்கச் செய்து, ப்ராம்ஹணர், அக்னி, பசு இவர் முன்னிலையில், ஸ்நானத்தை அறிவித்துச் செய்யலாம். நிசியில், ஸ்நானம், தானம் இவைகளை, அக்னியை ஜ்வலிக்கச் செய்து அதன் முன்னில் செய்ய வேண்டும்.

मनुः—राहुदर्शनसङ्क्रान्तिविवाहात्ययवृद्धिषु। स्नानदानादिकं कुर्यान्निशि काम्यव्रतेषु च इति। अत्ययः - मरणम्।। वृद्धिः - जननम्।। योगयाज्ञवल्क्योऽपि – ग्रहणोद्वाहसं क्रान्तियात्रार्तिप्रसवेषु च। स्नानं नैमित्तिकं ज्ञेयं रात्रावपि तदिष्यते इति।। आर्तिः - मरणम्।। पराशरोऽपि – पुत्रजन्मनि यज्ञे च तथा सङ्क्रमणे रवेः। राहोश्च दर्शने स्नानं प्रशस्तं नान्यथा निशि इति।। यज्ञः - अवभृथः।। स एव रात्रौ चण्डालादिस्पर्शे शुद्धिमाह – अस्तं गते यदा सूर्ये चण्डालं पतितं स्त्रियम्। सूतिकां स्पृशतश्चैव कथं शुद्धिर्विधीयते।। जातवेदः सुवर्णं च सोममार्गं विलोक्य च। ब्राह्मणानुमतश्चैव स्नानं कृत्वा विशुध्यति।। शुक्लपक्षे सोमो विलोकनीयः। तदभावे वह्निः, तदभावे सुवर्णम् तस्याप्यभावे सोममार्गः। एतेषामन्यतमं विलोक्य विप्रैरनुज्ञातः स्नायादित्यर्थः।।

மனு:- க்ரஹணம், ஸங்க்ரமணம், விவாஹம், மரணம், ஜனனம், காம்ய வ்ரதங்கள் இவைகளில் ராத்ரியிலும் ஸ்நானம், தானம் முதலியதைச் செய்யலாம். **யோகியாக்ஞவல்க்யர்:-** க்ரஹணம், விவாஹம், ஸங்க்ரமணம், யாத்ரை, மரணம், ஜனனம் இவைகளில் செய்யும் ஸ்நானம் நைமித்திகமாம். அதை ராத்ரியிலும் செய்யலாம். **பராசரரும்:-** புத்ரஜன்மத்திலும், யாகத்திலும், (அவப்ருதம்) ஸூர்ய ஸங்க்ரமணத்திலும், ராஹுதர்சனத்திலும் ராத்ரியில் ஸ்நானம் ப்ரசஸ்தமாகும். மற்றக் காரணத்தால் செய்யக் கூடாது. ராத்ரியில் சண்டாளாதி ஸ்பர்சத்தில் சுத்தியைச் சொல்லுகிறார் **பராசரரே:-** ஸூர்யன் அஸ்தமித்த பிறகு, சண்டாளன், பதிதன், ஸூதிகையான ஸ்த்ரீ இவர்களை ஸ்பர்சித்தவனுக்கு எவ்விதம் சுத்தி விதிக்கப்படுகிறது

எனில் அக்னி, ஸுவர்ணம், சந்த்ரனின் மார்க்கம் இவைகளைப் பார்த்து, ப்ராம்ஹணர்களால் அனுமதிக்கப்பட்டவனுய் ஸ்நானம் செய்தால் சுத்தனுகிறான், சுக்லபக்ஷத்தில் சந்த்ரனைப் பார்க்க வேண்டும். அவன் இல்லாவிட்டால் அக்னியைப் பார்க்க வேண்டும். அக்னி இல்லாவிடில் ஸுவர்ணம், அதுவும் இல்லாவிடில் சந்த்ரனின் மார்க்கம், இவைகளுள் ஒன்றைப் பார்த்து, ப்ராம்ஹணர்களால் அனுமதிக்கப்பட்டவனுய் ஸ்நானம் செய்ய வேண்டும் என்பது பொருள்.

रात्रिस्नाने तु विशेषमाह यमः – विप्रः स्पृष्टो निशायां तूदक्यया पतितेन वा। दिवाऽऽनीतेन तोयेन स्नापयेदग्निसन्निधौ इति ।। तोयेन स्वर्णसहितेनेति शेषः ।। तथा च पराशरः – दिवाऽऽहृतं तु यत्तोयं कृत्वा स्वर्णयुतं तु तत्। रात्रौ तु संप्राप्ते स्नायादनलसन्निधौ इति ।। देवलोऽपि – दिवाहृतैर्जलैः स्नानं निशि कुर्यान्निमित्ततः। निक्षिप्य च सुवर्णं वै सन्निधाप्य च पावकम् इति। कात्यायनः – प्रवेशाद्धरुणस्याप्सु न रवौ जलमुद्धरेत्। अन्यत्र धाम्न इत्येवं तत्रस्थे स्नानमिष्यते इति। धाम्नो धाम्न इति समन्त्रकोद्धरणादन्यत्र रात्रौ जलं नोद्धरेत्। तत्रस्थे जले स्नायादित्यर्थः। अत्रापि विशेषमाह पराशरः - यदि गेहे न तोयं स्यात्तावच्छुद्धिः कथं भवेत्। धाम्नो धाम्नेति मन्त्रेण गृह्णीयदाग्नि सन्निधौ। रात्रौ ग्रहांशुभिः पूतं दिवा पूतं तु भानुना। अनेनैव विशुद्ध्यते तथा रात्रौ यथा दिवेति।

ராத்ரி ஸ்நானத்தில் விசேஷத்தைச் சொல்லுகிறார். **யமன்:-** *ப்ராம்ஹணன், ராத்ரியில், ரஜஸ்வலையினுலாவது, பதிதனுலாவது ஸ்பர்சிக்கப்பட்டால், பகலில் கொண்டு வந்த ஜலத்தினுல், அக்னி ஸன்னிதியில் ஸ்நானம் செய்ய வேண்டும். ஸ்வர்ணத்துடன் கூடிய ஜலத்தினுல் என்று சேர்க்க வேண்டும். அவ்விதமே,* **பராசரர்:-** *ராத்ரியில் ஸ்நானம் நேர்ந்தால் பகலில் கொண்டு வந்த ஜலத்தை ஸ்வர்ணத்துடன் கூடியதாய்ச் செய்து, அதனுல் அக்னி*

ஸன்னிதியில் ஸ்நானம் செய்ய வேண்டும்.

தேவலரும்:- ராத்திரியில் நைமித்திக ஸ்நானம் நேர்ந்தால் பகலில் கொண்டு வந்த ஜலத்தில் ஸ்வர்ணத்தைச் சேர்ந்து அதனுல் அக்னி ஸந்நிதியில் ஸ்நானம் செய்ய வேண்டும். **காத்யாயனர்:-** ராத்திரியில் ஜலத்தில் வருணனே பிரவேசித்து இருப்பதால் ஜலத்தை எடுக்கக் கூடாது. 'தாம்நோ தாம்நः' என்ற மந்திரத்தைச் சொல்லாமல் ராத்ரியில் ஜலத்தை எடுக்கக் கூடாது. அங்கிருக்கும் ஜலத்தில் ஸ்நானம் செய்ய வேண்டும் என்பது பொருள்.

இதிலும் விசேஷத்தைச் சொல்கிறார் **பராசரர்:-** வீட்டில் ஜலமில்லாவிடில் அப்போது எப்படி சுத்தி ஏற்படும்? 'தாம்நோ தாம் நः' என்ற மந்திரத்தால் அக்னி ஸந்நிதியில் கிரஹங்களின் கிரணங்களால் ஜலம் சுத்தமாகின்றது. பகலில் ஸூரியனுல் சுத்தமாகிறது. இந்த மந்திரத்தால் கிரஹித்தால் பகலில் போல் ராத்திரியிலும் சுத்தமாகின்றது.

संवर्तः – अपो निशि न गृह्णीयाद्गृह्णन्नपि कदाचन । उद्धृत्याग्निमुपर्यासां धाम्नोधाम्न इतीरयेत् इति ।। मरीचिः – दिवाऽऽहृतं तु यत्तोयं गृहे यस्य न विद्यते । प्रज्वाल्याग्निं ततः स्नायात् नदीपुष्करिणीषु च इति ।। कालादर्शे – निमित्ततोऽपि न स्नायात् रात्रौ नद्यां दिवाऽऽहृतैः । तज्जलैस्तदभावे तु स्वर्णं क्षिप्त्वा तदं भसि ।। प्रज्वाल्य वह्निमभ्यर्णे तदभावे समन्त्रकम् । निशाहृतैर्जलैः स्नायादिति शास्त्रीयनिश्चयः इति ।।

ஸம்வர்த்தர்:- ஜலத்தை ராத்ரியில் க்ரஹிக்கக் கூடாது. ஒருகால் க்ரஹிக்கும்படி நேர்ந்தால், அக்னியை எடுத்து ஜலத்தின் மேல் பிடித்து 'தாம்னோதாம்னः' என்ற மந்த்ரத்தை உச்சரிக்க வேண்டும். **மரீசி:-** எவனது க்ருஹத்தில் பகலில் கொண்டு வந்த ஜலம் இல்லையோ, அவன் அக்னியை ஜ்வலிக்கச் செய்து அதன் ஸன்னிதியில்

நதீ, புஷ்கரிணீ இவைகளில் ஸ்நானம் செய்யலாம். காலாதர்சத்தில்:- நிமித்தம் நேர்ந்தாலும் இரவில் நதியில் ஸ்நானம் செய்யக் கூடாது. பகலில் கொண்டு வந்த நதீ ஜலத்தால் ஸ்நானம் செய்ய வேண்டும். அதில்லாவிடில், நதியின் ஜலத்தல் ஸுவர்ணத்தைப் போட்டு, அதன் ஸமீபத்தில் அக்னியை ஜ்வலிக்கச் செய்து ஸ்நானம் செய்ய வேண்டும். அதுவும் இல்லாவிடில் மந்த்ரத்துடன் ராத்ரியில் கொண்டுவரப்பட்ட ஜலத்திஞல் ஸ்நானம் செய்ய வேண்டும் என்பது சாஸ்த்ரத்தின் நிச்சயமாம்.

—★—

ग्रहणस्नानम् ।

ग्रहणस्नानमुक्तं महाभारते – गङ्गास्नानं प्रकुर्वीत ग्रहणे चन्द्रसूर्ययोः । महानदीषु(व)चान्यासु स्नानं कुर्याद्यविधि इति ।। शङ्खः – वापीकूपतटाकेषु गिरिप्रस्रवणेऽपि वा । नद्यां नदे देवखाते सरसीषूद्धृताम्बुनि। उष्णोदकेन वा स्नायात् ग्रहणे चन्द्रसूर्ययोः इति। उष्णोदकेन वा स्नायात् ग्रहणे चन्द्रसूर्ययोः इति उष्णोदकस्नान मातुरविषयम् ।। आदित्यकिरणैः पूतं पुनः पूतं च वह्निना । अतो व्याध्यातुरः स्नायाद् ग्रहणेऽप्युष्णवारिणा इति व्याघ्रस्मरणात् ।। पराशरः–सर्वं गङ्गासमं तोयं राहुग्रस्ते दिवाकरे। सोमग्रहे तथैवोक्तं स्नानदानादिकर्मसु इति ।।

க்ரஹண ஸ்நானம்

க்ரஹண ஸ்நானம் சொல்லப்பட்டுள்ளது. மஹாபாரதத்தில்:- சந்த்ரக்ரஹணம், ஸுர்யக்ரஹணம் இவைகளில், கங்கையில் ஸ்நானம் செய்ய வேண்டும். அல்லது வேறு மஹாநதிகளில் விதிப்படி ஸ்நானம் செய்ய வேண்டும். சங்கர்:- வாபீ, கூபம், தடாகம், மலையருவி, நதீ, நதம், தேவகாதம், ஓடைகள், எடுத்து வைத்த ஜலம், உஷ்ணோதகம் என்ற இவைகளிலொன்றில் சந்த்ரஸுர்ய

க்ரஹணங்களில் ஸ்நானம் செய்ய வேண்டும். உஷ்ணோதக ஸ்நானம் வ்யாதியுள்ளவனைப் பற்றியது. ''பகலில் ஸூர்ய கிரணங்களால் சுத்தமாகியதும், மறுபடி அக்னியால் சுத்தமாகியதுமாக உள்ளது உஷ்ணோதகம். ஆகையால் பிணியாளன் க்ரஹண காலத்திலும் உஷ்ணோதகத்தால் ஸ்நானம் செய்யலாம்'' என்று வ்யாக்ர வசனமிருப்பதால். பராசரர்:- ஸூர்ய க்ரஹணத்திலும், சந்த்ர க்ரஹணத்திலும் ஸ்நானம் தானம் முதலிய கர்மங்களில் எல்லா ஜலமும், கங்கைக்கு ஸமமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

व्यासोऽपि – सर्वं गङ्गासमं तोयं सर्वे ब्रह्मसमा द्विजाः । सर्वं भूमिसमं दानं ग्रहणे चन्द्रसूर्ययोः इति ।। शौनकः – स्वर्धुन्या तु समानि स्युः सर्वाण्यम्भांसि भूतले । कूपस्थान्यपि सोमार्कग्रहणे नात्र संशयः इति ।। मार्कण्डेयः–शीतमुष्णोदकात् पुण्यं पारक्यमवरोदकात् । भूमिष्ठमुद्धृतात् पुण्यं ततः प्रस्रवणोदकम् ।। ततोऽपि सारसं पुण्यं ततः पुण्यं नदीजलम् । तीर्थतोयं ततः पुण्यं महानद्याम्बु पावकम् ।। ततस्ततोऽपि गङ्गाम्बु पुण्यं पुण्यस्ततोऽम्बुधिः इति ।।

வ்யாஸரும்:- சந்த்ரஸூர்ய க்ரஹண காலத்தில், எல்லா ஜலமும் கங்கைக்குச் சமமாகவும், எல்லா வேதியரும் ப்ரம்ஹாவுக்குச் சமமாகியவர்களாகவும், எல்லா தானமும் பூமி தானத்திற்குச் சமமாகவும் சொல்லப்பட்டுள்ளது. சௌனகர்:- சந்த்ரஸூர்ய க்ரஹண காலத்தில் பூமியில் கிணற்றிலுள்ள ஜலம் முதல் ஸகல ஜலங்களும், கங்கைக்குச் சமங்களாகின்றன. இவ்விஷயத்தில் ஸந்தேஹமில்லை. மார்க்கண்டேயர்:- சீதஜலம் உஷ்ணோதகத்தை விடப் புண்யம். தாழ்ந்த ஜாதீயனின் ஜலத்தை விடப் பிறனின் ஜலம் புண்யம். பூமியிலுள்ள ஜலம் எடுக்கப்பட்டதை விடப் புண்யம். அதைவிட மலையருவியின் ஜலம் புண்யம். அதைவிட ஸரோஜலம் புண்யம். அதைவிட நதீ ஜலம் புண்யம். அதைவிடத் தீர்த்த ஜலம் புண்யம். அதைவிட மஹாநதீ

ஜலம் புண்யம். அதை விடக் கங்கா ஜலம் புண்யம். அதைவிட ஸமுத்ரம் புண்யமாம்.

वृद्धवसिष्ठः – गवां कोटिप्रदानेन सम्यग्दत्तेन यत् फलम्। गङ्गास्नाने तत् फलं स्याद्राहुग्रस्ते निशाकरे। दिवाकरे पुनस्तत्र दशसङ्ख्यमुदाहृतम्॥ चन्द्रसूर्यग्रहे चैव योऽवगाहेत जाह्नवीम्। स स्नातः सर्वतीर्थेषु किमर्थमटते महीम् इति॥ यत्र कापि जले स्नानाकरणे प्रत्यवायमाह वसिष्ठः – ग्रहणे सङ्क्रमे वाऽपि न स्नायाद्यदि मानवः। सप्तजन्मनि कुष्ठी स्याद्दुःखभागी च जायते' इति। शातातपः – स्नानं दानं तथा श्राद्धं अनन्तं राहुदर्शने इति।

வ்ருத்தவஸிஷ்டர்:- சந்த்ர க்ரஹணத்தில் கங்கா ஸ்நானம் செய்தால், கோடி பசுக்களை விதிப்படி தானம் செய்தால் எந்தப் பலனை அந்தப் பலனுண்டாகும். ஸூர்ய க்ரஹணத்தில் கங்கா ஸ்நானம் செய்தால் முன் சொல்லிய பலனை பத்து மடங்கு அதிகமாகும். சந்த்ர ஸூர்ய க்ரஹண காலத்தில் எவன் கங்கையில் ஸ்நானம் செய்கின்றானோ அவன் ஸகல தீர்த்தங்களிலும் ஸ்நானம் செய்தவனாகிறான். அவன் பூமி முழுவதும் ஏன் சுற்ற வேண்டும்? எந்த ஜலத்திலாவது ஸ்நானம் செய்யாவிடில் ப்ரத்ய வாயத்தைச் சொல்லுகிறார். **வஸிஷ்டர்:-** க்ரஹணத்திலும், ஸங்க்ரமணத்திலும், மனிதன் ஸ்நானம் செய்யாவிடில் ஏழு ஜன்மங்களில் குஷ்டரோகம் உடையவனாகவும், துக்கத்தை அடைபவனாகவும் ஆவான். **சாதாதபர்:-** க்ரஹண காலத்தில் செய்யும் ஸ்நானம், தானம், ச்ராத்தம் இவை அனந்தமாய் ஆகும்.

अत्र हिरण्येनामेन वा श्राद्धं कुर्यात्॥ तदाह बोधायनः – अन्नाभावे द्विजाभावे प्रवासे पुत्रजन्मनि। हेमश्राद्धं सङ्ग्रहे च कुर्याच्छूद्रः सदैव हि इति। व्यासः – आपद्यनग्नौ तीर्थे च ग्रहणे चन्द्रसूर्ययोः। आमश्राद्धं द्विजो दद्याच्छूद्रो दद्यात् सदैव हि इति॥

देवलः – यथा स्नानं च दानं च सूर्यस्य ग्रहणे दिवा। सोमस्यापि तथा रात्रौ स्नानं दानं विधीयते इति।

இக்காலத்தில் ஹிரண்யத்தாலாவது ஆமத்தாலாவது ச்ராத்தம் செய்ய வேண்டும். அதைச் சொல்லுகிறார். போதாயனர்:- அன்னம் மில்லாவிடினும், ப்ராம்ஹணர் இல்லாவிடினும், ப்ரவாஸத்திலும், புத்ர ஜனனத்திலும், க்ரஹண காலத்திலும், ப்ராம்ஹணன் ஹிரண்ய ச்ராத்தம் செய்ய வேண்டும். சூத்ரன் எப்பொழுதுமே ஹிரண்ய ச்ராத்தம் செய்ய வேண்டும். வ்யாஸர்:- ஆபத்காலத்திலும், அக்னி இல்லாவிடினும், தீர்த்தத்திலும், சந்த்ர ஸூர்ய க்ரஹணங்களிலும் ப்ராம்ஹணன் ஆமச்ராத்தம் செய்ய வேண்டும். சூத்ரன் எப்பொழுதுமே ஆமச்ராத்தம் செய்ய வேண்டும். தேவலர்:- ஸூர்ய க்ரஹணத்தில், பகலில் ஸ்நானமும், தானமும் எப்படி விதிக்கப்பட்டுள்ளவோ, அப்படி சந்த்ர க்ரஹணத்தில் ராத்ரியிலும் ஸ்நானமும், தானமும் விதிக்கப்பட்டுள்ளன.

यत् ग्रहण निमित्तमाशौचम्, तत् स्नानेन निवर्त्यम् ।। तदुक्तं ब्रह्माण्डपुराणे – आशौचं जायते नृणां ग्रहणे चन्द्रसूर्ययोः। राहुस्पर्शे तयोः स्नात्वा दानादौ कल्पते नरः ।। सर्वेषामेव वर्णानां सूतकं राहुदर्शने । स्नात्वा कर्माणि कुर्वीत पक्वमन्नं विवर्जयेत् इति ।। ग्रहणकाले यत् पक्वमन्नम्, तत्पूर्वं वा, तत् सूतकान्नम्। तत्तु पश्चादपि न भुञ्जीतेत्यर्थः ।। वृद्धवसिष्ठः – सर्वेषामपि वर्णानां निमित्तं राहुदर्शने। सचेलं तु भवेत् स्नानं सूतकान्नं च वर्जयेत् इति ।।

க்ரஹண நிமித்திமான ஆசௌச மெதுவோ, அது ஸ்நானத்தால் நிவர்த்திக்கத் தகுந்தது. அது சொல்லப்பட்டுள்ளது, ப்ரம்ஹாண்ட புராணத்தில்:- சந்த்ர ஸூர்யர்களுக்கு ராஹு ஸ்பர்சமான க்ரஹணத்தில், மனிதர்களுக்கு ஆசௌசம் உண்டாகின்றது. அக்காலத்தில் ஸ்நானம் செய்தால் மனிதன் தானம் முதலியதில்

அர்ஹனு கிறுன். எல்லா வர்ணத்தினருக்கும் க்ரஹணத்தில் ஆசௌசம் உண்டாகிறது. ஆகையால் ஸ்நானம் செய்து கர்மங்களைச் செய்ய வேண்டும். பக்வமான அன்னத்தை வர்ஜிக்க வேண்டும். 'க்ரஹண காலத்திலோ, அதற்கு முன்போ பக்வமாகிய அன்னமெதுவோ அது ஸூதகான்னம். அதை க்ரஹணத்திற்குப் பிறகும் புஜிக்கக் கூடாது' என்பது பொருள். வ்ருத்தவஸிஷ்டர்:- எல்லா வர்ணத்தினருக்கும் க்ரஹணத்தில் ஆசௌசம். ஸசேல ஸ்நானம் செய்ய வேண்டும். ஸூதகான்னத்தையும் வர்ஜிக்க வேண்டும்.

व्याघ्रपादः – स्मार्तकर्मपरित्यागो राहोरन्यत्र सूतके । श्रौते कर्मणि तत्कालं स्नानतः शुद्धिमवाप्नुयात् इति ॥ जन्ममरणनिमित्ता-शौचवानपि स्नानं कुर्यादित्याह वसिष्ठः – चन्द्रसूर्यग्रहे स्नायान्मृतके सूतकेऽपि वा । अस्नायी मृत्युमाप्नोति स्नायी मृत्युं न विन्दति इति ॥ अत्र स्नानं श्राद्धदानादेरुपलक्षणम् ॥ अत एवाङ्गिराः – सर्वे वर्णाः सूतकेऽपि मृतके राहुदर्शने । स्नात्वा श्राद्धं प्रकुर्वीरन् दानं शाठ्यविवर्जितम् ॥ सूर्येन्दुग्रहणं यावत्तावत् कुर्याज्जपादिकम् । न स्वपेन्न च भुञ्जीत स्नात्वा भुञ्जीत मुक्तयोः इति ॥

வ்யாக்ரபாதர்:- க்ரஹண நிமித்த ஸூதகம் தவிர மற்ற ஸூதகத்தில் ஸ்மார்த்த கர்மங்களை வர்ஜிக்க வேண்டும். ச்ரௌத கர்மத்தில் அக்காலம் மட்டில் ஸ்நானத்தால் சுத்தியை அடைவான். ஜனனமரண நிமித்தமான ஆசௌசமுடையனும், ஸ்நானம் செய்ய வேண்டும் என்கிறார் வஸிஷ்டர்:- மரணசௌச மிருந்தாலும், ஜனனசௌசம் இருந்தாலும், சந்த்ரஸூர்ய க்ரஹணத்தில் ஸ்நானம் செய்ய வேண்டும். ஸ்நானம் செய்யாதவன் ம்ருத்யுவை அடைவான். ஸ்நானம் செய்தவன் ம்ருத்யுவை அடைமாட்டான். இங்கு ஸ்நானம் என்றது ச்ராத்தம் தானம் முதலியதற்கும் உபலக்ஷணமாம், ஆகையால் தான். அங்கிரஸ்:- 'எல்லா வர்ணத்தினரும்,

ஜனனசௌசம் மரணசௌசம் இருந்தாலும், க்ரஹண காலத்தில் ஸ்நானம் செய்து ச்ராத்தம் தானம் இவைகளைக் கபடமின்றிச் செய்ய வேண்டும். ஸூர்யசந்த்ர க்ரஹணம் உள்ள வரையில் ஜபம் முதலியவற்றைச் செய்ய வேண்டும். தூங்கக்கூடாது. புஜிக்கவும் கூடாது. சந்த்ர ஸூர்யர்கள் முக்தர்களான பிறகு ஸ்நானம் செய்து புஜிக்க வேண்டும் என்றூர்.

कालनिर्णये – नैमित्तिकं तु कर्तव्यं ग्रहणे चन्द्रसूर्ययोः । यच्छ्राद्धं बान्धवानां तु नारकी स्यात्ततोऽन्यथा ।। काम्यानि चैव श्राद्धानि शस्यन्ते ग्रहणादिषु इति ।। ब्रह्मसिद्धान्ते – यावान् कालः पर्वणोऽन्ते यावान् प्रतिपदादिमः । रवीन्दुग्रहणानेहा स पुण्यो मिश्रणाद्भवेत् इति। ग्रहणानेहा - ग्रस्तकालः । आद्यन्तयोः स्नानं विहितम्, कालनिर्णये – ग्रस्यमाने भवेत् स्नानं ग्रस्ते होमो विधीयते । मुच्यमाने भवेद्दानं मुक्ते स्नानं विधीयते इति ।। स्मृत्यन्तरे – ग्रस्यमाने रवौ स्नायान्मुच्यमाने निशाकरे इति ।। ब्रह्मकैवर्ते–स्नानं स्यादुपरागादौ मध्ये होमः सुरार्चनम् । दानं जपश्च मुक्ते तु पुनः स्नानं विधीयते इति ।।

காலநிர்ணயத்தில்:- சந்த்ரஸூர்ய க்ரஹணத்தில் பந்துக்களை உத்தேசித்து நைமித்திக ச்ராத்தத்தைக் செய்ய வேண்டும். செய்யாவிடில் நரகத்தை அடைவான். க்ரஹணம் முதலியவைகளில் காம்யச்ராத்தங்களும் ப்ரசஸ்தங்களாகின்றன. ப்ரம்ஹலித்தாந்தத்தில்:- பர்வத்தின் முடிவில் எவ்வளவு காலமும், ப்ரதமையின் ஆதியில் எவ்வளவு காலமும் க்ரஸ்த காலமாயுள்ளதோ அவ்வளவு காலம் சேர்ந்து புண்ய காலமாய் ஆகும். க்ரஹணத்தின் ஆதியிலும் அந்தத்திலும் ஸ்நானம் விதிக்கப்பட்டுள்ளது. காலநிர்ணயத்தில்:- ஸூர்யன், அல்லது சந்த்ரன் ராஹுவினால் விழுங்கப்படும்போது ஸ்நானம் செய்ய வேண்டும். விழுங்கப்பட்ட போது ஹோமம் விதிக்கப்படுகிறது. விடப்படும்போது தானம் செய்ய வேண்டும். விடப்பட்ட பிறகு ஸ்நானம்

விதிக்கப்படுகிறது. மற்றொருஸ்ம்ருதியில்:- ஸூர்யன் விழுங்கப்படும் போதும், சந்த்ரன் விடப்படும் போதும் ஸ்நானம் செய்ய வேண்டும். ப்ரம்ஹகைவர்த்தத்தில்:- க்ரஹணத்தின் ஆதியில் ஸ்நானமும், நடுவில் ஹோமமும், தேவபூஜையும், தானமும், ஜபமும், முடிவில் மறுபடி ஸ்நானமும் விதிக்கப்படுகின்றன.

आदिमध्यावसानेषु यद्यद्विहितम्, तस्य तस्य फलातिशय उक्तः ब्रह्मपुराणे – उपमर्दे लक्षगुणं ग्रहणे चन्द्रसूर्ययोः । पुण्यं कोटिगुणं मध्ये मुक्तिकाले त्वनन्तकम् इति ।। स्मृत्यन्तरे – नाड्यष्षोडश पूर्वेण सङ्क्रान्तेस्तु परेण च । राहोस्तु दर्शनं यावत् पुण्यकाल उदाहृतः इति ।। व्यासः – प्राक्पश्चात् सङ्क्रमेषूक्तः पुण्यकालो विभागशः । चन्द्रसूर्योपरागे तु यावद्दर्शनगोचरः इति ।। यत्तु स्मर्यते – त्रिदशाः स्पर्शसमये तृप्यन्ति पितरस्तथा । मनुष्या मध्यकाले तु मोक्षकाले तु राक्षसाः इति, तत् ग्रहणे स्नानादिना सर्वेषां तृप्तिरित्येवं परम्, न तु मोक्षकाले निषेधपरं, मुक्तिकाले त्वनन्तकम् इति स्मरणात् ।।

ஆதியிலும், மத்யத்திலும், முடிவிலும், எதெது விதிக்கப்பட்டுள்ளதோ அததுக்கு அதிக பலம் சொல்லப்பட்டுள்ளது ப்ரம்ஹபுராணத்தில்:- சந்திரஸூர்ய க்ரஹணத்தில், ஆரம்பத்தில் லக்ஷம் மடங்கு புண்யமும், நடுவில் கோடி மடங்கு புண்யமும், மோக்ஷ காலத்தில் அளவற்ற புண்யமும் சொல்லப்பட்டுள்ளது. மற்றொரு ஸ்ம்ருதியில்:- ஸங்க்ரமணத்திற்கு முன்னும், பின்னும், பதினாறு நாழிகைகள் புண்யங்களென்று சொல்லப்பட்டுள்ளது. க்ரஹணத்தில் ராஹுதர்சனம் உள்ளவரையில் புண்ய காலம் சொல்லப்பட்டுள்ளது. வ்யாஸர்:- ஸங்க்ரமணங்களில், முன்னும் பின்னும், பிரித்துப் புண்ய காலம் சொல்லப்பட்டுள்ளது. சந்த்ரஸூர்ய க்ரஹணத்திலோவெனில் உபராகம் கண்ணுக்குப் புலப்படும் வரையில் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் ''க்ரஹணத்தின் ஆரம்பத்தில் தேவர்களும், பித்ருக்களும்,

மத்யகாலத்தில் மனுஷ்யர்களும், மோக்ஷ காலத்தில் ராக்ஷஸர்களும் த்ருப்தராய் ஆகின்றனர்'' என்ற ஸ்ம்ருதி வசனம் உள்ளதே எனில், அது, க்ரஹணத்தில் ஸ்நானம் முதலியதைச் செய்வதால் எல்லோருக்கும் த்ருப்தி உண்டாகிறது என்பதில் தாத்பர்யமுள்ளதே அன்றி, மோக்ஷ காலத்தை நிஷேதிப்பதில் தாத்பர்யமுள்ளதல்ல 'முக்தி காலத்தில் அனந்தபுண்யம்' என்று ஸ்ம்ருதி இருப்பதால்.

वारविशेषयोगे फलातिशयमाह व्यासः – रविग्रहे सूर्यवारे सोमे सोमग्रहे तथा । चूडामणिरिति ख्यातः तत्रानन्तफलं भवेत् ॥ वारेष्वन्येषु यत् पुण्यं ग्रहणे चन्द्रसूर्ययोः । तत्पुण्यं कोटिगुणितं ग्रासे चूडामणौ स्मृतम् इति ॥ जाबालिरपि – सङ्क्रान्तौ पुण्यकालस्तु षोडशोभयतः कलाः । चन्द्रसूर्योपरागे तु यावद्दर्शनमोचनम् इति ॥

வார விசேஷம் சேர்ந்தால் பலமதிக முண்டென்கிறார். வ்யாஸர்:- பானுவாரத்தில் ஸூர்ய க்ரஹணமும், ஸோமவாரத்தில் சந்த்ர க்ரஹணமும் நேர்ந்தால் அது 'சூடாமணி'' எனப்படும். அதில் அளவற்ற பலனுண்டாகும். மற்ற வாரங்களில் சந்த்ரஸூர்ய க்ரஹணங்களில் எவ்வளவு புண்யமோ, அது, சூடாமணி க்ரஹணத்தில் கோடி மடங்குள்ளதாகும் எனச் சொல்லப்பட்டுள்ளது. ஜாபாலியும்:- ஸங்க்ரமணத்தில் முன்னும் பின்னும், பதினாறு நாழிகைகள் புண்ய காலங்கள். சந்த்ரஸூர்ய க்ரஹணத்திலோ எனில் தர்சனம் முதல் விடுகிற வரையில் புண்யகாலம்.

ग्रस्तास्तमये त्वस्तपर्यन्तं दर्शनगोचरत्वात् तावत् पुण्यकालो भवति ॥ तत्र मोचनस्नानकालमाह भृगुः – ग्रस्तावेवास्तमानं तु रवीन्दू प्राप्नुतो यदि । ततः परेद्युरुदये स्नात्वाऽभ्यवहरेन्नरः इति ॥ अह्नि सूर्यग्रहणं रात्रौ चन्द्रग्रहणं चेत्येवं प्रसिद्धिः सार्वजनीना । तादृशे ग्रहणे स्नानादिकमुक्तम् । यत्तु कालविपर्ययेण प्राप्यमाणं ज्योतिःशास्त्रमात्रप्रसिद्धं ग्रहणम्, तत्र स्नानादिकं न कर्तव्यम् । तदुक्तं

कालनिर्णये– सूर्यग्रहो यदा रात्रौ दिवा चन्द्रग्रहस्तथा। तत्र स्नानं न कुर्वीत द्रद्याद्दानं न च क्वचित् इति॥

க்ரஸ்தாஸ்தமயத்திலோ எனில், அஸ்தமயம் வரையில் தர்சன விஷயமாய் இருப்பதால் அதுவரையில் புண்யகாலம் இருக்கிறது. அதில் மோசன ஸ்நானத்திற்குக் காலத்தைச் சொல்லுகிறார்:- ஸூர்யனும், சந்த்ரனும், ராஹுவினால் பிடிக்கப்பட்டவராகவே அஸ்தமயத்தை அடைந்தால், மறுநாள் உதயத்தில் ஸ்நானம் செய்து மனிதன் புஜிக்க வேண்டும். பகலில் ஸூர்ய க்ரஹணமும், இரவில் சந்த்ர க்ரஹணமும் என்று இவ்விதம் ப்ரஸித்தி ஸர்வஜனங்களும் அறிந்ததே. அவ்விதமான க்ரஹணத்தில் ஸ்நானம் முதலியது சொல்லப்பட்டது. ஆனால் காலம் மாறி வருவதும், ஜ்யோதிச் சாஸ்த்ரத்தால் மட்டும் ப்ரஸித்தமுமான க்ரஹணம் எதுவோ, அதில் ஸ்நானம் முதலியதை அனுஷ்டிக்க வேண்டியதில்லை. அது சொல்லப்பட்டுள்ளது. காலநிர்ணயத்தில்:- ராத்ரியில் ஸூர்ய க்ரஹணமும், பகலில் சந்த்ர க்ரஹணமும் எப்பொழுதாவது உண்டானால், அப்பொழுது ஸ்நானம் ஒருகாலும் செய்ய வேண்டியதில்லை, தானமும் செய்ய வேண்டியதில்லை.

—*—

सङ्क्रान्तिस्नानम्

सङ्क्रान्तिस्नानाकरणे प्रत्यवायमाह शातातपः – सूर्यसङ्क्रमणे पुण्ये न स्नायाद्यदि मानवः। सप्तजन्मसु रोगी स्यात् दुःखभागी च जायते इति॥ स एव – सङ्क्रान्त्यां यानि दत्तानि हव्यकव्यानि मानवैः। तानि तस्य ददात्यर्कः सप्तजन्मसु निश्चितम् इति॥ मेषादिषु द्वादशराशिषु क्रमेण सञ्चरतः सूर्यस्य पूर्वस्माद्राशेरुत्तरराशौ प्रवेशः सङ्क्रमणम्। तत्र स्नानाद्यङ्गभूतसङ्क्रान्तिकालस्य मुख्यस्यासम्भवात्

तत्सम्बन्धिनौ पूर्वोत्तरकालौ ग्रहीतव्यौ ॥ तदाह देवलः – सङ्क्रान्तिसमयः सूक्ष्मो दुर्ज्ञेयः पिशितेक्षणैः । तद्योगादप्यधश्चोर्ध्वं त्रिंशन्नाड्यः पवित्रिताः इति ॥ सङ्क्रान्तेः पूर्वोत्तरकालयोरेकैकस्मिन् त्रिंशद्घटिकाः पुण्या इति सामान्येनोक्तम् ।

ஸங்க்ராந்தி ஸ்நானம்

ஸங்க்ராந்தி ஸ்நானம் செய்யாவிடில் தோஷத்தைச் சொல்லுகிறார். சாதாதபர்:- புண்யமான ஸூர்ய ஸங்க்ரமணத்தில் மனிதன் ஸ்நானம் செய்யாவிடில், ஏழு ஜன்மங்களில் ரோகம் உடையவனாகவும், துக்கமுடையவனாகவும், ஆகிறான். சாதாதபரே:- ஸங்க்ராந்தி காலத்தில், மனிதர்களால், எந்த ஹவ்யங்களும், கவ்யங்களும் கொடுக்கப்பட்டனவோ அவைகளே அவர்களுக்கும், ஸூர்யன் ஏழு ஜன்மங்களில் நிச்சயமாய்க் கொடுக்கின்றான். மேஷம் முதலிய பன்னிரண்டு ராசிகளில் க்ரமமாய் ஸஞ்சரிக்கும் ஸூர்யனின், முன் ராசியிலிருந்து பின் ராசியில் ப்ரவேசமானது ஸங்க்ரமணம் எனப்படும். அதில் ஸ்நானதானாதிகளுக்கு அங்கமாகிய முக்யகாலம் ஸம்பவிக்காதாகையால் அதைச் சேர்ந்துள்ள முன்பின் காலங்கள் க்ரஹிக்கத்தக்கவை ஆகும். அதைச் சொல்லுகிறார். தேவலர்:- ஸங்க்ரமண ஸமயம் ஸூக்ஷ்மமாகியதால் மாம்ஸக் கண்ணுள்ளவர்களால் அறியமுடியாததாகும், ஆகையால், அந்த ஸங்க்ரமண ஸமயத்துடன் சேர்க்கையால், முன்னும், பின்னும், முப்பது நாழிகைகள் புண்யங்களானதாம்.

तत्र विशेषं दर्शयति वृद्धवसिष्ठः – अयने द्वे विषुवे द्वे चतस्रष्षडशीतयः । चतस्रो विष्णुपद्यश्च सङ्क्रान्त्यो द्वादश स्मृताः । मृगकर्कटसङ्क्रान्ती द्वे उदग्दक्षिणायने । विषुवे तु तुलामेषौ गोलमध्ये ततोऽपराः ॥ कन्यायां मिथुने मीने धनुष्यपि रवेर्गतिः । षडशीति

मुखाः प्रोक्ताः षडशीतिगुणैः फलैः ।। वृषवृश्चिककुम्भेषु सिंहे चैव रवेर्गतिः । एतद्विष्णुपदं नाम विषुवादधिकं फलैः ।।

ஸங்க்ரமணத்தின் முன்பின் காலங்களில் ஒவ்வொன்றிலும் முப்பது நாழிகைகள் புண்யங்கள் என்று ஸாதாரணமாய்ச் சொல்லப்பட்டது. அதில் விசேஷத்தைத் தெரிவிக்கின்றார். வ்ருத்தவஸிஷ்டர்:- அயனங்கள் இரண்டு, விஷுவங்கள் இரண்டு, ஷடசீதிகள் நான்கு, விஷ்ணுபதிகள் நான்கு. இவ்விதம் பன்னிரண்டு ஸங்க்ரமணங்கள் சொல்லப்பட்டுள்ளன. மகர ஸங்க்ராந்தி உத்தராயணம், கடக ஸங்க்ராந்தி தக்ஷிணாயனம். துலா ஸங்க்ரமணமும், மேஷ ஸங்க்ரமணமும் விஷுவங்கள். அயன விஷுவ கோளமத்யத்தில் மற்றவைகள் உள்ளன. கன்யா, மிதுனம், மீனம், தனுஸ் இந்த ராசிகளில் ஸூர்யன் செல்வது ஷடசீதி எனப்படும், 86 மடங்கு பலனிருப்பதால். வ்ருஷபம், வ்ருச்சிகம், கும்பம், ஸிம்ஹம் இவைகளில் ஸூர்யன் செல்வது விஷ்ணுபதம் எனப்படும், விஷுவத்தைவிட அதிக பலமுள்ளது.

अतीतानागते पुण्ये द्वे उदग्दक्षिणायने । त्रिंशत् कर्कटके नाड्यो मकरे विंशतिः स्मृताः ।। वर्तमाने तुलामेषे नाड्यस्तूभयतो दश । षडशीत्यामतीतायां षष्टिरुक्तास्तु नाडिकाः । पुण्यायां विष्णुपद्यां च प्राक्पश्चादपि षोडश इति ।। मृगः - मकरः ।। गोलमध्ये - अयनविषुवगोलमध्ये ।। गोलं - वलनम् ।। अतीतानागते इति - उदगयनमतीतं सत् पुण्यं भवति । दक्षिणायनमनागतं पुण्यम् । त्रिंशदित्यादिना तदेव स्पष्टीक्रियते ।। कर्कटसङ्क्रान्तेः प्राचीनाः त्रिंशद्घटिकाः पुण्याः । मकरसङ्क्रान्तेरूर्ध्वकालीना विंशतिघटिकाः पुण्या इत्यर्थः ।।

உத்தராயணம் ஸங்க்ரமணத்திற்குப் பிறகும், தக்ஷிணாயனம் ஸங்க்ரமணத்திற்கு முன்பும் புண்யமாம்.

கடகத்தில் (தக்ஷிணயனத்தில்) முன்பு முப்பது நாழிகைகள் புண்யங்களாம். மகரத்தில் (உத்ராயணத்தில்) பின்பு இருபது நாழிகைகள் புண்யங்களாம். துலா, மேஷம் இந்த ஸங்க்ரமணங்களில் இரு புறத்திலும் 10-நாழிகைகள் புண்யங்களாம். விஷ்ணுபதியில் முன்னும் பின்னும் பதினெறு நாழிகைகள் புண்யங்களாம்.

गालवोऽपि – स्थिरभे विष्णुपदं षडशीतिमुखं द्वितनुभे तुलामेषे विषुवं तु कर्कटे दक्षिणायनं मृगे सौम्यकं सूर्ये इति ॥ भशब्दवाच्योऽत्र राशिः । सूर्ये स्थिरराशौ स्थिते सति विष्णुपदं भवति। द्विस्वभावराशौ सूर्ये स्थिते सति षडशीतिमुखं भवति । तुलामेष द्वये स्थिते विषुवं भवति। सूर्ये कर्कटस्थे दक्षिणायनम्। मृगे - मकरे सौम्यकं - सोमदिङ्नामकमुत्तरायणम् । तैरेतैः संज्ञाभेदैः राशयो व्यवह्रियन्त इत्यर्थः ॥

காலவர்:- ஸூர்யன் ஸ்திரராசியிலிருக்கும் பொழுது விஷ்ணுபதம் என்றுகிறது. உபய ராசியிலிருக்கும் பொழுது ஷடசீதி என்றுகிறது. துலாத்திலும், மேஷத்திலும் இருக்கும் பொழுது விஷுவம் என்றுகிறது. கடகத்திலிருக்கும் பொழுது தக்ஷிணயனமும், மகரத்தில் இருக்கும் பொழுது உத்தராயணமுமாம். இந்தப் பெயர்களால் ராசிகள் வ்யவஹரிக்கப்படுகின்றன என்பது பொருள்.

बृहस्पतिः – अयने विंशतिः पूर्वा मकरे विंशतिः पराः । वर्तमाने तुलामेषे नाड्यस्तूभयतो दश इति ॥ नात्र त्रिंशद्घटिकावादिना वचनेन विरोधः शङ्कनीयः ॥ सामान्यवचनस्याभ्यनुज्ञापरत्वात् विशेषवचनोक्तो घटिकासङ्कोच एव प्रशस्तः ॥ 'या याः सन्निहिता नाड्यस्तास्ताः पुण्यतमाः स्मृताः' इति देवलस्मरणात् । केनापि निमित्तेन सन्निहितघटिकास्वनुष्ठानासम्भवे त्रिंशद्घटिकाः परमावधित्वेनाभ्यनुज्ञायन्ते । षडशीतिषु ततोऽपि दीर्घोऽवधि-

रभ्यनुज्ञायते।। भविष्योत्तरेऽपि – दशार्वाङ्नाडिकाः पुण्याः पश्चादपि विषूवति। षष्टिनाड्यो व्यतीतासु षडशीतिषु पुण्यदाः। विष्णुपद्यां प्रशस्तायां प्राक्पश्चादपि षोडश इति।।

ப்ருஹஸ்பதி:- தக்ஷிணாயனத்தில் முந்திய இருபது நாழிகைகள் புண்யங்களாம். உத்தராயணத்தில் பிந்திய இருபது நாழிகைகள் புண்யங்களாம். துலா, மேஷம் இவைகளில் இருபுறத்திலும் பத்து நாழிகைகள் புண்யங்களாம். இங்கு முப்பது நாழிகை புண்யகாலம் என்று சொல்லும் வசனத்துடன் விரோதம் வருகிறது என்று சங்கிக்கக் கூடாது. ஸாமான்ய வசனம் அப்யனுக்ஞையைச் சொல்வதால், விசேஷ வசனத்தால் சொல்லப்பட்ட நாழிகையின் ஸங்கோசமே ப்ரசஸ்தமாகும். 'எந்தெந்த நாழிகைகள் ஸங்க்ரமணத்திற்குச் சமீபமாயிருக்கின்றனவோ அவையவை அதிக புண்யங்களாம்' என்று தேவலர் சொல்லியிருப்பதால். எக்காரணத்தாலாவது ஸங்க்ரமணத்திற்கு ஸமீபத்திலுள்ள நாழிகைகளின் அனுஷ்டானம் ஸம்பவிக்காவிடில் முப்பது நாழிகள் பரமாவதியாய் ஒப்புக் கொள்ளப்படுகின்றன. ஷடசீதிகளில் அதைவிட தீர்க்கமான அளவு ஒப்புக் கொள்ளப்படுகிறது. **பவிஷ்யோத்தரத்திலும்:-** விஷுவத்தில் முந்திப் பத்து நாழிகைகளும் பிந்திப் பத்து நாழிகைகளும் புண்யகாலங்களாம். ஷடசீதிகளுக்குப் பிறகு அறுபது நாழிகைகள் புண்யங்களாம். சிறந்ததான விஷ்ணுபதியில் முந்தியும், பிந்தியும், பதினாறு நாழிகைகள் புண்யங்களாம்.

सङ्क्रान्तीनां पूर्वोत्तरौ पुण्यकालौ निर्णीतौ। ताश्च सङ्क्रान्तयः कदाचिदह्नि भवन्ति, कदाचिद्रात्रौ। तद्भेदानानुष्ठानभेदमाह– वृद्ध वसिष्ठः – अह्नि सङ्क्रमणे पुण्य महः कृत्स्नं प्रकीर्तितम्। रात्रौ सङ्क्रमणे भानोर्दिनार्द्धं स्नानदानयोः।। अर्धरात्रादधस्तस्मिन् मध्याह्नस्योपरि क्रिया। ऊर्ध्वं सङ्क्रमणे चोर्ध्वमुदयात् प्रहरद्वयम्।। पूर्णे चेदर्द्धरात्रे तु यदा सङ्क्रमते रविः। प्राहुर्दिनद्वयं पुण्यं मुक्त्वा मकरकर्कटौ इति।

ஸங்க்ராந்திகளுக்கு முந்தியுள்ளதும், பிந்தியுள்ளதுமான புண்யகாலங்கள் நிச்சயிக்கப்பட்டன. அந்த ஸங்க்ராந்திகள் சில ஸமயத்தில் பகலில் ஸம்பவிக்கின்றன. சில ஸமயத்தில் இரவில் ஸம்பவிக்கின்றன. அந்தப் பேதத்தால் அனுஷ்டான பேதத்தைச் சொல்லுகிறார் **வ்ருத்த வஸிஷ்டர்:-** பகலில் ஸௌர்ய ஸங்க்ரமணமானால் பகல் முழுவதும் புண்யம். ராத்ரியில் ஸௌர்ய ஸங்க்ரமண மானால், பகலின் பாதி புண்யம், ஸ்நானதானங்களின் விஷயத்தில். அந்த ஸங்க்ரமணம் அர்த்த ராத்ரத்திற்குக் கீழ் இருந்தால் பகலின் மத்யாஹ்னத்திற்கு மேல் ஸ்நானதானாதிகளின் அனுஷ்டானம். அர்த்த ராத்ரத்திற்கு மேலானால், உதயத்திற்குப் பிறகு இரண்டு யாமங்கள் புண்யங்களாகும். பூர்ணமான அர்த்த ராத்ரத்திலானால் இரண்டு தினங்களும் புண்யம் என்கிறார்கள், மகர கர்க்கட ஸங்க்ர மணங்களைத் தவிர்த்து.

अह्नि यदा सङ्क्रान्तिः भवति, तदा कृत्स्नमहः पुण्यमिति वदताऽर्थाद्रात्रौ स्नानादिकं प्रतिषिध्यते । एवं सत्युदयोत्तरकाल-भाविनि दक्षिणायने पूर्वभागप्राशस्त्यं बाधित्वोत्तरभागे अनुष्ठानं भवति। अस्तमयप्राचीनक्षणभाविन्युत्तरायणे च उत्तरभागप्राशस्त्यं परित्यज्य पूर्वभागेऽनुष्ठातव्यम् । पूर्वोत्तरभागप्राशस्त्यवचनं तु मध्याह्नादि-सङ्क्रमणविषयम् । तत्राहन्येव हेयोपादेयभागद्वय-सम्भवात् ।

பகலில் எப்பொழுது ஸங்க்ராந்தி வருகிறதோ, அப்பொழுது பகல் முழுவதும் புண்யம் என்று சொல்லும் வசனத்தால், அர்த்தத்தால் ராத்ரியில் ஸ்நானம் முதலியது ப்ரதிஷேதிக்கப்படுகின்றது. இவ்விதம் இருப்பதால், உதயோத்தர காலத்தில் ஸம்பவிக்கும் தக்ஷிணாயனத்தில் பூர்வபாகத்தின் ப்ரசஸ்தியைப் பாதித்து உத்தர பாகத்தில் அனுஷ்டானம் ஏற்படுகிறது. அஸ்தமயத்திற்கு முன்னுள்ள க்ஷணத்தில் ஸம்பவிக்கும் உத்தராயணத்திலும் உத்தர பாகத்தின் ப்ரசஸ்தியை விட்டுப் பூர்வகாலத்தில்

அனுஷ்டானம் செய்ய வேண்டும். பூர்வோத்தர பாகங்களுக்கு ப்ராசஸ்த்யம் சொல்லும் வசனமோவெனில் மத்யாஹ்ன ஸந்தி காலங்களிலுள்ள ஸங்க்ரமண விஷயம். அந்தப் பகலிலேயே தான் விடக்கூடியதும் க்ரஹிக்கக் கூடியதுமான இரண்டு பாகங்கள் ஸம்பவிக்கும்.

स्मर्यते च – अहस्सङ्क्रमणे रात्रावनुष्ठाननिषेधतः । उक्तकालौ व्यवस्थाप्यौ तद्वयात् पूर्वपश्चिमौ इति ।। मकर न्यायेनैव अस्तमयप्राचीनभाविषु षडशीतिमुखेष्वपि पूर्वभागप्राशस्त्यं द्रष्टव्यम् । उभयभागप्राशस्त्योपेतेषु विषुवविष्णुपदेषु मध्याह्नभाविषु पूर्वत्रोत्तरत्र वा स्वेच्छयाऽनुष्ठातव्यम् । उदयानन्तरभाविषु तेषु पूर्वभागप्राशस्त्यबाधः अस्तमयप्राचीनेषु तेषु उत्तरभाग प्राशस्त्य बाध इति विवेकः ।। यदा रात्रौ सङ्क्रमणं भवति तदा रात्रेः पूर्वस्य दिनस्य उत्तरस्य वाऽर्धं प्रहरद्वयं स्नानादौ पुण्यम् ।

ஸ்ம்ருதியுமுள்ளது - 'பகலில் ஸங்க்ரமணமாஞல், ராத்ரியில் ஸ்நானதான அனுஷ்டானம் நிஷேதிக்கப் படுகிறதால், அந்த ஸங்க்ரமணங்களுக்குச் சொல்லப்பட்ட புண்யகாலங்களே, இரண்டு ஸங்கரமணங்களுக்கும் முந்தியதும் பிந்தியதுமாய் வ்யவஸ்தை செய்து கொள்ள வேண்டும்' என்று. மகர ஸங்க்ரமணத்தின் ந்யாயத்திஞலேயே, அஸ்தமயத்திற்கு முன் ஸம்பவிக்கும் ஷடசீதிகளிலும் பூர்வபாகத்திற்கு ப்ராசஸ்த்யம் அறியத்தக்கது. இரு பாகங்களிலும் ப்ராசஸ்த்யத்துடன் கூடிய விஷுவ விஷ்ணுபதங்கள் மத்யாஹ்னத்தில் ஸம்பவித்தால், முந்தியாவது பிந்தியாவது இஷ்டப்படி அனுஷ்டிக்கலாம். உதயத்திற்குப் பிறகு ஸம்பவிக்கும் விஷுவ விஷ்ணு பதங்களில் பூர்வபாகத்திற்கு ப்ராசஸ்த்யம் பாதிக்கப்படுகிறது. அஸ்தமயத்திற்கு முன் ஸம்பவிக்கும் அவைகளில் உத்தர பாகத்திற்கு ப்ராசஸ்த்யம் பாதிக்கப்படுகின்றது என்பது விளக்கம். எப்பொழுது ராத்ரியில் ஸங்க்ரமணம் ஸம்பவிக்கின்றதோ

அப்பொழுது ராத்ரியின் முன் பகலில், அல்லது மறுபகலின் பாதியாகிய இரண்டு யாமம் ஸ்நாநதிகளில் புண்யமாகும்.

कुत्र पूर्वदिनं कुत्रोत्तरदिनमिति विवक्षायां तदुभयं अर्द्धरात्रादित्यनेन वचनेन व्यवस्थाप्यते । द्वितीयप्रहरस्य चरमघटिका, तृतीयप्रहरस्य प्रथमघटिकेत्येतद्घटिकाद्वयात्मकः कालोऽर्धरात्रः । तस्मादर्धरात्रादधः सङ्क्रमणे सति पूर्वदिने मध्याह्नस्योपरि प्रहरद्वये क्रिया कार्या । अर्धरात्रादूर्ध्वं सङ्क्रमणे सत्युत्तरकालीनादुदयादूर्ध्वं प्रहरद्वयं पुण्यम् । 'पूर्णे चेदर्धरात्र' इति, यथोक्तघटिकाद्वये सङ्क्रान्तौ पूर्वोत्तरदिनद्वयं कृत्स्नं पुण्यम् ।। तदुक्तं भविष्योत्तरे– 'सङ्क्रमस्तु निशीथे स्यात् षड्यामाः पूर्वपश्चिमाः । सङ्क्रान्तिकालो विज्ञेयः तत्र स्नानादिकं चरेत्' इति ।।

எதில் பூர்வதினம், எதில் உத்தரதினம் என்ற விவக்ஷையில், அவ்விரண்டும் 'அர்த்தராத்ராத்' என்கிற இந்த வசனத்திஞல் வ்யவஸ்தை செய்யப்படுகிறது. இரண்டாவது யாமத்தின் கடைசி நாழிகை, மூன்ருவது யாமத்தின் முதல் நாழிகை என்ற இவ்விரண்டு நாழிகைகளைக் கொண்ட காலம் அர்த்த ராத்ரம் எனப்படும். அந்த அர்த்த ராத்ரத்திற்குக் கீழ் ஸங்க்ரமணமாகில் முன் பகலில் மத்யாஹ்னத்திற்கு மேல் இரண்டு யாமங்களில் கர்மத்தைச் செய்ய வேண்டும். அர்த்த ராத்ரத்திற்கு மேல் ஸங்க்ரமணமாகில் மறுநாள் உதயத்திற்கு மேல் இரண்டு யாமங்கள் புண்யங்கள். 'பூர்ணே சேதர்த்த ராத்ரே' என்பதின் பொருள் - முன் சொல்லிய இரண்டு நாழிகைகளில் ஸங்க்ரமணமாஞல் முன் பின் உள்ள இரண்டு பகலும் முழுவதும் புண்யமாகும். அது சொல்லப்பட்டுள்ளது. பவிஷ்யோத்தரத்தில்:- நிசீதத்தில் (இரவின் 15, 16 - ஆவது நாழிகைகளில்) ஸங்க்ரமணமாஞல் முன்னும் பின்னும் உள்ள ஆறு யாமங்கள் ஸங்க்ராந்தி புண்யகாலமாம். அதில் ஸ்நானம் முதலியதைச் செய்ய வேண்டும்.

अत्रेयं व्यवस्था— अर्धरात्रे यदा षडशीतिः स्यात्, तदेतद्वचनानुसारेण पूर्वोत्तरदिनद्वयस्य पुण्यत्वात् यद्यप्यौत्सर्गिको विकल्पः प्राप्नोति, तथाऽप्युत्तरदिने षष्टिघटिकाप्राशस्त्यप्रतिपादक प्रातिस्विकवचनानुग्रहबलात् तत्रैवानुष्ठातव्यम्। विषुवयोर्विष्णुपदेषु च प्रातिस्विकवचनस्य पूर्वोत्तरभागयोः साम्येन प्राशस्त्यप्रतिपाद-कत्वात् पूर्वस्मिन्नुत्तरस्मिन् वा स्वेच्छयाऽनुष्ठानमिति विकल्प्यते।

இங்கு இது நிர்ணயம்:- அர்த்த ராத்ரத்தில் எப்பொழுது ஷடசீதி ஏற்படுகிறதோ, அப்பொழுது இந்த வசனத்தின் படி முன்பின் உள்ள இரண்டு பகல்களும் புண்யமானதால் ஸாமான்யமான விகல்பம் வருகிறதுதான், ஆனலும் பின் தினத்தில் அறுபது நாழிகைகளுக்கு ப்ராசஸ்த்யம் சொல்லும் வசனத்தின் அனுக்ரஹ பலத்தால் மறுநாளிலேயே அனுஷ்டிக்க வேண்டும். விஷுவங்களிலும், விஷ்ணு பதங்களிலும் ஸாமான்ய வசனமானது பூர்வோத்தர பாகங்களுக்கு ஸமமாய் ப்ராசஸ்த்யம் சொல்லுவதால், முன் பகலிலோ, பின் பகலிலோ இஷ்டப்படி அனுஷ்டானம் செய்யலாம் என்று விகல்பிக்கப்படுகிறது.

अयनयोस्तु प्रकारान्तरं वक्ष्यते ॥ अयनव्यतिरिक्तासु दशसु सङ्क्रान्तिषु मध्यरात्रादूर्ध्वं प्रवृत्तासु परेद्युरनुष्ठानमित्यत्र न कोऽपि संशयः। अर्धरात्रात् पूर्वं प्रवृत्तासु तासु दशसु मध्ये षडशीति-व्यतिरिक्तानां षण्णां पूर्वदिनेऽनुष्ठानमित्यत्रापि नास्ति सन्देहः। षडशीत्यां तु सामान्यवचनेन पूर्वेद्युरनुष्ठानं प्राप्तं षष्टिघटिकाप्राशस्त्य-प्रतिपादक प्रातिस्विकवचनेन परेद्युः प्राप्नोति। अत्र पूर्वेद्युरनुष्ठानमिति निर्णयः॥

அயனங்களைத் தவிர்த்த மற்ற பத்து ஸங்க்ராந்திகள் மத்யராத்ரத்திற்குப் பிறகு ப்ரவர்த்தித்தால் மறுநாள் அனுஷ்டானம் என்ற இந்த விஷயத்தில் எந்த

ஸம்சயமுமில்லை. அர்த்த ராத்ரத்திற்கு முன் ப்ரவர்த்தித்துள்ள அந்தப்பத்து ஸங்க்ராந்திகளுள் ஷடசீதி தவிற ஆறு ஸங்க்ரமணங்களுக்கும் முன்பகலில் அனுஷ்டானம் என்ற இந்த விஷயத்திலும் ஸந்தேஹ மில்லை. ஷடசீதியிலோ எனில் ஸாமான்ய வசனத்தால் ப்ராப்தமான, முதல்நாளில் அனுஷ்டானமானது, அறுபது நாழிகைகளுக்கு ப்ராசஸ்த்யம் சொல்லும் விசேஷ வசனத்தால் மறுநாளில் ப்ராப்தமாகிறது. இதில் முதல் நாளில் அனுஷ்டானம் என்பது ஸித்தாந்தம்.

विष्णुपद्यां धनुर्मीनयुग्मकन्यासु वै यदा । पूर्वोत्तरगतं रात्रौ भानोः सङ्क्रमणं भवेत् । पूर्वाह्णे पञ्च नाड्यस्तु पुण्याः प्रोक्ता मनीषिभिः । अपराह्णे तु पञ्चैव श्रौते स्मार्ते च कर्मणि' इति स्मृतेः ॥ धनुर्मीन युग्मकन्यासु - षडशीतिषु ॥ युग्मं - मिथुनम् ॥ यदा रात्रौ पूर्वभागगतं विष्णुपदीषडशीति सङ्क्रमणम्, तदा पूर्वेद्युरपराह्णे पञ्चनाड्यः पुण्याः । उत्तरभागगते सङ्क्रमणे परेद्युः पूर्वाह्णे पञ्चनाड्यः पुण्याः । न चैवं सति प्रहरद्वयपुण्यत्वविरोध इति वाच्यम् । पञ्चनाडिकावचने पुण्यातिशयस्य वाच्यत्वात् । प्रहरद्वयवाक्यं तु पुण्यमात्राभिप्रायमिति ॥

(ஏனெனில்) 'விஷ்ணுபதியிலும், தனுஸ், மீனம், மிதுனம், கன்யா இவைகளிலும் (ஷடசீதிகளிலும்) ஸூர்ய ஸங்க்ரமணமானது இரவின் முன்பாகத்திலோ பின்பாகத்திலோ ஸம்பவித்தால் முதல் நாள் பகலில் ஐந்து நாழிகைகளும், மறுநாள் பகலில் ஐந்து நாழிகைகளும் ச்ரௌதஸ்மார்த்த கர்மங்களில் புண்யங்கள் எனச் சொல்லப்பட்டுள்ளன' என்று ஸ்ம்ருதி இருப்பதால், எப்பொழுது இரவில் முன்பாகத்தில் விஷ்ணு பதீ ஷடசீதி ஸங்க்ரமணங்கள் வருகின்றனவோ அப்பொழுது முதல் பகலில் அபராஹ்ணத்தில் ஐந்து நாழிகைகள் புண்யங்கள். அந்த ஸங்க்ரமணங்கள் ராத்ரியின் பின் பாகத்தில் ஸம்பவித்தால் மறுநாள் முன் பகலில் ஐந்து நாழிகைகள்

புண்யங்களாம். இவ்விதமாயின், இரண்டு யாமங்கள் புண்யங்கள் என்றதற்கு விரோதம் வரக்கூடுமே என்று சங்கிக்க வேண்டாம். ஐந்து நாழிகை புண்யமென்ற வசனத்திற்குப் புண்யாதிக்யம் சொல்வதில் தாத்பர்யம், இரண்டு யாமம் புண்யமென்ற வசனம் புண்யம் என்றதில் மட்டில் அபிப்ராயமுள்ளது.

देवीपुराणे - अर्धरात्रे त्वसंपूर्णे दिवा पुण्यमनागतम्। संपूर्ण उभयोर्ज्ञेयं अतिरिक्ते परेऽहनीति। देवलोऽपि—आसन्नसङ्क्रमं पुण्यं दिनार्धं स्नानदानयोः। रात्रौ सङ्क्रमणे भानोः विषुवत्ययने दिने इति॥ रात्रौ भानोः सङ्क्रमणे विषुवन्नामके जाते सति सङ्क्रमणप्रत्यासन्नदिनार्धं पुण्यम्। अयननामकसङ्क्रमणे दिवा जाते सति यथायोगं कर्कटके पूर्वदिनार्धं मकरे तूत्तरार्धं पुण्यम्। एतच्च मध्यन्दिनायनविषयम्। उदयास्तमय-प्रत्यासन्ने त्वयने कृत्स्नदिवसपुण्यत्वनिर्णयः पूर्वमेवोक्तः॥

தேவீபுராணத்தில்:- அர்த்த ராத்ரத்திற்கு முன் ஸங்க்ரமணமானால் முதல் நாள் பகல் புண்யம். அர்த்த ராத்ரத்திலானால் இரண்டு நாளிலும் புண்யம். அர்த்த ராத்ரத்திற்குப் பிறகானால் மறுநாளில் புண்யம். **தேவலரும்:-** 'ஆஸன்ன + திநே' என்பது மூலம். இதன் பொருள் - ''ராத்ரியில் விஷுவம் என்கிற ஸூர்ய ஸங்க்ரமணமானால் ஸங்க்ரமணத்திற்குச் சமீபத்திலுள்ள பகலில் பாதி புண்யம். அயனம் என்கிற ஸங்க்ரமணம் பகலிலானால் கடகத்தில் பகலின் முன்பாதியும், மகரத்தில் பின்பாதியும் புண்யம்'' என்பது. இந்த வசனம் நடுப்பகலில் ஸம்பவிக்கும் அயனத்தைப் பற்றியது. உதயத்திற்கும் அஸ்தமயத்திற்கும் ஸமீபத்தில் ஸம்பவிக்கும் அயனத்தில், தினம் முழுவதும் புண்யம் என்கிற நிர்ணயம் முன்பே சொல்லப்பட்டுள்ளது.

अयनव्यतिरिक्तेषु दशसु सङ्क्रमणेषु रात्रिभागेषु यो निर्णयः, तं सर्वं पर्युदस्यति वृद्धवसिष्ठः – 'मुक्त्वा मकरकर्कटाविति॥ या याः

सन्निहिता नाड्यः तास्ताः पुण्यतमाः स्मृताः इति सामान्यवचनेन सर्वेषु रात्रिसङ्क्रमणेषु रात्रावेवानुष्ठानं प्रसक्तम् । तदपोह्य दशसङ्क्रान्तिषु दिवाऽनुष्ठानं विधाय मकरकर्कटयोस्तत्पर्युदासे सति पूर्वप्रसक्तं रात्र्यनुष्ठानमेव पर्यवस्यति । एवं सति रात्रौ सङ्क्रान्तिस्नानमभ्युपगच्छतो मनुवचनस्यापि कश्चिद्विषयविशेषः सम्पद्यते ।। तथा च मनुः—राहुदर्शनसङ्क्रान्तिविवाहात्ययवृद्धिषु । स्नानदानादिकं कार्यं निशि काम्यव्रतेषु इति । सुमन्तुरपि रात्रौ स्नानं न कुर्वीत दानं चैव विशेषतः । नैमित्तिकं तु कुर्वीत स्नानं दानं च रात्रिषु । यज्ञे विवाहे यात्रायां तथा पुस्तकवाचने । श्रवणे चेतिहासस्य रात्रौ दानं प्रशस्यते इति ।।

அயனங்களைத் தவிர்த்த பத்து ஸங்கரமணங்களில் ராத்ரி பாகங்களில் எந்த நிர்ணயம் சொல்லப்பட்டதோ அது முழுவதையும் தள்ளுகிறார் வ்ருத்த வஸிஷ்டர் 'முக்த்வா மகர கர்க்கடௌ' என்பதால். 'எந்தெந்த நாழிகைகள் ஸமீபத்திலுள்ளவையோ அவை புண்யதமங்கள்' என்ற ஸாமான்ய வசனத்திலும், ராத்ரியில் ஸம்பவிக்கும் எல்லா ஸங்க்ரமணங்களிலும் ராத்ரியிலேயே ஸ்நானாதி அனுஷ்டானம் ப்ரஸக்தமாகிறது. அதை அபவதித்தது, பத்து ஸங்க்ரமணங்களில் பகலில் அனுஷ்டானத்தை விதித்து, மகர கர்க்கடங்களில் அதைப் பர்யுதாஸம் செய்திருக்கும் பொழுது முன் ப்ரஸக்தமான ராத்ர்யனுஷ்டானமே நிச்சிதமாகிறது. இவ்விதம் இருக்கையில், ராத்ரியில் ஸங்க்ராந்தி ஸ்நானத்தை ஒப்புக்கொள்ளும் மனுவசனத்திற்கும் ஒரு விஷயவிசேஷம் உபபன்னமாகிறது. மனு:- ராஹு-தர்சனம், ஸங்க்ரமணம், விவாஹம், மரணம், ஜனனம், காம்யவ்ரதங்கள் இவைகளில், ராத்ரியிலும் ஸ்நானதானம் முதலியதைச் செய்யலாம்.

ननु यथोक्तपर्युदासानुगृहीतैर्मन्वादि वचनैः मकरकर्कटयोः निश्यनुष्ठानप्रापणं शास्त्रान्तरविरुद्धम् ।। तथा भविष्योत्तरे–मिथुनात्

कर्किसङ्क्रान्तिर्यदा स्यादं शुमालिनः । प्रभाते वा निशीथे वा कुर्यादहनि पूर्वतः ।। कार्मुकं तु परित्यज्य मकरं क्रमते रविः । प्रदोषे वाऽर्धरात्रे वा स्नानं दानं परेऽहनि इति ।।

ஸுமந்துவும்:- *ராத்ரியில் ஸ்நானம் தானம் இவைகளைச் செய்யக் கூடாது. நைமித்திகமானால், ஸ்நானம் தானம் இவைகளை ராத்ரியில் செய்யலாம். யாகம், விவாஹம், யாத்ரை, புஸ்தகம் படித்தல், இதிஹாஸ ச்ரவணம் இவைகளில் ராத்ரியிலும் தானம் புகழப்படுகிறது. ஓய்! சொல்லியபடி பர்யுதாஸத்தால் அனுக்ரஹிக்கப்பட்ட மன்வாதி வசனங்களால், மகர கர்க்கடங்களில் ராத்ரியில் அனுஷ்டானத்தை விதிப்பது மற்ற சாஸ்த்ரங்களுக்கு விருத்தமாயுள்ளது. அவ்விதமே,* **பவிஷ்யோத்தரத்தில்:-** *மிதுனத்திலிருந்து கடகத்தில் ஸூர்யனின் ஸங்க்ரமணம் விடியற் காலையிலானாலும் அர்த்த ராத்ரத்திலானாலும் ஸ்நான தானங்களை மறுநாளில் அனுஷ்டிக்க வேண்டும்.*

वृद्धगार्ग्योऽपि—यदाऽस्तमयवेलायां मकरं याति भास्करः । प्रदोषे वाऽर्द्धरात्रे वा स्नानं दानं परेऽहनि ।। अर्धरात्रे तदूर्ध्वं वा सङ्क्रान्तौ दक्षिणायने । पूर्वमेव दिनं ग्राह्यं यावन्नोदयते रविः ।। प्रत्यूषे कर्कटं भानुः प्रदोषे मकरं यदि । सङ्क्रमेत् षष्टिनाड्यस्तु पुण्याः पूर्वोत्तराः स्मृताः इति । मैवम् – एतेषु वचनेषु रात्र्यनुष्ठान प्रतिषेधस्याप्रतीतेः। दिवसानुष्ठानविधाने नैवार्थाद्रात्र्यनुष्ठान-प्रतिषेधकल्पने पर्युदासानुगृहीतरात्रिस्नानविधायकवचनानामानर्थक्यं प्राप्नोति । तस्माच्छास्त्रद्वयेन विकल्पप्राप्तौ तत्तद्देशप्रसिद्धशिष्टाचारेण व्यवस्थेति कालनिर्णये निर्णीतम् ।।

வ்ருத்தகார்க்யரும்:- *ஸூர்யன் அஸ்தமய வேளையிலோ, ப்ரதோஷத்திலோ, அர்த்த ராத்ரத்திலோ மகரத்தில் சென்றால், ஸ்நான தானங்களை மறுநாளில் செய்ய*

வேண்டும். அர்த்த ராத்ரத்திலோ, அதற்குப் பிறகோ, உதயமாவதற்குள் தக்ஷியணாயன ஸங்க்ரமணமானால் முதல் தினமே புண்யகாலமாக க்ரஹிக்கத்தக்கது. ஸூர்யன், உஷ:காலத்தில் கடகத்திலும், ப்ரதோஷ காலத்தில் மகரத்திலும் ஸங்க்ரமித்தால், முறையே முந்தியதும், பிந்தியதுமான அறுபது நாழிகைகள் புண்யங்களாகும். என்ற வசனங்கள் இருக்கின்றனவே எனில், இவ்விதம் சொல்லக் கூடாது. சொல்லிய இந்த வசனங்களில் ராத்ரியில் அனுஷ்டிப்பதின் ப்ரதிஷேதம் தோன்றுததால். பகலில் அனுஷ்டானத்தை விதித்திருப்பதாலேயே, ராத்ரியில் அனுஷ்டான ப்ரதிஷேதத்தைக் கல்ப்பிக்கலாம் எனில், பர்யுதாஸத்தால் அனுக்ரஹிக்கப்பட்ட ராத்ரி ஸ்நான விதாயக வசனங்களுக்கு ப்ரயோஜனமின்மை ப்ராப்தமாகின்றது. ஆகையால் இரண்டு சாஸ்த்ரங்களால் விகல்பம் ப்ராப்தமாகும் பொழுது, அந்தந்த தேசத்தில் ப்ரஸித்தரான சிஷ்டரின் ஆசாரத்தினால் வ்யவஸ்தை சொல்லப்பட வேண்டும் என்று கால நிர்ணயத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

केचित्तु–रात्रौ सङ्क्रमणे पुण्यं दिनार्धं स्नानदानयोः । पूर्णे चेदर्धरात्रे तु यदा सङ्क्रमते रविः । प्राहुर्दिनद्वयं पुण्यमित्येवं मकरकर्कटयोरपि प्रसक्तौ मुक्त्वा मकरकर्कटाविति पर्युदासात् रात्रौ मकरकर्कटसङ्क्रान्तौ 'स्नानं दानं परेऽहनि' 'पूर्वमेव दिनं ग्राह्य' मिति तयोर्विशिष्य निश्चितत्वात् रात्रौ स्नानादिकं न कार्यम्। 'रात्रौ सङ्क्रमणं पुण्यम्' 'राहुदर्शनसङ्क्रान्ति' इत्यादीनि रात्रिस्नानविधायीनि वचनानि मकरकर्कटान्यसङ्क्रमविषयाणि । अतस्तयोः पूर्वापरदिन एव स्नानम् । तदितरसङ्क्रमेषु तु 'रात्रौ सङ्क्रमणे पुण्यं दिनार्धं स्नानदानयो' रिति विधानाद्विकल्प इति कालादर्शानुसारिण आहुः ॥

சிலரோவெனில்:- 'ராத்ரௌ ஸங்க்ரமணே + தினத்வயம் புண்யம்' என்றிவ்விதம் மகர கர்க்கடங்களுக்கும் ப்ரஸக்தி வரும்பொழுது 'முக்த்வா மகர

கர்க்கடெள' என்ற பர்யுதாஸத்தால், ராத்ரியில் மகர கர்க்கட ஸங்க்ரமணமாஞல், 'ஸ்நானமும், தானமும் மறுநாளில், முதல் நாள் ஏற்கலாம். என்று அவைகளுக்கு விசேஷமாக நிச்சயம் செய்திருப்பதால், ராத்ரியில் ஸ்நானம் முதலியது செய்யத்தகாதது, 'ராத்ரௌ ஸங்க்ரமணம் புண்யம், ராஹு-தர்சன ஸங்க்ராந்தி' என்பது முதலான, ராத்ரி ஸ்நானத்தை விதிக்கிற வசனங்கள், மகர கடகங்கள் தவிர மற்ற ஸங்க்ரமண விஷயங்கள். ஆகையால் அவைகளுக்கு முன் பின் தினங்களிலேயே ஸ்நானம், மற்ற ஸங்க்ரமணங்களிலாஞல் 'ராத்ரௌ ஸங்க்ரமணே + ஸ்நானதானயோ:' என்ற விதியால் விகல்ப்பம் என்று காலாதர்சத்தை அனுஸரிப்பவர்கள் சொல்லுகின்றனர்.

उक्तस्य स्नानदानादेः उक्तेष्वपि कालेषु विशेषमाह शातातपः– 'कुर्यात् सदाऽयने मध्ये विष्णुपद्यां विषूवति। षडशीत्यामन्त्यभागे स्नानादिविधिमाहृतः' इति॥ अयनादिषु यत्र यावान् पुण्यकाल उक्तः, तावन्तं कालं त्रेधा विभज्य मध्ये विष्णुपद्या' मित्याद्यवगन्तव्यम्। अयने सदा - यावान् पुण्यकाल उक्तः तस्मिन् सर्वत्र कुर्यादित्यर्थः॥ तस्मिन्नपि मध्यादिभागे याः सन्निहिता नाड्यः, तासां पूर्वोदाहृतवचनेन पुण्यतमत्वं द्रष्टव्यम्॥

சொல்லப்பட்ட ஸ்நான தானம் முதலியதற்குச் சொல்லப்பட்டுள்ள காலங்களிலும் விசேஷத்தைச் சொல்லுகிறார். சாதாதபர்:- அயனங்களில், புண்யகாலத்தில் எப்பொழுதும் ஸ்நானதிகளைச் செய்யலாம். விஷ்ணுபதீ, விஷுவம், இவைகளில் நடுவில் செய்ய வேண்டும். ஷடசீதியில் கடைசிப் பாகத்தில் செய்ய வேண்டும். அயனம் முதலியவைகளில் எவ்வளவு காலம் புண்யமாய்ச் சொல்லப்பட்டுள்ளதோ அவ்வளவு காலத்தை மூன்று பாகமாகப் பிரித்து, நடுப்பாகத்தில் விஷ்ணு பதியில் என்பது முதலியதை அறியவும். அயனத்தில் எவ்வளவு புண்ய காலம் சொல்லப்பட்டுள்ளதோ அதில்

முழுவதிலும் செய்யலாம். அதிலும் மத்யாதி பாகங்களில் ஸங்க்ரமணத்திற்குச் சமீபத்திலுள்ள நாழிகைகளுக்கு முன் சொல்லிய வசனத்தால் புண்யமதிகமென அறியத்தக்கது.

गालवस्तु–मध्ये विषुवति दानं विष्णुपदे दक्षिणायने चादौ। षडशीतिमुखेऽतीते तथोदगयने च भूरिफलम् इति । सङ्क्रान्तिषु फलमाह वृद्धवसिष्ठः – अयने कोटिपुण्यं च सहस्रं विषुवे फलम्। षडशीत्यां सहस्रं तु फलं विष्णुपदेऽपि च इति ॥

காலவரோவெனில்:- விஷுவத்தில் மத்ய பாகத்தில் தானம். விஷ்ணு பதத்திலும், தக்ஷிணாயனத்திலும் ஆதியில் தானம். ஷடசீதியிலும் உத்தராயணத்திலும் கடைசியில் தானம். இது அதிக பலனையளிப்பதாகும். ஸங்க்ரமணங்களில் பலத்தைச் சொல்லுகிறார். **வ்ருத்தவஸிஷ்டர்:-** அயனத்தில் கோடி புண்யம், விஷுவத்தில் ஆயிரம் மடங்கு பலம், ஷடசீதியிலும், விஷ்ணு பதத்திலும் ஆயிரம் மடங்கு பலனும்.

रजस्वलास्नानम्

रजस्वलास्नानमाहाङ्गिराः—स्नानं रजस्वलायास्तु चतुर्थेऽहनि निर्दिशेत्। कुर्याद्रजसि निर्वृत्ते शौचार्थं तु ततः पुनः इति ॥ योगयाज्ञवल्क्यः–हस्तेऽश्नीयान्मृन्मये वा हविर्भुक्षितिशायिनी। रजस्वला चतुर्थेऽह्नि स्नात्वा शुद्धिमवाप्नुयात् इति ॥ पद्मतौ–त्रिरात्रं च व्रतं कृत्वा श्रुतिस्मृतिसमीरितम्। चतुर्थे सङ्गवे स्नात्वा स्त्रीधर्मं तु समाचरेत् इति ॥ सङ्गहे – मृते च सूतके चान्ते सङ्गवे स्नानमाचरेत्। सङ्गवात् परतः स्नानमार्तवे तु विशिष्यते इति ॥ कात्यायनः – रजस्वला चतुर्थेऽह्नि स्नात्वा शुद्धिमवाप्नुयात् इति ॥ मनुरपि – रजस्युपरते साध्वी स्नानेन स्त्री रजस्वला इति ॥ रजोनिवृत्त्यनन्तरं पुनः स्नानेन साध्वी - दैवादि कर्मार्हा स्यादित्यर्थः ॥

ரஜஸ்வலா ஸ்நானம்

ரஜஸ்வலா ஸ்நானத்தைச் சொல்லுகிறார், **அங்கிரஸ்:-** ரஜஸ்வலைக்கு ஸ்நானம் நான்காவது நாளில் விதிக்கப்படுகிறது. ரஜஸ் நின்ற பிறகு சுத்திக்காக மறுபடியும் ஸ்நானம் செய்ய வேண்டும். **யோகயாக்ஞவல்க்யர்:-** ரஜஸ்வலை, கையிலாவது மட்பாத்ரத்திலாவது புஜிக்க வேண்டும். அவள் ஹவிஸ்ஸை (உப்பு உறைப்பு இல்லாமல்) புஜிப்பவளாயும், பூமியில் படுப்பவளாயும் இருக்க வேண்டும். நான்காவது நாளில் ஸ்நானம் செய்தால் சுத்தியை அடைவாள். **பத்ததியில்:-** ரஜஸ்வலையானவள், மூன்று நாள், ச்ருதியிலும், ஸ்ம்ருதியிலும் சொல்லப்பட்ட வ்ரதத்தை அனுஷ்டித்து, நான்காவது தினத்தில் ஸங்கவகாலத்தில் (ஆறு நாழிகைக்கு மேல்) ஸ்நானம் செய்து தன் தர்மத்தை அனுஷ்டிக்க வேண்டும். **ஸங்க்ரஹத்தில்:-** ம்ருதாசௌசத்திலும், ஜாதாசௌத்திலும் முடிவில் ஸங்கவ காலத்தில் ஸ்நானம் செய்ய வேண்டும். ரஜஸ்ஸிலானால், ஸங்கவத்திற்குப் பிறகு (12- நாழிகைக்குப் பிறகு) ஸ்நானம் விதிக்கப்படுகிறது. **காத்யாயனர்:-** ரஜஸ்வலை, நான்காவது நாளில் ஸ்நானம் செய்து சுத்தியை அடைகிறாள். **மனுவும்:-** பதிவ்ரதையான ரஜஸ்வலா ஸ்த்ரீ, ரஜஸ் நிவ்ருத்தியான பிறகு மறுபடி ஸ்நானத்தால் தைவாதி கர்மங்களில் அர்ஹை ஆகிறாள்.

यत्पुनरङ्गिरोवचनम्—शुद्धा भर्तुश्चतुर्थेऽह्नि स्नात्व(त)ा नारी रजस्वला । दैवे कर्मणि पित्र्ये च पञ्चमेऽहनि शुध्यति इति, तद्रजोनिवृत्तिकालोपलक्षणार्थम् ।। यतः स एवाह – साध्वाचारा न तावत् सा स्नाताऽपि स्त्री रजस्वला। यावत् प्रवर्तमानं हि रजोऽस्या न निवर्तते इति ।। साध्वाचारा - दैवादिकर्मयोग्येत्यर्थः ।। स्पर्शयोग्या तु स्नानादनन्तरं भवत्येव ।। स्नाता रजस्वला या तु चतुर्थेऽहनि शुध्यति। कुर्याद्रजोनिवृत्तौ तु दैवपित्र्यादि कर्म च इति पराशरस्मरणात् ।।

ஆனால், அங்கிரஸ்:- ''ரஜஸ்வலையான ஸ்த்ரீ, நான்காவது நாளில் ஸ்நானம் செய்தால் பர்த்தாவுக்குச் சுத்தையாகிறாள். தைவகர்மத்திலும், பித்ர்ய கர்மத்திலும், ஐந்தாவது நாளில் ஸ்நானம் செய்தால் சுத்தையாகிறாள்' என்று சொல்லியுள்ளாரே எனில், அது ரஜோ நிவ்ருத்தி காலத்தைக் குறிப்பதற்காம். ஏனெனில், அவரே சொல்லுகிறார் - ''ரஜஸ்வலையான ஸ்த்ரீ, நான்காவது நாளில் ஸ்நானம் செய்தவளாயினும், இவளின் ரஜஸ் எதுவரையில் நிற்கவில்லையோ அதுவரையில் அவள் தைவபித்ர்ய கர்மங்களுக்கு யோக்யையாக ஆவதில்லை'' என்று. ஸ்நானத்திற்குப் பிறகு ஸ்பர்சத்திற்கு மட்டும் யோக்யை ஆகிறாள். ''ரஜஸ்வலையான ஸ்த்ரீ நான்காவது நாளில் ஸ்நானம் செய்து சுத்தையாகிறாள். ரஜஸ் நிவ்ருத்தியான பிறகே தைவம் பித்ர்யம் முதலிய கர்மத்தைச் செய்யலாம்'' என்று பராசரர் சொல்லியிருப்பதால்.

रोगजन्यरजोनुवृत्तौ तु नास्त्यशुद्धिः । यदाहाङ्गिराः – रजश्चतुर्विधं ज्ञेयं रोगजं रागजं तथा । धातुजं कालजं चेति योषितां तु बुधोत्तमैः ॥ एकादशाद्द्वादशाद्वा वर्षादूर्ध्वं भवेद्रजः । पञ्चाशद्वत्सरादूर्ध्वं स्त्रीणां तत्तु निवर्तते ॥ रोगेण यद्रजः स्त्रीणा मत्यर्थं तु प्रवर्तते । अशुद्धा नैव तास्तेन यस्माद्वैकारिकं हि तत्' इति ॥ एवमकाले रागादिजनितरजोदर्शने द्रष्टव्यम् ॥ तथा चन्द्रिकायाम् – अकाले यद्भवेत् स्त्रीणां रक्तमाहुर्मनीषिणः । काले तु यद्रजः प्रोक्तं तस्मात्तत्रैव साऽशुचिः इति ।

ரோகத்தால் உண்டாகும் ரஜஸ்ஸின் அனுவ்ருத்தியாலால் அசுத்தி இல்லை. அவ்விதம் சொல்லுகிறார், அங்கிரஸ்:- ஸ்த்ரீகளுக்கு ரஜஸ் நான்கு விதம். ரோகஜம், ராகஜம், தாதுஜம், காலஜம் என்று. இவ்விதம் சிறந்த அறிவாளர் சொல்லியுள்ளனர். ஸ்த்ரீகளுக்கு, பதிலென்று, அல்லது பன்னிரண்டாவது வயதுக்கு மேல் ரஜஸ் உண்டாகும். ஐம்பது

வர்ஷத்திற்குமேல் அது நிற்கும். ஸ்த்ரீகளுக்கு ரோகத்தி னுல் எந்த ரஜஸ் அதிகமாய்ப் ப்ரவர்த்திக்கின்றதோ அதனுல் அவர்கள் அசுத்தராவதில்லை. ஏனெனில், அது விகாரத்தாலேற்பட்டதல்லவா. இவ்விதம் ராகாதிகளால் உண்டாக்கப்படும் ரஜஸ்ஸின் தர்சனத்திலும் அறிந்து கொள்ளவும். அவ்விதம், சந்த்ரிகையில்:- ''அகாலத்தில் எது உண்டாகுமோ அதை, புத்திமான்கள் ரக்தம் என்கின்றனர். காலத்தில் உண்டாவதுதான் ரஜஸ் எனப்படுகிறது. ஆகையால் அதில் தான் அவள் அசுத்தையாவாள்'' எனப்பட்டிருக்கிறது.

अङ्गिराः–आद्वादशाहान्नारीणां मूत्रवच्छौचमिष्यते । आऽष्टादशाहात् स्नानं स्यात् त्रिरात्रं परतोऽशुचिः इति। विज्ञानेश्वरः – यदा रजोदर्शनादारभ्य पुनः सप्तदशदिनाभ्यन्तरे रजोदर्शनम्, तदाऽशुचित्वं नास्त्येव । अष्टादशे त्वेकाहाच्छुद्धिः । एकोनविंशे द्व्यहात्। तत उत्तरेषु त्र्यहाच्छुद्धिः । यस्या विंशतिदिनोत्तरं प्रायशो रजोदर्शनम्, तस्या विंशतिदिनप्रभृति त्रिरात्रम् । यस्याः पुनः प्रागेवाष्टादशदिनात् प्राचुर्येण रजोनिर्गमः, तस्याः त्रिरात्रम् इति ।। तथाऽत्रिः – रजस्वलायां स्नातायां पुनरेव रजस्वला । अष्टादशदिनादर्वागशुचित्वं न विद्यते ।। ऊनविंशदिनादर्वागेकाहमशुचिर्भवेत् इति ।।

அங்கிரஸ்:- ஸ்த்ரீகளுக்குப் பன்னிரண்டு நாள் வரையில் மூத்ரத்திற் போல் சௌசம் சொல்லப் பட்டுள்ளது. 18-நாள் வரையில் ஸ்நானம் விதிக்கப்படுகிறது. பிறகு மூன்று நாள் அசுத்தையாவாள். விக்ஞாநேச்வரர்:- எப்பொழுது, ரஜோதர்சனம் முதல், மறுபடி 17- நாட்களும் ரஜோதர்சனம் உண்டாகிறதோ அப்பொழுது அசுத்தி இல்லவேயில்லை. 18- ஆவது நாளிலானுல் ஒரு நாள் அசுத்தி. 19- ஆவது நாளிலானுல் இரண்டு நாள் அசுத்தி. அதற்கு மேலுள்ள தினங்களிலானுல்

மூன்று நாள் அசுத்தி. எவளுக்கு இருபது தினங்களுக்குப் பிறகே அநேகமாய் ரஜோதர்சனமோ அவளுக்கு இருபதாவது தினம் முதல் மூன்று நாள் அசுத்தி. எவளுக்கு, 18- நாள்களுக்கு முந்தியே அநேகமாய் ரஜோநிர்கமமோ அவளுக்கு மூன்று நாள் அசுத்தி. அவ்விதமே, அத்ரி:- ரஜஸ்வலை, ஸ்நானம் செய்த பிறகு, 18- ஆவது நாளுக்குள் மறுபடி ரஜஸ்வலையானால் அவளுக்கு அசுத்தியில்லை. 19- ஆவது நாளுக்குள் ஆனால் ஒருநாள் அசுத்தையாவாள்.

स्मृत्यर्थसारे—रजस्वला चतुर्थेऽह्नि षष्टिमृत्तिकाभिः शौचं कृत्वा विधवा चेत् द्विगुणमृत्तिकाभिश्शौचं कृत्वा दन्तधावनपूर्वं सङ्गवे सचेलं स्नायात् । स्नातायाः पुनरपि रजोदृष्टावष्टादशदिनादर्वा गशुचित्वं नास्ति । अष्टादशदिने रजोदृष्टावेकरात्रमशुचिः । एकोनविंशे द्विरात्रम् । विंशे त्रिरात्रमेव । प्रायो विंशतिदिनादूर्ध्वं रजःस्राविणीनामेवम् इति।

ஸ்ம்ருத்யர்த்த ஸாரத்தில்:- ரஜஸ்வலையானவள், நான்காவது நாளில் 60 - மண்களால் சௌசம் செய்து கொண்டு, விதவையானால் இருமடங்கு மண்களால் சௌசம் செய்து கொண்டு, தந்ததாவனம் செய்து கொண்டு, ஸங்கவ காலத்தில் ஸசேல ஸ்நானம் செய்ய வேண்டும். ஸ்நானம் செய்தவளுக்கு 18 - ஆவது நாளுக்குள் மறுபடி ரஜோதர்சளமானால் அசுத்தியில்லை. 18- ஆவது நாளில் ரஜோதர்சனமானால், ஒரு நாள் அசுத்தி. 19 - ஆவது நாளிலானால் இரண்டு நாள் அசுத்தி. 20 - ஆவது நாளிலானால் மூன்று நாளும் அசுத்தி. அநேகமாய் 20- நாளுக்கு மேல் ரஜஸ் ஸ்ராவமுண்டாகும் ஸ்த்ரீகளுக்கு இவ்விதம்.

प्रसूतिकाविषये प्रजापतिः– प्रसूतिका तु या नारी स्नानतो विंशतेः परम् । आर्तवी रजसा प्रोक्ता प्राक्तु नैमित्तिकं रजः ॥ रजस्युपरते तत्र स्नानेनैव शुचिर्भवेत् इति ॥ सङ्गहे – प्रथमेऽहनि

चण्डाली द्वितीये सूतिका भवेत्। तृतीयेऽह्नि स्वधर्मस्था चतुर्थे पतितो यथा ।। सङ्गवान्ते चतुर्थेऽह्नि स्नानाच्छुद्धिमवाप्नुयात् । एकविंशतिधाऽऽलिप्य सर्वाङ्गं शुद्धया मृदा ।। कृत्वा स्नानशतं पश्चाच्छुचिर्भवति नान्यथा ।। स्नानान्ते भास्करं दृष्ट्वा पुत्रं प्रार्थ्य सुमङ्गली। त्रिवारं प्राशयेदन्नं न चेद्दोषवती भवेत् इति।

*ப்ரஸவித்தவள் விஷயத்தில், **ப்ரஜாபதி:-** ப்ரஸவித்த ஸ்த்ரீ, ஸ்நானத்திற்குப் பிறகு 20- நாளுக்குப் பிறகு, ரஜோதர்சனத்தை அடைந்தால் ரஜஸ்வலை எனப்படுவாள். அதற்கு முன் ஆனால் அது நைமித்திகமான ரஜஸ் எனப்படும். அந்த ரஜஸ் நிவ்ருத்தியானவுடன் ஸ்நானம் செய்வதாலேயே அவள் சுத்தையாய் ஆகிறாள். **ஸங்க்ரஹத்தில்:-** ரஜஸ்வலை, முதல் நாளில் சண்டாளி போலும். 2- நாளில் ஸூதிகை போலும். மூன்றாவது நாளில் தன் தர்மத்தில் இருப்பவளாம். நான்காவது நாளில் பதிதன் போலுமாம். நான்காவது நாளில், ஸங்கவகாலத்தின் முடிவில், ஸ்நானத்தால் சுத்தியை அடைவாள். சுத்தமான மண்ணால் 21- தடவை தேஹம் முழுவதும் பூசிக் கொண்டு, 100- தடவை முழுகிப்பிறகு சுத்தையாவாள். வேறுவிதமாய்ச் செய்தால் சுத்தையாவதில்லை. ஸுமங்கலியானவள், ஸ்நானம் செய்த பிறகு, ஸூர்யனைப் பார்த்துப் புத்ரனை வேண்டி, அன்னத்தை மூன்று தடவை ப்ராசிக்க வேண்டும். இல்லாவிடில் தோஷம் உள்ளவளாவாள்.*

बोधायनः – रजस्वला तु संस्पृष्ट्वा चण्डालान्त्यश्ववायसैः। तावत्तिष्ठेन्निराहारा यावत्कालेन शुध्यति इति।। भोजनकालस्पर्शे स एव – रजस्वला तु भुञ्जानाश्चान्त्यजादीन् स्पृशेद्यदि । गोमूत्रयावकाहारा षड्रात्रेण विशुध्यति । अशक्तौ काञ्चनं दद्यात् विप्रेभ्यो वाऽपि भोजनम् इति।। बृहस्पतिः – पतितान्त्यश्वपाकैश्च संस्पृष्टा चेद्रजस्वला। तान्यहानि व्यतिक्रम्य प्रायश्चित्तं समाचरेत्।।

प्रथमेऽह्नित्रिरात्रं स्यात् द्वितीये द्व्यहमेव च। अहो रात्रं तृतीयेऽह्नि चतुर्थे नक्तमाचरेत्॥ रजसा भुञ्जते नार्यः मोहात् स्पृष्टाः शवादिभिः। त्र्यहे तु पर्यपेते तु कृच्छ्रं चान्द्रायणोत्तरम् इति॥

போதாயனர்:- *ரஜஸ்வலையானவள், சண்டாளன், அந்த்யஜன், நாய், காக்கை இவைகளால் தொடப்பட்டால், அவள் காலத்தால் சுத்தையாகும் வரை ஆஹாரமில்லாமல் இருக்க வேண்டும். போஜன காலத்தில் ஸ்பர்சிக்கப்பட்டால்* **போதாயனரே:-** *ரஜஸ்வலை, புஜித்துக் கொண்டிருக்கும் போது நாய், அந்த்யஜன் முதலியவரை ஸ்பர்சித்தால், கோமூத்ரத்தில் பக்வமான யவான்னத்தை மட்டில் புஜிப்பவளாய் ஆறுநாள் வ்ரதமிருந்தால் சுத்தையாவாள். சக்தியில்லா விடில் ஸ்வர்ணத்தையாவது தானம் செய்ய வேண்டும். ப்ராம்ஹணர்களுக்குப் போஜனத்தையாவது கொடுக்க வேண்டும்.* **ப்ருஹஸ்பதி:-** *ரஜஸ்வலை, பதிதன், அந்த்யஜன், ச்வபாகன் இவர்களால் தொடப்பட்டால், அந்த நாட்கள் தாண்டிய பிறகு, ப்ராயச்சித்தம் செய்து கொள்ள வேண்டும். முதல் நாளில் ஸ்பர்சிக்கப்பட்டால் மூன்று நாள் வ்ரதமிருக்க வேண்டும். இண்டாவது நாளில் தொடப்பட்டால் இரண்டு நாள் வ்ரதம். மூன்ருவது நாளிலானல் ஒரு நாள் வ்ரதம். நான்காவது நாளிலானல் ஒரு இரவு வ்ரதம். ரஜஸ்வலைகள் சவம் முதலியதால் ஸ்பர்சிக்கப்பட்டு பிறகு அறியாமையால் போஜனம் செய்தால், மூன்று நாள் சென்ற பிறகு சாந்த்ராயணத்தை அனுஷ்டிக்க வேண்டும்.*

अखण्डादर्शे—उच्छिष्टेन तु संयुक्ता चण्डालादीन् यदि स्पृशेत्। कृच्छ्रं सान्तपनं कुर्यात् चान्द्रायणमथापि वा इति॥ विण्मूत्रोत्सर्गे भुक्त्वा वा अकृतशौचाया रजस्वलायाश्चण्डालादिस्पर्शे अकामतश्चान्द्रायणं, कामतः सान्तपनं इति व्यवस्था॥ सङ्ग्रहे – आर्तवाभिप्लुता नारी शवं स्पृष्ट्वा विमोहिता। आस्नानकालान्नाश्नीया दासीना वाग्यता बहिः इति॥

அகண்டாதர்சத்தில்:- உச்சிஷ்டையான ரஜஸ்வலை சண்டாளன் முதலியவரை ஸ்பர்சித்தால், ஸாந்தபனம் அல்லது சாந்த்ராயணத்தை அனுஷ்டிக்க வேண்டும். மலமூத்ரோத்ஸர்ஜனம் செய்த பிறகோ, போஜனம் செய்த பிறகோ சுத்தி செய்து கொள்வதற்கு முன் சண்டாளாதிகளை ஸ்பர்சித்தால், அறியாமல் செய்ததானால் சாந்த்ராயணம், அறிந்து செய்தால் ஸாந்தபனம் என்று வ்யவஸ்தை. ஸங்க்ரஹத்தில்:- ரஜஸ்வலையான ஸ்த்ரீ அக்ஞானத்தால் சவத்தை ஸ்பர்சித்தால் ஸ்நான காலம் வரையில் வெளியில் மௌனமாய் உட்கார்ந்திருந்து உபவாஸத்துடன் இருக்க வேண்டும்.

भृगुः—सूतकं प्रेतकं स्पृष्ट्वा श्रुत्वा बन्धुषु मारणम् । आस्नानकालान्नाश्नीयात् पञ्चगव्यं ततः पिबेत्॥ आर्तवाभिप्लुतायास्तु शावाशौचं भवेद्यदि। सूतकं वा भवेन्मध्ये स्नात्वा भोजनमिष्यते इति॥ स्नात्वा - वेत्रादिनिर्मितपात्रोद्धृततोयैरिति शेषः।

ப்ருகு:- ரஜஸ்வலை, ஜாதாசௌசியையாவது, ம்ருதா சௌசியையாவது தொட்டாலும், பந்துக்களில் மரணத்தைக் கேட்டாலும், ஸ்நான காலம் வரையில் போஜனம் செய்யக் கூடாது. பிறகு பஞ்சகவ்யத்தைப் பருகவேண்டும். ரஜஸ்வலைக்கு, ஸ்நான காலத்திற்குள், சாவாசௌசமாவது ஜாதாசௌசமாவது ஏற்பட்டால், ஸ்நானம் செய்து பிறகு போஜனம் விதிக்கப்படுகிறத. இங்கு, ஸ்நானம் செய்த என்ற இடத்தில், 'பிரம்பு முதலியவையால் செய்யப்பட்ட பாத்ரத்திலுல் எடுக்கப்பட்ட ஜலங்களால்' என்று சேர்த்துக் கொள்ளவும்.

पराशरः—स्नाने नैमित्तिके प्राप्ते नारी यदि रजस्वला । पात्रान्तरिततोयेन स्नानं कृत्वा व्रतं चरेत्। सिक्तगात्रा भवेदद्भिः साङ्गोपाङ्गं कथञ्चन। न वस्त्रपीडनं कुर्यात् नान्यद्वासश्च धारयेत्॥ शावे च सूतके चैव ह्यन्तरा चेदृतुर्भवेत्। नास्नात्वा भोजनं कुर्यात् भुक्त्वा चोपवसेदहः॥

பராசரர்:- ரஜஸ்வலையான ஸ்த்ரீ, நைமித்திகமான ஸ்நானம் ப்ராப்தமானால் அப்பொழுது, பாத்ரத்தால் மறைக்கப்பட்ட ஜலத்தால் ஸ்நானம் செய்து தன் நியமத்தை அனுஷ்டிக்க வேண்டும். எவ்விதமாகவாவது ஜலத்தினால் தேஹம் முழுவதையும் நனைத்துக் கொள்ள வேண்டும். வஸ்த்ரத்தைப் பிழியக் கூடாது. வேறு வஸ்த்ரத்தையும் தரிக்கக் கூடாது. சாவிலும், ஸூதகத்திலும் நடுவில் ரஜோதர்சனமானால், ஸ்நானம் செய்யாமல் போஜனம் செய்யக் கூடாது. புஜித்தால் ஒரு நாள் உபவாஸமிருக்க வேண்டும்.

अत्र स्नानप्रकारं स एवाह–मृतसूतकमध्ये तु रजो दृष्ट्वा कथं भवेत्। ब्राह्मणानां करैर्मुक्तं तोयं शिरसि धारयेत्। सर्वतीर्थ जलात् श्रेष्ठं तोयं विप्रकरच्युतम्। दद्याच्छक्त्या ततो दानं पुण्याहेन विशुध्यति इति। रजस्वलयोरन्योन्यसंस्पर्शे वर्णक्रमेण शुद्धिमाह पराशरः – स्पृष्ट्वा रजस्वलाऽन्योन्यं ब्राह्मणी ब्राह्मणी तथा। तावत्तिष्ठेन्निराहारा त्रिरात्रेणैव शुध्यते। स्पृष्ट्वा रजस्वलाऽन्योन्यं ब्राह्मणी क्षत्रिया तथा। अर्धकृच्छ्रं चरेत्पूर्वा पादमेकं त्वनन्तरा। स्पृष्ट्वा रजस्वलाऽन्योन्यं ब्राह्मणी वैश्यजा तथा। पादहीनं चरेत् पूर्वा पादमेकमनन्तरा॥

இதில் ஸ்நானப்ரகாரத்தைச் சொல்கிறார். பராசரரே:- மிருதாசௌசம், ஜாதகாசௌசம் இவைகளின் நடுவில் ரஜோதர்சனமானால் என்ன செய்வது? பிராமணர்களின் கைகளால் விடப்பட்ட ஜலத்தை சிரஸ்ஸில் தரிக்க வேண்டும். பிராமணர் கையிலிருந்து விழுந்த தீர்த்தம் ஸகல தீர்த்த ஜலங்களை விடச்சிறந்ததாகும். பிறகு சக்திக்கேற்பத் தானம் செய்ய வேண்டும். பிறகு புண்யாஹ வசனத்தால் சுத்தியாகிறார். ரஜஸ்வலைகள் ஒருவருக்கொருவர் ஸ்பர்சித்தால் வர்ணக்கிரமமாய் சுத்தியைச் சொல்லுகிறார் பராசரர்:- ரஜஸ்வலைகளான பிராம்ஹணிகள் ஒருவருக்கொருவர் தொட்டுக் கொண்டால் ஸ்நானம் வரையில் உபவாஸம் இருக்க

வேண்டும். பிறகு திரிராத்ர விரதத்தால் சுத்தையாவாள். ரஜஸ்வலைகளான பிராம்ஹணியும் க்ஷத்ரிய ஸ்த்ரீயும் பரஸ்பரம் ஸ்பர்சித்தால் பிராம்ஹணீ அர்த்த க்ருச்சிரமும் க்ஷத்ரியை பாதக்ருச்ரமும் அனுஷ்டிக்க வேண்டும். ரஜஸ்வலைகளான பிராம்ஹணியும் வைச்ய ஸ்த்ரீயும் பரஸ்பரம் ஸ்பர்சித்தால் பிராம்ஹணீ முக்கால் கிருச்சிரமும் வைச்ய ஸ்த்ரீ கால் கிருச்ரமும் அனுஷ்டிக்க வேண்டும்.

स्पृष्ट्वा रजस्वलाऽन्योन्यं ब्राह्मणी शूद्रजा तथा । कृच्छ्रेण शुध्यते पूर्वा शूद्रा दानेन शुध्यति इति ।। ब्राह्मण्योः स्पर्शे तत आरभ्य स्नानपर्यन्तमुभयोराहारत्यागः, त्रिरात्रकृच्छ्रं च । एतच्च सहशयनादिचिरस्पर्शविषयम् । सकृत् स्पर्शे तु एकरात्रोपवासेन पञ्चगव्येन च शुद्धिः । स्नानपर्यन्त माहारत्यागश्च ।। आर्तवाभिप्लुता नारी त्वार्तवाभिप्लुतां स्पृशेत् । स्नात्वोपवासं कुर्यातां पञ्चगव्येन शुध्यतः ।। आस्नान कालान्नाश्नीतो भुक्त्वा चान्द्रायणं भवेत्' इति स्मरणात् ।।

ரஜஸ்வலைகளான ப்ராம்ஹணியும், சூத்ரஸ்த்ரீயும், பரஸ்பரம் ஸ்பர்சித்தால், ப்ராம்ஹணீ ஒரு க்ருச்ரத்தாலும், சூத்ரஸ்த்ரீ தானத்தாலும் சுத்தைகளாகின்றனர். ப்ராம்ஹணிகள் பரஸ்பரம் ஸ்பர்சித்தால் ஸ்நானம் வரையில் இருவருக்கும் உபவாஸமும், த்ரிராத்ரக்ருச்ரமும். இது சேர்ந்து படுப்பது முதலான சிரகால ஸ்பர்ச விஷயம். ஒரு முறை மட்டில் ஸ்பர்சத்தில் ஒருநாள் உபவாஸத்தாலும், பஞ்சகவ்யத்தாலும் சுத்தி, ஸ்நானம் வரையில் உபவாஸமும். 'ரஜஸ்வலையானவள் ரஜஸ்வலையான மற்றொருவளை ஸ்பர்சித்தால், இருவரும் ஸ்நானம் செய்து உபவாஸம் செய்ய வேண்டும். பஞ்சகவ்யத்தால் சுத்தராகின்றனர். ஸ்நானகாலம் வரையில் புஜிக்கக் கூடாது. புஜித்தால் சாந்த்ராயணத்தை அனுஷ்டிக்க வேண்டும்' என்று ஸ்ம்ருதியிருப்பதால்.

स्मृत्यर्थसारे– कृच्छ्रं तस्या यया स्पृष्टमन्यस्यास्तु तदर्धकम्। दण्डाद्यन्तर्हिते नोचेदन्यस्या अपि कृच्छ्रकम् इति ॥ कृच्छ्रमत्र त्रिरात्रादि ॥ तत्रैव – स्पृष्टे रजस्वलेऽन्योन्यं सगोत्रे चैकभर्तृके। कामतोऽकामतो वाऽपि त्रिरात्रेणैव शुध्यतः इति ॥ त्रिरात्रेण - त्रिरात्रोपवासेन ॥ शुना पुष्पवती स्पृष्टा पुष्पवत्याऽन्यया तथा। शेषाण्यहान्युपवसेत् स्नात्वा शुध्येत् घृताशनात् इति संवर्तवचन मकामकृतस्पर्श विषयम्॥

ஸ்ம்ருத்யர்த்த ஸாரத்தில்:- *எவள் தொட்டவளோ அவளுக்கு க்ருச்ரம். மற்றவளுக்கு அதில் பாதி. இது தண்டாதிகளால் ஸ்பர்சத்தில். மற்ற ஸ்பர்சத்திலாஞல் மற்றவளுக்கும் க்ருச்ரமே. இங்கு க்ருச்ரமென்றது த்ரிராத்ர க்ருச்ரம் முதலியதாம். ஸ்ம்ருத்யர்த்தஸாரத்திலேயே:- ஸகோத்ரைகளாயும், ஒரே பர்த்தாவையுடைவர்களுமான இரு ரஜஸ்வலை ஸ்த்ரீகள் பரஸ்பரம் ஸ்பர்சித்தால் இச்சையாலாகினும், அநிச்சையாலாகினும் த்ரிராத்ரத் தாலேயே சுத்தராகின்றனர். இங்கு த்ரிராத்ரத்தால் என்பதற்கு த்ரிராத்ரோப வாஸத்தால் என்று பொருள். ''ரஜஸ்வலை, நாயால், அல்லது மற்றொரு ரஜஸ்வலையால் ஸ்பர்சிக்கப்பட்டால் மீதியுள்ள நாட்கள் முழுவதும் உபவாஸம் இருக்க வேண்டும். ஸ்நானம் செய்த பிறகு நெய்யைப் பருகுவதால் சுத்தையாவாள்'' என்ற ஸம்வர்த்தரின் வசனம், அநிச்சையால் ஏற்பட்ட ஸ்பர்ச விஷயம்.*

वृद्धविष्णुरपि—रजस्वला हीनवर्णां रजस्वलां स्पृष्ट्वा न तावदश्नीयाद्यावन्न शुद्धिः स्यात्। सवर्णामधिकवर्णां (वा)स्पृष्ट्वा सद्यः स्नात्वा शुध्यति इति ॥ विष्णुः – रजस्वला हीनवर्णा सार्तवामुत्तमां यदि। स्पृशेत् स्पृष्टा न भुञ्जीत स्नानादूर्ध्वं तु भोजनम्॥ उपवासं ततः कुर्याद् ब्राह्मणान् भोजयेत्ततः इति ॥ स्पर्शे सत्युद्धृतैः स्नात्वा उपोष्य चतुर्थाहे स्नानादूर्ध्वं ब्राह्मणान् भोजयित्वा भुञ्जीतेत्यर्थः।

வ்ருத்த விஷ்ணுவும்:- *ரஜஸ்வலை, கீழ்வர்ணத்திய ரஜஸ்வலையை ஸ்பர்சித்தால், சுத்தையாகும் வரையில் புஜிக்கக் கூடாது. ஸமான வர்ண ஸ்த்ரீயையாவது, மேல்வர்ண ஸ்த்ரீயையாவது ஸ்பர்சித்தால், உடனே ஸ்நானம் செய்தால் சுத்தையாகிறுள். விஷ்ணு:- கீழ்வர்ணத்திய ரஜஸ்வலை, மேல்வர்ணத்திய ரஜஸ்வலையை ஸ்பர்சித்தால், ஸ்பர்சிக்கப்பட்ட மேல்வர்ண ஸ்த்ரீ ஸ்நானம் வரையில் புஜிக்கக் கூடாது. பிறகு ப்ராம்ஹணர்களைப் புஜிப்பிக்க வேண்டும். 'ஸ்பர்சமானால், வெளியில் எடுக்கப்பட்ட ஜலத்தால் ஸ்நானம் செய்து, உபவாஸமிருந்து, நான்காவது தினத்தில் ஸ்நானத்திற்குப் பிறகு ப்ராம்ஹணர்களைப் புஜிப்பித்துப் பிறகு தான் புஜிக்க வேண்டும்' என்பது பொருள்.*

स एव – रजस्वलासंस्पृष्टोऽस्नात्वा भुञ्जन्नुपवास त्रयं चरेत्। तच्छायां भुक्तिपात्रं वा स्पृष्ट्वा अस्नात्वा भुञ्जन्नुपवासेन शुध्येत्। मलिनं तद्वासस्तदन्नं स्पृष्ट्वाऽस्नात्वा भुञ्जन् उपवासत्रयं चरेत्। उदक्यापात्रे अज्ञानाद्भुञ्जन् प्राजापत्यमभ्यस्येत्। उदक्योच्छिष्टं भुञ्जन् कृच्छ्रं सान्तपनं चरेत्। भोजनकाले रजस्वलान्तरदर्शने आस्नानकालं नाश्नीयात्। ब्रह्मकूर्चं ततः पिबेत्। चण्डालदर्शने उपवासत्रयम्। कामतस्तु प्राजापत्यम्। रजस्वला श्वादिभिर्दृष्टा यदि पञ्चरात्रं निराहारा पञ्चगव्येन शुध्यति इति॥

விஷ்ணுவே:- *ரஜஸ்வலையால் ஸ்பர்சிக்கப்பட்டவன் ஸ்நானம் செய்யாமல் புஜித்தால் மூன்று நாள் உபவாஸம் செய்ய வேண்டும். ரஜஸ்வலையின் நிழலையாவது, போஜன பாத்ரத்தையாவது ஸ்பர்சித்தவன், ஸ்நானம் செய்யாமல் புஜித்தால் ஒரு நாள் உபவாஸம் அனுஷ்டிக்க வேண்டும். அழுக்குள்ள அவள் வஸ்த்ரத்தையாவது, அவள் அன்னத்தையாவது ஸ்பர்சித்தவன், ஸ்நானம் செய்யாமல் புஜித்தால் மூன்று நாள் உபவாஸம் இருக்க வேண்டும். ரஜஸ்வலையின் பாத்ரத்தில் அறியாமையால் புஜித்தவன்*

ப்ராஜாபத்ய க்ருச்ரத்தை அனுஷ்டிக்க வேண்டும். ரஜஸ்வலையின் உச்சிஷ்டத்தைப் புஜித்தவன் ஸாந்தபன க்ருச்ரத்தை அனுஷ்டிக்க வேண்டும். ரஜஸ்வலை, போஜனகாலத்தில் மற்றொரு ரஜஸ்வலையைப் பார்த்தால் ஸ்நான காலம் வரையில் புஜிக்கக் கூடாது. பிறகு ப்ரம்ஹகூர்ச்ச பஞ்சகவ்யத்தைப் பருகவேண்டும். சண்டாளனைப் பார்த்தால் மூன்று நாள் உபவாஸம் செய்ய வேண்டும். இச்சையுடனுனல், ப்ராஜாபத்ய மனுஷ்டிக்க வேண்டும். ரஜஸ்வலை, நாய் முதலியவையால் கடிக்கப்பட்டால், ஐந்துநாள் ஆஹாரம் இல்லாமலிருந்து பஞ்சகவ்யத்தால் சுத்தையாகிறாள்.

अखण्डादर्शे – रजस्वलाया भोजने पाने वा प्रतिलोमप्रसूताना मन्यतमनिरीक्षणे स्नानान्तमनशनं तदशक्तौ प्रतिनिधि रेकस्य दिनस्य पञ्च वा त्रीन् वा विप्रान् भोजयेत् इति ।। अत्रिः – सार्तवा यदि चण्डालमुच्छिष्टा सम्प्रपश्यति । आस्नानकालान्नाश्नीया दासीना वाग्यता बहिः ।। पादकृच्छ्रं ततः कुर्याद् ब्रह्मकूर्चं पिबेत् पुनः । ब्राह्मणान् भोजयेदद्याद्विप्राणामनुशासनात् इति ।।

அகண்டாதர்சத்தில்:- ரஜஸ்வலை, போஜனம் செய்யும் போது, அல்லது ஜலம் பருகும்போது, ப்ரதிலோமஜாதியருள் ஒருவனைப் பார்த்தால், ஸ்நானம் வரையில் உபவாஸம் செய்ய வேண்டும். சக்தி இல்லாவிடில், ஒரு தினத்திற்கு ஐந்து, அல்லது மூன்று ப்ராம்ஹணர்களைப் புஜிப்பிக்க வேண்டும். அத்ரி:- ரஜஸ்வலை உச்சிஷ்டையாய் இருந்து சண்டாளனைப் பார்த்தால் ஸ்நான காலம் வரையில் வெளியிலிருந்து மௌனத்துடன் உபவாஸம் இருக்க வேண்டும். பிறகு பாதக்ருச்ரம் அனுஷ்டிக்க வேண்டும். ப்ரம்ஹகூர்ச் பஞ்சகவ்ய ப்ராசனமும் செய்ய வேண்டும். ப்ராம்ஹணர்களைப் புஜிக்கச் செய்ய வேண்டும். அவர்களின் அனுக்ஞையால் தான் புஜிக்க வேண்டும்.

—*—

आतुरस्नानविधिः

अथ आतुरस्नानविधिः । ज्वरादिभिरातुरस्य स्ननिमित्ते प्राप्ते कर्तव्यमाह पराशरः – आतुरस्नान उत्पन्ने दशकृत्वो ह्यनातुरः । स्नात्वा स्नात्वा स्पृशेदेनं ततः शुध्येत् स आतुरः इति ।। अत्र प्रतिस्नानमातुरस्य वासो विपरिवर्तनीयम्।। उशना – ज्वराभिभूता या नारी रजसा च परिप्लुता । कथं तस्या भवेच्छौचं शुद्धिः स्यात् केन कर्मणा ।। चतुर्थेऽहनि सम्प्राप्ते स्पृशेदन्या तु तां स्त्रियम् । सा सचेलाऽवगाह्यापः स्नात्वा स्नात्वा पुनः स्पृशेत्।। दश द्वादशकृत्वो वा ह्याचामेच्च पुनः पुनः । अन्यान्यानि च वासांसि ततः शुद्धा भवेत्तु सा।। दद्याच्छक्त्या ततो दानं पुण्याहेन विशुध्यति इति।।

பிணியாளர் ஸ்நானவிதி

இனி ஆதுரனின் (பிணியாளனின்) ஸ்நானவிதி சொல்லப்படுகிறது. ஜ்வரம் முதலியவைகளால் வருந்தியவனுக்கு ஸ்நான நிமித்தம் நேர்ந்தால், செய்ய வேண்டியதைச் சொல்லுகிறார் பராசரர்:- ஆதுரனுக்கு ஸ்நான நிமித்தம் ப்ராப்தமானால், வ்யாதியில்லாத மற்றவன், பத்துத் தடவை, மூழ்கி மூழ்கி வ்யாதிஸ்தனைத் தொடவேண்டும். பிறகு அந்த வ்யாதிஸ்தன் சுத்தனாவான். இங்கு ஒவ்வொரு ஸ்நானத்திலும், ஆதுரனுடைய வஸ்த்ரம் மாற்றப்பட வேண்டும். உசனஸ்:- எந்த ஸ்த்ரீ ஜ்வரத்தால் பீடிக்கப்பட்டவளாய் ரஜஸ்வலையாயும் உள்ளாளோ, அவளுக்குச் சுத்தி எப்படி ஆகும்? எக்கர்மத்தால் சுத்தி ஏற்படும்? (எனில்) நான்காவது நாள் வந்ததும், மற்றொரு ஸ்த்ரீ, அந்த ஸ்த்ரீயைத் தொட்டுவிட்டு, ஸசேலஸ்நானம் செய்து, அவளைத் தொட்டு மறுபடி ஸசேல ஸ்நானம் செய்து மறுபடி அவளைத் தொடவேண்டும். இவ்விதம் பத்து அல்லது பன்னிரண்டு தடவை செய்ய வேண்டும். ஆதுரையானவள் அடிக்கடி ஆசமனம் செய்ய வேண்டும்.

ஒவ்வொரு தடவையிலும் வெவ்வேறு வஸ்த்ரம் தரிக்க வேண்டும். இவ்விதம் செய்தால் பிறகு அவள் சுத்தையாவாள். பிறகு யதாசக்தி தானம் செய்ய வேண்டும். புண்யாஹவசனத்தால் சுத்தையாகிறாள்.

योगयाज्ञवल्क्यः – तूष्णीमेवावगाहेत यदा स्यादशुचिर्नरः। आचम्य प्रयतः पश्चात् स्नानं विधिवदाचरेत् इति ॥ विष्णुरपि – स्नानार्हस्तु निमित्तेन कृत्वा तोयावगाहनम्। आचम्य प्रयतः पश्चात् स्नानं विधिवदाचरेत् इति ॥ शातातपः – मार्गे तु यत्र संस्पृष्टिः यात्रायां कलहादिषु। ग्रामसंदूषणे चैव स्पृष्टिदोषो न विद्यते इति ॥ षट्त्रिंशन्मतेऽपि – देवयात्राविवाहेषु यज्ञेषु प्रकृतेषु च। उत्सवेषु च सर्वेषु स्पृष्टास्पृष्टिर्न दुष्यति इति ॥

யோகயாக்ஞவல்க்யர்:- மனிதன் எப்பொழுது அசுத்தனாகின்றானோ அப்பொழுது விதியில்லாமலே முழுகவேண்டும். பிறகு ஆசமனம் செய்து சுத்தனாய், விதிப்படி ஸ்நானம் செய்ய வேண்டும். **விஷ்ணுவும்:-** நிமித்தத்தால் ஸ்நானம் செய்ய வேண்டியவன், ஜலத்தில் முழுகி ஆசமனம் செய்து, சுத்தனைப் பிறகு விதிப்படி ஸ்நானம் செய்ய வேண்டும். **சாதாதபர்:-** வழியிலும், யாத்ரையிலும், கலஹம் முதலியதிலும், க்ராமத்தின் கலகத்திலும் ஸ்பர்சதோஷமில்லை. **ஷட்த்ரிம்சன் மதத்திலும்:-** தேவதர்சனத்திலும், யாத்ரையிலும், விவாஹத்திலும், யாகங்கள் நடக்கும் போதும், எல்லா உத்ஸவங்களிலும், அஸ்ப்ருச்யரின் ஸ்பர்சம் தோஷமற்றது.

बृहस्पतिरपि – तीर्थे विवाहे यात्रायां सङ्गामे देशविप्लवे। नगरे ग्रामदाहे च स्पृष्टास्पृष्टिर्न दुष्यति इति ॥ पाद्मे – देवालयसमीपस्थान् देवसेवार्थमागतान्। चण्डालान् पतितान् वाऽपि स्पृष्ट्वा न स्नानमाचरेत् इति ॥ आपस्तम्बः – शक्तिविषये न मुहूर्तमप्ययतः स्यात् इति ॥

ப்ருஹஸ்பதியும்:- தீர்த்தத்திலும், விவாஹத்திலும், யாத்ரையிலும், யுத்தத்திலும், தேசத்தின் தொந்தரையிலும், நகரத்திலும், க்ராமதாஹத்திலும், அஸ்ப்ருச்யரின் ஸ்பர்சம் தோஷமற்றது. **பாத்மத்தில்:-** தேவாலயத்தின் ஸமீபத்தில் இருப்பவரும், தேவஸேவைக்கு வந்தவருமான, சண்டாளர், பதிதர் இவர்களை ஸ்பர்சித்தாலும் ஸ்நானம் செய்ய வேண்டியதில்லை. **ஆபஸ்தம்பர்:-** சக்தியுள்ளவனுகில், முஹூர்த்த காலங்கூட அசுத்தனுய் இருக்கக் கூடாது.

काम्यस्नानानि

अथ काम्यस्नानानि । तत्र पुलस्त्यः – पुष्ये च जन्मनक्षत्रे व्यतीपाते च वैधृतौ । अमायां च नदीस्नानं पुनात्यासप्तमं कुलम् ॥ रव्यङ्गारशनेवारि स्नानं कुर्वन्ति ये नराः । व्याधिभिस्ते न पीड्यन्ते मृगैः केसरिणो यथा ॥ चैत्रकृष्णचतुर्दश्यां यः स्नायाच्छिवसन्निधौ । न प्रेतत्वमवाप्नोति गङ्गायां च विशेषतः इति ॥ यमोऽपि – कार्तिक्यां पुष्करे स्नातः सर्वपापैः प्रमुच्यते । माघ्यां स्नातः प्रयागे तु मुच्यते सर्वकिल्बिषैः ॥ सूर्यग्रहणतुल्या तु शुक्ला माघस्य सप्तमी । अरुणोदयवेलायां तस्यां स्नानं महाफलम् ॥ पुनर्वसुबुधोपेता चैत्रमासे सिताष्टमी । स्रोतस्सु विधिवत् स्नात्वा वाजपेयफलं लभेत् इति ॥

காம்ய ஸ்நானங்கள்

இனி தனித்து நன்மை விரும்பி செய்கிற ஸ்நானங்கள் சொல்லப்படுகின்றன. அதில், **புலஸ்த்யர்:-** புஷ்யம், ஜன்மநக்ஷத்ரம், வ்யதீபாதம், வைத்ருதி, அமாவாஸ்யை இக்காலங்களில் செய்யும் நதீ ஸ்நானம் ஏழு குலங்களைச் சுத்தமாக்கும். பானுவாரம், அங்காரகவாரம், சனிவாரம் இவைகளில் ஸ்நானம் செய்பவர் வ்யாதிகளால் பீடிக்கப்படுவதில்லை, மான்களால் சிங்கங்கள் போல். சைத்ரக்ருஷ்ண சதுர்தசியில், சிவஸன்னிதியில் அல்லது

கங்கையில் எவன் ஸ்நானம் செய்கின்றானே அவன் ப்ரேதத் தன்மையை அடைவதே இல்லை. **யமனும்:-** கார்த்திக பூர்ணிமையில் புஷ்கர க்ஷேத்ரத்தில் ஸ்நானம் செய்தவன் எல்லாப் பாபங்களாலும் விடுபடுவான். மாகபூர்ணிமையில் ப்ரயாகத்தில் ஸ்நானம் செய்தவன் ஸகல பாபங்களாலும் விடுபடுவான். மாக சுக்ல ஸப்தமீ, ஸூர்ய க்ரஹணத்திற்குச் சமமாகும். அதில் அருணோதய காலத்தில் ஸ்நானம் செய்வது மஹா பலனை அளிப்பதாகும். சைத்ர மாஸத்தில் சுக்லாஷ்டமீ, புனர்வஸுவுடன் புதவாரத்துடன் கூடியிருந்தால், அதில் நதிகளில் விதிப்படி ஸ்நானம் செய்தால் வாஜபேய யாகபலத்தை அடைவான்.

शातातपोऽपि – अमावास्या भवेद्वारे यदा भूमिसुतस्य वै। जाह्नवीस्नानमात्रेण गोसहस्रफलं भवेत् ।। कार्तिकं सकलं मासं नित्यस्नायी जितेन्द्रियः। जपन् हविष्यभुक् स्नातः सर्वपापैः प्रमुच्यते। तुलायां मकरे मेषे प्रातः स्नायी सदा भवेत्। हविष्यं ब्रह्मचर्यं च महापातकनाशनम् इति ।। चन्द्रिकायाम् – आषाढादिचतुर्मासं प्रातःस्नायी भवेन्नरः। विप्रेभ्यो भोजनं दत्वा कार्तिक्यां गोप्रदो भवेत्।। स वैष्णवं पदं याति विष्णुव्रतमिदं स्मृतम् इति।।

சாதாதபரும்:- அங்காரக வாரத்தில் அமாவாஸ்யை சேர்ந்தால், அப்பொழுது கங்கையில் ஸ்நானமாத்ரத்தால், ஆயிரம் பசுக்களைத் தானம் செய்த பலன் உண்டாகும். கார்த்திக மாஸம் முழுவதும் நித்யமும் ஸ்நானம் செய்பவனும், இந்த்ரியங்களை ஜயித்தவனும், ஜபிப்பவனும், ஹவிஸ்ஸைப் புஜிப்பவனும் இருப்பவன் ஸகல பாபங்களாலும் விடப்படுவான். துலாமாஸம், மகரமாஸம், மேஷமாஸம் இவைகளில் நித்யமும் ப்ராதःஸ்நானம் செய்பவனும் இருக்க வேண்டும் அத்துடன் ஹவிஸ்ஸைப் புஜிப்பதும், ப்ரம்ஹசர்யத்துடன் இருப்பதும், மஹாபாபங்களையும் அகற்றுவதாகும். **சந்த்ரிகையில்:-** ஆஷாடம் முதல் நான்கு மாஸங்களில்,

மனிதன் ப்ராத:ஸ்நானம் செய்பவனுய் இருக்க வேண்டும். ப்ராம்ஹணர்களுக்குப் போஜனம் அளித்து, கார்த்திக பூர்ணிமையில் கோதானம் செய்ய வேண்டும். இது விஷ்ணுவ்ரதம் எனப்படுகிறது. இதை அனுஷ்டிப்பவன் விஷ்ணு லோகத்தை அடைகிறுன்.

मार्कण्डेयः — सर्वकालं तिलैःस्नानं पुण्यं व्यासोऽब्रवीन्मुनिः। तुष्यत्यामलकैर्विष्णुरेकादश्यां विशेषतः ॥ श्रीकामः सर्वदा स्नानं कुर्वीतामलकैर्नरः। सप्तमीं नवमीं चैव पर्वकालं च वर्जयेत् इति ॥ योगयाज्ञवल्क्योऽपि – धात्रीफलै रमावास्यासप्तमी नवमीषु च। न स्नायात्तस्य हीयन्ते तेज आयुर्द्धनं सुताः इति ॥ धात्री - आमलकी ॥

மார்க்கண்டேயர்:- எப்பொழுதும் எள்ளுடன் ஸ்நானம் செய்வது புண்யம் என்று வ்யாஸமுனிவர் சொன்னுர். ஏகாதசியில் நெல்லிக்கனியுடன் ஸ்நானம் செய்தால் விஷ்ணு ஸந்தோஷிக்கின்றூர். விசேஷமாய். ஸம்பத்தை விரும்புவோன் எப்பொழுதும் நெல்லிக்கனியுடன் ஸ்நானம் செய்ய வேண்டும். ஆனல், ஸப்தமீ, நவமீ, பர்வகாலம் இவைகளை வர்ஜிக்க வேண்டும். **யோகயாக்ஞவல்க்யர்:-** அமாவாஸ்யை, ஸப்தமீ, நவமீ இவைகளில், நெல்லிக்கனியுடன் ஸ்நானம் செய்யக் கூடாது. செய்பவனின் தேஜஸ், ஆயுள், தனம், பிள்ளைகள் இவை குறைகின்றன.

चन्द्रिकायाम् – षष्ठी च सप्तमी चैव नवमी च त्रयोदशी। सङ्क्रान्तौ रविवारे च स्नानमामलकैस्त्यजेत् इति। शौनकोऽपि – कल्केनामलकेनासु न विप्रः स्नानमाचरेत्। संपत्कामस्तु सप्तम्यां नवम्यां नष्टशीतगौ ॥ अर्थकामी त्रयोदश्यां दशम्यां पुत्रवत्सलः। पुत्रार्थकामो विप्रस्तु द्वितीयायां कदाचन इति ॥ माधवीये – गुरुवारेऽप्यमायां च ह्यश्वत्थच्छायवारिणा। स्नानं प्रयागस्नानेन समं पातकनाशनम्। शाल्मली तिन्त्रिणी निम्बकरञ्जौ द्वौ हरीतकी।

कोविदारकपित्थार्क बदरी च विभीतकः ।। शेलुश्च खादिरश्चैषां स्नानं छायासु वर्जयेत् इति ।।

சந்த்ரிகையில்:- ஷஷ்டி, ஸப்தமீ, நவமீ, த்ரயோதசீ, ஸங்க்ரமணம், பானுவாரம் இவைகளில் நெல்லிக் கனிகளால் ஸ்நானம் செய்யக் கூடாது. சௌனகரும்:- ஸம்பத்தை விரும்புகின்றவன், ஸப்தமீ, நவமீ, அமை இவைகளிலும், பணத்தை விரும்புகின்றவன் த்ரயோதசியிலும், புத்ரனை விரும்புகின்றவன் தசமியிலும், புத்ரனையும் அர்த்தத்தையும் விரும்புகின்றவன் த்விதீயையிலும் ஒருகாலும் நெல்லிக்கனியால் ஸ்நானம் செய்யக் கூடாது. மாதவீயத்தில்:- குருவாரத்திலும், அமையிலும், அச்வத்த வ்ருக்ஷத்தின் நிழலிலுள்ள ஜலத்தினால் ஸ்நானம் செய்வது, ப்ரயாக ஸ்நானத்திற்குச் சமம். பாபத்தை அகற்றும். இலவு, புளி, வேம்பு, புங்கு, கடுக்காய், மலையகத்தி விளா, எருக்கு, இலந்தை, தானி, நறுவிளி, கருங்காலி இவைகளின் நிழலில் ஸ்நானத்தைத் தவிர்க்க வேண்டும்.

—★—

माघस्नानम्

तत्र विष्णुः – बालाश्च तरुणा वृद्धा नरनारीनपुंसकाः । स्नात्वा माघे शुभे तीर्थे प्राप्नुवन्तीप्सितं फलम् ।। माघमास्युषसि स्नात्वा विष्णुलोकं स गच्छति ।। मकरस्थे रवौ यो हि न स्नात्यनुदिते रवौ । कथं पापैः प्रमुच्येत कथं स त्रिदिवं व्रजेत् इति ।। अनेन माघस्नानमुदयात् पूर्वमेव कर्तव्यमिति सिद्धम् ।।

மாக ஸ்நானம்

இனி மாக ஸ்நானம் சொல்லப்படுகிறது. அதில் விஷ்ணு:- பாலர், தருணர், வ்ருத்தர், புருஷன், பெண், நபும்ஸகன், யாராயினும், மாகமாஸத்தில் நல்லதீர்த்தத்தில்

ஸ்நானம் செய்தால் விரும்பிய பலனை அடைகின்றனர். மாகமாஸத்தில் உஷ:காலத்தில் ஸ்நானம் செய்தால் விஷ்ணு வினுலகத்தை அடைகிறுன். ஸூர்யன் மகரத்தில் இருக்கையில் ஸூர்யோதயத்திற்கு முன் எவன் ஸ்நானம் செய்யவில்லையோ அவன் எப்படிப் பாபங்களால் விடப்படுவான்? எப்படி ஸ்வர்க்கத்தை அடைவான்? இதனுல், மாக ஸ்நானம் உதயத்திற்கு முன்பே செய்யப்பட வேண்டும் என்பது ஸித்தமாயிற்று.

यत्तु महाभारते – माघे ह्यर्धोदिते सूर्ये स्नानं विधिवदाचरेत्। नियतो नियताहारः सर्वपापैः प्रमुच्यते ॥ किञ्चिदभ्युदिते सूर्ये सर्वपापैः प्रमुच्यते ॥ किञ्चिदभ्युदिते सूर्ये स्नानं माघे समाचरेत् ॥ यत्तस्य सर्वपापानि विनश्यन्ति न संशयः ॥ माघमासे रटन्त्यापः किञ्चिदभ्युदिते रवौ। ब्रह्मघ्नं वा सुरापं वा कं पतन्तं पुनीमहे इति, तत् सन्ध्योपासनाद्यनधिकृतस्त्रीशूद्रादिविषयम् । 'उषस्युपोदये माघे स्नानमाहुर्द्विजन्मनाम्। स्त्रीशूद्राणां तथाऽन्येषामर्धोदय उपोदयः इति स्मरणात्।

ஆனுல், மஹாபாரதத்தில்:- ''மாக மாஸத்தில் ஸூர்யன் பாதி உதித்திருக்கும் போது விதிப்படி ஸ்நானம் செய்ய வேண்டும். நியமமுடையவனும், ஆஹாரநியமம் உடையவனுமாயின் ஸகல பாபங்களாலும் விடப்படுவான். மாக மாஸத்தில் ஸூர்யன் கொஞ்சம் உதித்திருக்கும் பொழுது எவன் ஸ்நானம் செய்கின்றுனே, அவனது பாபங்களெல்லாம் நசிக்கின்றன. ஸம்சயமில்லை. மாக மாஸத்தில் ஜலங்களெல்லாம். ஸூர்யன் கொஞ்சம் உதித்திருக்கும் போது ஜலத்தில் ஸ்நானம் செய்பவன். ப்ரம்ஹஹத்யை செய்தவனுயினும், ஸுராபானம் செய்தவனுயினும், அவனைச் சுத்தனுக்குகின்றேரும் என்று கூவுகின்றன'' என்ற வசனமுள்ளதே எனில், அது, ஸந்த்யோ பாஸனம் முதலியதில் அதிகாரமில்லாத ஸ்த்ரீ, சூத்ரன் முதலியவரைப் பற்றியதாம்.

'மாக மாஸத்தில் விடியற்காலத்தில் உபோதயத்தில் ப்ராம்ஹணர்களுக்கு ஸ்நானத்தை விதிக்கின்றனர், ஸ்த்ரீகளுக்கும், சூத்ரருக்கும், மற்றவருக்கும் ஸூர்யன் பாதி உதித்திருக்கும் காலம் உபோதயமாகும்' என்று ஸ்ம்ருதி உள்ளது.

ब्राह्मणादि विषयत्वे सन्ध्यातिक्रमदोषोऽपि दुर्वारः स्यात्। स्नानपूर्वकत्वात् सन्ध्यावन्दनादेः ॥ नह्युदयात् पूर्वं किंचिदुदये च कालद्वये स्नानमिति युक्तम् । मार्जनाद्युपस्थानान्तस्यैककर्मत्वेन कर्मान्तरानुष्ठानायोगात्, उदयसमये उपस्थानविधानाच्च। न च माघे किञ्चिदुदयस्नानानन्तरमनुष्ठानम्। सन्धौ सन्ध्यामुपासीत नास्तगे नोद्गते रवौ इति योगयाज्ञवल्क्येन सन्ध्योत्कर्षस्य निषेधात्, सन्ध्यातिक्रमे शूद्रत्वादिप्राप्तिस्मरणाच्च। यद्वा – उपव्युषसि यत्स्नानं सन्ध्यामुदितेऽपि वा इतिवत् स्नानप्रशंसापरं, कैमुतिकन्यायप्रदर्शनपरं वेत्याहुः ॥

ப்ராம்ஹணர் முதலியவரைப் பற்றியதெனில் ஸந்த்யா வந்தனத்தை அதிக்ரமித்த தோஷம் அகற்ற முடியாததாகும். ஸந்த்யா வந்தனம் முதலியது ஸ்நானத்தையே முன்னிட்டதாகையால், உதயத்திற்கு முந்தியும், கொஞ்சமுதித்த காலத்திலும் ஸ்நானமென்பது யுக்தமாகாதல்லவா? மார்ஜனம் முதல் உபஸ்தானம் வரையிலுள்ளவை ஒரே கர்மமாகையால், வேறு கர்மத்தைச் செய்யமுடியாது. ஆகையாலும், உதய காலத்தில் உபஸ்தானம் விதிக்கப்பட்டிருப்பதாலும், மாக மாஸத்தில் கொஞ்சம் உதயமான பிறகு ஸ்நானம் செய்து பிறகு ஸந்த்யா வந்தனத்யனுஷ்டானம் செய்யலாம் என்றும் சொல்லக் கூடாது. 'ஸந்தியில் ஸந்த்யோபாஸனம் செய்ய வேண்டும். ஸூர்யன் அஸ்தமயமான பிறகும் கூடாது. ஸூர்யன் உதித்த பிறகும் கூடாது' என்று யோகயாக்ஞவல்க்யரால் ஸந்த்யோத்கர்ஷம் நிஷேதிக்கப் பட்டிருப்பதாலும், ஸந்த்யை அதிக்ரமித்தால், சூத்ரத்

தன்மையை அடைவான் என்று ஸ்ம்ருதி இருப்பதாலும். அல்லது, ஸ்நானப்ரகரணத்தில் 'விடியற்காலத்திலோ, ஸந்த்யா காலத்திலோ, உதயத்திற்குப் பிறகோ செய்யும் ஸ்நானம் ப்ராஜாபத்யத்திற்குச் சமமாகும்' என்று சொல்லியது போல், இங்குள்ள வசனமும் ஸ்நானத்தைப் புகழ்வதில் தாத்பர்யமுள்ளது, அல்லது 'கைமுதிக நியாயத்தைக் காண்பிப்பதில் தாத்பர்யமுள்ளது என்கின்றனர் சிலர்.

केचित्तु — विचेयतारके काले नित्यस्नानं विधाय च । पुनरभ्युदिते सूर्ये माघस्नानं समाचरेत् ।। अध्यर्धघटिकापूर्वं परं सूर्योदयात्तथा। स एवाभ्युदितो नाम धर्मशास्त्रे प्रकीर्तितः इति वचन माचक्षमाणाः उदयादनन्तरं सार्धघटिकामध्ये द्वितीयस्नानं कर्तव्यमिति वदन्ति ।।

சிலரோவெனில்:-''தேடக்கூடிய நக்ஷத்ரங்களை யுடைய காலத்தில் நித்ய ஸ்நானத்தைச் செய்து விட்டு, ஸூர்யோதயமான பிறகு மாக ஸ்நானத்தைச் செய்ய வேண்டும், ஸூர்யோதயத்திற்கு முன் 1 1/2 நாழிகையும், ஸூர்யோதயத்திற்குப் பின் 1 1/2 நாழிகையும் உள்ளகாலம் எதுவோ அது 'அப்யுதிதம்' என்று தர்மசாஸ்த்ரத்தில் சொல்லப்பட்டுள்ளது'' என்ற வசனத்தைச் சொல்லுகின்றவராய், உதயத்திற்குப் பிறகு 1 1/2 நாழிகையின் நடுவில் இரண்டாவது ஸ்நானம் செய்யப்பட வேண்டும் என்று சொல்லுகின்றனர்.

विष्णुः — पौषफाल्गुनयोर्मध्ये प्रातः स्नायी सदा भवेत्। दर्शं वा पौर्णमासीं वा प्रारभ्य स्नानमाचरेत् ।। पुण्यान्यहानि त्रिंशत्तु मकरस्थे दिवाकरे । तत्र चोत्थाय नियमं गृह्णीयाद्विधिपूर्वकम् ।। माघमासममं पुण्यं स्नास्येऽहं देव माधव । तीर्थस्यास्य जले नित्यं इति सङ्कल्प्य चेतसि ।। ततः स्नात्वा शुभे तीर्थे दत्वा शिरसि वै मृदम्। स्नात्वा पितॄंस्तर्पयित्वा उत्तीर्य तु ततो जलात् ।। काष्ठमौनी नमस्कृत्य

पूजयेत् पुरुषोत्तमम्। शङ्खचक्रधरं देवं माधवं पूजयेत्तदा। वह्नौ हुत्वा विधानेन ततस्त्वेकाशनो भवेत्। भूशय्यो ब्रह्मचर्येण शक्तः स्नानं समाचरेत्॥

விஷ்ணு:- பௌஷ மாஸம், பால்குன மாஸம் இவைகளின் நடுவில், எப்பொழுதும் ப்ராத:ஸ்நானம் செய்பவனுய் இருக்க வேண்டும். அமாவாஸ்யையாவது, பூர்ணிமையாவது முதற்கொண்டு ஸ்நானம் செய்ய வேண்டும். ஸூர்யன் மகரத்தில் இருக்கும் பொழுது, முப்பது தினங்களும் புண்யங்களேயாம். அதில், காலையில் எழுந்து விதியுடன் நியமத்தை க்ரஹிக்க வேண்டும். 'ஓதேவ! மாதவ! புண்யமான இந்த மாக மாஸம் முழுவதிலும் இந்தப் புண்ய தீர்த்தத்தின் ஜலத்தில் ஸ்நானம் செய்யப் போகிறேன்' என்று மனதில் ஸங்கல்பம் செய்து கொண்டு, பிறகு சுபமான தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, தலையில் ம்ருத்திகையைச் சேர்த்து ஸ்நானம் செய்து, பித்ருதர்ப்பணம் செய்து, ஜலத்தினின்றும் வெளியேறி, காஷ்டமௌனம் உடையவனுய், புருஷோத்தமனே நமஸ்கரித்துப் பூஜிக்க வேண்டும். அப்பொழுது சங்கசக்ரதரனும், தேவனுமான மாதவனைப் பூஜிக்க வேண்டும். அக்னியில் விதிப்படி ஹோமம் செய்து ஒரு முறை போஜனம் செய்பவனுய் இருக்க வேண்டும். பூமியிற் படுக்க வேண்டும். ப்ரம்ஹசர்யத்துடன் இருக்க வேண்டும். சக்தியுள்ளவன் இவ்விதம் ஸ்நானம் செய்ய வேண்டும்.

अशक्तस्याधनाढ्यस्य स्वेच्छा सर्वत्र कथ्यते। अवश्यमेव कर्तव्यं माघस्नानमिति श्रुतिः॥ तिलस्नायी तिलोद्वर्ती तिलहोमी तिलोदकी। तिलदस्तिलभोक्ता च षट्तिलो नावसीदति॥ तिला आमलकाश्चैव तीर्थे देयास्तु नित्यशः। तथा प्रज्वालयेद्वह्निं इन्धनौघैर्द्विजन्मनाम्॥ एवं स्नानस्यावसाने भोजयेद्द्विजदंपती। विविधानि च देयानि प्रच्छादनपटांस्तथा॥ अनेन विधिना

दद्यान्माधवः प्रीयतामिति। पित्रा पितामहैः सार्धं तथैव प्रपितामहैः ।। मात्रा मातामहैः सार्धं वृद्धमातामहैस्तथा । एकविंशकुलैः सार्धं भोगान् भुक्त्वा यथेप्सितान्। माघमास्युषसि स्नात्वा विष्णुलोकं स गच्छति इति।।

சக்தியில்லாதவனும், தனமில்லாதவனும் இஷ்டப்படி செய்யலாம் என்று எல்லாவற்றிலும் சொல்லப்படுகிறது. எப்படியாவது மாகஸ்நானம் செய்ய வேண்டும் என்கிறது வேதம். எள்ளிலல் ஸ்நானம் செய்பவன், திலங்களைத் தேய்த்துக் கொள்பவன், திலங்களை ஹோமம் செய்பவன், திலோதகத்தால் தர்ப்பணம் செய்பவன், திலங்களைத் தானம் செய்பவன், திலங்களைப் பக்ஷிப்பவன் என்று ஆறு பேர்களும் கஷ்டத்தை அடைய மாட்டார்கள். தீர்த்தத்தில், திலங்களையும், நெல்லிக்கனிகளையும் நித்யமும் கொடுக்க வேண்டும். ப்ராம்ஹணர்களின் அக்னியை, விறகுகளால் ஜ்வலிக்கச் செய்ய வேண்டும். இவ்விதம் ஸ்நானம் செய்த பிறகு ப்ராம்ஹண தம்பதிகளைப் புஜிப்பிக்க வேண்டும். பலவிதமான வஸ்துக்களைத் தானம் செய்ய வேண்டும். இந்த விதியுடனிருந்து 'மாதவ:ப்ரீயதாம்' என்று கொடுக்க வேண்டும். பிதா, பிதாமஹர், ப்ரபிதாமஹர், மாதா, மாத்தாமஹர், வ்ருத்த மாதாமஹர், இவர்களுடனும் இருபத்தொரு குலங்களுடனும், இஷ்டமான போகங்களைப் புஜித்து, விஷ்ணு லோகத்தை அடைவான். மாகமாஸத்தில் உஷ: காலத்தில் ஸ்நானம் செய்தால்.

नारदीये – सम्प्राप्ते माघमासे तु तपस्विजनवल्लभे। क्रोशन्ति सर्ववारीणि समुद्गच्छति भास्वति।। पुनीमः सर्वपापानि त्रिविधानि न संशयः इति।।

நாரதீயத்தில்:- 'ருஷிகளுக்கு ப்ரியமான மாகமாஸம் வந்தவுடன், ஸூர்யன் உதிக்கும் பொழுது, மனம், வாக்கு, காயம் இவைகளால் செய்யப்படும் மூன்று விதமான ஸகல

பாபங்களையும் அகற்றுகின்றேம்' என்று ஸகல ஜலங்களும் கூவுகின்றன.

पाद्मे — आपो नारायणो देवः सर्ववेदेषु पठ्यते । मकरस्थे रवौ माघे गोविन्दाच्युत माधव । स्नानेनानेन मे देव यथोक्तफलदो भव ।। इति मन्त्रं समुच्चार्य स्नायान्मौनं समाश्रितः ।। बहिः स्नात्वा तु वाप्यादौ द्वादशाब्दफलं लभेत् । तटाके द्विगुणं राजन्नद्यादौ तु चतुर्गुणम् ।। दशधा देवखातेषु शतधा च महानदी । शतं चतुर्गुणं राजन् महानद्यास्तु सङ्गमे ।। सहस्रगुणितं सर्वं तत्फलं मकरे रवौ । गङ्गायां स्नानमात्रेण लभते मानुषो नृप ।।

பாத்மத்தில்:- ஜலமே நாராயணதேவன் என்று எல்லா வேதங்களிலும் சொல்லப்படுகிறது. ஸூர்யன் மகரத்திலிருக்கும் பொழுது, மாகமாஸத்தில் 'ஹே கோவிந்த, அச்யுத, மாதவ, தேவ இந்த ஸ்நானத்தால், சொல்லப்பட்டுள்ள பலத்தைக் கொடுப்பவராய் ஆகக்கடவீர்'. இவ்விதம் மந்த்ரத்தை உச்சரித்து, மௌனமாய் ஸ்நானம் செய்ய வேண்டும். வெளியிலுள்ள வாபீ முதலியதில் ஸ்நானம் செய்தால் பன்னிரண்டு அப்தக்ருச்ர பலத்தை அடைவான். ஓ அரசனே! தடாகத்தில் ஸ்நானம் செய்தால் இரு மடங்கு பலனையும், நதீ முதலியதில் நான்கு மடங்கு பலனையும், தேவகாதங்களில் பத்து மடங்கு பலனையும், மஹாநதியிலானால் நூறு மடங்கு பலனையும், மஹாநதிகளின் ஸங்கமத்திலானால் நானூறு மடங்கு பலனையும், கங்கையிலானால் ஆயிரம் மடங்கு பலனையும் மனிதன் அடைவான்.

पापानां भूरिभारस्य दाहदेशं प्रजापतिः । प्रयागं विदधे भूप प्रजानां च हिते स्थितः ।। दुर्जरा वैष्णवी माया देवैरपि सुदुस्त्यजा । प्रयागे दह्यते साऽपि माघमासे नराधिप ।। मकरस्थे रवौ माघे यत्र कापि बहिर्जले । निष्कामैर्वा सकामैर्वा स्नातव्यं हरितुष्टये इति ।। प्रकरणपर्यालोचनया माघस्नानं नित्यं काम्यं चेत्याहुः ।। चन्द्रिकायाम्

– नित्यं नैमित्तिकं काम्यं त्रिविधं स्नानमुच्यते। तर्पणं तु भवेत्तस्य ह्यङ्गत्वेन प्रकीर्तितम् इति॥

அரசனே! ப்ரம்ஹதேவன், மனிதரின் ஹிதத்தில் கருத்துள்ளவராய், பாபங்களின் பெரும் சுமையை எரிக்கும் ப்ரதேசமாக ப்ரயாகக்ஷேத்ரத்தைக் கற்பித்தார். விஷ்ணுவினுடையதாகிய மாயை, அழிக்க முடியாததும், தேவர்களாலும் தள்ளமுடியாததாயுமாகும். அந்த மாயையும், மாகமாஸத்தில் ப்ரயோக க்ஷேத்ரத்தில் தஹிக்கப்படுகின்றது. ஸூர்யன் மகரத்திலிருக்கும் பொழுது, மாகமாஸத்தில், வெளியிலுள்ள எந்த ஜலத்திலாவது, ஸகாமர்களும், நிஷ்காமர்களும், விஷ்ணுவின் ப்ரீதிக்காக ஸ்நானம் செய்ய வேண்டும். இந்த ப்ரகரணத்தை ஆலோசித்ததால், மாகஸ்நானம், நித்யமும், காம்யமும் என்று சொல்கின்றனர். சந்த்ரிகையில்:- நித்யம், நைமித்திகம், காம்யம் என்று மூன்று விதமாய்ச் சொல்லப்பட்ட ஸ்நானம் எதுவோ, அதற்கு அங்கமாகத் தர்ப்பணம் சொல்லப்பட்டுள்ளது.

—★—

मलापकर्षणस्नानम्

अथ मलापकर्षणस्नानम्॥ तत्र भरद्वाजः – अभ्यङ्गस्नपने योग्या वारा ये तिथिभिस्सह। कथ्यन्ते तेऽधुना स्पष्टं पुष्टये बलवृद्धये। इन्दोर्बुधस्य सौरेश्च वारेऽभ्यङ्गः प्रशस्यते। कान्तिं श्रियं तथा दद्युः भोगान् वाराधिपाः क्रमात्। द्वितीयाद्याश्चतस्रश्च प्रशस्ताः सप्तमी तथा। नवमी दशमी चैव त्रयोदश्यपि च स्मृताः॥ भानुभौमामराचार्यशुक्रवारेषु सङ्गमे। व्यतीपाते च जन्मर्क्षे नाभ्यङ्गस्नानमाचरेत्॥ एकादश्यां चतुर्दश्यामष्टम्यां प्रतिपद्यपि। षष्ठ्यां पर्वणि चाभ्यङ्गस्नानं नैव समाचरेत्॥ उत्तराफल्गुनी ज्येष्ठा श्रवणार्द्रासु रात्रिषु। अभ्यङ्गस्नपनं धीमान् सुखार्थी वर्जयेत्तथा॥

शिशुरोगार्तवृद्धानां यथाकालं शरीरिणाम्। अभ्यङ्गोष्णोदकस्नानं नैव दोषावहं स्मृतम् इति ।।

மலாபகர்ஷண ஸ்நானம்

இனி மலாபகர்ஷண ஸ்நானம் (எண்ணெய் தேய்த்து முழுகுதல்) சொல்லப்படுகிறது. அதில்,) பரத்வாஜர்:- அப்யங்கஸ்நானத்தில் யோக்யமான திதிகளும் வாரங்களும் எவையோ, அவையை, இப்பொழுது வ்யக்தமாய், புஷ்டிக்கும், பலவ்ருத்திக்கும் சொல்லுகிறேன். சந்த்ரன், புதன், சனி இவர்களின் வாரத்தில் அப்யங்கம் புகழப்படுகிறது. அந்த வாரங்களின் அதிபதிகள், முறையே காந்தி, லக்ஷ்மி, போகங்கள் இவைகளைக் கொடுப்பார்கள். த்வீதியை முதல் நான்கு திதிகளும், ஸப்தமியும், நவமியும், தசமியும், த்ரயோதசியும், ப்ரசஸ்தங்களாம், பானுவாரம், பௌமவாரம், குருவாரம், சுக்ரவாரம், ஸங்க்ரமணம், வ்யதீபாதம், ஜன்ம நக்ஷத்ரம் இவற்றிலும் ஏகாதசீ, சதுர்தசீ, அஷ்டமீ, ப்ரதமை, ஷஷ்டீ, பர்வம் இவைகளிலும் அப்யங்க ஸ்நானத்தைச் செய்யக் கூடாது. உத்தர பல்குனீ, ஜ்யேஷ்டா, ச்ரவணம், ஆர்த்ரை இவைகளிலும், ராத்ரியிலும், ஸுகத்தை விரும்பிகிறவன் அப்யங்க ஸ்நானத்தை தவிர்க்க வேண்டும். பாலர், பிணியாளர், வ்ருத்தர் இவர்களுக்கும், ஸமயத்திற்குத் தக்கபடி, அப்யங்கமும் உஷ்ணோதக ஸ்நானமும் தோஷத்தைச் செய்யாதென்று சொல்லப்பட்டுள்ளது.

व्यासः – पञ्चमीं दशमीं चैव तृतीयां च त्रयोदशीम्। अभ्यङ्गात् स्पर्शनात् पानाद्यश्च तैलं निषेवते ।। चतुर्णां तस्य वृद्धिः स्यात् धनापत्यबलायुषाम् इति ।। यत्तु गर्ग आह – न च स्पृश्यात् त्रयोदश्यां तृतीयायां तिथौ तथा। शाश्वतीं भूतिमन्विच्छन् दशम्यामपि पण्डितः इति, यदपि गार्ग्य आह – 'त्रयोदश्यां तृतीयायां प्रतिपद्दशमीद्वये। तैलाभ्यङ्गं न कुर्वीत पिबेत्तु द्वादशीं विना' इति, यदपि वृद्धगार्ग्यवचनम्

– 'दशमी पुत्रनाशाय धनहान्यै त्रयोदशी। तृतीयोभयनाशाय स्नाने ता वर्जयेदतः' इति, एतानि वचनानि क्षत्रियादिविषयाणि। 'त्रयोदश्यां तृतीयायां दशम्यां चैव सर्वदा । शूद्रविट्क्षत्रियाःस्नानं न कुर्युस्तैलसंस्कृतम्' इति जाबालिस्मरणादिति केचित्।।

வ்யாஸர்:- பஞ்சமீ, தசமீ, த்ருதீயை, த்ரயோதசீ இவைகளில் எவன், அப்யங்கத்தாலாவது, ஸ்பர்சத்தாலாவது, பானத்தாலாவது தைலத்தை உபயோகிக்கின்றானோ, அவனுக்கு தனம், குழந்தை, பலம், ஆயுஸ் என்ற நான்கும் வ்ருத்தியை அடையும். ஆஞல், **கர்க்கர்:-** ''த்ரயோதசியிலும், த்ருதீயையிலும், தசமியிலும், சாச்வதமான ஸம்பத்தை விரும்பும் பண்டிதன் தைலத்தைத் தொடக்கூடாது'' என்று சொல்லிய வசனமும், **கார்க்யர்:-** ''த்ரயோதசீ, த்ருதீயை, ப்ரதமை, தசமீ இவைகளில் தைலாப்யங்கம் செய்து கொள்ளக் கூடாது, உட்கொள்ளலாம், த்வாதசியைத் தவிர்த்து'' என்று சொல்லிய வசனமும், **வ்ருத்தகார்க்யர்:-** தசமீ புத்ரனைக் கொல்லும், த்ரயோதசீ தனத்திற்கு ஹானியைச் செய்யும், த்ருதீயை இவ்விரண்டையும் நாசமாக்கும், ஆகையால் அப்யங்க ஸ்நானத்தில் அந்தத் திதிகளை வர்ஜிக்க வேண்டும்'' என்று சொல்லிய வசனமும், க்ஷத்ரியன் முதலியவரைப் பற்றியது. (ஏனெனில்) 'த்ரயோதசீ, த்ருதீயை, தசமீ இவைகளில், சூத்ரன், வைச்யன், க்ஷத்ரியன் இவர்கள் தைலத்துடன் ஸ்நானம் செய்யக் கூடாது' என்று ஜாபாலி ஸ்ம்ருதி இருப்பதால் என்கின்றனர் சிலர்.

अपरे तु –सर्वेषामपि द्विजानां दशम्यादावभ्यङ्गस्ननिषेध-पराण्येव गर्गादिवचनानि । जाबालिवचनं तु क्षत्रियादीनां दोषाधिक्यप्रतिपादनार्थम् । सामान्येन निषेधेऽपि दोषाधिक्या-न्निषेधनम् । तद्दोषभेदहेतुत्वादिति शास्त्रविदो विदुः इति मरीचिस्मरणादित्याहुः ।। तथा च आपस्तम्बः – यादृच्छिकं तु यत्

स्नानं भोगार्थं क्रियते द्विजैः। तन्निषिद्धं दशम्यादौ नित्यं नैमित्तिकं न तु इति॥

மற்றவரோவெனில், 'கர்க்கர் முதலியவரின் வசனங்களெல்லாம் மூன்று வர்ணத்தாருக்கும் தசமீ முதலிய காலங்களில் அப்யங்க ஸ்நானத்தை நிஷேதிப்பதில் தாத்பர்யமுள்ளவைகளே, ஜாபாலி வசனமோவெனில், க்ஷத்ரியர் முதலியவர்க்கு, தோஷமதிகம் என்று சொல்வதில் தாத்பர்யமுள்ளது, (ஏனெனில்) 'ஸாமான்யமாய் நிஷேதத்திலும், தோஷாதிக்யத்தால் நிஷேதிப்பது, அந்தத் தோஷத்தின் பேத காரணத்தால் என்று சாஸ்த்ரம் அறிந்தவர் சொல்லுகின்றனர்' என்று மரீசி ஸ்ம்ருதி இருப்பதால்' என்கின்றனர். அவ்விதமே, **ஆபஸ்தம்பர்:-** த்விஜர்கள், ஸுகத்திற்காக, யாத்ருச்சிகமான எந்த ஸ்நானத்தைச் செய்கின்றனரோ அதுதான் தசமீ முதலியவைகளில் நிஷேதிக்கப்படுகிறது. நித்யமும், நைமித்திகமுமான ஸ்நானம் நிஷேதிக்கப்படவில்லை.

जाबालिरपि — नित्यं न हापयेत् स्नानं काम्यं नैमित्तिकं च यत्। दशम्यामपि कर्तव्यं न तु यादृच्छिकं क्वचित् इति॥ यादृच्छिकं - मलापकर्षणार्थम्, 'मलव्यपोहनफलं स्नानं यादृच्छिकं तु तत्' इति गर्गस्मरणात्॥ एवञ्च नित्यनैमित्तिककाम्यस्नानानां दशम्यादाव-प्रतिषेधः। यादृच्छिकस्यैव निषेधः॥ यदुक्तमापस्तम्बेन - 'विना तु सततस्नानं न स्नायाद्दशमीषु च' इति, यदपि गर्गेणोक्तम्, 'पुत्रजन्मनि सङ्क्रान्तौ श्राद्धे जन्मदिने तथा। नित्यस्नाने च कर्तव्ये तिथिदोषो न विद्यते' इति, तत्काम्य नैमित्तिकयोरपि प्रदर्शनार्थमिति स्मृतिचन्द्रिकायाम्॥

ஜாபாலியும்:- நித்யம், காம்யம், நைமித்திகம் என்ற ஸ்நானங்களை விடக்கூடாது. அவைகளைத் தசமியிலும் செய்ய வேண்டும். யாத்ருச்சிக ஸ்நானத்தை மட்டில்

செய்யவே கூடாது. யாத்ருச்சிகம் அழுக்கைப் போக்குவதற்கான ஸ்நானம். 'அழுக்கைப் போக்குவதைப் பலனாக உள்ள ஸ்நானம் எதுவோ அது 'யாத்ருச்சிகம்' என்று கர்க்க ஸ்ம்ருதி இருப்பதால். இவ்விதம் இருப்பதால், நித்யம் நைமித்திகம், காம்யம் என்ற ஸ்நானங்களுக்குத் தசமீ முதலியவைகளில் ப்ரதிஷேதமில்லை. யாத்ருச்சிக ஸ்நானத்திற்கு மட்டில் நிஷேதம். ஆனால், **ஆபஸ்தம்பர்:-** நித்ய ஸ்நானம் தவிர மற்ற ஸ்நானத்தைக் தசமியில் செய்யக் கூடாது' என்று சொல்லியதும், கர்க்கர்:- 'புத்ரஜன்மம், ஸங்க்ரமணம், ச்ரார்த்ததினம், பிறந்தநாள் இவைகளில் செய்யும் ஸ்நானத்திலும், நித்ய ஸ்நானத்திலும் திதிதோஷமில்லை' என்று சொல்லியதும், காம்ய நைமித்திக ஸ்நானங்களையும் சொல்வதற்காம்' என்று ஸ்ம்ருதி சந்த்ரிகையில் சொல்லப்பட்டுள்ளது.

व्यासः – षष्ठ्यष्टमी पञ्चदशी पक्षद्वयचतुर्दशी। अत्र सन्निहितं पापं तैले मांसे क्षुरे भगे' इति ॥ मनुरपि – पक्षादौ च रवौ षष्ठ्यां रिक्तायां च तिथौ तथा। तैलेनाभ्यज्यमानस्तु धनायुर्भ्यां प्रहीयते इति॥ गर्गः – पञ्चदश्यां चतुर्दश्यामष्टम्यां रविसङ्क्रमे । द्वादश्यां सप्तमीषष्ठ्योस्तैलस्पर्शं विवर्जयेत् इति ॥ चन्द्रिकायाम् – कुहूपूर्णेन्दुसङ्क्रान्ति चतुर्दश्यष्टमीषु च । नरश्चण्डालयोनिः स्यात् तैलस्त्रीमांससेवनात् ॥ उत्पत्तौ च विपत्तौ च दन्तकाष्ठे च मैथुने । अभ्यङ्गेऽभ्युदयस्नाने तिथिस्तात्कालिकी स्मृता इति ॥

வ்யாஸர்:- ஷஷ்டீ, அஷ்டமீ, பர்வங்கள், சதுர்தசீ இவைகளில் தைலத்திலும், மாம்ஸத்திலும், க்ஷௌரத்திலும், ஸ்த்ரீ இடத்திலும் பாபம் நெருங்கியுள்ளது. அக்காலங்களில் அவைகளை ஸேவிக்கக் கூடாதென்பதாம். **மனுவும்:-** ப்ரதமையிலும், பானு வாரத்திலும், ஷஷ்டியிலும், ரிக்ததிதியிலும், (சதுர்த்தீ, நவமீ, சதுர்தசிகளிலும்), தைலாப்யங்கம் செய்து கொள்பவன், தனத்தாலும், ஆயுளாலும் விடப்படுவான்.

கர்க்கர்:- பர்வங்கள், சதுர்தசீ, அஷ்டமீ, ஸூர்ய ஸங்க்ரமணம், த்வாதசீ, ஸப்தமீ, ஷஷ்டீ இக்காலங்களில் தைல ஸ்பர்சத்தை வர்ஜிக்க வேண்டும். சந்த்ரிகையில்:- அமா, பூர்ணிமா, ஸங்க்ரமணம், சதுர்தசீ, அஷ்டமீ இக்காலங்களில், மனிதன், தைலம், ஸ்த்ரீ, மாம்ஸம் இவைகளை ஸேவிப்பானுகில் சண்டாளனுய்ப் பிறப்பான். ஜனனம், மரணம், தந்தகாஷ்டம், ஸ்த்ரீஸங்கம் இவைகளில் திதி அக்காலத்திலுள்ளது (நிஷேத விஷயமாகியது) என்று சொல்லப்பட்டுள்ளது.

पुराणेऽपि – चतुर्दश्यष्टमी षष्ठी अमावास्या च पूर्णिमा । पर्वाण्येतानि राजेन्द्र रविसङ्क्रान्तिरेव च ॥ तैलस्त्रीमांससंभोगी पर्वस्वेतेषु यः पुमान् । विण्मूत्रभाजनं नाम प्रयाति नरकं नरः इति ॥ बोधायनः – अष्टम्यां च चतुर्दश्यां पञ्चदश्यां विशेषतः । शिरोभ्यङ्गं वर्जयेत्तु पर्वसन्धौ तथैव इति ॥ वृद्धगार्ग्योऽपि – एकादश्यां दशम्यां च द्वादश्यां पञ्चपर्वसु । श्राद्धाहे च विवाहे च स्त्रियं तैलं च वर्जयेत् इति ।

புராணத்திலும்:- சதுர்தசீ, அஷ்டமீ, ஷஷ்டீ, அமா, பூர்ணிமா, ஸூர்ய ஸங்க்ரமணம் இவை பர்வங்களெனப்படும். இந்தப் பர்வங்களில் எந்த மனிதன் தைலம், ஸ்த்ரீ, மாம்ஸம் இவைகளை ஸேவிக்கின்றுனே அவன், மலமூத்ர பாஜனம் என்னும் நரகத்தை அடைகின்றுன். **போதாயனர்:-** அஷ்டமீ, சதுர்தசீ, பர்வங்கள், பர்வ ஸந்தி இவைகளில் தலையில் அப்யஞ்ஜனத்தை வர்ஜிக்க வேண்டும்.

मरीचिरपि – पञ्चपर्वसु नन्दासु व्यतीपाते च सङ्क्रमे । स्त्रियं तैलं च मांसं च दन्तकाष्ठं च वर्जयेत् इति ॥ गार्ग्यः – तैलस्नानं सदा पुण्यं कुर्यादामलकैः श्रिये । सप्तमी नवमी दर्शं रविसङ्क्रमणादृते इति ॥ शातातपोऽपि – अमायां च नवम्यां च सप्तम्यां च विशेषतः । धात्रीकल्पेन यत् स्नानं तत्स्नानं च विवर्जयेत् इति । कालादर्शे – नवमी

सप्तमी दर्शसङ्क्रान्तिग्रहणेषु च । धात्रीफलस्य कल्केन तैलस्नानं च नाचरेत् इति ।। वृद्धवसिष्ठः – दन्तकाष्ठे त्वमावास्या मैथुने च चतुर्दशी। हन्ति सप्तकुलं पुंसां तैलग्रहणतोऽष्टमी ।। दिवा कपित्थच्छायायां रात्रौ दधिषु सक्तुषु। धात्रीकल्के तु सप्तम्यामलक्ष्मीर्वर्तते सदा इति ।।

மரீசியும்:- *பஞ்சபர்வங்களிலும், நந்தைகளிலும், வ்யதீபாதத்திலும், ஸங்க்ரமணத்திலும், ஸ்த்ரீ, தைலம், மாம்ஸம், பற்குச்சி இவைகளை வர்ஜிக்க வேண்டும்.* **கார்க்யர்:-** *எப்பொழுதும், புண்யமான தைல ஸ்நானத்தையும், ஸ்ரீ கரமான ஆமலக ஸ்நானத்தையும் செய்யலாம். ஸப்தமீ; நவமீ, தர்சம், ஸங்க்ரமணம் இக்காலங்களைத் தவிர்த்து.* **சாதாதபரும்:-** *அமா, நவமீ, ஸப்தமீ இவைகளில் நெல்லிக் கனிகளால் ஸ்நானத்தையும் வர்ஜிக்க வேண்டும்.* **காலாதர்சத்தில்:-** *நவமீ, ஸப்தமீ, அமா, ஸங்க்ரமணம், க்ரஹணம் இக்காலங்களிலும் நெல்லிக் கனியாலும், தைலத்தாலும் ஸ்நானத்தைச் செய்யக் கூடாது.* **வ்ருத்த வஸிஷ்டர்:-** *அமாவாஸ்யையில் தந்தகாஷ்டமும், சதுர்தசியில் மைதுனமும், அஷ்டமியில் தைலாப்யங்கமும், செய்யப்பட்டால் மனிதரின் ஏழு குலங்களைக் கொல்லும். பகலில் விளாமரத்தின் நிழலிலும், இரவில் தயிரிலும், மாவிலும், ஸப்தமியில் நெல்லிக்கனியிலும், எப்பொழுதும் மூதேவி வஸிக்கின்றாள்.*

एवं वारनिषेधोऽपि ज्योतिःशास्त्रे प्रदर्शितः – 'सन्तापः कान्तिरल्पायुर्धनं निर्धनता तथा । अनारोग्यं सर्वकामा अभ्यङ्गाद्भास्करादिषु इति ।। वामनपुराणे – नाभ्यङ्गमर्के न च भूमिपुत्रे क्षौरं च शुक्रे च कुजे च मांसम्। बुधे च योषित् परिवर्जनीया शेषे तु सर्वाणि सदैव कुर्यात् इति ।। चन्द्रिकायाम् – तैलाभ्यङ्गो नार्कवारे न भौमे नो संक्रान्तौ वैधृतौ नापि षष्ठ्याम्। पर्वण्यष्टम्यां च नेष्टश्चतुर्थ्यां प्रोक्ते मुक्त्वा वासरं सूर्य सूनोः इति ।। सूर्यसूनुः शनिः ।।

இவ்விதம், வாரங்களின் நிஷேதமும் ஜ்யோதிச் சாஸ்த்ரத்தில் சொல்லப்பட்டுள்ளது. பானுவாரம் முதல் ஏழு வாரங்களிலும் அப்யங்கம் செய்து கொள்வதால், முறையே, ஸந்தாபம், காந்தி, ஆயுளின் குறைவு, தனம், தாரித்ர்யம், ஆரோக்யமின்மை, ஸகல காமங்கள் என்ற இவை உண்டாகும். வாமன புராணத்தில்:- பானுவாரத்தில் அப்யங்க ஸ்நானம் கூடாது. செவ்வாய்க் கிழமையில் க்ஷௌரம் கூடாது. வெள்ளிக் கிழமையிலும், செவ்வாய்க் கிழமையிலும் மாம்ஸம் கூடாது. புதவாரத்தில் ஸ்த்ரீ ஸங்கத்தை வர்ஜிக்க வேண்டும். மற்றக் காலங்களில் எல்லாவற்றையும் எப்பொழுதும் செய்யலாம். சந்த்ரிகையில்:- பானுவாரம், பௌமவாரம், ஸங்க்ரமணம், வைத்ருதி, ஷஷ்டீ, அஷ்டமீ, சதுர்தசீ இவைகளில் சனிக்கிழமை இல்லாவிடில், தைலாப்யங்கம் கூடாது.

स्मृत्यन्तरे – पाते पर्वणि सङ्क्रान्त्यां ग्रहणे चन्द्रसूर्ययोः । तैलाभ्यङ्गो न दोषाय यदि स्याद्रविनन्दनः इति ॥ कालादर्शे – भौमार्कशुक्रवारेषु नाभ्यङ्गस्नानमाचरेत्॥ तापकान्तिमृतिद्रव्यारोग्या-लक्ष्म्यखिलेप्सितम्। क्रमाद्रव्यादिवारेषु तैलेन स्नास्यतः फलम् इति॥ षट्त्रिंशन्मतेऽपि – हृत्तापकान्ती मरणं धनमारोग्यमेव च। दारिद्र्यं सर्वकामाप्ति रभ्यङ्गे भास्करादिषु इति ॥ वृद्धवसिष्ठः – सूर्यादिसौर्यन्तदिने नराणां तैलोप भोगात् क्रमशः फलानि । हृत्तापकान्ती मरणं धनं च रोगप्रहाणं विधनत्वमिष्टम् इति ॥

மற்றொரு ஸ்ம்ருதியில்:- வ்யதீபாதம், பர்வம், ஸங்க்ரமணம், சந்த்ர ஸூர்ய க்ரஹணம் இவைகளில் தைலாப்யங்கம் தோஷாவஹமாகாது, சனிவாரம் சேர்ந்திருந்தால், காலாதர்சத்தில்:- பௌமவாரம், பானுவாரம், சுக்ரவாரம் இவைகளில் அப்யங்க ஸ்நானம் செய்யக் கூடாது. பானுவாரம் முதல் ஏழு வாரங்களிலும் தைலாப்யங்கம் செய்து கொள்பவனுக்கு, முறையே,

ஸந்தாபம், காந்தி, மரணம், த்ரவ்யம், ஆரோக்யம், அலக்ஷ்மீ, (தாரித்ர்யம்) ஸகல காமப்ராப்தி என்ற பலன் உண்டாகும். ஷட்த்ரிம்சன்மதத்திலும்:- மனஸ்தாபம், காந்தி, மரணம், தனம், ஆரோக்யம், தாரித்ர்யம், ஸகல காமப்ராப்தி இவைகள், முறையே, பானுவாரம் முதலிய வாரங்களில் அப்யங்கம் செய்து கொள்வதால் உண்டாகும் பலன்களாம். வ்ருத்த வஸிஷ்டர்:- பானுவாரம் முதல் சனிவாரம் வரையுள்ள தினங்களில் தைலாப்யங்கம் செய்து கொள்ளும் மனிதர்களுக்கு, முறையே, மனஸ்தாபம், காந்தி, மரணம், தனம், ஆரோக்கியம், தாரித்ர்யம், இஷ்ட்ப்ராபதி என்ற இவை பலன்களாம்.

चन्द्रिकायाम् – चित्रासु हस्ते श्रवणे च तैलं क्षौरं विशाखासु भिषक्षु वर्ज्यम्। मूले मृगे भाद्रपदे तु मांसं योषिन्मघासूत्तरकृत्तिकासु इति ॥ कालादर्शे – तिथिवारसमायोगे बलीयान्वार इष्यते इति ॥ ब्रह्मसिद्धान्ते – तिथिरेकगुणा प्रोक्ता नक्षत्रं तु चतुर्गुणम्। करणं षड्गुणं चैव वारश्चाष्टगुणः स्मृतः इति ॥

சந்த்ரிகையில்:- சித்ரை, ஹஸ்தம், ச்ரவணம் இவைகளில் தைலத்தையும், விசாகம், சதயம் இவைகளில் க்ஷௌரத்தையும், மூலம், ம்ருகசீர்ஷம், பூரட்டாதி, உத்திரட்டாதி இவைகளில் மாம்ஸத்தையும், மகம், உத்திரங்கள், க்ருத்திகை இவைகளில் ஸ்த்ரீ ஸங்கத்தையும் வர்ஜிக்க வேண்டும். காலாதர்சத்தில்:- திதியும் வாரமும் சேர்ந்தால் வாரம் அதிக பலமுள்ளதென்று சொல்லப்படுகிறது. ப்ரம்ஹஸித்தாந்தத்தில்:- திதி ஒரு மடங்கும், நக்ஷத்ரம் நான்கு மடங்கும், கரணம் ஆறு மடங்கும், வாரம் எட்டு மடங்கும் பலமுள்ளது என்று சொல்லப்பட்டுள்ளது.

स्मृत्यर्थसारे – तैलाभ्यङ्गनिषेधेषु तिलतैलं निषिध्यते । अभ्यङ्गस्य निषेधे तु सार्षपादेरपीष्यते ॥ स्नेहेनाभ्यङ्गो भवति स स्नेहस्सार्षपादिकः । न भोजनादौ तैलस्य निषेधोऽभ्यङ्ग एव सः ॥

तैलशब्दस्तिलस्नेहे स रूढो न च यौगिकः । अतस्तिलविकारेषु पिण्याकतिलमोदके ।। शष्कुलीकृसरादौ च निषेधो नैव जायते । सार्षपादौ तैलशब्दस्तत्कार्यसदृशत्वतः इति ।। सङ्ग्रहे – श्राद्धाहे जन्मदिवसे विवाहे सुखदुःखयोः । व्रते चैवोपवासे च तैलाभ्यङ्गं विवर्जयेत् ।। उपोषितस्य व्रतिनः कृत्तकेशस्य नापितैः । तावत्तिष्ठति वै लक्ष्मीः यावत्तैलं न संस्पृशेत् इति ।।

ஸ்ம்ருத்யர்த்த ஸாரத்தில்:- தைல சப்தத்துடன் அப்யங்கத்தை நிஷேதிக்கும் இடங்களில் எள்ளின் எண்ணெய் நிஷேதிக்கப்படுகிறது. அப்யங்கத்தை நிஷேதிக்கும் இடத்தில் கடுகின் நெய் முதலியவைக்கும் நிஷேதம் சொல்லப்படுகிறது. அப்யங்கமானது ஸ்நேஹத்தால் (எண்ணெய்யால்) ஏற்படுகிறது. அந்த ஸ்நேஹம் கடுகின் ஸ்நேஹம் முதலியது ஆகும். எள்ளின் எண்ணெய்க்குப் போஜனதிகளில் நிஷேதமில்லை. அப்யங்கத்தில் மட்டிலேயே நிஷேதம். 'தைலம்' என்னும் சப்தமானது எள்ளின் எண்ணெயில் ரூடமானது. அது யௌகிகமல்ல. ஆகையால் எள்ளின் விகாரங்களான பிண்ணாக்கு, எள்கொழுக்கட்டை, சஷ்குலீ, க்ருஸரம் முதலியவைகளில் நிஷேதம் உண்டாவதில்லை. கடுகின் ஸ்நேஹம் முதலியதில் தைல சப்தம் ப்ரயோகிக்கப்படுவது, தைலத்தின் கார்யத்தால் அதற்கு ஸமமாய் இருப்பதால், ஸங்க்ரஹத்தில்:- ச்ராத்ததினம், பிறந்தநாள், விவாஹம், ஸுகம், துக்கம், வ்ரதம், உபவாஸம் இவைகளில் தைலாப்யங்கத்தை வர்ஜிக்க வேண்டும். உபவாஸம் செய்பவனுடையவும், வ்ரதானுஷ்டாதா வினுடையவும், க்ஷௌரம் செய்து கொண்டவனுடையவும் லக்ஷ்மியானவள், அவன் தைலத்தைத் தொடாத வரையில் அவனிடம் இருப்பாள்.

रत्नावल्याम् – सुरया लिप्तदेहस्य प्रायश्चित्तं विधीयते । प्रातरभ्यक्तदेहस्य निष्कृतिर्न विधीयते इति ।। अयं निषेधो

नरकचतुर्दशीव्यतिरिक्तविषयः।। प्रत्यूष आश्वयुक्कृष्णचतुर्दश्या-मिनोदये। स्नानमभ्यज्य कर्तव्यं नरैर्नरकभीरुभिः इति स्मरणात्।।

ரத்னாவளியில்:- ஸூரையினால் பூசப்பட்ட தேஹமுடையவனுக்கு ப்ராயச்சித்தம் விதிக்கப்படுகிறது. ப்ராதः காலத்தில் அப்யங்கம் செய்து கொண்டவனுக்கு ப்ராய்சித்தம் விதிக்கப்படுவதில்லை. இந்த நிஷேதம், நரகசதுர்தசியைத் தவிர்த்து மற்றக் காலத்தைப் பற்றியது, (ஏனெனில்) ''ஆச்வயுஜ க்ருஷ்ண சதுர்தசியில் உஷःகாலத்தில் ஸூர்யோதயத்தில், நரகத்தினின்றும் பயந்த மனிதர்கள் அப்யங்கம் செய்து கொண்டு ஸ்நானம் செய்ய வேண்டும்'' என்று ஸ்ம்ருதி இருப்பதால்.

—★—

नरकचतुर्दशीस्नानम्

स्मृतिरत्ने – आश्वयुक्कृष्णपक्षे तु चतुर्दश्यामिनोदये। तैलाभ्यङ्गेन कर्तव्यं स्नानमुष्णेन वारिणा इति।। स्मृत्यर्थसारे – यस्यां हतश्चतुर्दश्यां नरको विष्णुना निशि। तस्यामभ्यञ्जनं कार्यं नरैर्नरकभीरुभिः इति।। कालादर्शेऽपि – प्रत्यूष आश्वयुग्दर्शे कृताभ्यङ्गादिमङ्गलः। भक्त्या संपूजयेल्लक्ष्मीमलक्ष्मीविनिवृत्तये इति।।

நரகசதுர்தசீ ஸ்நானம்

ஸ்ம்ருதிரத்னத்தில்:- ஆச்வயுஜ க்ருஷ்ணபக்ஷத்தில் சதுர்தசியில் ஸூர்யோதயத்தில், தைலாப்யங்கத்துடன், உஷ்ணோதகத்தால் ஸ்நானம் செய்ய வேண்டும். ஸ்ம்ருத்யர்த்தஸாரத்தில்:- எந்தச் சதுர்தசியில் ராத்ரியில், நரகாஸூரன் விஷ்ணுவினால் கொல்லப்பட்டானோ அந்த ராத்ரியில், நரகத்தினின்றும் பயந்த மனிதர்கள் அப்யங்கம் செய்து கொண்டு ஸ்நானம் செய்ய வேண்டும். காலாதர்சத்திலும்:- ஆச்வயுஜமாஸத்தின் அமையில் விடியற்காலத்தில் அப்யங்கம் முதலிய மங்களங்களைச்

செய்து கொண்டு, பக்தியுடன், லக்ஷ்மியைப் பூஜிக்க வேண்டும். மூதேவின் நிவ்ருத்திக்காக.

विष्णुपुराणे — स्वातीस्थिते रवाविन्दुर्यदि स्वातीगतो भवेत्। पञ्चत्वगुदकस्नायी कृताभ्यङ्गविधिर्नरः ॥ नीराजितो महालक्ष्मीमर्चयन् श्रियमश्नुते। दीपैर्नीराजनादत्र दीपावलिरिति स्मृता इति ॥ सारसङ्ग्हे – चतुर्दशी याऽऽश्वयुजस्य कृष्णा स्वात्यर्कयुक्ता च भवेत् प्रभाते। स्नानं समभ्यज्य नरैस्तु कार्यं सुगन्धितैलेन विभूतिकामैः ॥ तैले लक्ष्मीर्जले गङ्गा दीपावलिदिने वसेत्। अलक्ष्मीपरिहारार्थमभ्यङ्ग-स्नानमाचरेत् ॥ तत आभरणं वस्त्रं धारयेत् सर्वसम्पदः इति ॥

விஷ்ணுபுராணத்தில்:- ஸூர்யன் ஸ்வாதியில் இருக்கும் பொழுது, சந்திரனும் ஸ்வாதிக்கு வரும்பொழுது, மனிதன் அப்யங்கம் செய்து கொண்டு, ஐந்து பட்டைகள் சேர்ந்த ஜலத்தால் ஸ்நானம் செய்து, நீராஜனம் செய்யப்பட்டவனாய், மஹாலக்ஷ்மியைப் பூஜித்தால், ஸம்பத்தை அடைகிறான். இக்காலத்தில் தீபங்களால் நீராஜனம் செய்வதால் இது 'தீபாவளி' எனச் சொல்லப்பட்டது. **ஸாரஸங்க்ரஹத்தில்:-** ஸ்வாதியில் உள்ள ஸூர்யனுடன் கூடிய ஆச்வயுஜ க்ருஷ்ண சதுர்தசியில் உஷ:காலத்தில், ஸம்பத்தை விரும்பும் மனிதர்கள் வாஸனையுள்ள தைலத்தினால் அப்யங்கம் செய்து கொண்டு, ஸ்நானம் செய்ய வேண்டும். தீபாவளி தினத்தில், தைலத்தில் லக்ஷ்மியும், ஜலத்தில் கங்கையும் வஸிப்பாள். ஆகையால் அலக்ஷ்மியை விலக்குவதற்காக அப்யங்க ஸ்நானம் செய்ய வேண்டும். பிறகு, ஸகல ஸம்பத்து முண்டாவதற்காக, ஆபரணம், வஸ்த்ரம் இவைகளைத் தரிக்க வேண்டும்.

स्मृत्यर्थसारे — तैलाभ्यङ्गे निषिद्धाः स्युः सर्वाश्च तिथयस्सदा। द्वितीयां वर्जयित्वैव दृष्टादृष्टद्विदोषतः इति ॥ प्रायशः सर्वासु तिथिषु अभ्यङ्गस्य निषेधे प्राप्ते विशेषमभ्यनुजानाति प्रचेताः –

'सार्षपं गन्धतैलं च यत्तैलं पुष्पवासितम्। अन्यद्रव्ययुतं तैलं न दुष्यति कदाचन इति।।

ஸ்ம்ருத்யர்த்தஸாரத்தில்:- தைலாப்யங்க விஷயத்தில், த்விதீயையைத் தவிர்த்து மற்ற எல்லாத் திதிகளும், த்ருஷ்டமும் அத்ருஷ்டமுமான இரண்டுவித தோஷத்தாலும் நிஷித்தங்களாகவே ஆகும். அநேகமாய் எல்லாத் திதிகளிலும் அப்யங்கத்திற்கு நிஷேதம் ப்ராப்தமாயிருக்கும் பொழுது விசேஷத்தைச் சொல்லுகிறார், **ப்ரசேதஸ்:-** கடுகின் எண்ணெயும், வாஸனைத் தைலமும், புஷ்பத்திலல் வாஸனையுள்ள தைலமும். வேறு த்ரவ்யத்துடன் கூடிய தைலமும் ஒருகாலும் துஷ்டமாகாது.

यमोऽपि—घृतं च सार्षपं तैलं यत्तैलं पुष्पवासितम्। न दोषः पक्वतैलेषु स्नानाभ्यङ्गेषु नित्यशः इति।। सङ्ग्रहे – पक्वतैलं गन्धतैलं सार्षपं पुष्पवासितम्। वर्ज्यहिष्वप्यदुष्टं स्यात् द्रव्यान्तरयुतं तथा इति।। स्मृत्यर्थसारे – निषिद्धदिवसे वारे रात्रौ च व्याधितस्य च। द्रव्यान्तरयुतं तैलं न दुष्यति कदाचन।। शवानुगमनं क्षौरं कृत्वा नाभ्यङ्गमाचरेत्। स्नानीयं च तथा विप्रो न शुध्यति कदाचन इति।।

யமனும்:- நெய், கடுகெண்ணெய், புஷ்பத்தால் வாஸனையேற்றப்பட்ட தைலமும், காய்ச்சப்பட்ட தைலங்களும் அப்யங்க ஸ்நானத்தில் தோஷமற்றவை. **ஸங்க்ரஹத்தில்:-** காய்ச்சப்பட்ட தைலம், வாஸனைத் தைலம், கடுகெண்ணெய், புஷ்பவாஸனையுள்ள தைலம், வேறு த்ரவ்யத்துடன் கூடிய தைலம் இவை நிஷித்த தினங்களிலும் தோஷமற்றவை. **ஸ்ம்ருத்யர்த்த ஸாரத்தில்:-** நிஷித்த தினத்திலும், நிஷித்த வாரத்திலும், ராத்ரியிலும், வ்யாதியுள்ளவனுக்கும், வேறு த்ரவ்யத்துடன் கூடிய தைலம் ஒரு பொழுதும் துஷ்டமாகாது. சவானுகமனம் செய்த பிறகும், க்ஷௌரம் செய்து கொண்ட பிறகும் அப்யங்க ஸ்நானம் செய்யக் கூடாது. உபயோகிப்பவன் ஒருகாலும் சுத்தனாகான்.

सत्यव्रतः – पिष्टपकारनालेन घृतेनाथ जलेन वा। आमं वाऽपि युतं तैलं न कदाचन दुष्यति॥ रोगातुरस्यापि तथा तैलं जातु न दुष्यति इति॥ पुराणे – तिथि नक्षत्रवारेषु निषिद्धेष्वपि रात्रिषु। तैलमाज्येन संयुक्तमद्भिर्वा शुद्धिमाप्नुयात् इति॥ स्मृत्यन्तरे – स्त्रौ पुष्पं गुरौ दूर्वां भृगौ गोमयमेव च। भौमे भूमिं विनिक्षिप्य तैलाभ्यङ्गं समाचरेत्॥ द्रव्यान्तरयुतं तैलं न दुष्येद्ग्रहणं विना। तुलसीदलसंयुक्तं ग्रहणेऽपि न दुष्यति॥ शिरोभ्यक्तेन तैलेन नाङ्गं किंचिदुपस्पृशेत्। तिलपिष्टं च नाश्नीयात् तस्य चायुर्न रिष्यति इति॥

ஸத்யவ்ரதர்:- மாவு, பக்வமான கஞ்சி, நெய், ஜலம் இவைகளில் ஒன்றுடன் சேர்ந்ததானுல், பச்சையான எண்ணெயும் ஒருகாலும் துஷ்டமாகாது. ரோகத்தால் பீடிக்கப்பட்டவனுக்குத் தைலம் கெட்டதல்ல. **புராணத்தில்:-** நிஷித்தமான திதி, நக்ஷத்ரம், வாரம் இவைகளிலும், ராத்ரிகளிலும், நெய் அல்லது ஜலத்துடன் கூடிய தைலம் சுத்தமாகும். **மற்றொரு ஸ்ம்ருதியில்:-** பானுவாரத்தில் புஷ்பத்தையும், குருவாரத்தில் அருகையும், வெள்ளிக்கிழமையில் கோமயத்தையும், பௌமவாரத்தில் மண்ணையும் போட்டு தைலாப்யங்கம் செய்து கொள்ளலாம். வேறு த்ரவ்யத்துடன் கூடிய தைலம், க்ரஹணம் தவிர மற்றக் காலத்தில் துஷ்டமாகாது. துளஸீ தளத்துடன் கூடிய தைலம் க்ரஹணத்திலும் துஷ்டமாகாது. தலையில் தேய்த்துக் கொண்ட தைலத்தால் வேறு ஒரு அங்கத்தையும் தடவக்கூடாது. எள்ளுடன் மாவைப் புஜிக்கக் கூடாது. இந்த நியமத்துடன் இருப்பவனுக்கு ஆயுள் குறையாது.

गार्ग्यः – कुर्यान्नैमित्तिकं स्नानं शीताद्भिः काम्यमेव च। नित्यं यादृच्छिकं चैव यथारुचि समाचरेत् इति॥ सत्यव्रतः – मन्त्रवन्मन्त्रहीनं च स्नानं द्विविधमीरितम्। मन्त्रैर्यत् क्रियते स्नानं मन्त्रवत्तत्प्रकीर्तितम्॥ मलापनुत्त्यै तैलाद्यैः मन्त्रहीनं मलापहम् इति॥

स्मृतिप्रदीपिकायाम् – अनुद्धृतैरुद्धृतैर्वा जलैःस्नानं समाचरेत् इति ।।

கார்க்யர்:- நைமித்திக ஸ்நானம், காம்ய ஸ்நானம் இவைகளை, சீத ஜலத்தால் செய்ய வேண்டும். நித்ய ஸ்நானம், யாத்ருச்சிக ஸ்நானம் இவைகளை இஷ்டப்படி செய்யலாம். ஸத்யவ்ரதர்:- மந்த்ரமுள்ளது என்றும், மந்த்ரமில்லாதது என்றும் இரண்டுவிதமாய் ஸ்நானம் சொல்லப்பட்டுள்ளது. மந்த்ரங்களுடன் செய்யப்படும் ஸ்நானம் மந்த்ர ஸ்நானம் எனப்படும். அழுக்கை யகற்றுவதற்காக எண்ணெய் முதலியதுடன் செய்யப்படும் மலாபகர்ஷண ஸ்நானம் அமந்த்ரக ஸ்நானம் எனப்படும். ஸ்ம்ருதிப்ரதீபிகையில்:- வெளியிலெடுக்கப்படாத ஜலத்தாலோ, வெளியிலெடுக்கப்பட்ட ஜலத்தாலோ ஸ்நானம் செய்யலாம்.

देवलः— उद्धृताश्चापि शुध्यन्ति शुद्धैः पात्रैः समुद्धृताः । एकरात्रोषिता आपस्त्याज्याः शुद्धा अपि स्वयम् इति ।। महाभारते – पादाभ्यङ्गं शिरोभ्यङ्गं द्विजोच्छिष्टावमार्जनम् । एकैकं पाण्डवश्रेष्ठ राजसूयाद्विशिष्यते इति ।। नारदीये – तैलाभ्यङ्गं महाराज ब्राह्मणानां करोति यः । स स्नातोऽब्दशतं साग्रं गङ्गायां नात्र संशयः इति ।।

தேவலர்:- சுத்தமான பாத்ரங்களால் எடுக்கப் பட்டால், உத்த்ருதஜலமும் சுத்தமேயாகும். சுத்தமான ஜலமாயினும், ஒரு ராத்ரி அதிக்ரமித்தால் அது தவிர்க்கத் தகுந்ததாகும். மஹாபாரதத்தில்:- ப்ராம்ஹணரின் பாதத்தில் எண்ணெய் தடவுவதும், அவரின் சிரஸ்ஸில் எண்ணெய் தடவுவதும், பிராம்ஹணனின் உச்சிஷ்டத்தைச் சுத்தம் செய்வதும், ஓ பாண்டவ ச்ரேஷ்டனே ! ஒவ்வொன்றும் ராஜஸூயத்தை விடச் சிறந்ததாகும். நாரதீயத்தில்:- ஓ மஹாராஜனே! எவன் ப்ராம்ஹணருக்குத் தைலாப்யங்கம் செய்கின்றானோ அவன், நூறு வருஷம் கங்கையில் ஸ்நானம் செய்தவனாகிறான். இதில் ஸம்சயமில்லை.

—★—

क्रियास्नानम्

अथ क्रियास्नानम् । तत्र शङ्खः – क्रियास्नानं प्रवक्ष्यामि यथावद्विधिपूर्वकम् । सरस्सु देवखातेषु तीर्थेषु च नदीषु च ॥ क्रियास्नानं समुद्दिष्टं स्नानं तत्र क्रिया मता । मृद्भिरद्भिश्च कर्तव्यं शौचमादौ यथाविधि ॥ जले निमग्न उन्मज्ज्य उपस्पृश्य यथाविधि । तीर्थस्यावाहनं कुर्यात् तत् प्रवक्ष्याम्यतः परम् ॥

க்ரியா ஸ்நானம்

இனி க்ரியா ஸ்நானம் சொல்லப்படுகிறது. அதில் சங்கர்:- க்ரியா ஸ்நானத்தை விதி உள்ளபடி சொல்லப் போகிறேன். ஸரஸ்ஸுகள், தேவகாதங்கள், தீர்த்தங்கள், நதிகள் இவைகளில் விதிப்படி ஸ்நானம் செய்வது க்ரியா ஸ்நானம் எனப்படும். அதில், ஸ்நானமே க்ரியை என்று சொல்லப்பட்டுள்ளது. ஆதியில் மண், ஜலம் இவைகளால் தேஹத்தைச் சுத்தி செய்து கொள்ள வேண்டும். பிறகு ஜலத்தில் மூழ்கி எழுந்து விதிப்படி ஆசமனம் செய்து, தீர்த்தத்தை ஆவாஹனம் செய்ய வேண்டும். இனி அதைச் சொல்லுகிறேன்.

प्रपद्ये वरुणं देवमम्भसां पतिमूर्जितम् । याचितं देहि मे तीर्थं सर्वपापापनुत्तये ॥ तीर्थमावाहयिष्यामि सर्वाघविनिषूदनम् । सान्निध्यमस्मिन् स्वे तोये स्थीयतां मदनुग्रहात् ॥ रुद्रान् प्रपद्ये वरदान् सर्वानप्सुषदस्त्वहम् । देवमप्सुषदं वह्निं प्रपद्येऽघनिषूदनम् ॥ अपः पुण्याः पवित्राश्च प्रपद्ये शरणं तथा । रुद्रश्चाग्निश्च शर्वश्च वरुणश्चाप एव च ॥ शमयन्त्वाशु मे पापं रक्षन्तु च सदैव माम् ॥

ஆவாஹன மந்த்ரங்கள் - ''ப்ரபத்யே வருணம் + ஸதைவமாம்'' என்று. அவைகளின் பொருள் - ''ஜலங்களுக்குப் பதியும், பலமுள்ளவனுமான வருண தேவனைச் சரணமடைகின்றேன். ஓ வருண! என்னுல்

வேண்டப்பட்ட தீர்த்தத்தை, ஸகல பாபங்களையும் போக்குவதற்கு எனக்குக் கொடுப்பாயாக. ஸகல பாபங்களையும் போக்குவதான தீர்த்தத்தை ஆவாஹனம் செய்யப் போகிறேன். உமதாகிய இந்தத் தீர்த்தத்தில் என்னை அனுக்ரஹிப்பதற்காக நீர் இருக்க வேண்டும். வரனைக் கொடுப்பவர்களான ருத்ரர்களையும், ஜலத்தில் வஸிப்பவர் எல்லோரையும் சரணமடைகிறேன். பாபத்தைப் போக்குகின்றவரும், ஜலத்தில் இருப்பவருமான அக்னியைச் சரணமடைகிறேன். புண்யப்ரதமாயும், பரிசுத்தமாயுமுள்ள ஜலத்தைச் சரணமடைகின்றேன். ருத்ரன், அக்னி, சர்வன், வருணன், ஜலம் என்ற இவர்கள் என் பாபத்தைச் சீக்கிரம் போக்க வேண்டும். எப்பொழுதும் என்னைக் காக்க வேண்டும்'' என்பது.

इत्येवमुक्त्वा कर्तव्यं ततः संमार्जनं कुशैः । आपोहिष्ठेति तिसृभिः यथावदनुपूर्वशः । हिरण्यवर्णा इति च ऋग्भिश्चतसृभिस्तथा ।। शन्नोदेवीरिति तथा शन्न आपस्तथैव च । सदमापः प्रवहतेत्येवं च समुदीरयेत् ।। एवं सम्मार्जनं कृत्वा छन्द आर्षं च दैवतम् । अघमर्षणसूक्तस्य संस्मरेत् प्रयतः सदा ।। ततोऽम्भसि निमग्नस्तु त्रिः पठेदघमर्षणम् । प्रदद्यान्मूर्द्धनि तथा महाव्याहृतिभिर्जलम् इति ।।

இவ்விதம் சொல்லிப் பிறகு, குசங்களால் மார்ஜனம் செய்து கொள்ள வேண்டும். 'ஆபோஹிஷ்ட' முதல் மூன்று ருக்குகளாலும், 'ஹிரண்யவர்ணா:' முதல் நான்கு ருக்குகளாலும் 'சம்நோதேவீ:, சம்நஆப:, இதமாப: ப்ரவஹத' என்ற ருக்குகளாலும் மார்ஜனம் செய்து கொள்ள வேண்டும். பிறகு, அகமர்ஷண ஸூக்தத்தின், சந்தஸ், ருஷி, தேவதை இவைகளை ஸ்மரிக்க வேண்டும். பிறகு, ஜலத்தில் மூழ்கியவனாய், அகமர்ஷண ஸூக்தத்தை மூன்று முறை ஜபிக்க வேண்டும். மஹா வ்யாஹ்ருதிகளால் தலையில் ஜலத்தை விட்டுக் கொள்ள வேண்டும்.

तीर्थयात्रायां वर्जनीयमाह व्यासः – छत्रं च हरते पादमर्धं हरति पादुका। यानं हरेत्त्रिपादं तु सर्वं हरति डोलिका॥ ऐश्वर्या ल्लोभमोहाद्वा गच्छेद्यानादिभिस्तु यः। निष्फलं तस्य तत्तीर्थं तस्माद्यानादि वर्जयेत् इति॥ विष्णुः – गोभिर्युक्तेन यानेन तीर्थयात्रां करोति यः। स याति नरकं घोरं यावद्गोरोमसङ्ख्यया इति॥

தீர்த்த யாத்ரையில் விடத் தகுந்தவைகளைச் சொல்கிறார், வ்யாஸர்:- தீர்த்த யாத்ரையில் குடை உபயோகிக்கப்பட்டால் அது புண்யத்தின் கால்பாகத்தை அபஹரிக்கும். பாதரக்ஷை பாதிபாகத்தை அபஹரிக்கும். டோலி முழுப்புண்யத்தையும் அபஹரிக்கும். ஐச்வர்யத்தால் அல்லது லோபத்தாலோ, மோஹத்தாலோ வாஹனம் முதலியவைகளால் எவன் தீர்த்தயாத்ரைக்குச் செல்கின்றானே, அவனுக்கு அந்தத் தீர்த்தம் நிஷ்பலமாகும். ஆகையால் வாஹனம் முதலியவைகளை வர்ஜிக்க வேண்டும். விஷ்ணு:- எருதுகளுடன் கூடிய வாஹனத்தால் எவன் தீர்த்த யாத்ரை செய்கின்றானே அவன், எருதுகளின் ரோமங்கள் எவ்வளவோ அவ்வளவு வர்ஷங்கள் வரையில் கோரமான நரகத்தை அடைகின்றான்.

पैठीनसिः – षोडशांशं स लभते यः परार्थेन गच्छति। अर्धतीर्थफलं तस्य यः प्रसङ्गेन गच्छति॥ तीर्थं प्राप्यानुषङ्गेण यस्तत्र स्नानमाचरेत्। स्नानार्धफलमाप्नोति तीर्थयात्राश्रितं न तु॥ नृणां पापकृतां तीर्थे पापस्य शमनं भवेत्। यथोक्तफलदं तीर्थं भवेच्छुद्धात्मनां नृणाम् इति॥ व्यासोऽपि – यस्य हस्तौ च पादौ च मनश्चैव सुसंयतम्। विद्या तपश्च कीर्तिश्च स तीर्थफलमश्नुते इति॥

பைடீநஸி:- *எவன் பிறருக்காகச் செல்கின்றானே அவன் தீர்த்த பலத்தின் 16-ல் ஒரு பாகமுள்ள பலனை அடைகிறான். வேறு கார்யத்தால் சென்றவன் தீர்த்த பலத்தின் பாதியை அடைவான். பிறருக்கு உதவியாய்ச்*

சென்றவன் அங்கு ஸ்நானம் செய்தால் ஸ்நானத்தின் பாதி பலனை அடைகிறான். தீர்த்த யாத்ரா பலனை முழுவதும் அடைய மாட்டான். பாபம் செய்த மனிதர் தீர்த்தத்தில் ஸ்நானம் செய்தால், பாபம் மட்டில் சாந்தமாகும். சுத்தரான மனிதருக்கே, தீர்த்தம் பூர்ண பலனைக் கொடுப்பதாகும். வ்யாஸரும்:- எவனது கைகளும், கால்களும், மனதும், அடக்கப்பட்டிருக் கின்றனவோ, எவனுக்கு வித்யையும், தபஸ், ஸுகம், கீர்த்தியும் உள்ளனவோ, அவன் தீர்த்தத்தின் பலத்தை அடைகிறான்.

वृद्धवसिष्ठः – पितरं मातरं वाऽपि भ्रातरं सुहृदं गुरुम् । निमज्जेत्तु यमुद्दिश्य द्वादशांशं लभेत सः ॥ तत्प्रार्थिते त्वष्टमांशं लभेत् स्नानफलं नरः इति ॥ पैठीनसिः – प्रतिकृतिं कुशमयीं तीर्थवारिणि मज्जयेत् । मज्जयेत्तु यमुद्दिश्य अष्टभागं लभेत सः ॥ अत्रायं मन्त्रः – 'कुशोऽसि त्वं पवित्रोऽसि ब्रह्मणा निर्मितः पुरा । त्वयि स्नाते स च स्नातो यस्यैतद्ग्रन्थिबन्धनम् इति ॥

வ்ருத்த வஸிஷ்டர்:- பிதா, மாதா, ப்ராதா, மித்ரன், குரு இவருள் எவரையாவது உத்தேசித்து ஸ்நானம் செய்தால், அந்த உத்தேச்யன், தீர்த்த பலத்தில் பன்னிரண்டிலொரு பாகத்தை அடைவான். உத்தேச்யன் ப்ரார்த்தித்துச் செய்த விஷயத்திலானால், அவன் எட்டிலொரு பாகத்தை அடைவான். பைடீநஸி:- குசத்தால் ப்ரதிநிதி செய்து, அதைத் தீர்த்த ஜலத்தில் முழுக்க வேண்டும். எவனை உத்தேசித்து முழுக்குகின்றானோ அவன் தீர்த்த பலனின் எட்டிலொரு பாகத்தை அடைவான். அதில் மந்த்ர மிது - 'குசோஸி + பந்தனம்' என்பது. இதன் பொருள் - 'நீ குசமாய் இருக்கின்றாய், சுத்தனாய் இருக்கிறாய், நீ முற்காலத்தில், ப்ரஹ்மாவினால் ஸ்ருஷ்டிக்கப்பட்டாய். நீ ஸ்நானம் செய்த பொழுது, இந்தக் குசமுடிச்சு எவனுடையதோ அவனும் ஸ்நானம் செய்தவனாய் ஆகிறான்' என்று.

तीर्थफलं न विक्रीणीयात् ।। तथाचापस्तम्बः – मांसमायुधं सुकृताशां च तिलतण्डुलांस्त्वेव धान्यस्य विशेषेण न विक्रीणीयात् इति ।। धर्मदानं तु विषयविशेषे स्मर्यते – देवतानां गुरूणां च मातापित्रोस्तथैव च । पुण्यं देयं प्रयत्नेन नापुण्यं चोदितं क्वचित् इति ।। शाण्डिल्यः – जीवनार्थं हतं तीर्थं जीवनार्थं हतं व्रतम् । सन्दिग्धोऽपि हतो मन्त्रो व्यग्रचित्तो हतो द्विजः ।। पृथिव्यां यानि तीर्थानि तानि सर्वाणि सागरे । सागरे यानि तानि स्युः पादे विप्रस्य दक्षिणे इति ।।

தீர்த்த பலத்தை விற்கக் கூடாது. அவ்விதமே, **ஆபஸ்தம்பர்:-** *மாம்ஸம், ஆயுதம், தீர்த்த ஸ்நானம் முதலியதின் புண்யகாலம், தான்யங்களுள் எள்ளு, அரிசி இவைகளையும் விற்கவே கூடாது. தர்மதானம் சிலருக்குச் செய்யலாம் என்று சொல்லப்படுகிறது - தேவதைகளுக்கும், பித்ருக்களுக்கும், மாதா பிதாக்களுக்கும் புண்யத்தை அவச்யம் கொடுக்க வேண்டும். பாபத்தை ஒருகாலும் கொடுக்கக் கூடாது.* **சாண்டில்யர்:-** *பிழைப்புக்காகச் செய்யப்படும் தீர்த்த ஸ்நானம் வீணாகும். ஜீவனத்திற்காகச் செய்யப்படும் வ்ரதமும் வீணாகும். ஸந்தேகிப்படும் மந்த்ரம் வீணாகும். நிலையில்லாத சித்தமுடைய ப்ராம்ஹணன் வீணாவான். பூமியில் எவ்வளவு தீர்த்தங்கள் உண்டோ அவையெல்லாம் ஸமுத்ரத்தில் இருக்கின்றன. ஸமுத்ரத்தில் எவ்வளவு தீர்த்தங்களோ அவையெல்லாம் ப்ராம்ஹணனின் வலது காலில் இருக்கின்றன.*

आश्वमेधिके — आस्ते हरिरचिन्त्यात्मा यत्रैव मधुसूदनः । तत्तीर्थं तत्परं ब्रह्म तत्पुण्यं तत्तपोवनम् ।। आचारवस्त्रान्तविशोधितेन सत्यप्रसन्नक्षमशीतलेन । ज्ञानाम्बुना स्नाति हि यश्च नित्यं किं तस्य भूयः सलिलेन कृत्यम् इति ।। शाण्डिल्यः – कुटुम्बिनो विनाऽन्येषां दृष्टं तीर्थादि सेवनम् । कुटुम्बिनां गृहे सर्वं विकलो निर्गतो गृहात् इति । विकलः – शून्यनित्यकर्मा ।।

ஆச்வமேதிகத்தில்:- மனத்திற்கெட்டாதவரும், மதுவை வென்றவருமான ஹரியானவர் எங்கு இருக்கின்றாரோ, அது தீர்த்தம், அது பரமான ப்ரம்ஹம், அது புண்யஸ்தலம், அதுவே தபோவனமாகும். ஆசாரமாகிய வஸ்த்ரத்தால் சோதிக்கப்பட்டதும், ஸத்யத்தால் தெளிந்ததும், க்ஷமையால் சீதளமுமான, ஜ்ஞானமெனும் ஜலத்திலுல் எவன் ஸ்நானம் செய்கின்றானே அவனுக்கு மறுபடி ஜலத்தால் என்ன கார்யம் இருக்கிறது. சாண்டில்யர்:- குடும்பிகளைத் தவிர மற்றவர்க்குத் தீர்த்தம் முதலியதின் ஸேவை சொல்லப்பட்டுள்ளது. குடும்பிகளுக்கு வீட்டிலேயே ஸகலமும் உள்ளது. விகலன் வீட்டிலிருந்து வெளியிற் செல்ல வேண்டும். விகலன் = நித்ய கர்மங்களில்லாதவன்.

—★—

नदीरजोदोषनिर्णयः

अथ नदीरजोदोषनिर्णयः ।। तत्र कात्यायनः – सम्प्राप्ते श्रावणे मासि सर्वा नद्यो रजस्वलाः । तासु स्नानं न कुर्वीत वर्जयित्वा तु जाह्नवीम् इति ।। योगयाज्ञवल्क्यः – यावन्नोदेति भगवान् दक्षिणाशाविभूषणम् । तावद्रेतोवहा नद्यो वर्जयित्वा तु जाह्नवीं इति ।। यावन्नोदेत्यगस्त्यः, तावद्रेतोवहाः रजस्वला इत्यर्थः ।। उदयोऽपि तस्य शरद्येव ज्योतिःशास्त्रे दर्शितः ।। एवं च वर्षाकाले रजस्वला इत्युक्तं भवति ।। मरीचिः – कर्कटे सरितस्सर्वा भवन्तीह रजस्वलाः । अप्रशस्तं तदा स्नानं वर्षादौ नववारिणि इति ।।

நதிகளின் ரஜோதோஷ நிர்ணயம்

இனி நதிகளின் ரஜோதோஷத்தின் நிர்ணயம் சொல்லப்படுகிறது. அதில், காத்யாயனர்:- ச்ராவண மாஸம் வந்தவுடன் எல்லா நதிகளும் ரஜஸ்வலையாய் ஆகின்றன. கங்கையைத் தவிர்த்த மற்ற நதிகளில் ஸ்நானம்

செய்யக் கூடாது. யோகயாக்ஞவல்க்யர்:- தெற்குத் திக்கின் ஆபரணமாகிய அகஸ்த்யர் எதுவரையில் உதயமாக வில்லையோ அது வரை, கங்கையைத் தவிர்த்த மற்ற நதிகள் ரஜஸ்வலைகளாம். அந்த அகஸ்த்யரின் உதயமும் சரத் காலத்திலேயே ஜ்யோதிச் சாஸ்த்ரத்தில் சொல்லப் பட்டுள்ளது. இவ்விதம் இருப்பதால் வர்ஷா காலத்தில் ரஜஸ்வலைகள் என்று சொல்லியதாய் ஆகின்றது. மரீசி:- கடக மாஸத்தில் எல்லா நதிகளும் ரஜஸ்வலைகளாய் ஆகின்றன. அப்பொழுது வர்ஷா காலத்தில் ஆரம்பம். புதுஜலத்தில் ஸ்நானம் நிஷித்தம் ஆகும்.

वृद्धगार्ग्योऽपि – वर्षादौ सरितः सर्वा भवन्तीह रजस्वलाः । तासु स्नानं न कुर्वीत वर्जयित्वा तु जाह्नवीम् इति ।। मार्कण्डेयः – द्विमासं सरितस्सर्वा भवन्तीह रजस्वलाः ।अप्रशस्तं तदा स्नानं वर्षादौ नववारिणि इति ।। कात्यायनोऽपि – नभोनभस्ययोर्मध्ये सर्वा नद्यो रजस्वलाः । तासु स्नानं न कुर्वीत देवर्षिपितृतर्पणम् इति ।।

வ்ருத்த கார்க்யரும்:- வர்ஷருதுவின் ஆதியில் எல்லா நதிகளும் ரஜஸ்வலைகளாய் ஆகின்றன. அவைகளில் ஸ்நானம் செய்யக் கூடாது, கங்கையைத் தவிர்த்து. மார்க்கண்டேயர்:- இங்கு, எல்லா நதிகளும் இரண்டு மாதம் முழுவதும் ரஜஸ்வலைகளாய் ஆகின்றன. அப்பொழுது வர்ஷருதுவின் ஆரம்பத்தில் புது ஜலத்தில் ஸ்நானம் நிஷித்தமாகும். காத்யாயனரும்:- ச்ராவண பாத்ரபத மாஸங்களின் நடுவில், எல்லா நதிகளும் ரஜஸ்வலைகள் ஆகின்றன. அவைகளில் ஸ்நானத்தையும், தேவர்ஷி பித்ரு தர்ப்பணத்தையும் செய்யக் கூடாது.

एतत्सर्वं कर्कटादिमासद्वयाभिप्रायम् ।। यदाह अत्रिः – सिंहकर्कटयोर्मध्ये सर्वा नद्यो रजस्वलाः । न स्नानादीनि कर्माणि तासु कुर्वीत मानवः इति ।। सिंहकर्कटमासद्वयमध्ये सर्वा रजस्वला इत्यर्थः। योगयाज्ञवल्क्यः – रजोदुष्टेऽम्भसि स्नानं वर्ज्यं नद्यादिषु द्विजैः ।

कदर्थितं रजस्तेषां सन्ध्योपास्तिश्च तर्पणम् इति ।। कदर्थितं - कुत्सितम्।। व्याघ्रपादः – सिंहकर्कटयोर्मध्ये सर्वा नद्यो रजस्वलाः। तासु स्नानं न कुर्वीत वर्जयित्वा समुद्रगाः इति। समुद्रगाः - महानदीः ।।

இவையெல்லாம் கடகம் முதலான இரண்டு மாதங்களைச் சொல்வதில் அபிப்ராயம் உடையவை. ஏனெனில், அத்ரி:- ஸிம்ஹ கடக மாஸங்களின் நடுவில் எல்லா நதிகளும் ரஜஸ்வலைகளாய் ஆகின்றன. அவைகளில், ஸ்நானம் முதலிய கர்மங்களை மனிதன் செய்யக் கூடாது. ஸிம்ஹ கடகமாஸங்கள் இரண்டிலும், எல்லா நதிகளும் ரஜஸ்வலைகள் என்பது பொருள். யோகயாக்ஞவல்க்யர்:- நதி முதலியவையில் ரஜஸ்ஸால் துஷ்டமான ஜலத்தில் ப்ராம்ஹணர்கள் ஸ்நானத்தை தவிர்க்க வேண்டும். ரஜஸ் வெறுக்கத்தக்கது ப்ராம்ஹணர் செய்யும் ஸந்த்யோ பாஸனம் தர்ப்பணம் இவையும் குறையுள்ளதாகும். வ்யாக்ரபாதர்:- ஸிம்ஹ கர்க்கட மாஸங்களில் எல்லா நதிகளும் ரஜஸ்வலைகள் ஆகின்றன. அவைகளில் ஸ்நானம் செய்யக் கூடாது. ஸமுத்ரத்தைச் சேரும் நதிகளை (மஹா நதிகளை)த் தவிர்த்து.

तत्र विशेषो दर्शितो भविष्यत् पुराणे – आदौ कर्कटके सर्वा महानद्यो रजस्वलाः । त्रिदिनं तु चतुर्थेऽह्नि शुद्धाः स्युर्जाह्नवी यथा इति ।। महाभारतेऽपि – महानद्यो देविका च कावेरी नर्मदा तथा । रजसा तु प्रदुष्टाः स्युः कर्कटात्तु त्र्यहं नृप इति ।। महानद्यो दर्शिताः ब्रह्मपुराणे – गोदावरी भीमरथी तुङ्गभद्रा च वेणिका । तापी पयोष्णिका विन्ध्यदक्षिणे तु प्रकीर्तिताः ।। भागीरथी नर्मदा च यमुना च सरस्वती । विशोका च वितस्ता च विन्ध्यस्योत्तरसंस्थिताः ।। द्वादशैता महानद्यो देवर्षिक्षेत्रसंभवाः इति ।।

அதில் விசேஷம் சொல்லப்பட்டுள்ளது, பவிஷ்யத்புராணத்தில்:- கடக மாஸத்தில் முதலில்,

எல்லா மஹாநதிகளும் மூன்று நாள் ரஜஸ்வலைகளாகின்றன, நான்காவது நாளில் சுத்தையாய் ஆகின்றன, கங்கை போல். **மஹாபாரதத்திலும்:-** ஓ அரசனே! மஹாநதிகளும், தேவிகா, காவேரீ, நர்மதா இவைகளும், கடகமாஸம் முதலில் மூன்று நாள் ரஜஸ்ஸிலுல் தோஷமுள்ளவைகளாய் ஆகின்றன. மஹாநதிகள் சொல்லப்பட்டுள்ளன, **ப்ரம்ஹ புராணத்தில்:-** கோதாவரீ, பீமரதீ, துங்கபத்ரா, வேணிகா, தாபீ, பயோஷ்ணிகா இவை விந்த்யத்தின் தென் பாகத்திலுள்ள மஹாநதிகள். பாகீரதி, நர்மதா, யமுனை, ஸரஸ்வதீ, விசோகா, விதஸ்தா இவை விந்த்யத்தின் வடக்குப் பாத்திலுள்ள மஹாநதிகள், இந்தப் பன்னிரண்டு மஹாநதிகளும் தேவர்ஷி க்ஷேத்ரங்களிலிருந்து உண்டாகியவைகளாம்.

वामनपुराणे तु – गोदावरी भीमरथी कृष्णवेणी सरस्वती। तुङ्गभद्रा सुप्रयोगा वेणी कावेरिकेति च ॥ दुग्धोदा नकिनी रेवा वारिगीता कलस्वना। एता अपि महानद्यः सह्यमूलाद्विनिः सृताः इति। नृसिंहपुराणेऽपि – गङ्गा च यमुना गोदावरी स्यात्तुङ्गभद्रका। कावेरी च महापुण्या महानद्यः प्रकीर्तिताः इति॥

வாமன புராணத்தில்:- கோதாவரீ, பீமரதீ, க்ருஷ்ணவேணீ, ஸரஸ்வதீ, துங்கபத்ரா, ஸுப்ரயோகா, வேணீ, காவேரீ, துக்தோதா, நளிநீ, ரேவா, வாரிகீதா, களஸ்வநா என்ற இவையும் ஸஹ்யமலையின் அடியினின்றும் வெளிவந்துள்ள மஹாநதிகளாம். **நரஸிம்ஹ புராணத்திலும்:-** கங்கா, யமுனை, கோதாவரீ, துங்கபத்ரா, காவேரீ என்ற நதிகளும் மஹாபுண்யமான மஹாநதிகள் எனச் சொல்லப்பட்டுள்ளதுன.

भरद्वाजः – उद्भूत्वा भूधरेऽभोधिं प्रविशत्यम्बुसन्ततिः। या सा महानदी ज्ञेया सर्वपापप्रणाशिनी इति ॥ एवं महानदीत्वेन परिगणितानामेव दिनत्रयं रजोदोषः। अन्यासां तु समुद्रगानामपि

मासद्वयं रजोदोष इत्यभिप्रेत्याह। कात्यायनः – प्रावृट्काले महानद्यः सन्ति नित्यं रजस्वलाः। तासु स्नानं न कुर्वीत वर्जयित्वा तु जाह्नवीम् इति॥

பரத்வாஜர்:- மலையில் உண்டாகி, ஸமுத்ரத்தை அடையும் ஜலப்ரவாஹ மெதுவோ, அது, ஸகல பாபங்களையும் அகற்றும் மஹாநதி என்று அறியத்தகுந்தது. இவ்விதம் மஹாநதி என்று எண்ணப்பட்ட நதிகளுக்கே மூன்று நாள் ரஜோதோஷம். மற்ற நதிகள் ஸமுத்திர காமினிகளாகினும் அவைகளுக்கு இரண்டு மாதம் ரஜோதோஷமுண்டு, என்ற அபிப்ராயத்தைக் கொண்டு சொல்லுகிறார், காத்யாயனர்:- வர்ஷா காலத்தில் மஹாநதிகள் நித்யமும் ரஜஸ்வலைகளாய் இருக்கின்றன. அவைகளில் ஸ்நானம் செய்யக் கூடாது, கங்கையைத் தவிர்த்து.

स एव – कर्कटादौ रजोदुष्टा गोमती त्रासरत्रयम्। चन्द्रभागा सती सिन्धुः सरयूर्नर्मदा तथा॥ इति॥ अत्रापवादमाह मरीचिः – आदित्यदुहिता गङ्गा प्लक्षजाता सरस्वती। रजसा नाभिभूयन्ते ये चान्ये नदसंज्ञिताः इति॥ मार्कण्डेयः – कालिन्दी गौतमी गङ्गा वेणिका च सरस्वती। सामर्थ्यादाभिजात्याच्च रजो नाभिभवत्यमूः इति॥ आभिजात्यम् - देवसम्भूतत्वम्॥ जाह्नव्यादित्यसम्भूता प्लक्षजाता सरस्वती। रजसा नैव दुष्यन्ति नदाः कृष्णा च वेणिका इति॥

காத்யாயனரே:- கடக மாஸத்தின் முதலில் மூன்று நாள், கோமதீ, சந்த்ரபாகா, கோதாவரீ, ஸிந்து, ஸரயூ, நர்மதா என்ற நதிகள் ரஜோதோஷம் உடையவைகளாய் இருக்கின்றன. இங்கு அபவாதத்தைச் சொல்லுகிறார் மரீசி:- யமுனை, கங்கா, ப்லக்ஷஜா, ஸரஸ்வதீ இவைகளும், நதமென்று பெயருள்ளவைகளும் ரஜஸ்ஸினால் தோஷம் அடைவதில்லை. மார்க்கண்டேயர்:- யமுனை, கௌதமீ, கங்கா, வேணிகா, ஸரஸ்வதீ என்ற இந்த நதிகளின்

ஸாமர்த்யத்தாலும், தேவரிடம் இருந்து உண்டாகிய தாலும், அவைகளை ரஜோதோஷம் கெடுப்பதில்லை. **காத்யாயனரும்:-** கங்கா, யமுனை, ப்லக்ஷஜா, ஸரஸ்வதீ, க்ருஷ்ணை, வேணிகா என்ற இவைகளும் நதங்களும் ரஜஸ்ஸினால் தோஷத்தை அடைவதில்லை.

वामनपुराणे – सरस्वती नदी पुण्या तथा वैतरणी नदी । आपगा च महापुण्या गङ्गा मन्दाकिनी तथा ।। मधुप्रवाहांऽशुमती कौशिकी पापनाशिनी । दषद्वती महापुण्या तथा वैतरणी नदी ।। एतासामुदकं पुण्यं वर्षाकाले प्रवर्द्धितम् । रजस्वलात्वमेतासां विद्यते न कदाचन इति ।। यमः – गङ्गा धर्मोद्भवा पुण्या यमुना च सरस्वती । अन्तर्गतरजोयोगाः सर्वाहःस्वपि चामलाः इति ।। कालादर्शे – सिंहकर्कटयोर्नद्यः सर्वा एव रजस्वलाः । त्रिदिनं स्युर्महानद्यो गोदां पेण्णां सरस्वतीम् ।। भागीरथीं च कालिन्दीं नदान् शोणादिकान् विना इति ।।

வாமன புராணத்தில்:- புண்யையான ஸரஸ்வதீ, வைதரணீ, மஹா புண்யையான கங்கை, மந்தாகினீ, மதுப்ரவாஹா, அம்சுமதீ, பாபத்தை அகற்றும் கௌசிகீ, மஹா புண்யையான த்ருஷத்வதீ, வைதரணீ என்ற இந்த நதிகளின், வர்ஷா காலத்தில் பெருகும் ஜலமும் புண்யமாகும். இவைகளுக்கு, ரஜஸ்வலையின் தன்மை ஒருகாலுமில்லை. **யமன்:-** கங்கா, தர்மோத்பவா, யமுனை, ஸரஸ்வதீ என்ற இந்த நதிகள், எக்காலத்திலும் நிர்மலங்கள், இவைகளுக்கு ரஜோதோஷமில்லை. **காலாதர்சத்தில்:-** ஸிம்ஹ கடக மாஸங்களில் எல்லா நதிகளும் ரஜஸ்வலைகளாய் ஆகின்றன. கோதாவரீ, பெண்ணை, ஸரஸ்வதீ, பாகீரதீ, காளிந்தீ, சோணம் முதலிய நதங்கள் இவைகளைத் தவிர்த்து மற்ற மஹா நதிகள் மூன்று நாள் ரஜஸ்வலைகளாய் ஆகும்.

कात्यायनस्तु गङ्गाया अपि रजोदोषमाह – प्रवृत्ते श्रावणे मासि त्र्यहं गङ्गा रजस्वला। चतुर्थेऽहनि संम्प्राप्ते शुद्धा भवति जाह्नवी इति॥ योगयाज्ञवल्क्योऽपि – प्रथमं कर्कटादौ तु त्र्यहं गङ्गा रजस्वला इति॥ अत्र जाह्नव्या रजोयोगाभाववचनानां भूयस्त्वाद्रजोदोषो नास्तीत्येव युक्तम्॥

காத்யாயனரோவெனில்:- கங்கைக்கும் ரஜோ தோஷத்தைச் சொல்லுகிறார் - 'ச்ராவண மாஸம் ஆரம்பித்தவுடன், கங்கை மூன்று நாள் ரஜஸ்வலையாய் இருக்கிறாள். நான்காவது நாள் வந்தவுடன் சுத்தையாய் ஆகிறாள்' என்று. யோக்யாக்ஞவல்க்யரும்:- கடக மாஸத்தின் ஆரம்பத்தில் மூன்று நாள் கங்கை ரஜஸ்வலையாய் இருக்கிறாள். இங்கு, கங்கைக்கு ரஜஸ் ஸம்பந்தமில்லை என்று சொல்லும் வசனங்களே அதிகமாய் இருப்பதால், கங்கைக்கு ரஜோ தோஷமில்லை என்பதே யுக்தமாகும்.

केचित्तु – या निस्सृता नदा : प्रोक्ता याश्च गङ्गेति कीर्तिताः। एतासां कर्कटे भानौ रजोदोषो न विद्यते। कावेरी तुङ्गभद्रा च कृष्णवेणी च गौतमी। भागीरथी च विख्याता पञ्च गङ्गाः प्रकीर्तिताः इति वचनमुदाहरन्तः कावेर्या रजोदोषो नास्तीत्याहुः॥ अपरे पुनः – कालिन्दी गौतमी गङ्गा वेणिका च सरस्वती। सामर्थ्यादाभिजात्याच्च रजो नाभिभवत्यमूः इत्यविद्यमानरजोदोषासु गौतमीभागीरथीकृष्ण-वेणीषु गङ्गाभिधानासु 'याश्च गङ्गेति कीर्तिताः' इति वचनस्य सावकाशत्वात्, 'महानद्यो देविका च कावेरी नर्मदा तथा। रजसा तु प्रदुष्टाः स्युः कर्कटादौ त्र्यहं नृप' इति प्रातिस्विक महाभारतवचनाच्च दिनत्रयं रजोदोषोऽस्तीत्याहुः॥

சிலரோவெனில்:- ''எவை நதம் எனப்படுகின்றனவோ. எவை கங்கை எனச் சொல்லப்பட்டுள்ளனவோ

இவைகளுக்குக் கடக மாஸத்தில் ரஜோதோஷமில்லை. காவேரீ, துங்கபத்ரா, க்ருஷ்ணவேணீ, கௌதமீ, பாகீரதீ, என்ற ஐந்து நதிகளும் கங்கை எனச் சொல்லப்பட்டுள்ளன'' ஏன்னும் வசனத்தைச் சொல்பவராய், காவேரிக்கு ரஜோதோஷமில்லை என்கின்றனர். மற்றவரோவெனில்:- 'யமுனை, கௌதமீ, கங்கா, வேணிகா, ஸரஸ்வதீ என்ற இந்த நதிகளை ரஜோதோஷம் அடைவதில்லை' என்ற வசனப்படி ரஜோதோஷமில்லாத கௌதமீ, பாகீரதீ, க்ருஷ்ணவேணீ என்ற அவைகள் கங்கையெனப் பெயருள்ளதால் அவைகளில் 'யாச்ச கங்காः ப்ரகீர்த்திதாः' என்ற வசனம் ஸாவகாசமாய் இருப்பதாலும், 'மஹாநதிகளான தேவிகா, காவேரீ, நர்மதா இவைகள், கடக மாஸத்தின் முதலில் மூன்று நாள் ரஜோதோஷம் உள்ளவைகளாய் ஆகின்றன'' என்று, மஹா பாரதத்திலுள்ள விசேஷ வசனத்தாலும், மூன்று நாள் ரஜோதோஷம் உண்டென்கின்றனர்.

एवमुक्तरजोदोषस्य क्वचित् क्वचिदपवादमाह, कात्यायनः – उपाकर्मणि चोत्सर्गे प्रेतस्नाने तथैव च। चन्द्रसूर्यग्रहे चैव रजोदोषो न विद्यते। महदम्बु समं वाऽपि यदि तिष्ठेत् पुरातनम्। नवाम्बु मिश्रितं तेन न दुष्टमिति सूरयः इति ॥ व्याघ्रपादः – अभावे कूपवापी नामनपायिपयोभृताम्। रजोदुष्टेऽपि पयसि ग्रामभोगो न दुष्यति इति ॥

இவ்விதம் சொல்லப்பட்டுள்ள ரஜோதோஷத்திற்குச் சிற்சில இடங்களில் அபவாதத்தைச் சொல்லுகிறார். காத்யாயனர்:- உபாகர்மம். உத்ஸர்ஜனம், ப்ரேத ஸ்நானம், சந்த்ர ஸூர்ய க்ரஹணம் இவைகளில் ரஜோதோஷமில்லை. புதிதாய் வரும் ஜலத்தைவிட அதிகமாகவோ, ஸமமாகவோ உள்ள நதியின் முந்திய ஜலத்துடன் புது ஜலம் சேர்ந்தால் அந்த ஜலம் துஷ்டமாகாதென்று அறிந்தவர் சொல்லுகின்றனர். வ்யாக்ரபாதர்:- குறைவற்ற ஜலமுடைய கிணறுகள்,

வாபிகள் இவை இல்லாவிடில், ரஜோதோஷமுள்ள ஜலத்தையும் க்ராமத்தார் உபயோகிப்பது தோஷாவஹமாகாது.

—★—

गौणस्नानानि

अथ गौणस्नानानि तत्र, दक्षः – अशिरस्कं भवेत् स्नानं कटीमात्रमशक्तितः। आर्द्रेण वाससा वाऽपि सर्वाङ्गपरिमार्जनम् इति। जाबालिः – अशिरस्कं भवेत् स्नानं स्नानाशक्तौ तु कर्मिणः। नाभिमात्रं निमज्ज्याप्सु कटिं वा क्षालयेज्जलैः ॥ आर्द्रेण वाससा वाऽङ्गमार्जनं कापिलं विदुः इति ॥

கௌண ஸ்நானங்கள்

இனி கௌண ஸ்நானங்கள் சொல்லப்படுகின்றன. அதில், தக்ஷர்:- தலையை முழுக்காமல் கழுத்துவரை நனைப்பதும், அதிலும் சக்தி இல்லாவிடில் இடுப்பு வரையில் நனைப்பதும், அல்லது ஈரமான வஸ்த்ரத்தால் எல்லா அங்கங்களையும் துடைத்துக் கொள்வதும் ஸ்நானமாகும். ஜாபாலி:- கர்மத்தை அனுஷ்டிப்பவனுக்குச் சக்தி இல்லாவிடில், தலையை முழுக்காமல் ஸ்நானம் விதிக்கப்படுகிறது. அல்லது நாபிவரையில் ஜலத்தில் முழுகி இடுப்பை ஜலத்தால் அலம்பலாம். அல்லது, ஈரமான வஸ்த்ரத்தால் அங்கங்களைத் துடைத்துக் கொள்ளலாம், இதைக் காபில ஸ்நானம் என்கின்றனர்.

पराशरः – स्नानानि पञ्च पुण्यानि कीर्तितानि महर्षिभिः। आग्नेयं वारुणं ब्राह्मं वायव्यं दिव्यमेव च। आग्नेयं भस्मना स्नानमवगाह्य तु वारुणम्। आपोहिष्ठेति च ब्राह्मं वायव्यं गोरजःस्मृतम् ॥ यत्तु सातपवर्षेण तत्स्नानं दिव्यमुच्यते। तत्र स्नात्वा तु गङ्गायां स्नातो भवति मानवः इति ॥ दक्षोऽपि – आग्नेयं वारुणं ब्राह्मं वायव्यं दिव्यमेव च। पञ्च स्नानानि पुण्यानि मनुः स्वायम्भुवोऽब्रवीत् इति ॥

பராசரர்:- புண்யமான ஸ்நானங்கள் ஐந்து என மஹர்ஷிகள் சொல்லியுள்ளனர். அவை, ஆக்னேயம், வாருணம், ப்ராம்ஹம், வாயவ்யம், திவ்யம் என்பனவாம். விபூதியினால் செய்வது ஆக்னேய ஸ்நானமாம். ஜலத்தில் முழுகுவது வாருண ஸ்நானமாம். 'ஆபோஹிஷ்ட' என்ற மந்த்ரங்களால் செய்வது ப்ராஹ்ம ஸ்நானமாம். பசுவின் புழுதியால் செய்வது வாயவ்ய ஸ்நானமாம். வெயிலுடன் கூடிய மழையில் செய்யும் ஸ்நானம் திவ்ய ஸ்நானமாம். மனிதன் அதில் ஸ்நானம் செய்தால், கங்கையில் ஸ்நானம் செய்தவனாய் ஆகிறான். தக்ஷரும்:- ஆக்னேயம், வாருணம், ப்ராம்ஹம், வாயவ்யம், திவ்யம் என்று ஐந்து ஸ்நானங்கள் புண்யமானவை என்று ஸ்வாயம்புவ மனு சொன்னார்.

व्यासः — अशक्तावशिरस्कं वा स्नानमस्य विधीयते। आर्द्रेण वाससा वाऽङ्गमार्जनं कापिलं स्मृतम् ॥ ब्राह्मादीन्यथावाऽशक्तौ स्नानान्याहुर्मनीषिणः। ब्राह्ममाग्नेय मुद्दिष्टं वायव्यं दिव्यमेव च। वारुणं यौगिकं चैव गौणं स्नानं प्रकीर्तितम्। ब्राह्मं तु मार्जनं मन्त्रैः कुशैः सोदकबिन्दुभिः ॥ आग्नेयं भस्मनाऽऽपादमस्तकाद्देहधूलनम्। गवां हि रजसा प्रोक्तं वायव्यं स्नानमुत्तमम् ॥ यत्तु सातपवर्षेण दिव्यं तत्स्नानमुच्यते। वारुणं चावगाहस्तु मानसं चात्मवेदनम् ॥ यौगिकं स्नानमाख्यातं यद्योगे विष्णुचिन्तनम्। आत्मतीर्थमिति ख्यातं सेवितं ब्रह्मवादिभिः ॥ मनः शुद्धिकरं पुंसां नित्यं तत् स्नानमाचरेत्। शक्तश्चेद्वारुणं विद्वानप्रायत्ये तथैव च इति ॥

வ்யாஸர்:- சக்தி இல்லாவிடில், சிரஸ்ஸை நனைக்காமல் ஸ்நானம் விதிக்கப்படுகிறது. அல்லது, ஈரமுள்ள வஸ்த்ரத்தினால் அங்கங்களைத் துடைத்துக் கொள்ளுதல் என்ற காபில ஸ்நானமும் சொல்லப்பட்டுள்ளது. அதிலும் அசக்தி இருந்தால், ப்ராம்ஹம் முதலிய ஸ்நானங்களைப் புத்திமான்கள் சொல்லுகின்றனர். ப்ராம்ஹம், ஆக்னேயம், வாயவ்யம்,

திவ்யம், வாருணம், யௌகிகம் என்ற இவை கௌண ஸ்நானங்களெனப்படும். மந்த்ரங்களுடன் குசோதகங்களால் துடைத்துக் கொள்வது ப்ராம்ஹ ஸ்நானம். விபூதியால் கால் முதல் தலை வரையில் தேஹத்தைப் பூசிக்கொள்வது ஆக்னேய ஸ்நானம். பசுக்களின் புழுதியால் செய்யும் ஸ்நானம் வாயவ்ய ஸ்நானம் எனப்படும். இது சிறந்தது. வெயிலுடன் கூடிய மழையினால் செய்யும் ஸ்நானம் திவ்ய ஸ்நானம் எனப்படுகிறது. ஆத்மத்யானம் செய்வது மானஸ ஸ்நானம் எனப்படுகிறது. யோகத்தில் விஷ்ணுவை த்யானித்தல் யௌகிக ஸ்நானம் எனப்படுகிறது. இது ஆத்ம தீர்த்தம் என ப்ரஸித்தமாகியது. பிரம்ஹவாதிகளால் ஸேவிக்கப் பட்டது. மனிதருக்கு மனச்சுத்தியைச் செய்வதாகும். நித்யமும் அந்த ஸ்நானத்தைச் செய்ய வேண்டும். சக்தியுள்ளவனாகில், அறிந்தவன் வாருண ஸ்நானத்தைச் செய்ய வேண்டும். அசுத்தி ஏற்பட்டாலும் அதைச் செய்ய வேண்டும்.

गर्गः — दिव्यं वायव्य माग्नेयं ब्राह्मं सारस्वतं तथा । मानसं चेति विज्ञेयं गौणस्नानं तु षड्विधम् इति ॥ योगयाज्ञवल्क्यः — असामर्थ्याच्छरीरस्य कालशक्त्याद्यपेक्षया । मन्त्रस्नानादिकान् सप्त केचिदिच्छन्ति सूरयः ॥ मान्त्रं भौमं तथाऽऽग्नेयं वायव्यं दिव्यमेव च । वारुणं मानसं चेति सप्त स्नानान्यनुक्रमात् ॥ आपोहीत्यादिभिर्मान्त्रं मृदालंभस्तु पार्थिवम् । वारुणं चावगाहस्तु मानसं विष्णुचिन्तनम् ॥ मानसं प्रवरं स्नानं सर्वे शंसन्ति सूरयः ॥ आत्मतीर्थप्रशंसायां व्यासेन पठितं यतः इति ॥

கர்க்கர்:- திவ்யம், வாயவ்யம், ஆக்னேயம், ப்ராம்ஹம் ஸாரஸ்வதம், மானஸம் என்று கௌண ஸ்நானம் ஆறுவிதம் என்று அறியத் தகுந்தது. யோகயாக்ஞவல்க்யர்:- சரீரத்தில் சக்தி இன்மையாலும், காலம், சக்தி முதலியவைகளை அபேக்ஷித்தும் மந்த்ர

ஸ்நானம் முதலிய ஏழு ஸ்நான பேதங்களை வித்வான்கள் விரும்புகின்றனர். அவை மாந்த்ரம், பௌமம், ஆக்னேயம் வாயவ்யம், திவ்யம், வாருணம், மானஸம் என்று ஏழு ஸ்நானங்கள். 'ஆபோஹி' என்பது முதலிய மந்த்ரங்களால் செய்யும் ஸ்நானம் மந்த்ர ஸ்நானமாம். ம்ருத்திகையினால் தேஹத்தைப் பூசிக் கொள்வது பார்த்திவ ஸ்நானமாம். ஜலத்தில் முழுகுவது வாருண ஸ்நானமாம். விஷ்ணுவை த்யானித்தல் மானஸஸ்நானமாம். அறிந்தவர் எல்லோரும் மானஸ ஸ்நானத்தைச் சிறந்ததெனப் புகழ்கின்றனர். ஏனெனில், ஆத்மதீர்த்தத்தை ஸ்துதிக்கு மிடத்தில் வ்யாஸர் படித்திருப்பதால்.

स्मृतिरत्ने — चतुर्भुजं महादेवं शङ्खचक्रगदाधरम्। मनसा ध्यायते विष्णुं मानसं स्नान मुच्यते ॥ गायत्र्या जलमादाय दशकृत्वोऽभिमन्त्र्य च। शिरस्यङ्गानि सर्वाणि प्रोक्षयेत्तेन वारिणा। स्नानं गायत्रकं नाम सर्वपापप्रणाशनम् इति ॥ विष्णुः – त्र्यृचाभिमन्त्रितं तोयं प्रोक्षयेन्मूर्ध्नि सर्वतः। अनुकल्पमिदं स्नानं सर्वपापहरं नृणाम् इति ॥ दक्षः – आग्नेयं वारुणं ब्राह्मं वायव्यं दिव्यमेव च। मानसं पार्थिवं चैव त्वाष्टमं कापिलं स्मृतम् ॥ सारस्वतं तथा प्रोक्तं नवमं स्नानमुत्तमम् इति ॥

ஸ்ம்ருதிரத்னத்தில்:- சதுர்புஜனும், பெரியதேவனும், சங்க சக்ர கதைகளைத் தரித்தவனுமாகிய விஷ்ணுவை மனதினால் த்யானிப்பது மானஸ ஸ்நானம் என்று சொல்லப்படுகிறது. காயத்ரியால் ஜலத்தை எடுத்து, பத்து முறை அபிமந்த்ரித்து, அந்த ஜலத்தால் சிரஸ்ஸிலும் எல்லா அங்கங்களிலும் ப்ரோக்ஷித்துக் கொள்ள வேண்டும். இது ஸகல பாபங்களையும் மற்றும் காயத்ர ஸ்நானம் எனப்படும். **விஷ்ணு:-** (ஆபோஹிஷ்ட முதலிய) மூன்று ருக்குகளால் அபிமந்திரிக்கப்பட்ட ஜலத்தைத் தலையிலும் அங்கங்களிலும் ப்ரோக்ஷித்துக் கொள்ள வேண்டும். இது மனிதரின் ஸகலபாபங்களையும் பறிக்கும் அனுகல்ப

ஸ்நானமாம். தக்ஷர்:- ஆக்னேயம், வாருணம், ப்ராம்ஹம். வாயவ்யம், திவ்யம், மாநஸம், பார்த்திவம், என்று ஏழு ஸ்நானங்கள். எட்டாவது காபிலம், ஒன்பதாவது ஸாரஸ்வத ஸ்நானம். இது சிறந்தது.

तत्र आग्नेयस्नानप्रकारमाह, भरद्वाजः – प्राङ्मुखश्चरणौ हस्तौ प्रक्षाल्याचम्य पूर्ववत्। प्राणानायम्य सङ्कल्प्य भस्मस्नानं समाचरेत्॥ आदाय भसितं श्वेत मग्निहोत्रसमुद्भवम्। ईशानेन तु मन्त्रेण स्वमूर्धनि विनिक्षिपेत्॥ तत आदाय तद्भस्म मुखे तत्पुरुषेण तु। अघोराख्येन हृदये गुह्ये वामाह्वयेन च॥ सद्योजाताभिधानेन भस्म पादद्वये क्षिपेत्। सर्वाङ्गं प्रणवेनैव मन्त्रेणोद्धूलयेत्ततः॥ एतदाग्नेयकं स्नानमुदितं परमर्षिभिः। सर्वकर्मसमृद्ध्यर्थं कुर्यादादाविदं बुधः इति॥

அவைகளுள் ஆக்னேயஸ்நானத்தைச் சொல்லுகிறார், **பரத்வாஜர்:-** கால் கைகளை அலம்பி, கிழக்கு முகமாய் முன்போல் ஆசமனம் செய்து, ப்ராணயாமம் செய்து, ஸங்கல்ப்பித்து, பஸ்ம ஸ்நானத்தைச் செய்ய வேண்டும். அக்னிஹோத்ரத்தில் உண்டாகியதும், வெண்ணிற முள்ளதுமான பஸ்மத்தை எடுத்து, ஈசான மந்த்ரத்தால் சிரஸ்ஸிலும். தத்புருஷ மந்த்ரத்தால், முகத்திலும், அகோர மந்த்ரத்தால் மார்பிலும், வாமதேவ மந்த்ரத்தால் குஹ்யத்திலும், ஸத்யோஜாத மந்த்ரத்தால் பாதங்களிலும் தரிக்க வேண்டும். ப்ரணவ மந்த்ரத்தால் ஸர்வாங்கத்திலும் உத்தூளனம் செய்து கொள்ள வேண்டும், இது ஆக்னேய ஸ்நானம், பெரிய முனிவர்களால் சொல்லப்பட்டது. எல்லாக் கர்மங்களும் குறைவில்லாமல் இருப்பதற்காக ஆதியில் இதைச் செய்ய வேண்டும். அறிந்தவன்.

आपस्तम्बोऽपि – भस्म स्यादग्निहोत्राग्नेरावसथ्यादथापि वा। अभावे चानयोर्विप्रः स्वगृह्याग्नेरथापि वा। भस्म त्वादाय विधिवत् स्नानमाग्नेयमाचरेत्। भस्म स्थाप्य करे वामे विध्युक्तं प्राग्यथोदितम्॥ सौवर्णे राजते वाऽपि ताम्रे पात्रान्तरेऽपि वा। अग्निरित्यादिभिर्मन्त्रैः

प्रणवेन तथैव च ।। षड्भिर्मन्त्रैः प्रजप्तेन कास्य हृद्बह्मपद्मये । ईशाद्यैः पञ्चभिर्मन्त्रैः क्रमादुद्धूलयेत्ततः इति ।। अग्निरित्यादयो मन्त्रा अथर्वशिरस्यभिहिताः - 'अग्निरिति भस्म, वायुरिति भस्म, जलमिति भस्म, स्थलमिति भस्म, व्योमेति भस्म, सर्वं ह्वा इदं भस्म' इति । कं - शिरः ।।

ஆபஸ்தம்பரும்:- பஸ்மமானது அக்னி ஹோத்ர அக்னியிலிருந்து உண்டாகியதாகும், அல்லது, ஆவஸத்யாக்னி உடையதாய் இருக்கலாம். இவ்விரண்டு மில்லாவிடில், தனது ஔபாஸனாக்னி உடையதாய் இருக்கலாம். ப்ராம்ஹணன் பஸ்மத்தை க்ரஹித்து விதிப்படி ஆக்னேய ஸ்நானத்தை அனுஷ்டிக்க வேண்டும். முன் சொல்லிய விதிப்படியுள்ள பஸ்மத்தை க்ரஹித்து, இடது கையிலாவது, ஸ்வர்ணம், வெள்ளி, தாம்ரமான பாத்ரத்திலாவது, வேறு பாத்ரத்திலாவது வைத்து, 'அக்னிரிதி' முதலான ஆறு மந்த்ரங்களையும், ப்ரணவத்தையும் ஜபித்து, ஈசானாதிகளான ஐந்து மந்த்ரங்களால், முறையே சிரஸ், முகம், மார்பு, குஹ்யம், பாதங்கள் இவைகளில் உத்தூளனம் செய்ய வேண்டும். அக்னிரித்யாதி மந்த்ரங்கள் அதர்வ சிரத்தில் சொல்லப்பட்டுள்ளன.

लिङ्गपुराणेऽपि – ईशानेन शिरोदेशं मुखं तत्पुरुषेण तु । उरोदेशमघोरेण गुह्यं वामेन सुव्रत ।। सद्येन पादौ सर्वाङ्गं प्रणवेन विशोधयेत् ।। कृत्वाऽपि चातुलं पापं मृत्युकालेऽपि यो द्विजः ।। भस्मस्नायी भवेत् कश्चित् क्षिप्रं पापैः प्रमुच्यते इति ।। स्मृतिसारसमुच्चये – त्र्यायुषैश्चैव मन्त्रैस्तु लिप्तमापादमस्तकम् । गोशकृद्भस्म यत् पुण्यं भस्मस्नानं तदुच्यते इति ।।

லிங்க புராணத்திலும்:- ஈசான மந்த்ரங்களால் சிரஸ்ஸையும், தத்புருஷ மந்த்ரத்தால் முகத்தையும, அகோர மந்த்ரத்தால் மார்பையும், வாமதேவ மந்த்ரத்தால்

குஹ்யத்தையும், ஸத்யோஜாத மந்த்ரத்தால் கால்களையும், ப்ரணவத்தால் ஸர்வாங்கத்தையும், சுத்தம் செய்ய வேண்டும். அதிகபாபம் செய்தவனுயினும் எந்த ப்ராம்ஹணன் மரண காலத்திலாவது இவ்விதம் பஸ்ம ஸ்நானம் செய்கின்றனே அவன் உடனே பாபங்களால் விடப்படுகின்றன். ஸ்ம்ருதி ஸாரஸமுச்சயத்தில்:- த்ர்யாயுஷ மந்த்ரங்களால் கோமயத்தால் உண்டாகிய பஸ்மத்தால் தலை முதல் கால்வரையில் பூசிக் கொள்வது எதுவோ, அது புண்யமான பஸ்ம ஸ்நானம் எனப்படுகிறது.

वारुणस्नानमाह व्यासः – स्नानमब्देवतैर्मन्त्रैः जले मज्जनगाहनैः । तर्पणं पितृदेवानां स्नानं वारुणमुच्यते इति ।। बोधायनः – जलावगाहनं स्नानं वारुणं सार्ववर्णिकम् । मन्त्रवत् प्रोक्षणं चापि द्विजातीनां विशिष्यते इति ।।

வாருண ஸ்நானத்தைச் சொல்லுகிறார். வ்யாஸர்:- ஜலதேவதாகமான மந்த்ரங்களுடன் ஜலத்தில் முழுகி, பித்ருக்களுக்கும் தேவர்களுக்கும் தர்ப்பணம் செய்வது வாருண ஸ்நானம் எனப்படுகிறது. போதாயனர்:- ஜலத்தில் முழுகுவது வாருண ஸ்நானம். இது எல்லா வர்ணத்தாருக்கும் உரியது. மந்த்ரங்களுடன் ப்ரோக்ஷணமும் செய்து கொள்வது என்பது, முதல் மூன்று வர்ணத்தாருக்கு மட்டில்.

ब्राह्मस्नानप्रकारमाह कात्यायनः – आपो हिष्टादिभिर्ब्राह्मं मन्त्रस्नानं हि तत्स्मृतम् । कुशाग्रैर्मार्जनं कुर्याद् देवतार्थेन वा द्विजः ।। ऋगन्ते मार्जनं कुर्यात् पादान्ते वा समाहितः । त्यृचस्यान्तेऽथवा कुर्यात् शिष्टानां मतमीदृशम् इति ।। पादान्तमार्जनप्रकारमाह ब्रह्मा – भुवि मूर्ध्नि तथाऽऽकाशे मूर्ध्न्याकाशे तथा भुवि । आकाशे भुवि मूर्ध्नि स्यान्मन्त्रस्नानं विधीयते इति ।। भुवि - पादयोः । आकाशे - हृदि ।।

ப்ராம்ஹ ஸ்நான ப்ரகாரத்தைச் சொல்லுகிறார், காத்யாயனர்:- 'ஆபோஹிஷ்ட' முதலிய மந்த்ரங்களால் செய்யப்படும் ஸ்நானம் ப்ராம்ஹ ஸ்நானம். அதுவே மந்த்ர ஸ்நானம் எனப்படும். ப்ராம்ஹணன், குசங்களின் நுனிகளாலாவது, தேவதீர்த்திலாவது மார்ஜனம் செய்து கொள்ள வேண்டும். கவனம் உடையவனுய் ருக்கின் முடிவிலாவது, பாதத்தின் முடிவிலாவது, மூன்று ருக்குகளின் முடிவிலாவது மார்ஜனம் செய்து கொள்ள வேண்டும். இவ்விதம் சிஷ்டர்களின் கொள்கை. பாதத்தின் முடிவில் மார்ஜனம் செய்வதின் ப்ரகாரத்தைச் சொல்லுகிறார் ப்ரஹ்மா:- மூன்று ருக்குகளின் ஒன்பது பாதங்களாலும், முறையே, பாதங்களிலும் சிரஸ்ஸிலும் மார்பிலும், சிரஸ்ஸிலும் மார்பிலும் பாதங்களிலும் மார்பிலும் பாதங்களிலும் சிரஸ்ஸிலும் ப்ரோக்ஷித்துக் கொள்வது மந்த்ர ஸ்நானம் என்று விதிக்கப்படுகிறது.

प्रकारान्तरमुक्तं स्मृत्यन्तरे – पच्छोऽप्यर्धर्चशोऽप्यृक्शः आपोहिष्ठेत्यृचेन च । कुशाग्रैर्मार्जनं कुर्याद्देवतीर्थेन वा द्विजः ॥ पादादि प्रणवं कुर्यात् अर्धर्चादि तथैव च । ऋगादि प्रणवं कुर्यात् मन्त्रस्नाने विशेषतः इति ॥ गृह्यपरिशिष्टेऽपि – अथाशक्तस्य मन्त्रस्नानं - शुचौ देशे शुचिराचान्तः प्राणानायम्य दर्भपाणिस्तिसृभिरापोहिष्ठीयाभिः पच्छः प्रणवपूर्वं दर्भोदकैर्मार्जयेत्। पादयोर्मूर्ध्नि हृदये, मूर्ध्नि हृदये पादयोः, पादयोः हृदये मूर्ध्नि च। अथार्धर्चशो मूर्ध्नि हृदये, पादयोः हृदये, पादयोः मूर्ध्नि च। अथ ऋक्छो हृदये पादयोमूर्ध्नि च। अथ तृचेन मूर्ध्नि मार्जयित्वा गायत्र्या दशधाऽभि मन्त्रिता अपः प्रणवेन पीत्वा द्विराचामेदित्येतन्मन्त्र-स्नानम् इति ॥ योगयाज्ञवल्क्यस्तु – शन्न आपस्तु द्रुपदा आपोहिष्ठाऽघमर्षणम्। एतैश्च पञ्चभिर्मन्त्रैः मन्त्रस्नानमुदाहृतम् इति॥

வேறு ப்ரகாரமும், மற்றொரு ஸ்ம்ருதியில்:- ஆபோஹிஷ்ட முதலிய மூன்று ருக்குகளை, பாதம்

பாதமாகவும், பாதி ருக்காகவும், முழு ருக்காவும் உச்சரித்துக் குசங்களின் நுனிகளால் மார்ஜனம் செய்ய வேண்டும். தேவ தீர்த்தத்தில் ஆவது செய்யலாம். இந்த மந்த்ர ஸ்நானத்தில் விசேஷமாய் ஒவ்வொரு பாதத்திலும் முதலில் ப்ரணவத்தைச் சேர்க்கவும். பாதி ருக்குகளின் முதலிலும் சேர்க்கவும். ருக்கின் ஆதியிலும்-சேர்க்கவும்.

க்ருஹ்ய பரிசிஷ்டத்திலும்:- இனி, அசக்தனுக்கு மந்த்ர ஸ்நானம் சொல்லப்படுகிறது. சுத்தமான ஸ்தலத்தில், சுத்தனாய், ஆசமனம் செய்து ப்ராணாயாமம் செய்து, தர்ப்பத்தைக் கையில் உடையவனாய் 'ஆபோஹிஷ்ட' முதலிய மூன்று ருக்குகளால் பாதம் பாதமாய், ப்ரணவ பூர்வமாய் தர்ப்ப ஜலங்களால் முறையே 9- ஸ்தானங்களில் மார்ஜனம் செய்து கொள்ள வேண்டும். பாதங்களிலும் சிரஸ்ஸிலும் மார்பிலும், சிரஸ்ஸிலும் மார்பிலும் பாதங்களிலும், பாதங்களிலும் மார்பிலும் சிரஸ்ஸிலும், பிறகு, பாதி ருக்காகப் பிரித்து, சிரஸ்ஸிலும் மார்பிலும், பாதங்களிலும் மார்பிலும் பாதங்களிலும் சிரஸ்ஸிலும், பிறகு, ருக்காகவே உச்சரித்து ஒரு ருக்குக்கு ஒரு முறையாய், மார்பிலும், பாதங்களிலும், சிரஸ்ஸிலும் மார்ஜனம் செய்யவும். பிறகு மூன்று ருக்குகளையும் ஜபித்து ஒரு முறை சிரஸ்ஸில் மார்ஜனம் செய்து கொள்ளவும். பிறகு, பத்துத் தடவை காயத்ரியால் அபிமந்த்ரிக்கப்பட்ட ஜலத்தை ப்ரணவத்தால் பருகி, இரண்டு முறை ஆசமனம் செய்ய வேண்டும். இவ்விதம் உள்ளது மந்த்ர ஸ்நானமாம். **யோகயாக்ஞவல்க்யரோவெனில்:-** ''சந்ந ஆப:, த்ருபதா, ஆபோஹிஷ்டா, அகமர்ஷணம் என்ற இவ்வைந்து மந்த்ரங்களாலும் செய்யப்படுவது மந்த்ர ஸ்நானம்'' என்கிறார்.

वायव्यसारस्वते दर्शयति बृहस्पतिः – वायव्यं गोरजः प्रोक्त मस्तं गच्छति गोपतौ । विद्वत्सरस्वती प्राप्तं स्नानं सारस्वतं स्मृतम् इति । गोपतौ - सूर्ये । विदुषां सरस्वती = वाणी । तया प्राप्तं सारस्वतमित्यर्थः ।। तत्स्वरूपमाह व्यासः – स्वयमेवोपसन्नाय

विनयेन द्विजातये ।। तज्ज्ञः सम्पादयेत् स्नानं शिष्याय च सुताय च। दाक्षायणमयैः कुम्भैः मन्त्रवज्जाह्नवीजलैः । कृतमङ्गल पुण्याहैः स्नानमस्तु तदर्थिनाम् ।। आदौ तावत् प्रभासे बहुगुणसलिते मध्यमे पुष्करे च गङ्गाद्वारे प्रयागे कनखलसहिते गव्यकर्णे गयायाम्। राहुग्रस्ते तु सोमे दिनकरसहिते सत्यपत्याविशेषादेतैर्विख्यातरूपैस्त्रिभुवन विदितैः स्नानमच्छिद्रमस्तु ।। प्राप्य सारस्वतं तीर्थं भवेन्मुदित-मानसः । सर्वतीर्थाभिषेकाद्धि पवित्रं विदुषां हि वाक् इति ।।

வாயவ்ய ஸாரஸ்வத ஸ்நானங்களைச் சொல்லுகிறார், **ப்ருஹஸ்பதி:-** ஸூர்யன் அஸ்தமயத்தை அடையும் பொழுது, பசுவின் புழுதியால் செய்வது வாயவ்ய ஸ்நானம். வித்வான்களின் வாக்கினால் அடையப்பட்டது ஸாரஸ்வத ஸ்நானம் என்று சொல்லப்பட்டுள்ளது. அதன் ஸ்வரூபத்தைச் சொல்லுகிறார். **வ்யாஸர்:-** தானாகவே ஸமீபத்தில் வந்தவனும், வணக்கம் உடையவனும், சிஷ்யன் அல்லது புத்ரனுமான ப்ராம்ஹணனுக்கு, அந்த ஸ்நான விதியைத் தெரிந்தவனான ப்ராம்ஹணன் ஸ்நானத்தைச் செய்விக்க வேண்டும். அதன் மந்த்ரங்கள் - 'தாக்ஷாயணமயை: + அச்சித்ரமஸ்து' என்றவை. இவற்றின் பொருள் - 'ஸ்வர்ணமயமான குடங்களாலும் மந்த்ரத்துடன் கூடிய ஜலங்களாலும் மங்களம் புண்யாஹம் இவைகளாலும், ஸ்நானத்தை விரும்பியவர்க்கு ஸ்நானமிருக்கக் கடவது ! முதலில் மிகுந்த குணங்களை யுடைய ஜலத்தையுடைய ப்ரபாஸத்திலும், மத்யமான புஷ்கரத்திலும், கங்காத் வாரத்திலும், கனகலசத்துடன் கூடிய ப்ரயாகத்திலும், கோகர்ணத்திலும், கயையிலும், சந்த்ரன் ராகுவினால் பிடிக்கப்பட்டிருக்கும் போதும், ஸூர்ய க்ரஹணத்திலும், குழந்தையைவிடப் பேதமில்லாததால், இவனுக்கு ப்ரஸித்தங்களும், மூன்றுலகங்களாலும் அறியப்பட்டவையுமான இவைகளால் குறைவிலாத ஸ்நான முண்டாகக் கடவது' என்பது. இந்த ஸாரஸ்வத தீர்த்தத்தை அடைந்து ஸந்துஷ்ட

சித்தனுய் ஆக வேண்டும். ஸர்வதீர்த்தங்களிலும் ஸ்நானம் செய்வதை விட வித்வான்களின் வசனம் சுத்தமானதல்லவா?

स एव – शुचिदेशान्मृदं गृह्य कुर्याद्गात्रोपलेपनम् । मन्त्रैः पार्थिवसंयुक्तैः भौमं स्नानं तदुच्यते ।। मृत्तिके हन मे पाप मित्यादयः पार्थिवसंयुक्तमन्त्राः ।। 'गोखुराद्रज आदाय गोसावित्रीं जपेद्बुधः । गात्रेष्वथ तदालिप्य स्नानं वायव्यमुच्यते ।

வ்யாஸரே:- சுத்தமான ஸ்தலத்திலிருந்து ம்ருத்தை க்ரஹித்து, பூதேவதாகமான மந்த்ங்களால் தேஹத்தில் பூசிக் கொள்ள வேண்டும். 'ம்ருத்திகே ஹநமே பாபம்' என்பது முதலியவை பார்த்திவஸம்பந்த மந்த்ரங்களாம். பசுவின் குளம்பிலிருந்து தூளியை எடுத்து கோஸாவித்ரியை ஜபிக்க வேண்டும். அறிந்தவன் பிறகு அந்தத் துளியை அங்கங்களில் பூசிக் கொண்டால், அது வாயவ்ய ஸ்நானம் எனச் சொல்லப்படுகிறது.

उत्तरायणमध्ये तु यदा वर्षति वासवः । आतपेन सह स्नानं दिव्यं स्नानं तदुच्यते ।। हृत्स्थितं सर्वभूतानां रविमण्डलसंस्थितम् । नीलजीमूतसङ्काशं वासुदेवं चतुर्भुजम् ।। शङ्खचक्रगदापद्मधारिणं वनमालिनम् । तत्पादोदकजां धारां निपतन्तीं स्वमूर्द्धनि ।। चिन्तयेद् ब्रह्मरन्ध्रेण प्रविशन्तीं स्वकां तनूम् । तया प्रक्षालितं सर्वं स्वदेहं परिचिन्तयेत् ।। इदं स्नानवरं मन्त्रात् सहस्रादधिकं मतम् । एवं स्नात्वा विशेषेण सर्वपापैः प्रमुच्यते इति ।।

உத்தராயணத்தில் வெயிலுடன் மழை பொழியும் போது, அதனால் ஸ்நானம் செய்வது திவ்யஸ்நானம் எனப்படுகிறது. ஸகல ப்ராணிகளின் ஹ்ருதயத்தில் இருப்பவனும், ஸூர்ய மண்டலத்தில் இருப்பவனும், கருமேகம் போன்றவனும், நான்கு கைகளுடையவனும், வனமாலை அணிந்தவனுமான வாஸுதேவனை த்யானித்து,

அவனது பாதத்தினின்று பெருகும் ஜலத்தின் தாரை, தனது சிரஸ்ஸில் விழுந்து, ப்ரம்ஹரந்த்ரத்தின் வழியாய் தன் சரீரத்திற்குள் நுழைவதாய் த்யானிக்க வேண்டும். அந்தத் தாரையால் தன் தேஹம் முழுவதும் அலம்பப்பட்டதாய் த்யானிக்க வேண்டும். சிறந்ததான இந்த ஸ்நானம், ஆயிரம் மந்த்ரஸ்நானத்தைவிட அதிகமென மதிக்கப்பட்டது. இவ்விதம் ஸ்நானம் செய்தால் எல்லாப் பாபங்களாலும் அவச்யம் விடுபடுவான்.

कूर्मपुराणे – अप्रायत्ये समुत्पन्ने स्नानमेव समाचरेत् । ब्राह्मादीन्यन्यथाऽशक्तौ स्नानान्याहुर्मनीषिणः इति ।। जाबालिः – अशिरस्कं भवेत् स्नानं स्नानाशक्तौ तु कर्मिणः । तस्याप्यसामर्थ्यविधौ मन्त्रस्नानादिकं चरेत् इति ।। जाबालिः – अशिरस्कं भवेत् स्नानं स्नानाशक्तौ तु कर्मिणः । तस्याप्यसामर्थ्यविधौ मन्त्रस्नानादिकं चरेत् इति ।। स्मृत्यन्तरे – असामर्थ्याच्छरीरस्य वैषम्याद् देशकालयोः । स्नानान्येतानि तुल्यानि वारुणेन भवन्ति हि इति ।। मनुः – प्रभुः प्रथमकल्पेऽपि योऽनुकल्पे प्रवर्तते । न सांपरायिकं तस्य दुर्मतेर्वर्तते फलम् इति ।। साम्परायिकं - आमुष्मिकम् ।।

கூர்ம புராணத்தில்:- அசுத்தி ஏற்பட்டால் வாருண ஸ்நானத்தையே செய்ய வேண்டும். அதில் சக்தி இல்லாவிடில் ப்ராம்ஹாதி ஸ்நானங்களை வித்வான்கள் சொல்லுகின்றனர். **ஜாபாலி:-** கர்மத்தை அனுஷ்டிப்பவனுக்கு வாருண ஸ்நானத்தில் சக்தி இல்லாவிடில் தலையை முழுக்காமல் கழுத்து வரையில் நனைத்து ஸ்நானம் செய்ய வேண்டும். அதிலும் சக்தி இல்லாவிடில் மந்த்ர ஸ்நானம் முதலியதைச் செய்யவும். **மற்றொரு ஸ்ம்ருதியில்:-** சரீரத்தின் ஸாமர்த்யம் இன்மையாலும், தேசகாலங்களின் ஒற்றுமை இல்லாததாலும், இந்த ஸ்நானங்களும் வாருண ஸ்நானத்திற்குச் சமமாய் ஆகின்றன. **மனு:-** முக்ய கல்பத்தை அனுஷ்டிப்பதற்குச் சக்தனாய் இருந்தும் எவன்

அனுகல்பத்தில் ப்ரவர்த்திக்கின்றனே அந்தத் துர்ப்புத்திக்குப் பாரலௌகிகமான பலன் இல்லை.

—★—

ऊर्ध्वपुण्ड्रधारणविधिः

अथोर्ध्वपुण्ड्रधारणविधिः ।। तत्र वासुदेवोपनिषत् – 'अथ गोपीचन्दनं नमस्कृत्योद्धृत्य, गोपीचन्दन पापघ्न विष्णुदेहसमुद्भव। चक्राङ्कित नमस्तुभ्यं धारणान्मुक्तिदो भव ।। इमम्मेगङ्ग इति जलमादाय विष्णोर्नुकमिति मर्दयेदतो देवा अवन्तु न इत्येताभिर्विष्णुगायत्र्या च त्रिवारमभिमन्त्र्य, शङ्खचक्रगदापाणे द्वारकानिलयाच्युत। गोविन्द पुण्डरीकाक्ष रक्ष मां शरणागतम् इति मां ध्यात्वा गृहस्थो ललाटादिषु द्वादशस्थानेष्वनामिकाङ्गुल्या विष्णु-गायत्र्या केशवादिद्वादशनामभिर्वा धारयेत्।

ஊர்த்வ புண்ட்ர தாரண விதி

இனி ஊர்த்வபுண்ட்ரத்தைத் தரிப்பதின் விதி சொல்லப்படுகிறது. அதில், வாஸுதேவோபநிஷத்:- பிறகு கோபீ சந்தனத்தை நமஸ்கரித்து, எடுத்து 'கோபீ சந்தன + முக்திதோபவ' என்று ப்ரார்த்திக்கவும். இதன் பொருள் -'பாபத்தை அகற்றுவதும், விஷ்ணு தேஹத்தில் உண்டாகியதும், சக்ரத்தால் அடையாளம் இடப்பட்டதுமான ஓ கோபீ சந்தனமே! உனக்கு நமஸ்காரம். உன்னைத் தரிப்பதால் முக்தியை அளிப்பாயாக' என்பது. 'இமம்மே கங்கே' என்பதால் ஜலத்தை எடுத்து, 'விஷ்ணோர்நுகம்' என்பதால் தேய்க்க வேண்டும். 'அதோதேவா:' என்பது முதலிய ருக்குகளாலும், மூன்று தடவை விஷ்ணு காயத்ரீயாலும் அபிமந்த்ரித்து, 'சங்க சக்ர + சரணகதம்' என்று என்னை (விஷ்ணுவை) த்யானித்து நெற்றி முதலிய 12-இடங்களில் அநாமிகா விரலால்,

விஷ்ணு காயத்ரியாலாவது, 'கேசவ' முதலிய 12-நாமங்களாலாவது க்ருஹஸ்தன் தரிக்கவும்.

ब्रह्मचारी वानप्रस्थो वा ललाटकण्ठहृदयबाहुमूलेषु वैष्णव्या गायत्र्या कृष्णादिनामपञ्चभिर्वा धारयेत् । यतिस्तर्जन्या शिरोललाटहृदयेषु प्रणवेन धारयेत् । परमहंसो ललाटे प्रणवे नैकमूर्ध्वपुण्ड्रं धारयेत् । तत्र दीपप्रकाशं स्वात्मानं पश्यन् 'ब्रह्माहमस्मी'ति भावयन् योगी मत्सायुज्यमवाप्नोति ॥ स ऊर्ध्वं पदमाप्नोति यतिरूर्ध्वचतुष्कवान् ॥ ब्राह्मणानां तु सर्वेषां वैदिकानामनुत्तमम् । गोपीचन्दनवारिभ्यामूर्ध्वपुण्ड्रं विधीयते ॥ यो गोपीचन्दनाभावे तुलसीमूलमृत्तिकाम् । मुमुक्षुर्द्धारयेन्नित्य मपरोक्षात्मसिद्धये इति ॥

ப்ரம்ஹசாரியாயினும், வானப்ரஸ்தஞ்யினும், நெற்றி, கழுத்து, மார்பு, கைகளின் மூலபாகம் இவைகளில் விஷ்ணு காயத்ரியால் ஆவது, 'க்ருஷ்ண' முதலிய ஐந்து நாமங்களாலாவது தரிக்க வேண்டும். யதி, தர்ஜனீ விரலால், தலை, நெற்றி, மார்பு இவைகளில் ப்ரணவத்தால் தரிக்கவும். பரமஹம்ஸன், நெற்றியில், ப்ரணவத்தால் ஒரு ஊர்த்வ புண்ட்ரத்தைத் தரிக்க வேண்டும். அதில் தீபம் போல் பிரகாசிக்கும் தன் ஆத்மாவை த்யானித்து 'ப்ரம்ஹாஹமஸ்மி' என்று பாவிப்பவஞகிய யோகீ எனது ஸாயுஜ்யத்தை அடைகிறான். தண்டம், ரேதஸ், புண்ட்ரம், யோகம் என்ற இந்த நான்கையும் ஊர்த்வமாய் உடைய யதி ஊர்த்வமான (உயர்ந்ததான) பதத்தை அடைகிறான். வைதிகரான ப்ராம்ஹணர் எல்லோருக்கும் கோபீ சந்தனம் ஜலம் இவைகளால் ஊர்த்வ புண்ட்ரம் விதிக்கப்படுகிறது. எவன் முழுக்ஷுவோ அவன் கோபீ சந்தனம் இல்லாவிடில், துளஸியின் அடியிலுள்ள ம்ருத்திகையை, அபரோக்ஷாத்ம க்ஞான ஸித்திக்காகத் தரிக்க வேண்டும்.

महोपनिषदि – धृतोर्ध्वपुण्ड्रः परमेशितारं नारायणं साङ्ख्ययोगाधिगम्यम्। ज्ञात्वा विमुच्येत नरस्समस्तैः संसारभारै रिह चैति विष्णुम् इति ।। कठशाखायामपि – धृतोर्ध्वपुण्ड्रो धृतचक्रमीशं विष्णुं परं ध्यायति यो महात्मा। स्वरेण मन्त्रेण सदा हृदिस्थं परात् परं यो महतो महान्तम् इति ।। आथर्वणे च – 'हरेः पादाकृति मात्मनो हिताय मध्येछिद्रमूर्ध्वपुण्ड्रं यो धारयति स परस्य प्रियो भवति स पुण्यभाग्भवति स मुक्तिभाग्भवति इति ।।

மஹோபநிஷத்தில்:- *மனிதன், ஊர்த்வ புண்ட்ரம் தரித்தவனுய், பரமேச்வரனும், ஸாங்க்ய யோக சாஸ்த்ரங்களால் அறியக் கூடியவனுமான நாராயணனை த்யானித்தால், ஸகல ஸம்ஸார பாரங்களில் இருந்தும் விடுபடுவான். இங்கேயே விஷ்ணுவையும் அடைவான்.* **கடசாகையிலும்:-** *எவன் ஊர்த்வ புண்ட்ரம் தரித்தவனுய், சக்ரஹஸ்தனும், ஈசனும், பரனும், எப்பொழுதும் ஹ்ருதயத்தில் இருப்பவனும், பரத்திற்கும் பரனும், மஹத்திற்கும் மஹானுமான விஷ்ணுவை ப்ரணவ மந்த்ரத்தால் த்யானிக்கின்றனே அவன் மஹாத்மா எனப்படுகிறன்.* **ஆதர்வணத்திலும்:-** *எவன் தனக்கு நன்மைக்காக, ஹரியின் பாதம் போன்றதும், நடுவில் சித்ரமுள்ளதுமான ஊர்த்வ புண்ட்ரத்தைத் தரிக்கின்றனே அவன் பரமாத்மாவுக்கு ப்ரியனுய் ஆகிறன், அவன் புண்யம் உடையவனுகிறன், அவன் முக்தி அடைபவனுகிறன்.*

अत्रोपबृंहणानि स्मृतिपुराणवचनानि लिख्यन्ते। उपबृंहणत्वं च तेषां महाभारतेऽभिहितम् – इतिहासपुराणाभ्यां वेदार्थमुपबृंहयेदिति। स्कान्देऽपि – पुराणैरेव विस्पष्टो वेदार्थो ज्ञायते खलु । बिभेति मानवाद्वेदः पुराणाभ्यासवर्जितात् इति ।। सुदर्शनाचार्योऽपि – वेदार्थनिर्णयविधौ हि पुराणमङ्गं निर्णीतवेद-विषयाः स्मृतयो भवन्ति इति ।। सूतसंहितायामपि –

अनन्तशाखासापेक्षे वैदिकार्थविनिर्णये । स्वबुद्धिकल्पितान्न्यायात् गरीयो ह्युपबृंहणम् इति ।।

இங்கு உபப்ரும்ஹணங்களான (அர்த்தத்தை நிர்ணயிக்கின்ற) ஸ்ம்ருதி புராண வசனங்கள் எழுதப் படுகின்றன. அந்த ஸ்ம்ருதி புராண வசனங்கள் வேதத்திற்கு உபப்ருஹ்மணங்கள் என்பதும் மஹா பாரதத்தில் சொல்லப்பட்டுள்ளது, இதிஹாஸத்தாலும், புராணத்தாலும், வேதார்த்தத்தை நிர்ணயிக்க வேண்டும்' என்று. ஸ்காந்தத்திலும்:- வேதத்தின் அர்த்தம், புராணங்களாலேயே ஸ்பஷ்டமாய் அறியப் படுகிறதல்லவா. புராணத்தைப் படிக்காத மனிதரிட மிருந்து வேதம் பயப்படுகின்றது. ஸுதர்சனசார்யரும்:- வேதார்த்தத்தை நிச்சயிக்கும் விஷயத்தில் புராணம் அங்கமாகும். ஸ்ம்ருதிகள், வேதத்திலுள்ள விஷயங்களை நிர்ணயம் செய்பவையாய் இருக்கின்றன. ஸுதஸம்ஹிதையிலும்:- அநேக சாகைகளை அபேக்ஷித்து நிற்கும் வேதார்த்தத்தின் நிர்ணயத்தில், தன் புத்தியால் கல்ப்பிக்கப்பட்ட ந்யாயத்தைக் காட்டிலும், உபப்ரும்ஹணம் மிகப் பெரியதல்லவா.

विष्णुस्मृतौ – उपवीतं शिखाबन्धमूर्ध्वपुण्ड्रं विना कृतम् । अपवित्रकृतं कर्म विप्रस्य विफलं भवेत् ।। योगो दानं जपो होमः स्वाध्यायः पितृतर्पणम् । भस्मीभवति तत्सर्वं मूर्ध्वपुण्ड्रं विना कृतम् ।। अशुचिश्चाप्यनाचारः मनसा पापमाचरन् । शुचिरेव भवेन्नित्य मूर्ध्वपुण्ड्रस्य धारणात् इति ।। भृगुः – उपवीतविहीनेन पवित्ररहितेन च । तथोर्ध्वपुण्ड्रहीनेन यत्कृतं तन्निरर्थकम् इति ।। मार्कण्डेयः – अमन्त्रेण कृतं कर्म ह्यपवित्रेण वा कृतम् । ऊर्ध्वपुण्ड्रं विना वाऽपि कर्म यद्धि द्विजैः कृतम् ।। तत्सर्वमासुरं विद्यात् कर्ताऽपि नरकं व्रजेत् इति ।।

விஷ்ணு ஸ்ம்ருதியில்:- உபவீதம், சிகையைக் கட்டுதல், ஊர்த்வ புண்ட்ரம் இவை இல்லாமலும்,

பவித்ரம் இல்லாமலும் செய்த, ப்ராம்ஹணனின் கர்மம் பலமற்றதாகும். யாகம், தானம், ஜபம், ஹோமம், அத்யயனம், பித்ரு தர்ப்பணம் இவை ஊர்த்வ புண்ட்ரம் இல்லாமல் செய்யப்பட்டால், அவை முழுதும் சாம்பலாய் ஆகின்றன. அசுத்தன் ஆனலும், ஆசாரமற்றவன் ஆனலும், மனதால் பாபத்தைச் செய்பவனனலும், ஊர்த்வ புண்ட்ரத்தைத் தரித்தால் எப்பொழுதும் சுத்தனுகவே ஆகிறான். ப்ருகு:- உபவீதம் இல்லாதவனலும், பவித்ரம் இல்லாதவனலும், ஊர்த்வபுண்ட்ரம் இல்லாதவனலும் எக்கார்யம் செய்யப்பட்டதோ அது வீணுகும். மார்க்கண்டேயர்:- மந்த்ரம் இல்லாமலும், பவித்ரம் இல்லாமலும், ஊர்த்வபுண்ட்ரம் இல்லாமலும் ப்ராம்ஹணரால் செய்யப்பட்ட கர்மம் எதுவோ அது முழுவதும் ஆஸுரம் என்று அறியவும். செய்தவனும் நரகத்தை அடைவான்.

दक्षः – कुशपाणिः सदा कुर्यात् सोत्तरीयोर्ध्वपुण्ड्रधृक् । वेदोक्तमखिलं विद्वानन्यथा स्यान्निरर्थकम् इति ॥ मरीचिः – सपवित्रकरः स्वस्थः सोत्तरीयोर्ध्वपुण्ड्रकः । कुर्यादहरहः कर्म वेदोक्तं विप्रसत्तमः । मरीचिः – सपवित्रकरः स्वस्थः सोत्तरीयोर्ध्वपुण्ड्रधृक् । कुर्यादहरहः कर्म वेदोक्तं विप्रसत्तमः । सर्पं दृष्ट्वा यथा लोके दर्दुरा भयविह्वलाः । ऊर्ध्वपुण्ड्राङ्कितं तद्वत् कम्पन्ते यमकिङ्कराः इति ॥ व्यासः – जाह्नवीतीरसंभूतां मृदमूर्ध्वां बिभर्ति यः । बिभर्ति रूपं सोऽर्कस्य तमोनाशाय वै स्मृतः ॥ ऊर्ध्वपुण्ड्रो मृदा शुद्धो ललाटे यस्य दृश्यते । स चण्डालोऽपि शुद्धात्मा पूज्य एव न संशयः इति ॥

தக்ஷர்:- அறிந்தவன், எப்பொழுதும், வேதத்திற் சொல்லிய எல்லாக் கர்மத்தையும், தர்ப்பபாணியாயும், உத்தரீயம் உடையவனுயும், ஊர்த்வ புண்ட்ரம் தரித்தவனுயும் செய்ய வேண்டும். இல்லாவிடில் அக்கர்மம் வீணுகும். மரீசி:- ப்ராம்ஹணன், ப்ரதிதினம், பவித்ரம் தரித்தவனுயும், ஸ்வஸ்த சித்தனுயும், உத்தரீயம்

உடையவனுயும், ஊர்த்வ புண்ட்ரம் தரித்தவனுயும், வேதத்திற் சொல்லிய கர்மத்தைச் செய்ய வேண்டும். உலகில் தவனிகள் பாம்பைக் கண்டால் எவ்விதம் பயத்தால் கலங்கியவையாய் நடுங்குகின்றனவோ, அவ்விதம், யமகிங்கரர்கள், ஊர்த்வபுண்ட்ரம் தரித்தவனைக் கண்டால் பயந்து நடுங்குகின்றார்கள்.

வ்யாஸர்:- கங்கைக் கரையிலுள்ள ம்ருத்திகையைச் சிரஸ்ஸினுல் எவன் தரிக்கின்றானே அவன், இருளை அழிப்பதற்காக ஸூர்யனின் ரூபத்தைத் தரிக்கின்றான் என்று நினைக்கப்படுகிறான். எவனின் நெற்றியில், ம்ருத்திகையால் சுத்தமான ஊர்த்வ புண்ட்ரம் காணப்படுகிறதோ, அவன் சண்டாளனுயினும், சுத்தனுயும், பூஜ்யனுயும் ஆகிறான். ஸம்சயமில்லை.

स्मृतिसारे – स्वाध्याये भोजने चैव होमे मङ्गलकर्मणि । ऊर्ध्वपुण्ड्रधरो भूयाद्रक्षसां चापनुत्तये इति ॥ आत्रेये – ऊर्ध्वपुण्ड्रविहीनं यत् शरीरं शवसन्निभम् । ऊर्ध्वपुण्ड्रविहीनं तु श्वपाकमिव सन्त्यजेत् ॥ ऊर्ध्वं नयति यत्पुण्ड्रं प्राणिनः पापकारिणः । तस्याख्या ह्यूर्ध्वपुण्ड्रेति तस्मात्तद्धारयेद्द्विजः इति ॥

ஸ்ம்ருதிஸாரத்தில்:- அத்யயனம், போஜனம், ஹோமம், மங்களகார்யம் இவைகளில் ஊர்த்வ புண்ட்ரத்தைத் தரித்தவனுய் இருக்க வேண்டும். இது ராக்ஷஸர்களை அகற்றுவதற்காகவுமாம்.

ஆத்ரேயத்தில்:- ஊர்த்வ புண்ட்ரமில்லாத சரீரம் எதுவோ அது சவத்திற்குச் சமமாகும். ஊர்த்வ புண்ட்ரம் இல்லாதவனை நாயாடியைப் போல் பரிஹரிக்க வேண்டும். பாபம் செய்யும் ப்ராணிகளையும் எந்தப் புண்ட்ரம் உயர்ந்த பதத்தை அடைவிக்கின்றதோ அதனுல் அதற்கு ஊர்த்வபுண்ட்ரம் எனப்பெயர். ஆகையால் ப்ராம்ஹணன் அதைத் தரிக்க வேண்டும்.

स्मृत्यन्तरे – विष्ण्वर्पणविहीनं यत् पवित्ररहितं तथा । उत्तरीयोर्ध्वपुण्ड्राभ्यां रहितं तन्निरर्थकम् ।। होमपूजादिसमये सायं प्रातः समाहितः । ऊर्ध्व पुण्ड्रधरो विप्रो भवेच्छुद्धो नचान्यथा । निरूर्ध्वपुण्ड्रस्तु भवेन्न कदाचिदपि द्विजः । वैष्णवश्चेद्विशेषेण सर्वकर्मणि सोऽर्हति ।। ऊर्ध्वपुण्ड्रं ललाटे तु कुर्वीत चतुरङ्गुलम् । उदरे हृदि कण्ठे च दशाष्टचतुरङ्गुलान् इति ।।

மற்றொரு ஸ்ம்ருதியில்:- விஷ்ணுவுக்கு அர்ப்பணம் செய்யப்படாததும், பவித்ரம் இல்லாததும், உத்தரீயம் இல்லாததும், ஊர்த்வபுண்ட்ரம் இல்லாததுமான கர்மம் வீணாகும். ஹோமம் பூஜை முதலிய ஸமயத்திலும், மாலையிலும், காலையிலும், கவனம் உடையவனாய் ஊர்த்வபுண்ட்ரத்தைத் தரிக்கும் ப்ராம்ஹணன் சுத்தனாவான். இல்லாவிடில் சுத்தனாகான். ப்ராம்ஹணன் ஒருகாலும் ஊர்த்வ புண்ட்ரம் இல்லாதவனாய் இருக்கக் கூடாது. வைஷ்ணவனானால் அவச்யம் தரிக்க வேண்டும். அவன் ஸகல கர்மங்களிலும் அர்ஹனாவான். ஊர்த்வபுண்ட்ரத்தை நெற்றியில் நாலங்குலமளவும், வயிற்றில் பத்து அங்குலமளவும், மார்பில் எட்டங்குலமளவும், கழுத்தில் நாலங்குலமளவுமாய்த் தரிக்க வேண்டும்.

आग्निवेश्यायनिः – त्रिपुण्ड्रं ब्राह्मणो विद्वान् लीलयाऽपि न धारयेत् । धारयेत् ब्राह्मणस्सम्य गूर्ध्वपुण्ड्रं प्रयत्नतः इति ।।

ஆக்னிவேச்யாயனி:- அறிந்த ப்ராம்ஹணன், விளையாட்டாகவும் த்ரிபுண்ட்ரத்தைத் தரிக்கக் கூடாது. ப்ராம்ஹணன், முயற்சியுடன் ஊர்த்வபுண்ட்ரத்தை நன்றாய் தரிக்க வேண்டும்.

सङ्गहे – श्रौतस्मार्तक्रियास्सर्वा ऊर्ध्वपुण्ड्र मकुर्वतः । जायन्ते विफलाश्चैव बाधिताश्च भवन्ति ताः इति ।। पुराणेषु ब्रह्माण्डपुराणे ब्रह्माणं भगवानाह – ऊर्ध्वपुण्ड्रप्रमाणानि द्रव्याण्यङ्गुलिभेदतः ।

वर्णानि मन्त्रदेशांश्च प्रवक्ष्यामि फलानि च ।। पर्वताग्रे नदीतीरे मम क्षेत्रे विशेषतः । सिन्धुतीरे च वल्मीके तुलसीमूलमाश्रिते ।। मृद एतास्तु सङ्गृह्य वर्जयेदन्यमृत्तिकाः । श्यामं शान्तिकरं प्रोक्तं रक्तं वश्यकरं भवेत् ।। श्रीकरं पीतमित्याहुर्वैष्णवं श्वेतमुच्यते । अङ्गुष्ठः पुष्टिदः प्रोक्तो मध्यमाऽऽयुष्करी भवेत् ।। अनामिकाऽन्नदा नित्यं मुक्तिदा च प्रदेशिनी । एतैरङ्गुलिभेदैस्तु कारयेन्न नखैः स्पृशेत् ।।

ஸங்க்ரஹத்தில்:- ஊர்த்வபுண்ட்ரம் தரிக்காதவனின் ச்ரௌத ஸ்மார்த்த கர்மங்களெல்லாம் பலனற்றதும் பாதிக்கப்பட்ட வைகளும் ஆகின்றன. புராணங்களுள், ப்ரம்ஹாண்ட புராணத்தில், ப்ரம்ஹாவைக் குறித்துச் சொல்லுகிறார், **பகவான்:-** ஊர்த்வபுண்ட்ரத்தின் அளவுகளையும், த்ரவ்யங்களையும், விரல்களின் பேதங்களுடன், வர்ணங்களையும், மந்த்ரங்களையும், தேசங்களையும், பலன்களையும் சொல்லப் போகிறேன். மலையின் உச்சியிலும், நதிக்கரையிலும், எனது க்ஷேத்ரத்திலும், ஸமுத்ரக் கரையிலும், புற்றிலும், துளசியின் அடியிலும் உள்ள ம்ருத்திகைகள் க்ரஹிக்கத் தகுந்தவை. மற்ற ம்ருத்திகைகளை தவிர்க்க வேண்டும். கறுப்பானது சாந்தியைக் கொடுப்பதாகும். சிவப்பு வச்யகரமாம். மஞ்சள் நிறம் லக்ஷ்மியைச் செய்யும். வெளுப்பு வைஷ்ணவம் எனப்படுகிறது. பெருவிரல் புஷ்டியைக் கொடுப்பதாய்ச் சொல்லப்பட்டுள்ளது. நடுவிரல் ஆயுளைக் கொடுப்பதாகும். அனுமிகாவிரல் நித்யமும் அன்னத்தைக் கொடுப்பதாம். ஆள்காட்டி விரல் முக்தியை அளிப்பதாம். இந்த விரல்களில் ஒன்றினால் தரிக்க வேண்டும். நகங்களால் தொடக் கூடாது.

वर्तिदीपाकृतिं चापि वेणुपत्राकृतिं तथा । पद्मस्य मुकुलाकारं तथैव कुमुदस्य च । मत्स्यकूर्माकृतिं वापि शङ्खाकारमथापि वा । दशाङ्गुल प्रमाणं तदुत्तमोत्तम मुच्यते । नवाङ्गुलं मध्यमं

स्यादष्टाङ्गुलमतः परम्। सप्त षट्पञ्चभिः पुण्ड्रं त्रिविधं मध्यमं स्मृतम्। चतुस्त्रिद्व्यङ्गुलैः पुण्ड्रं कनिष्ठं त्रिविधं भवेत्॥

வர்த்தி தீபம் போலாவது, மூங்கில் இலை போலாவது, தாமரையின் மொக்குப் போலாவது, ஆம்பல் புஷ்பம் போலாவது, மீன், ஆமை, சங்கு இவைகளின் ஆகாரம் போலாவது, புண்ட்ரத்தைத் தரிக்கவும். பத்தங்குல ப்ரமாணமுள்ளது மிக உத்தமமாய்ச் சொல்லப்படுகிறது. ஒன்பது அங்குலமுள்ளதும், எட்டு அங்குலமுள்ளதும், ஏழு, ஆறு, ஐந்து அங்குலம் உள்ளதும் என்று மூன்று விதம் மத்யமம். நான்கு, மூன்று, இரண்டு அங்குலமுள்ள மூன்று விதமும் கனிஷ்டமாகும்.

ललाटे केशवं विद्यान्नारायणमथोदरे॥ माधवं हृदि विन्यस्य गोविन्दं कण्ठकूपके। उदरे दक्षिणे पार्श्वे विष्णुं विद्याद्द्विजस्तथा। तत्पार्श्वे बाहुमध्ये तु स्मरेत्तु मधुसूदनम्। त्रिविक्रमं कण्ठदेशे वामे कुक्षौ तु वामनम्॥ श्रीधरं बाहुके वामे हृषीकेशं तु कण्ठके। पृष्ठे तु पद्मनाभं तु ककुद्दामोदरं स्मरेत्॥ द्वादशैतानि नामानि वासुदेवेति मूर्धनि। पूजाकाले च होमे च सायंप्रातः समाहितः॥ नामान्युच्चार्य विधिना धारयेदूर्ध्वपुण्ड्रकम्॥ ऊर्ध्वपुण्ड्रधरो मर्त्यो म्रियते यत्र कुत्रचित्। श्वपाकोऽपि विमानस्थो मम लोके महीयते इति॥

நெற்றியில் கேசவ என்றும், வயிற்றில் நாராயண என்றும், மார்பில் மாதவ என்றும், கழுத்துப் பள்ளத்தில் கோவிந்த என்றும், வயிற்றில் வலது பாகத்தில் விஷ்ணு என்றும், வலது கையில் மதுஸூதன என்றும், வலது கண்ட தேசத்தில் த்ரிவிக்ரம என்றும், வயிற்றின் இடது பாகத்தில் வாமன என்றும், இடது கையில் ஸ்ரீதர என்றும், இடது கண்டத்தில் ஹ்ருஷீகேச என்றும், முதுகில் பத்மநாப என்றும், கழுத்தின் பின் புறத்தில் தாமோதர என்றும் பன்னிரண்டு நாமங்களை உச்சரித்துத் தரிக்கவும். வாஸுதேவ என்ற நாமத்தை உச்சரித்துத் தலையில்

தரிக்கவும். கவனமுள்ளவனுய் மாலையிலும் காலையிலும் பூஜா காலத்திலும், ஹோமகாலத்திலும் நாமங்களை உச்சரித்து விதிப்படி ஊர்த்வ புண்ட்ரத்தைத் தரிக்கவும், ஊர்த்வ புண்ட்ரம் தரித்தவன் எந்தெந்த இடத்திலாவது மரித்தாலும், அவன் நாயாடியாயினும் விமானத்தில் இருப்பவனுய் எனது உலகத்தில் சிறப்புறுகிறுன்.

वामनपुराणेऽपि नारदं प्रति भगवानाह – ते । श्रुतिस्मृत्युक्तमार्गेण मृदो धारण मुच्यते । शृणु वत्स विधानेन मृत्स्नाधारणमुत्तमम् ॥ मम क्षेत्रे कुरुक्षेत्रे पुण्यक्षेत्रे तथैव च । पर्वताग्रे नदीतीरे तुलसीमूलकाश्रिते ॥ अश्वत्थबिल्ववल्मीकवकुलाः पनसास्तथा । एतेषु मृत्तिकाः प्रोक्ता यथाविधिवदाहरेत् इत्यादि । पाद्मेऽपि – ऊर्ध्वपुण्ड्रस्य माहात्म्यं वक्ष्यामि तव पार्वति । धारणादेव मुच्येत भवबन्धाद्द्विजोत्तमः ॥ ऊर्ध्वपुण्ड्रस्य मध्येतु विशाले सुमनोहरे । लक्ष्म्या सार्धं समासीनो देवदेवो जनार्दनः ॥ तस्माद्यस्य शरीरे तु ऊर्ध्वपुण्ड्रं धृतं भवेत् । तस्य देहं भगवतो विशालं मन्दिरं शुभम् ॥ धारयेदूर्ध्वपुण्ड्रं तु त्रिसन्ध्यासु द्विजोत्तमः ॥ सर्वपापविशुध्यर्थं मिष्टापूर्तफलाप्तये ॥ यज्ञदानतपश्चर्याजपहोमादिकं च यत् ॥ ऊर्ध्वपुण्ड्रधरः कुर्यात् तस्य पुण्यमनन्तकम् ॥ ऊर्ध्वपुण्ड्रविहीनस्तु किञ्चित् कर्म करोति यः । इष्टापूर्तादिकं सर्वं निष्फलं स्यान्न संशयः ॥ यच्छरीरं मनुष्याणामूर्ध्वपुण्ड्रविवर्जितम् । द्रष्टव्यं नैव तद्यस्मात् श्मशानसदृशं भवेत् ॥ ऊर्ध्वपुण्ड्रविहीनो यः सः सन्ध्याकर्मादिकं चरेत् । तत्सर्वं राक्षसैर्नीतं नरकं चाधिगच्छति ॥ ऊर्ध्वपुण्ड्रं द्विजैः कार्यं श्यामया पीतया मृदा । श्वेतमृत्तिकया धार्यं वैष्णवैश्च विशेषतः इति ॥

வாமன புராணத்திலும், நாரதரை நோக்கிச் சொல்லுகிறுர். பகவான்:- ச்ருதியிலும் ஸ்ம்ருதியிலும் சொல்லப்பட்ட விதிப்படி ம்ருத்திகையின் தாரணம்

சொல்லப்படுகிறது. ஓவத்ஸ? விதிப்படி சிறந்ததான ம்ருத்திகா தாரணத்தைக் கேட்பாய். எனது க்ஷேத்ரம், குருக்ஷேத்ரம், புண்யக்ஷேத்ரம், மலையின் உச்சி, நதியின் கரை, துளஸியின் மூலம், அரசு, பில்வம், புற்று, முகிழ், பலா இவைகளின் மூலம் என்ற இடங்களில் ம்ருத்திகைகள் க்ராஹ்யங்களெனச் சொல்லப்பட்டுள்ளன. விதிப்படி அவைகளைக் கொண்டு வரவும் என்பது முதலியவை சொல்லப்பட்டுள்ளன.

பாத்மத்திலும்:- ஓ பார்வதி ! ஊர்த்வ புண்ட்ரத்தின் மஹிமையை உனக்குச் சொல்வேன். ப்ராம்ஹணன் ஊர்த்வ புண்ட்ரத்தைத் தரிப்பதாலேயே ஸம்ஸார பந்தத்தினின்றும் விடுபடுவான். விசாலமும் அழகியதுமான ஊர்த்வ புண்ட்ரத்தின் நடுவில், தேவதேவனான விஷ்ணு லக்ஷ்மியுடன் வீற்றிருக்கிறார். ஆகையால் எவனது சரீரத்தில் ஊர்த்வபுண்ட்ரம் தரிக்கப்பட்டிருக்கிறதோ அவன் தேஹம் விசாலமும் சுபமுமாகிய விஷ்ணுவின் ஆலயமாகிறது. ப்ராம்ஹணன், மூன்று ஸந்த்யைகளிலும், ஸகல பாபங்களையும் அகற்றுவதற்கும், இஷ்டாபூர்த்த பலன்களைப் பெறுவதற்கும் ஊர்த்வ புண்ட்ரத்தைத் தரிக்க வேண்டும். எவன், யக்ஞம், தானம், தபஸ், ஜபம், ஹோமம் முதலிய இவைகளை ஊர்த்வ புண்ட்ரத்தைத் தரித்தவனாய்ச் செய்கின்றானோ அவனது புண்யம் அழிவற்றதாகும். எவன் ஊர்த்வ புண்ட்ரம் இல்லாதவனாய் எந்தக் கார்யத்தையாவது செய்கின்றானோ, அவனது இஷ்டா பூர்த்தம் முதலிய எல்லாம் பலனற்றனவாகும். ஸம்சயமில்லை. மனுஷ்யரின் எந்தச் சரீரம் ஊர்த்வ புண்ட்ரம் இல்லாமல் இருக்கிறதோ அதைப் பார்க்கவே கூடாது. அது ச்மசானத்திற்குச் சமமானதால். எவன் ஊர்த்வ புண்ட்ரம் இல்லாமல் ஸந்த்யா வந்தனம் முதலியதைச் செய்கின்றானோ, அவனது கர்மமெலாம் ராக்ஷஸரால் அபஹரிக்கப்படுகிறது. அவனும் நரகத்தை அடைகிறான். ப்ராம்ஹணர்கள், கருப்பு அல்லது மஞ்சள் நிறமுள்ள ம்ருத்தி கையால் ஊர்த்வ

புண்ட்ரம் தரிக்க வேண்டும். வைஷ்ணவர்கள் அவச்யம் வெளுப்பான ம்ருத்திகையால் தரிக்க வேண்டும்.

नारदीये – ऊर्ध्वपुण्ड्रं यः करोति तुलसीमूलमृत्स्नया। तत्रैव नेत्रं तस्य स्यान्मूर्ध्नीन्दोर्बिभृयात् कलाम्॥ ब्राह्मणस्योर्ध्वपुण्ड्रं स्यात् क्षत्रियस्यार्धचन्द्रकम्। वैश्यस्य वर्तुलाकारं शूद्रस्यैव त्रिपुण्ड्रकम्॥ ऊर्ध्वपुण्ड्रं द्विजः कुर्याद्धारिमृद्भस्मचन्दनैः। जपकाले मृदा कुर्यात् सन्ध्याकाले तु वारिणा॥ भस्मना होमकाले तु चन्दनं सार्वकालिकम् इति॥

நாரதீயத்தில்:- எவன், துளஸீ மூலத்திலுள்ள ம்ருத்திகையால் ஊர்த்வ புண்ட்ரத்தைத் தரிக்கின்றானே, அவனுக்கு நெற்றியிலேயே ஒரு கண் உண்டாகும். அவன், தலையில் சந்த்ரனின் கலையைத் தரிப்பான். ப்ராம்ஹணனுக்கு ஊர்த்வ புண்ட்ரமும், க்ஷத்ரியனுக்குப் பாதிச் சந்த்ரன் போன்ற புண்ட்ரமும், வைச்யனுக்கு வர்த்துளமான புண்ட்ரமும், சூத்ரனுக்கு த்ரிபுண்ட்ரமும் விதிக்கப்பட்டள்ளது. ப்ராம்ஹணன், ஜலம், ம்ருத்திகை, பஸ்மம், சந்தனம் இவைகளால் ஊர்த்வ புண்ட்ரம் தரிக்க வேண்டும். ஜபகாலத்தில் ம்ருத்திகையாலும், ஸந்த்யா காலத்தில் ஜலத்தாலும், ஹோமகாலத்தில் பஸ்மத்தாலும், சந்தனத்தால் எல்லாக் காலங்களிலும் தரிக்க வேண்டும்.

विष्णुधर्मोत्तरे – बिभर्ति निटिले मूर्ध्नि जाह्नवीतीरमृत्तिकाम्। बिभृयाच्चक्षुरेकत्र मूर्ध्नीन्दो र्बिभृयात् कलाम्॥ गङ्गामृदोर्ध्वपुण्ड्रं तु यो बिभर्ति नरो यदा। तदैव तस्य पितरः ब्रह्मलोकमवाप्नुयुः॥ गङ्गाकूलमृदा यस्तु बिभृयादूर्ध्वपुण्ड्रकम्। तदङ्गं ये निरीक्षन्ते ते यान्ति त्रिदिवं नराः इति॥

விஷ்ணு தர்மோத்தரத்தில்:- கங்கையின் கரையிலுள்ள ம்ருத்திகையை, நெற்றியிலும், சிரஸ்ஸிலும் எவன் தரிக்கின்றானே அவன், நெற்றியில் கண்ணையும்,

தலையில் சந்த்ரனின் கலையையும் தரிப்பான். எவன் கங்கையிலுள்ள ம்ருத்திகையால் ஊர்த்வ புண்ட்ரத்தைத் தரிக்கின்றானோ, அப்பொழுதே அவனது பித்ருக்கள் ப்ரம்ஹலோகத்தை அடைவார்கள். கங்கைக் கரையிலுள்ள மண்ணினால் ஊர்த்வ புண்ட்ரத்தை எவன் தரிக்கின்றானோ, அவனது அங்கத்தை எவர் தர்சிக்கின்றனரோ, அவரும் ஸ்வர்க்கத்தை அடைகின்றனர்.

वासिष्ठे – ऊर्ध्वपुण्ड्रं तु विप्राणां सततं श्रुतिचोदितम्। मुमुक्षुभिर्वीतरागैरप्रमत्तैस्समाहितैः ॥ ब्रह्मचारी गृहस्थो वा वानप्रस्थोऽथ वा यतिः। अवश्यं धारयेत् पुण्य मूर्ध्वपुण्ड्रं सुशोभनम्॥ ऊर्ध्वपुण्ड्रं द्विजः कुर्याद्दण्डाकारं सुशोभनम्। मध्ये छिद्रं वैष्णवस्तु नमोन्तैः केशवादिभिः इति॥

வாஸிஷ்டத்தில்:- ப்ராம்ஹணர்களுக்கு ஊர்த்வ புண்ட்ரம் நித்யமாய் வேதத்தால் விதிக்கப்பட்டுள்ளது. முக்தியில் விருப்பமுள்ளவர்கள், நிஷ்காமர்களாய், கவனமுள்ளவராய், நியமமுள்ளவராய்த் தரிக்க வேண்டும். ப்ரம்ஹசாரீ, க்ருஹஸ்தன், வானப்ரஸ்தன், யதி, யாராயினும், புண்யமான ஊர்த்வ புண்ட்ரத்தை அழகியதாய்த் தரிக்க வேண்டும். விஷ்ணு பக்தனான ப்ராம்ஹணன், ஊர்த்வ புண்ட்ரத்தை, தண்டம் போன்றதாயும், நடுவில் இடைவெளி உள்ளதாயும், நமः என்பதைக் கடைசியிலுள்ள கேசவாதி நாமங்களால் தரிக்க வேண்டும்.

पाद्मे ब्रह्मगरुडसंवादे – गृहे यस्य सदा तिष्ठेत् गोपीचन्दन-मृत्तिका। द्वारका विहिता तत्र कृष्णेन सहिता कलौ। यो मृत्तिकां द्वारवतीसमुद्भवां करे समादाय ललाटपट्टके। करोति नित्यं तनुशुद्धिहेतोः क्रियाफलं कोटिगुणं सदा भवेत्॥ क्रियाविहीनं यदि मन्त्रहीनं श्रद्धाविहीनं यदि भक्तिवर्जितम्। कृतं ललाटे यदि गोपिचन्दनं प्राप्नोति तत् पुण्यफलं सदाऽक्षयम्॥ यस्यान्तकाले खग

गोपिचन्दनं बाह्वोर्ललाटे हृदि मस्तके वा। प्रयाति लोकं कमलासनस्य गोबालघाती यदि ब्रह्महा भवेत्॥ अस्नातो यः क्रियां कुर्यादशुचिः पापशङ्कितः। पूतः सद्यो भवेन्नित्यं गोपीचन्दनधारणात्॥ द्वारवत्युद्भवं गोपीचन्दनं चोर्ध्वपुण्ड्रकम्। धारयेन्नित्यमेवं हि पापं हन्ति दिनेदिने। गोपीचन्दनलिप्ताङ्गो यं यं पश्यति चक्षुषा। तं तं पूतं विजानीयात् नात्र कार्या विचारणा इति।

பாத்மத்தில், ப்ரம்ஹகருட ஸம்வாதத்தில்:- எவனது க்ருஹத்தில் கோபீ சந்தன ம்ருத்திகை எப்பொழுதும் இருக்கின்றதோ, அவ்விடத்தில் க்ருஷ்ணனுடன் கூடிய த்வாரகை கலியில் செய்யப்பட்டதாகிறது. எவன், த்வாரவதியிலுண்டாகிய ம்ருத்திகையைக் கையிலெடுத்து, நெற்றியில் நித்யமும் தேஹ சுத்திக்காகத் தரிக்கின்றனோ, அவனுக்கு க்ரியையின் பலன் கோடி மடங்காக எப்பொழுதும் உண்டாகும். நெற்றியில் கோபீ சந்தனம் தரித்தானுகில், அவன் செய்யும் கர்மம் விதிப்படி அனுஷ்டிக்கப் படாவிடினும், மந்திரங்களில் சிரத்தை பக்தி இல்லாவிடினும் அதன் புண்ய பலனை எப்பொழுதும் அழிவற்றதாய் அவன் அடைகிறன். ஓ கருட! எந்த மனிதனின் மரண காலத்தில், கோபீசந்தனம், கைகளிலும், நெற்றியிலும், மார்பிலும், தலையிலும் தரிக்கப் பட்டுள்ளதோ, அவன் ப்ரம்ஹாவின் உலகத்தை அடைகிறன், அவன் பசு, பாலர், ப்ராம்ஹணர் இவர்களைக் கொன்றவனையினும். ஸ்நானம் செய்யாமல் அசுத்தனைப் பாபத்தினின்றும் சங்கையால் நற்கர்மத்தை அனுஷ்டிக்கின்றனோ, அவன் கோபீசந்தனத்தைத் தரித்தால், உடனே சுத்தனாகவே ஆகிறன். த்வாரவதியில் உண்டாகிய கோபீசந்தனத்தை ஊர்த்வ புண்ட்ரமாய் நித்யமும் தரிக்க வேண்டும். இவ்விதம் இருப்பவன் அன்றன்று செய்யப்பட்ட பாபத்தைப் போக்குகிறன். கோபீசந்தனத்தைத் தரித்தவன், கண்ணால் எவனெவனைப் பார்க்கின்றனோ, அவனவன் சுத்தனென அறியவேண்டும். இது விஷயத்தில் விசாரணை வேண்டாம்.

पाराशरेऽपि – मृदं मन्त्रेणाभिमन्त्र्य चोर्ध्वपुण्ड्राणि धारयेत्। ललाटादिषु चाङ्गेषु धरेत् पुण्ड्रं शुभावहम् ।। आरभ्य नासिकामूलं ललाटान्तं लिखेन्मृदम् इति।। ब्रह्माण्डपुराणे – मृत्तिका चन्दनं भस्म तोयं चैव चतुर्थकम्। एभिर्द्रव्यैर्यथाकाल मूर्ध्वपुण्ड्रं भवेत् सदा। स्नात्वा पुण्ड्रं मृदा कुर्याद्धुत्वा चैव तु भस्मना । देवानभ्यर्च्य गन्धेन सर्वपापापनुत्तये इति।।

பாராசரத்திலும்:- *ம்ருத்திகையை மந்த்ரத்திஞல் அபிமந்த்ரித்து ஊர்த்வ புண்ட்ரங்களைத் தரிக்க வேண்டும். நெற்றி முதலிய அங்கங்களில் சுபமான புண்ட்ரத்தைத் தரிக்க வேண்டும். மூக்கின் அடியில் ஆரம்பித்து நெற்றி வரையில் மண்ணைத் தரிக்க வேண்டும்.* **ப்ரஹ்மாண்ட புராணத்தில்:-** *ம்ருத்திகை, சந்தனம், விபூதி, ஜலம் நான்காவது, இந்த த்ரவ்யங்களால் காலப்படி எப்பொழுதும் ஊர்த்வ புண்ட்ரம் விதிக்கப்படும். ஸ்நானம் செய்த பிறகு மண்ணிஞலும், ஹோமம் செய்த பிறகு விபூதியிஞலும், தேவர்களைப் பூஜித்த பிறகு சந்தனத்தாலும் ஸகல பாபங்களையும் போக்குவதற்குப் புண்ட்ரம் தரிக்க வேண்டும்.*

वैखानससूत्रे – समिद्भिर्गोमयैः स्वेन हवने विहिते सति । तद्भस्म सङ्गृह्य करे मन्त्रेणैवाभिमन्त्र्य च । यदूर्ध्वपुण्ड्रकरणमाग्नेयं स्नानमेव तत्। भूतिस्मेति भस्म गृहीत्वा ललाटहृदयबाहुकण्ठादीनादित्यः सोमो नम इत्यूर्ध्वाग्रमालिप्य आपो हिष्ठेति प्रोक्ष्य यत्ते अग्ने तेजस्तेनेत्यग्निमुद्वयमित्यादिभिरादित्य मुपतिष्ठेत भूतिमालभते नित्यं सर्वयज्ञकृतं भवेत् इति।।

வைகானஸஸூத்ரத்தில்:- *ஸமித்துகளாலும், கோமயங்களாலும் தான் ஹோமம் செய்த பிறகு அந்தப் பஸ்மத்தைக் கையிலெடுத்துக் கொண்டு மந்த்ரத்தால் அபிமந்த்ரித்து ஊர்த்வ புண்ட்ரம் செய்து கொள்வது*

ஆக்னேய ஸ்நானமேயாம். 'பூதிஸ்ம' என்று பஸ்மத்தை எடுத்து நெற்றி, மார்பு, கைகள், கழுத்து முதலியவைகளில் 'ஆதித்யஸ்ஸோமோநமः' என்று உயரே நுனி இருக்கும் படியாகப் பூசி, ஆபோஹிஷ்ட என்று ப்ரோக்ஷித்து, 'யத்தே அக்னே தேஜஸ்தேந' என்று அக்னியையும் 'உத்வயம்' என்பது முதலியவைகளால் ஸூர்யனையும் உபஸ்தானம் செய்ய வேண்டும். பஸ்மத்தைத் தரிப்பதால் நித்யமும் எல்லா யாகங்களின் பலமும் உண்டாகுமம்.

पाद्मेऽपि—समिदादिहुतानां च होमीयस्य हुतस्य च। सितेन भस्मनाऽङ्गेषु ललाटादिषु च क्रमात् ॥ यदूर्ध्वपुण्ड्रकरणं मन्त्रोच्चारणपूर्वकम्। तदाग्नेयं भवेत् स्नानं शोधनं परमं स्मृतम् इति॥ पाद्मोत्तरे – श्रौतं वैखानसं प्रोक्तं स्मार्तं वासिष्ठमुच्यते । पाञ्चरात्राद्यागमोक्त मागमोक्तं तदिष्यते इति ॥ स्मृतिसङ्ग्रहे तु – त्रिपुण्ड्रं भस्मना तिर्यगूर्ध्वपुण्ड्रं मृदा न्यसेत्। उभयं चन्दनेनैव वर्तुलं न कदाचन ॥ न कदाचिन्मृदा तिर्यङ्न्यसेदूर्ध्वं न भस्मना । तुषादिभस्मपाषाणरजो धार्यं च न क्वचित् इति॥

பாத்மத்திலும்:- ஹோமம் செய்யப்பட்ட ஸமித்து முதலியது, ஹோமம் செய்யப்பட்ட த்ரவ்யம் இவைகளின் வெண்மையான பஸ்மத்திஞல் நெற்றி முதலிய அங்கங்களில் க்ரமமாய் ஊர்த்வ புண்ட்ரத்தை மந்த்ரத்துடன் தரிப்பது ஆக்னேய ஸ்நானம் எனப்படும். அது மிகவும் சுத்திகரம் எனச் சொல்லப்பட்டுள்ளது.

பாத்மோத்தரத்தில்:- 'வைகானஸம்' என்பது ச்ரௌதம் எனச் சொல்லப்பட்டுள்ளது. 'வாஸிஷ்டம்' என்பது ஸ்மார்த்தம் எனச் சொல்லப்படுகிறது. பாஞ்சராத்ரம் முதலிய ஆகமங்களால் சொல்லப் பட்டுள்ளது ஆகமோக்தம் எனப்படுகிறது. **ஸ்ம்ருதி ஸங்க்ரஹத்தில்:-** த்ரிபுண்ட்ரத்தைப் பஸ்மத்திஞல் குறுக்காகவும், ஊர்த்வ புண்ட்ரத்தை மண்ணிஞலும், இரண்டையும் சந்தனத்திஞலும் தரிக்கலாம். ஒருகாலும்

வர்த்துளமாய்த் தரிக்கக் கூடாது. மண்ணினால் குறுக்காகவும், பஸ்மத்தினால் ஊர்த்வமாகவும் தரிக்கக் கூடாது. உமி முதலியதின் பஸ்மத்தையும், கல்லின் பொடியையும் ஒருகாலும் தரிக்கக் கூடாது.

गारुडपुराणेऽपि– भस्मना तूर्ध्वपुण्ड्रं च तिर्यक्पुण्ड्रं मृदा तथा। ब्रह्महत्यासमं प्रोक्तं मुनिभिर्वेदपारगैः इति ।। एवञ्च भस्मोर्ध्वपुण्ड्रस्य विधिप्रतिषेधाभ्यां यथाकुलाचारं व्यवस्थितो विकल्प इत्याहुः।

காருட புராணத்திலும்:- பஸ்மத்தினால் ஊர்த்வ புண்ட்ரமும், மண்ணினால் த்ரிபுண்ட்ரமும் ப்ரம்ஹ ஹத்யைக்குச் சமமென்று வேதமறிந்த முனிகளால் சொல்லப்பட்டுள்ளது. இவ்விதம் இருப்பதால், பஸ்மத்தினால் செய்யப்படும் ஊர்த்வ புண்ட்ரத்திற்கு விதிநிஷேதங்களால், அவரவர் குலாசாரப்படி வ்யவஸ்தித விகல்பம் என்கின்றனர்.

ननु क्वचित् क्वचिदूर्ध्वपुण्ड्रं निषिध्यते । तथा हि पाराशरोपपुराणे–श्रौतं लिङ्गं च विज्ञेयं त्रिपुण्ड्रोद्भूलनात्मकम् । अश्रौतमूर्ध्वपुण्ड्रादि नैव तिर्यक् त्रिपुण्ड्रकम् ।। नराणामुत्थिता जातिर्येषां तन्त्रोक्तवर्त्मना । ललाटे तैः सदा धार्यं मृदा पुण्ड्रान्तरं द्विजः ।। जन्मना लब्धजातिस्तु वेदपन्थानमाश्रितः । पुण्ड्रान्तरं भ्रमाद्वाऽपि ललाटे नैव धारयेत् इति ।। मानवोपपुराणे च – ऊर्ध्वपुण्ड्रं च शूलं च वर्तुलं चार्धचन्द्रकम् । तन्त्रनिष्ठेन धार्यं स्यान्न धार्यं वैदिकैर्जनैः ।। सोर्ध्वपुण्ड्रमुखं दृष्ट्वा व्रतं चोन्द्रायणं चरेत् ।।

சிற்சில இடங்களில் ஊர்த்வ புண்ட்ரம் நிஷேதிக்கப்படுகிறது. அவ்விதமே, பாராசரோப புராணத்தில்:- த்ரிபுண்ட்ரமும், உத்தூளனமும் ச்ருதியில் சொல்லப்பட்ட புண்ட்ரம் என அறியத் தகுந்தது. ஊர்த்வ புண்ட்ரம் முதலியது அச்ரௌத புண்ட்ரம் எனப்படும். குறுக்காய் இடப்படும் த்ரிபுண்ட்ரம் அச்ரௌதமாகாது.

எந்த மனிதர்களுக்கு ஜாதியானது தந்த்ரத்தில் சொல்லப்பட்ட வழியினுல் எழுந்துள்ளதோ, அவர்களால் நெற்றியில் மண்ணினுல் புண்ட்ரம் எப்பொழுதும் தரிக்கத் தகுந்தது. பிறப்பினுல் ஜாதியை அடைந்த ப்ராம்ஹணன் வேதமார்க்கத்தை ஆச்ரயித்து வேறு புண்ட்ரத்தை ப்ரமத்தினுலும், நெற்றியில் தரிக்கவே கூடாது. **மானவோப புராணத்திலும்:-** ஊர்த்வ புண்ட்ரமும், சூலமும், வர்த்துளமும், அர்த்த சந்த்ரனுமான புண்ட்ரத்தைத் தந்த்ர மார்க்கத்தில் இருப்பவன் தரிக்க வேண்டும். வைதிக ஜனங்கள் தரிக்கக் கூடாது. ஊர்த்வ புண்ட்ரத்துடன் கூடி முகமுடையவனைப் பார்த்தால் சாந்த்ராயண வ்ரத்தை அனுஷ்டிக்க வேண்டும்.

कूर्मपुराणेऽपि – गोपीचन्दनधारी तु शिवं स्पृशति यो द्विजः । सस्वैकविंशति कुलः सोऽक्षयं नरकं व्रजेत् इति ।। सूतसंहितायामपि – स्वमातुः सोदरायाश्च गमनं तद्वदेव तु । मातृस्वसुर्मातृसख्याः दुहितुर्गमनं तथा ।। मातुलानीस्नुषाश्वश्रूगमनं च तथैव च । त्रिपुण्ड्रधारणाभावो भूत्याऽनुद्धूलनं तथा ।। पुण्ड्रान्तरस्य विप्रेन्द्र धारणं तद्वदेव तु इति ।। पुराणान्तरेऽपि – ऊर्ध्वपुण्ड्रं त्रिशूलं च श्रद्धया श्रुत्यचोदितम् । धारयन्ति ललाटे तु मनुष्याः पापकर्मिणः इति ।। लैङ्गेऽपि – त्रिपुण्ड्रं सुरविप्राणां वर्तुलं नृपवैश्ययोः । अर्द्धचन्द्रं तु शूद्राणा मन्येषा मूर्ध्वपुण्ड्रकम् ।। अश्रौत मूर्ध्वपुण्ड्रादि ललाटे श्रद्धया सह । धारयिष्यन्ति मोहेन युगान्ते समुपस्थिते इति ।।

கூர்ம புராணத்திலும்:- கோபீசந்தனம் தரித்து எந்த ப்ராம்ஹணன் சிவனைத் தொடுகிறானே, அவன் தனது இருபத்தொரு குலங்களுடன் அழிவிலாத நரகத்தை அடைவான். **ஸூத ஸம்ஹிதையிலும்:-** தன் தாய், உடன் பிறந்தவள், தாயின் கூடப்பிறந்தவள், தாயின் தோழி, பெண், மாமனின் மனைவி, நாட்டுப்பெண், மாமியார் இவர்களைத் சேருவதும், த்ரிபுண்ட்ரம் தரிக்காமல்

இருப்பதும், விபூதியை உத்தூளனம் செய்யாமல் இருப்பதும், வேறு புண்ட்ரத்தைத் தரிப்பதும் ஸமமேயாம். மற்றொரு புராணத்திலும்:- பாபம் செய்த மனிதர்கள் ஊர்த்வ புண்ட்ரத்தையும், வேதத்தில் சொல்லப்படாத த்ரிசூலத்தையும் ச்ரத்தையுடன் நெற்றியில் தரிக்கிறார்கள். லேங்கத்திலும்:- தேவருக்கும், பிராம்ஹணருக்கும் த்ரிபுண்ட்ரம்; க்ஷத்ரியனுக்கும் வைச்யனுக்கும் வர்த்துளபுண்ட்ரம்; சூத்ரர்களுக்கு அர்த்த சந்த்ரபுண்ட்ரம்; மற்றவருக்கு ஊர்த்வ புண்ட்ரம். ச்ருதியில் சொல்லப்படாத ஊர்த்வ புண்ட்ரம் முதலியதை ச்ரத்தையுடன் நெற்றியில், யுகாந்தம் ஸமீபிக்கும் பொழுது தரிக்கப் போகிறார்கள் என்று.

सत्यमेतादृशानि बहूनि वचनानि श्रूयन्ते। तेषु कानिचिद्वचनानि पाशुपतादिशैवतन्त्रपतितस्य ऊर्ध्वपुण्ड्रनिषेध-पराणि। कानिचित्तु वैदिकस्य अश्रौतपाञ्चरात्राद्यागमोक्त शूलादिरूपोर्ध्वपुण्ड्रशङ्ख-चक्रादिधारणसहितोर्ध्वपुण्ड्र धारणनिषेध-पराणि॥ तथा च पाराशरे – तन्त्रनिष्ठः शिवे भक्तः तन्त्रसिद्धेन वर्त्मना। त्रिपुण्ड्रं धारयेन्नित्यं ललाटे भस्मनैव तु। तन्त्रनिष्ठस्तथा विष्णौ भक्तस्तन्त्रैकवर्त्मना। त्रिशूलं चतुरश्रं वा धारयेदूर्ध्वपुण्ड्रकम् ॥ तन्त्रनिष्ठो महादेवे भक्तस्तिर्यक्त्रिपुण्ड्रकम्। विना पुण्ड्रान्तरं मोहाद्धारयन्नरकी भवेत् इति॥

உண்மையே, இவ்விதமான அநேகம் வசனங்கள் கேட்கப்படுகின்றன. அவைகளுள் சில வசனங்கள் பாசுபதம் முதலிய சைவ தந்த்ரத்தில் விழுந்தவனுக்கு ஊர்த்வ புண்ட்ரத்தை நிஷேதிப்பதில் தாத்பர்யம் உள்ளவை. சில வசனங்கள் வைதிகனுக்கு அச்ரௌதமான பாஞ்சராத்ரம் முதலிய ஆகமங்களில் சொல்லப்பட்ட சூலம் முதலியது போலுள்ள ஊர்த்வ புண்ட்ரத்தையும், சங்கசக்கரம் முதலியதைத் தரிப்பதுடன் கூடிய ஊர்த்வ புண்ட்ரத்தையும் நிஷேதிப்பதில் தாத்பர்யமுள்ளவைக

ளாம். அவ்விதமே, பாராசரத்தில்:- தந்த்ரத்தில் இருப்பவனுய் சிவனிடத்தில் பக்தியுள்ளவன், தந்த்ரத்தில் சொல்லப்பட்ட மார்க்கத்தால் நெற்றியில் விபூதியினுலேயே த்ரிபுண்ட்ரத்தை எப்பொழுதும் தரிக்க வேண்டும். தந்த்ரத்தில் இருப்பவனுய் விஷ்ணுவினிடத்தில் பக்தி உடையவன், தந்த்ரத்தால் ஸித்தமான மார்க்கத்தால் த்ரிசூலமாகவாவது, சதுரமாகவாவது ஊர்த்வ புண்ட்ரத்தைத் தரிக்க வேண்டும். தந்த்ரத்தில் இருப்பவன், சிவனிடத்தில் பக்தியுடையவன் குறுக்காய் த்ரிபுண்ட்ரத்தைத் தவிர வேறுபுண்ட்ரத்தை அஜ்ஞானத்தால் தரித்தால் நரகத்திற்காளாவான்.

सूतसंहितायामपि – शैवागमोक्ताश्रमनिष्ठमानवः त्रिपुण्ड्रं लिङ्गं तु सदैव धारयेत्। तदुक्तमन्त्रेण ललाटमध्यके तत्तन्मत्रसिद्धेन सितेन भस्मना ॥ विष्ण्वागमोक्ताश्रमनिष्ठमानवः तथैव पुण्ड्रान्तर मूर्ध्वरूपतः। त्रिशूलरूपं चतुरश्रमेव वा मृदा ललाटेषु सदैव धारयेत्॥ ब्रह्मागमोक्ताश्रमनिष्ठमानवो ललाटमध्येऽपि च वर्तुलाकृतिम् । तदुक्तमन्त्रेण सितेन भस्मना मृदाऽथ वा चन्दनतस्तु धारयेत् इति ॥

ஸூத ஸம்ஹிதையிலும்:- சைவாகமத்திற் சொல்லப்பட்ட ஆச்ரமத்தில் நிலையுள்ள மனிதன், அதில் சொல்லப்பட்ட மந்த்ரத்தினுல், அந்தத் தந்த்ரத்தால் ஸித்தமான வெளுப்பான விபூதியினுல், நெற்றியின் நடுவில்த்ரிபுண்ட்ரத்தைத் தரிக்க வேண்டும். விஷ்ணுவின் ஆகமத்திற் சொல்லப்பட்ட ஆச்ரமத்தில் நிலைபெற்ற மனிதன், ஊர்த்வபுண்ட்ரத்தை த்ரிசூலமாகவாவது, சதுரமாகவாவது, ம்ருத்திகையினுல் நெற்றியில் எப்பொழுதும் தரிக்க வேண்டும். ப்ரம்ஹாவினுல் சொல்லப்பட்ட ஆச்ரமத்தில் நிலைபெற்ற மனிதன், அந்த ஆகமத்திற் சொல்லப்பட்ட மந்த்ரத்தால், வெளுத்த பஸ்மத்தினுலாவது, ம்ருத்தினுலாவது, சந்தனத்தினுலாவது வர்த்துளமான புண்ட்ரத்தை நெற்றியில் தரிக்க வேண்டும்.

कौर्मेऽपि – शर्वागमेषु निष्ठानां शम्भोर्लिङ्गमनुत्तमम्। सितेन भस्मना कार्यं ललाटे च त्रिपुण्ड्रकम्॥ यस्तु नारायणं देवं प्रपन्नः परमं पदम्। धारयेत् सर्वदा शूलं ललाटे गन्धवारिणा॥ प्रपन्ना ये जगद्बीजं ब्रह्माणं परमेष्ठिनम्। तेषां ललाटे तिलकं धारणीयं तु सर्वदा॥ ऊर्ध्वपुण्ड्रं त्रिशूलं च वर्तुलं चार्धचन्द्रकम्। तन्त्रनिष्ठेन धार्यं स्यान्न धार्यं वैदिकैर्जनैः इति॥ त्रिशूलरूपमूर्ध्वपुण्ड्रमित्यर्थः॥

கௌர்மத்திலும்:- சிவாகர்மங்களில், நிலைபெற்றவர்க்கு, சிவனின் சின்ஹமான சிறந்த த்ரிபுண்ட்ரம், வெளுத்தபஸ்மத்தால் நெற்றியில் தரிக்கப்பட வேண்டும். எவன், நாராயண தேவனைப் பரமசரணமாய் அடைந்தவனை அவன் எப்பொழுதும் சந்தனத்தால், நெற்றியில் சூலத்தைத் தரிக்க வேண்டும். ஜகத்காரணமான ப்ரஹ்மாவை எவர் அடைந்துள்ளவரோ, அவர்கள் நெற்றியில் திலகத்தை எப்பொழுதும் தரிக்க வேண்டும். த்ரிசூலரூபமான ஊர்த்வ புண்ட்ரமும், வர்த்துள புண்ட்ரமும், அர்த்த சந்த்ர புண்ட்ரமும், தந்த்ர நிஷ்டனுல் தரிக்கத் தகுந்தவையன்றி, வைதிக ஜனங்களால் தரிக்கத் தகுந்தவை அல்ல.

पाञ्चरात्रे भगवतोक्तम् – एकान्तिनो महाभागा मत्स्वरूप-विदोऽमलाः। सान्तरालान् प्रकुर्वीरन् पुण्ड्रान् ममपदाकृतीन्। परमैकान्तिनोऽप्येवं मत्पादैकपरायणाः। हरिद्राचूर्णसंयुक्तान् शूलाकारांस्तु निर्मलान्॥ अन्ये तु वैदिकाः पुण्ड्रानच्छिद्रानपि भक्तितः। प्रकुर्वीरन् दीपलिङ्गवेणुपत्रोपमा-कृतीन्॥ अच्छिद्रान् वाऽथ सच्छिद्रान् कुर्युः केवलवैष्णवाः। अच्छिद्रकरणे तेषां प्रत्यवायो न विद्यते॥ एकान्तिनां प्रपन्नानां परमैकान्तिनामपि। अच्छिद्रकरणे तेषां प्रत्यवायो महान् भवेत्॥ पवित्राणि गदाब्जादिशङ्खचक्रादिकं तथा। धारयन्नोपहन्येत कदाचित् किङ्करादिभिः॥

பாஞ்சராத்திரத்தில் பகவானால் சொல்லப்பட்டது :- ஏகாந்திகளும், மஹாபாகர்களும், என் ஸ்வரூபத்தை அறிந்தவரும், நிர்மலருமானவர்கள், எனது பாதம் போன்றதும், நடுவில் சித்ரமுள்ளவைகளுமான புண்ட்ரங்களைத் தரிக்க வேண்டும். என் பாதத்தையே சரணமடைந்துள்ள பரமைகாந்திகளும், இவ்விதமே சூலம் போன்றதும், மஞ்சள் சூர்ணத்துடன் கூடியதுமான புண்ட்ரங்களைத் தரிக்க வேண்டும். மற்ற வைதிகர்கள் பக்தியுடன், தீபம், லிங்கம், மூங்கிலின் இலை இவை போன்ற ஆகாரமுடையதும், சித்ரம் இல்லாததுமான புண்ட்ரத்தைத் தரிக்க வேண்டும். கேவல வைஷ்ணவர்கள், அச்சித்ரங்களாகவாவது, ஸச்சித்ரங்களாகவாவது புண்ட்ரங்களைத் தரிக்கலாம். அச்சித்ரமாய் தரித்தாலும் அவர்களுக்குத் தோஷமில்லை. ஏகாந்திகளான ப்ரபன்னருக்கும், பரமைகாந்திகளுக்கும் அச்சித்ர புண்ட்ரதாரணத்தில் மஹாதோஷம் உண்டாகும். பவித்ரமான வஸ்துக்களையும், கதை, பத்மம், சங்கம், சக்ரம் முதலியதையும் தரிப்பவன் யமகிங்கரர் முதலியவர்களால் ஒருகாலும் வருத்தப்பட மாட்டான்.

ब्राह्मणः क्षत्रियो वैश्यः शूद्रो नारी तथेतरः। चक्राद्यैरङ्कयेद्गात्र-मात्मनः परया मुदा॥ अनिष्टानां निवृत्त्यर्थं मैकान्त्याय जगत्पतौ। सिद्ध्यर्थं कर्मणां चैव धार्यं चक्रादिलाञ्छनम्। विष्णोरायतनाग्नौ वा गुरोरात्मन एव वा। हुते होमे ततस्तप्तैः स्वरूपारचितैः क्रमात्। चक्राम्बुजगदाशार्ङ्ग खड्गैर्मन्त्रेण दाहयेत्॥ अङ्कितः शङ्खचक्राभ्यां सर्वैरङ्कित एव वा॥ शङ्खचक्रं प्रधानं हि सर्वमन्यद्गदादिकम्। अग्नीषोमौ हि चक्राब्जे सर्व एव तदात्मकाः॥ दक्षिणे तु भुजे विप्रो बिभृयाद्वै सुदर्शनम्। सव्ये तु शङ्खं बिभृया दिति ब्रह्मविदो विदुः इति॥

ப்ராம்ஹணன், க்ஷத்ரியன், வைச்யன், சூத்ரன், ஸ்த்ரீ மற்றவன் எவளையினும், சக்ரம் முதலியதால் தனது அங்கத்தை மிக மகிழ்ச்சியுடன் சூடிக்கொள்ள வேண்டும்.

